விலை: 40 பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 280 ஆவணி 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 02 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

மகாராஜா பொதிகள் சேவை
GTV Express

| | | |
|---|---|---|
| லண்டன் | 600/- | 11Kgக்கான கட்டணம் |
| கனடா | 900/- | |
| ஜெர்மனி | 650/- | |
| சுவிஸ் | 900/- | |
| அவுஸ்திரேலியா | 800/- | |

இல. 225 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் 021 4925024 021 2224338

இல. 81A-பருத்தித்துறை வீதி ,நெல்லியடி 021 4930099

பொன்னாலை வரதராஜப்பெருமாள்

## தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், செப். 2
பொன்னாலை சிறி வரத ராஜப் பெருமாள் ஆல யத்தின் வரு >> 52

கோதுமை மா

## விலை அதிகரிப்பு

கொழும்பு, செப். 2
கோதுமை மாவின் விலை நேற்று நள் ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது என்று பிறீமா நிறுவனம் அறிவித்துள்ளது. >> 52

## பேக்கரிப் பொருள்கள் மற்றும் கொத்து றொட்டி விலையும் அதிகரிப்பு

கொழும்பு, செப். 2
கோதுமை மாவின் விலை நேற்று நள் ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து பேக்கரி விற்பனையாளர் கள்தமது உற்பத்திப்பொருள் >> 53

## நித்தியகலா கொலை: சந்தேகநபர் மறியலில்

கிளிநொச்சி, செப். 2
கிளிநொச்சிப் பெண் கொலை தொடர் பில் கைது செய்யப்பட்டவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார். >> 53

இலங்கைக்கு அருகே

## நிலநடுக்கம்

கொழும்பு, செப். 2
இந்தியப் பெருங்கடல் பகுதியில் இலங் கைக்கு தென்மேற்கே நேற்றுக் காலை 11.43 மணியளவில் 5.2 ரிச்டர் அளவி லான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. >> 53

## மனக் குழப்பத்தை தீர்த்த பின்னர் தன் தெரிவுகளை விக்கி முன்வைக்கலாம்

சுமந்திரன் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், செப். 2
முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது மனக் குழப்பத்தைச் சீர் செய்த பின் னர் அரசியல் தெரிவுகளை முன்வைக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந் திரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் தனக்கு முன்பாக 4 தெரிவுகள் இருப்பதாக கூறி யுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரிடம், பத்திரிகையாளர் சந்திப் பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, >> 53

## ஆட்சி மாற்றத்தாலேயே காணிகள் விடுவிப்பு

சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 2
வலி.வடக்கு, மயிலிட்டி, கேப்பாபிலவு, முள்ளிக் குளம் என்று பல இடங்களில் இன்று காணி கள் விடுவிக்கப் பட்டுள்ளன. இன்னமும் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. அந்த மாற்றங்கள் எல்லாம் ஆட்சி மாற்றத் தால்தான் நடக்கின்றது. ஆட்சி மாற்றம் தமிழ் மக்களுக்குத் தோல்வி என்பது அப்பட்டமான பொய். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். >> 53

# உரிய நேரத்தில் விக்கிக்கு தக்க பதில் வழங்கப்படும்

சம்பந்தன் அழுத்தம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 2
வடக்கு மாகாண முதலமைச்சர் தனது பக்க நியாயங் களைப் பட்டியல்படுத்தியுள்ளார். மறுபக்க நியா யங்களை நாம் முன்வைக்கவேண்டும். அதனை அவசரப் பட்டுச் செய்ய முடியாது. விக்னேஸ்வரன் முன்வைத்த கருத்துக்களை அலசி, ஆற அமர இருந்து ஆராய்ந்து உரிய நேரத்தில் பதில் வழங்குவேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரு மான இரா.சம்பந்தன் தெரிவித்தார். >> 53

## ஊடகங்களைப் பார்த்த பின்பே விக்கியைச் சந்திப்பது தெரியும்

இப்படிச் சொல்கிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், செப். 2
வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வர னுக்கும் எனக்கும் இடை யில் 7ஆம் திகதி சந்திப்பு நடைபெறவுள்ளதாக ஊட கங்களைப் பார்த்துத்தான் நான் அறிந்துகொண்டேன்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித் தார்.
'வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் என்னைச் சந்திப்பதற்கு கோரிக்கை விடுத் >> 53

## நாடாளுமன்ற நிதிக் குழுக் கூட்டம் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், செப். 2
நாடாளுமன்ற நிதிக் குழு வின் கூட்டம் முதன் முத லாக நாடாளுமன்றத்துக்கு வெளியே நடைபெறவுள் ளது. இன்று ஞாயிற்றுக்கி ழமை கண்டியிலும் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணத் திலும் நடைபெறவுள்ளன. இவ்வாறு நாடாளுமன்ற பொதுநிதிக் குழுவின் தலை வரும், நாடாளுமன்ற உறுப் பினருமான எம்.ஏ.சுமந்தி ரன் தெரிவித்தார். >> 53

## சுமந்திரன், அஸ்மின் மீது முதல்வர் விக்கி காட்டம்

யாழ்ப்பாணம், செப். 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப் பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமானஎம்.ஏ.சுமந் திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் ஆகியோர் மீது வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் காட்டமான விமர்ச னங்களை முன்வைத்துள் ளார்.
வடக்கு மாகாண முதல மைச்சரால் தயாரித்து அனுப்பப்படும் கேள்வி, பதில் அறிக்கையிலேயே தனது >> 53

## விடுதலைப் புலிகளின் பாணியில் சுமந்திரனையே விரட்ட வேண்டும்

கூறுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திர னையே, தமிழீழ விடுத லைப் புலிகளின் பாணி யில் விரட்டியடிக்க வேண் டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித் துள்ளார்.
வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ் வரனை, தமிழீழ விடுத லைப் புலிகளின் பாணி யில் விரட்டியடிக்க >> 53

## நியமனத்தை இதுவரை ஏற்காத பட்டதாரிகளுக்கு பெரும் ஆபத்து

உடனடியாக நிறுத்தப்படும் என்கிறது அமைச்சு

கொழும்பு, செப். 2
அரச சேவையில் இணைவ தற்குப் பயிற்சியைப் பெற்ற பட்டதாரிகளில், நியமனக் கடிதங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்க ளின் நியமனங்களை இல் லாமல் செய்யத் தீர்மானிக் கப்பட்டுள்ளது. நியமனங் களைப் பெற்றுக் கொள்வ தற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் மூன்று நாள்க ளுக்கு முன்னர் நிறைவ டைந்ததாக தேசிய >> 53

மன்னாரில்

## வெடிபொருள் வெடித்து மீனவர் பரிதாபச் சாவு

மூன்று பேருக்கு காயம்

மன்னார், செப். 2
வெடிபொருள் வெடித்ததில் மீனவர் ஒருவர் மன்னார் பள்ளிமுனையில் உயிரி ழந்துள்ளார். மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.
பள்ளிமுனை கடற்பரப்பில் மிதந்து வந்த வெடிபொ ருளை எடுத்துச் சோத னைக்கு உட்படுத்திய போது இந்த இடர் நேர்ந் துள்ளதாக விசா >> 53

## விசாரணைகளுக்கு முப்படையினரின் உள்ளக தகவல்களை வழங்கவேண்டாம்

மைத்திரி உத்தரவு



கொழும்பு, செப். 2
கடந்த் ஆட்சிக் காலத்தில் நடந்த கொலை மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றத்துக்குத் தேவைப்படும் முப்படையினரின் உள்ளகத்தகவல்களை >> 52



# கையகப்படுத்திய நிலம் தொடர்பில் பொய் அறிக்கையிடுகிறது ராணுவம்

## சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், செப். 2

வடகிழக்கில் படையினர் வசமுள்ள நிலம் தொடர்பான சரியான புள்ளிவிவரத்தைக் கூறவோ அல்லது சரியானதை ஆவண ரீதியில் வெளியிட்டுள்ள நிலையில் அவற்றை ஏற்கவோ மறுக்கும் இராணுவத்தரப்பு நல்லிணக்கத்துக்கு உறுதுணை வழங்குவார்கள் என்று இன்னமும் அரச தலைவர் நம்புவதே வேடிக்கையானது. இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடகிழக்கு மாகாணத்தில் தற்போது 19 ஆயிரத்து 300 ஏக்கர் நிலம் மட்டுமே இராணுவத்திடம் உள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தப்பத்துவழக்கம்போல இராணுவப் பொய்யை உரைத்துள்ளார். 19 ஆயிரத்து 300 ஏக்கர் நிலத்தில் 16 ஆயிரத்து 115 ஏக்கர்நிலம் வடக்குமாகாணத்திலும், 3 ஆயிரத்து 185 ஏக்கர் நிலம் கிழக்கு மாகாணத்திலும் உள்ளது என்று பொய் உரைத்துள்ளார்.

வடக்கே காணப்படும் 16 ஆயிரத்து 115 ஏக்கரில் 2 ஆயிரத்து 561 ஏக்கர் நிலம் மட்டும்தான் தனியாருக்குச் சொந்தமானதுஎன்றும்தெரிவித்துள்ளார். இராணுவப் பேச்சாளரின் கூற்றுத் தொடர்பில் நான் பகிரங்கச் சவால் விடுகின்றேன்.

நீங்கள் கூறிய குறிப்பிட்ட அளவு தனியார் நிலம் வடக்கின் 5 மாவட்டங்களில் ஒருமாவட்டத்தின்அளவிலும்விடகுறைவானதாகவே கணக்கிடப்பட்டுள்ளது. வடக்கில் யாழ்ப்பாண மாவட்டமானது முழுமையாகஉறுதிக்காணிகள். அந்த மாவட்டத்தில் தற்போது படையினர் வசம்4ஆயிரத்து300ஏக்கர்நிலம்உள்ளது. அதில் வான் படையினரிடம் 800 ஏக்கரும்கடற்படையினரிடம்542ஏக்கரும் பொலிஸாரிடம் 27 ஏக்கருமாக ஆயிரத்து 369 ஏக்கர் நிலங்கள் உள்ளன. இவற்றைவிட எஞ்சிய 2ஆயிரத்து 931ஏக்கர்நிலம்தற்போதும்இராணுவத்தினரின் வசமே உள்ளது. அவை அனைத்தும் தனியாருக்கான உறுதிக் காணிகள். அதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா அனைத்துமாவட்டங்களிலும்முப்படையினரின் பிடியில் மக்களின் வாழ்விடம் மற்றும்வாழ்வாதாரநிலங்கள்தொடர்ந்தும் ஆக்கிரமிப்பில் உள்ளன. இராணுவத்தின் பிடியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்களின் வாழ்விடம் வாழ்வாதார நிலத்துடன், உலகின் கொடுமையாக வாழ்வாதாரத்தின் மூலோபாயமான குளங்கள் நான்கும், ஓர் சுடுகாடும் இராணுவத்தின் வசம் உள்ளது.

அதைப்போன்று மன்னார் மாவட்டத்திலும்இதுவிதிவிலக்கல்ல. முள்ளிக்குளம் மக்களின் நிலத்தை விடுவிக்க வேண்டும் என்று மக்கள் விடுத்த கோரிக்கையால் வாழ்விடம் மட்டும் விடுவிக்கப்பட்டது. ஆனால் அவர்களின் வாழ்வாதார வயல்நிலம்இன்றும்படையினர்வசமே உள்ளது. வவுனியா மாவட்டத்திலும் இதுவே நிலமையாக உள்ள நிலையில் வரப்போகும்ஜெனிவாஅமர்வுகளுக்காகப்போலிஅறிக்கைகளைவிடக்கூடாது. வடகிழக்கு மாவட்டங்களில் எவ்வளவு நிலம் படை வசம் உள்ளது என்பதைத் தகவல்அறியும்சட்டத்தின்கீழ்மாவட்டச் செயலர்கள் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தி வழங்கியுள்ளனர்.

அந்த அளவுகள் வடக்கில் மட்டும் 60 ஆயிரம்ஏக்கர்களைத்தாண்டுகின்றன. அதில் தனியாருக்குச் சொந்தமானது மட்டும்சுமார்20ஆயிரம்ஏக்கர்நிலங்களாகும். அப்படி இல்லை எனில் ஓர் பன்னாட்டு ஊடகம் முன்பாக இதனைப் பகிரங்கமாக விவாதிக்க ராணுவப் பேச்சாளர்தயாராஎன்றுசவால்விடுக்கின்றேன் - என்றார்.

(ந-105)

# நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளப்பணிப்பு

## ரணில் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, செப். 2

நாடாளுமன்றத்தின் எதிர்காலஅமர்வுகளில்ஆளும் கட்சியின்அனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களும்கட்டாயமாகக்கலந்துகொள்ளவேண்டும்என்று தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கஅறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும்நவம்பர்மாதம் 2019ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் நாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அந்தக் காலப் பகுதியில் அரசு பல முக்கிய தீர்மான வரைவுகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. அனைத்து உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள வேண்டும் என்று தலைமை அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார் என்று தெரியவருகின்றது.

(ந)

# துறைமுகநகரம் புதிய முத்தாம்

## கூறுகிறார் சம்பிக்க

கொழும்பு, செப். 2

புதிதாக உருவாக்கப்பட்டு வரும், துறைமுக நகரத்தைஇந்தியப்பெருங்கடலின் புதிய முத்து என்று வர்ணித்துள்ளார்பெருநகர மற்றும்மேல்மாகாணஅபிவிருத்திஅமைச்சர்சம்பிக்க ரணவக்க.

சீனத் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள நேர்காணலில்மேற்கண்டவாறுகூறியுள்ளார்.

'இந்தியப் பெருங்கடலின் புதிதொரு முத்தாகத் துறைமுக நகரம் இருக்கும். இது இந்தப் பிராந்தியத்துக்கு பொருளாதார வாய்ப்புகளைக் கொண்டு வரும். துறைமுக நகரம் இலங்கைக்கு மத்திரமன்றி, கிழக்கு ஆபிரிக்கா, மத்திய ஆசியா, மேற்கு ஆசியா போன்றவற்றுக்கும் கூட நன்மையைக்கொடுக்கும். துறைமுகநகருக்குமின்சாரம் மற்றும் குடி தண்ணீர் விநியோகங்களை வழங்க அரசு ஒரு பில்லியன் டொலரைமுதலீடுசெய்யும். மின்சாரம்மற்றும்குடிதண்ணீரைநாங்களேதுறைமுக நகருக்கு விநியோகம் செய்வோம். துறைமுகநகரத்துக்காக முதலீடு செய்யப்பட்ட நிதியை 10 ஆண்டுகளில் மீளப் பெற்று விட முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ந,5)

# கனியமணல்அகழப்படும்இடங்கள் மூடப்படும்என்பதற்குஎன்னஉத்தரவாதம்?

## கேள்விஎழுப்பினார்ரவிகரன்

முல்லைத்தீவு, செப். 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் தொடக்கம் நாயாறுவரையிலானபிரதேசத்தில்கனியமணல்அகழப்படும் இடங்கள் மீண்டும் மூடப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம்இருக்கின்றது. முல்லைத்தீவுமாவட்டத்தில் கருங்கல், கிரவல்அகழப்பட்ட இடங்கள் இன்னமும்மூடப்படாமல்உள்ளது. இவ்வாறுவடக்குமாகாணசபைஉறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுமாவட்டத்தில்கனியமணல்அகழ்வுதொடர்பில்வடக்குமாகாணசபையால்நியமிக்கப்பட்டகுழுவின் இரண்டாம் கட்ட ஆய்வு நடவடிக்கை புல்மோட்டையில் நேற்று நடைபெற்றது. புல்மோட்டையில் உள்ள கனியப் பொருள் கூட்டுத்தாபனத்தை வடக்கு மாகாண சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினர் சென்று பார்வையிட்டனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில், கனிய மணல்அகழப்படும்இடங்கள்மூடப்பட்டுஅங்குமரங்கள் நடப்படும்என்றுஅதிகாரிகளினால்தெரிவிக்கப்பட்டுள்ளது. புல்மோட்டையில்கனிய மணல் அகழப்பட்ட இடங்களில் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுமாவட்டத்தில்ஒட்டுசுட்டானில்கருங்கற்கள் அகழப்பட்டது. கிரவல்மண்அகழப்பட்டது. அந்தஇடங்கள் இன்றும் மூடப்படாமல் உள்ளது. கனிய மணல் அகழும் இடங்கள் மீண்டும் மூடப்படும் என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று ரவிகரன் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அதிகாரிகள், தனியார் சில வேளைகளில் அதனை மூடாமல் விட்டிருக்கலாம். நாம் அவ்வாறு செய்யமாட்டோம் என்று பதிலளித்தனர்.

முல்லைத்தீவுமாவட்டத்தில்கனியமணல்அகழ்வுதொடர்பான தமது அறிக்கை இரண்டு வாரங்களில், வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

(5,ரி3)

# கடைகளை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞன் கைது

## அச்சுவேலிப் பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 2

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் 5 கடைகள் உடைக்கப்பட்டுஅங்கிருந்தபொருள்கள்திருடப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞன் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பல்பொருள்விற்பனைநிலையம், அழகுசாதனப்பொருள்கள்விற்பனைநிலையம்உள்ளிட்ட5கடைகள்ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் இரவு நேரம் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டிருந்தது. அந்தக் கடைகளில் இருந்த மறைகாணி (சி.சி.ரி.வி) றிசீவரும் திருடப்பட்டிருந்தது. அலைபேசிக்கான மீள்நிரப்புஅட்டைகளும் களவாடப்பட்டிருந்தது.

மீள்நிரப்புஅட்டைகளின் இலக்கங்களை வைத்துபொலிஸார்தேடுதல்நடத்தினர். மீள்நிரப்புஅட்டைகளைகைது செய்யப்பட்ட 19 வயதான சந்தேகநபர் தனது அலைபேசிக்கு தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்துள்ளார். தொலைத் தொடர்பு நிறுவனத்தின் உதவியுடன் இதனைக் கண்டறிந்த அச்சுவேலிப் பொலிஸார் சந்தேகநபரை நேற்று இரவு கைது செய்தனர்.

(5,26)

காங்கேசன்துறையில்

# எரிபொருள்கொள்கலன் அமைக்க நிலம்அளவிடும்பணிகள்நிறைவு

யாழ்ப்பாணம், செப். 2

காங்கேசன்துறையில் அமைக்கப்படவுள்ள 4 எரிபொருள் கொள்கலன்களுக்கானநிலஅளவைப்பணிகள் நிறைவடைந்துள்ளனஎன்று தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறையில் 14 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளைச் சேமித்து வைத்து வழங்கக் கூடிய நான்கு கொள்கலன்களை அமைப்பதற்குப் பெற்றோலிய அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

காங்கேசன்துறைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த எரிபொருள் தாங்கிகளுக்கு சிறிய கப்பல்கள் ஊடாக எரிபொருள்களை நிரப்பிவடக்கின்ஐந்துமாவட்டங்களுக்கும் எரிபொருள் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச காணியில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பத்தில் பெற்றோலிய அமைச்சர் நேரடியாக வந்து முயற்சி எடுத்த போதிலும் நிலத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ளகடற்படையினர் அனுமதி மறுத்தனர். அதையடுத்து காங்கேசன்துறைப் பகுதியில் சிமெந்து தொழிற்சாலையின் காணியில் 6 ஏக்கர்நிலப்பரப்புதெரிவுசெய்யப்பட்டது. அமைச்சரவைப் பாத்திரமும் தாக்கல் செய்யப்பட்டது.

அண்மையில் வடக்குக்கு வந்திருந்த பெற்றோலிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்கஇந்தவேலைத்திட்டங்கள் விரைவில் நடைபெறும் என்று தெரிவித்திருந்தார். தற்போதுதாங்கிகள் அமைப்பதற்கானநிலஅளவைநடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-8)

# 13 மருந்துகளின் விலைகள் இன்று முதல் குறையும்

கொழும்பு, செப். 2

புற்று நோய்க்கான மருந்துகள் உள்பட 13 மருந்துகளின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த மருந்து வகைகள் இதுவரை அதிக விலைகளில் காணப்பட்டனஎன்றும்தற்போதுஅவற்றின்விலைகள் குறைக்கப்பட்டுள்ளனஎன்றும்தெரிவிக்கப்பட்டது. (ந)

# புத்தளம் அம்மன் கோயிலில்திருட்டு

கொழும்பு, செப். 2

புத்தளம்மாரிஅம்மன்கோயிலிருந்துபணம்திருடப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். கோயிலில்எவரும்இல்லாதசந்தர்பத்தில் உண்டியல் உடைக்கப்பட்டு 4 ஆயிரத்து 500 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது. அத்துடன் அங்கிருந்தபொருள்கள்சிலவும் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5)

# விமர்சனங்களைப் பார்த்து ஜே.வி.பி. அச்சம் அடையாது

## பிமல் ரத்நாயக்க எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, செப்.2

மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கமாக உள்ளது என்று கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவித்து வருவதை தாம் பொருட்படுத்துவதில்லை என அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது

ராஜபக்ச தரப்பின் கொள்ளையர் அணியும் அந்த அணிக்கு ஆதரவான ஊடகங்களும், மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்து வருகின்றது என்று கூறினாலும் அதை நாங்கள் எந்த வகையிலும் பொருட்படுத்துவதில்லை.

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியிருடன் இல்லை. எமது கட்சியே மத்திய வங்கியில் இடம்பெற்ற சம்பவத்தை வெளிகொண்டுவந்தது.

அதேபோல் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது எமது கட்சியே ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக வாக்களித்தது. மக்கள் விடுதலை முன்னணி அனைத்து வரவு செலவுத் திட்டங்களுக்கு எதிராக வாக்களித்துள்ளது. மகிந்த ராஜபக்ச ஒரு வரவு செலவுத் திட்டத்திற்கு கூட தனது வாக்கை பயன்படுத்தியதில்லை. அதனால் மக்கள் விடுதலை முன்னணிக்கு குத்தப்படும் முத்திரை தொடர்பாக நாங்கள் அஞ்சப் போவதில்லை. மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கும் ராஜபக்ச அணிக்கு அதற்கான உதவியை எந்த வகையிலும் மக்கள் விடுதலை முன்னணி வழங்காது. என்றார்.(ற)

# பொதுமக்களைத் துன்புறுத்தி ஆட்சியைப் பிடிக்க முயற்சி

## ராஜபக்சக்களைச் சாடுகின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான்

கொழும்பு, செப்.2

பொதுமக்களை துன்புறுத்தியாவது மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என ராஜபக்ச சகோதரர்கள் முயற்சி செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்துள்ளார். கொழும்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அதிகார போதையில் இருந்து இன்னும் ராஜபக்ச சகோதரர்கள் மீளவில்லை. அதனால் தான் மீண்டும் அதிகாரத்தை பெற்றுக்கொள்ள நாட்டில் குழப்பங்களை விளைவித்து வருகிறார்கள்.

அடுத்த பௌர்ணமிக்குள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறி ஐந்தாம் திகதி கொழும்பில் அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

மூன்று வருடங்களாக பல பௌர்ணமிகள் கடந்து விட்டன. மக்களுக்கு தீங்கு விளைவித்ததை தவிர இவர்களால் எதையும் சாதிக்க முடிய வில்லை. மூன்று வருடங்களாக இவர்கள் செய்ததை கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள தொழிற்சங்கங்களை தூண்டிவிட்டு வேலை நிறுத்தம் செய்தார்கள்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி ரயில்வே ஊழியர்கள் செய்த வேலை நிறுத்தத்தால் பொதுமக்களே பாதிக்கப்பட்டார்கள். நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி பொதுமக்கள் அனைவரும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நின்றதை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

இவ்வாறு ஆட்சியை கவிழ்பதாக கூறி இவர்கள் மேற்கொள்ளும் போராட்டங்கள், சதித்திட்டங்கள் அனைத்திலும் பாதிக்கப்படுவது அப்பாவி பொதுமக்களே.

நாம் வழங்கியுள்ள ஜனநாயகத்தை இவர்கள் துஷ்பிரயோகப்படுத்தி போராட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு தொடர்ந்தும் இன்னல்களை கொடுத்தால் அரசும் ஒருமுறை வழங்கப்பட்ட ஜனநாயகத்தை பொதுமக்கள் நலன்கருதி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.என்றார்.

(ற)




# கனடா ரொறொன்ரோ நகர முதல்வரும் யாழ்ப்பாணம் நகர முதல்வரும் சந்திப்பு

யாழ்ப்பாணம் ,செப் 02

யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட்க்கும் கனடா ரொறொன்ரோ நகர முதல்வர் ரோரிக்கும் இடையே மரியாதை நிமித்தமான சந்திப்பு ஒன்று ஒகஸ்ட் 28 ஆம் திகதி ரொறன்ரோ நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ரொறொன்ரோ மாநகர சபை உறுப்பினர் நீதன் சாண் . கனேடியத் தமிழர் பேரவையின் நிறைவேற்று இயக்குநர் டான்ரன் துரைராசா , கனேடிய தமிழர் பேரவையின் வடக்கு கிழக்கு மேம்பாட்டு திட்டத்தின் பொறுப்பாளர் . பிரசாந்த் சிறிசந்திரமோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண முதல்வர் ஆனல்ட் யாழ்ப்பாணம் மாநகரத்தில் அண்மைக் காலத்தில் இடம் பெறும் மீள்கட்டுமான முயற்சிகள் பற்றி முதல்வர் ரோறிக்கு விளக்கியதுடன் நீண்ட போருக்குப் பின்னர் மக்கள்

எதிர்கொள்ளும் பல்வேறு சவால்கள் தொடர்பாகவும் காலந்துரையாடியிருந்தார். அறிவுப் பரிமாற்றம், கழிவு முகாமைத்துவம் மற்றும் பயிற்சி வசதிகள் தொடர்பாக முதல்வர் ரோறியின் உதவியை முதல்வர் ஆனல்ட் கோரியிருந்தார்.

முதல்வர் ரோறி அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாணத்துக்குச் சென்று வந்ததைப் பற்றி எடுத்துரைத்ததுடன். நீண்ட போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை மீள்கட்டியெழுப்ப உதவும் தனது ஈடுபாட்டை வெளிப்படுத்தியிருந்தார். ரொறொன்ரோ நகரம் என்னென்ன வழிகளில் யாழ்ப்பாண நகரத்துக்கு உதவ முடியும் என்பதையிட்டுக் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. யாழ்ப்பாண மாநகரத்தின் பொருளாதார மேம்பாட்டுக்காக எதிர்காலத்தில் ரொறொன்ரோ நகரம் யாழ் மாநகருடன் இணைந்து செயல்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான நம்பிக்கையை வெளியிட்டதுடன் ரொறொன்ரோ நகரம் யாழ்ப்பாணம் நகரம் இரண்டுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது பற்றிய கருத்துப் பரிமாற்றங்களும் இடம் பெற்றன.

யாழ்ப்பாண நகர முதல்வர் ஆனல்ட் ரொறொன்ரோ நகர முதல்வர் ரோறி க்கு யாழ்ப்பாணத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்ததுடன் , ரொறொன்ரோ நகர மண்டபத்தில் உள்ள விருந்தினர் புத்தகத்தில் கையொப்பமிட்டார் யாழ். மாநகர முதல்வரினால் யாழ்ப்பாணம் மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வனையப்பட்ட கைவினைப் பொருள்கள் அடங்கிய ஒரு பரிசுக் பொதி முதல்வர் ரோறிக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. முதல்வர் ரோறியினால் யாழ். மாநகர முதல்வருக்கு ரொறொன்ரோ நகரம் பற்றிய நூல் ஒன்று பரிசாக வழங்கப்பட்டது.



# தென்மராட்சி அபிவிருத்தி கலந்துரையாடல்

சாவகச்சேரி, செப். 2

தென்மராட்சி பிரதேச செயலக மட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கான முன்னோடிக் கூட்டமும் கம்பெரலிய துரித கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டமும் பற்றிய கலந்துரையாடலும் கிராம சக்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான குழு நிலை கருத்தறியும் நிகழ்வும் நேற்று தென்மராட்சி கலைமன்ற கலாசார ம்ண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான எம்.ஏ.சுமந்திரன், வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் க.துரைராசா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆலயங்கள், ப்பாடசாலைகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் போன்றோர் கலந்து கொண்டனர். அவர்கள் வட்டார ரீதியில் அமர வைக்கப்பட்டு முன்மொழியப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டு ஆராயப்பட்டன. (ற9.159)

# இந்து இளைஞர் மன்றத்தின் கலைவிழா

சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றம் வருடந்தோறும் நடத்தும் மாபெரும் கலைவிழாவானதுநேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இந்து இளைஞர் மன்ற கலாமண்டபத்தில் ச.சிவறமணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்குமுதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் சிறப்பு விருந்தினர்களாக த.நடனேந்திரன் தவிசாளர் வலிமேற்கு பிரதேச சபை., வலிமேற்கு பிரதேச செயலர் .பிறேமினி பொன்னம்பலம் ,சிறப்பு விருந்தினர்களாக வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினர்களான த.சிவசுப்பிரமணியம் , சு.சந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (126)



# கால்நடை மருத்துவர் பணியகம் ரூ.72 லட்சத்தில் அமைக்கப்படுகிறது

**சாவகச்சேரி, செப். 2**

**சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பணியகத்துக்கு நிரந்தரமாகப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுவருகிறது. தனங்களப்பு வீதியில் இது அமைக்கப்படுகிறது.**

சாவகச்சேரியில் நீண்டகாலமாகக் கால்நடை மருத்துவர் பணியகம் இயங்கி வருகின்றபோதிலும் நிரந்தர கட்டடமின்மையால் காலத்துக்குக் காலம் வெவ் வேறு தனியார் கட்டடங் களில் பணியகம் இயங்கிவந் துள்ளது.

2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் தென்மராட்சிப் பிரதேச செயலகம் இரு கட்டடங்களில் இயங்கிவந்தது. போர்க் காலத்தில் இந்த இரு கட்டடங்களும் சேதமடைந்தன. அதில் ஒரு கட்டடம் சீரமைக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட் டது.

வேறொரு தனியார் கட்டடத்திலும் பிர தேச செயலகம் இயங்கிவந்தது.

பிரதேச செயலகத்துக்கென தனியாக இரு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்ட தால் அனைத்துப் பிரிவுகளும் ஒரே கட்டடத்தில் இயங்கத் தொடங்கின. சீரமைக்கப் பட்ட கட்டடத்தில் கால் நடை மருத்துவர் பணியகம் இயங்கி வந்துள்ளது.

தற்போது பிரதேச செயலகத்தின் பிரி வுகள் அதிகரிக்கப்பட்டு வருவதால் அங்கு காணப்படும் இடநெருக்கடி யைக் கருத்திற் கொண்டு பிரதேச செய லகத்துக்குச் சொந்தமான கட்டடத்தைக் கால்நடைத் திணைக்களத்தி டமி ருந்து மீளப்பெறு வதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் சாவகச்சேரி நகர சபைக்குச் சொந்தமான காணியில் அதை அமைக்க முடிவு எடுக்கப்பட் டது. அதன்படி கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டடம் அமைக்க யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நிதி ஒதுக்கியிருந் தது. (4,9)

## ஆங்கில மொழியில் முன்னாயத்தமில்லாத பேச்சும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 2

ஆங்கில மொழியில் முன்னாயத்தமில்லாத பேச்சும் பரிச ளிப்பும்அல்வாய்மாலைசந்தைவரதராஜவிநாயகர்ஆலய திருமண மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் முக மாக ரவீன்ஸ் சி.எம்.சி நிறுவனத்தினரால் இது நடத்தப்படு கிறது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் கணக்கியல் துறைத் தலைவரும் திறந்த மற்றும்தொலைக்கல்விநிலையத்தின்பணிப்பாளருமாகிய பேராசிரியர்பா.நிமலதாசன்கலந்துகொள்ளவுள்ளார். ஆங் கில மொழி தொடர்பில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4,109)

## மகாஜனாவில் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 2

தெல்லிப்பழைமகாஜனாக்கல்லூரியில்கல்விகற்கும்தரம் 6 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

முற்பகல் 9 மணிக்கு இது நடைபெறவுள்ளது. இதில் உரிய வர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் அறிவித்துள் ளார். (4.162.422)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

சாவகச்சேரி, செப். 2

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட அரசஅரசசார்பற்றநிறவனங்களின்தலைவர்கள், பணி யாளர்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

நாளைமறுதினம்செவ்வாய்க்கிழமைமு.ப.10மணிக்கு சாவகச்சேரிச் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத் தில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது என்று சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன் அறிவித் துள்ளார்.

மழைகாலம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பிரதேசத்தில் டெங்குத்தாக்கம்ஏற்படாமல்தடுப்பதற்குநிறுவனங்கள் ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாகக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ள்து எனத்தெரிவிக்கப்பட்டது. (4,9)

## நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். சின்மயாமிஷனின்காலாண்டுச் சஞ்சிகையானசின்மயநாதம்சிலமாற் றங்கள்செய்யப்பட்டு, புதியபரிணாமத் தில் புதிய வடிவில், ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணியளவில் வெளியி டப்படவுள்ளன. நல்லைக்கந்தப் பெரு மானின் திருக் கார்த்திகைத் திருவிழா வாகியஇன்றுஇல700, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில் வெளியிடப்படவி ருக்கின்றது.

இத்துடன் சின்மயா மிஷன் மாதாந்த செய்திமடலும் வெளியிடப்படும்.

இதழாசிரியர் திருமதி. ஓம்சக்தி யசோ தன் நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்து தலைமையுரையையாற்று வார். யாழ் சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்கள் ஆசியுரை வழங்குவார். வெளியீட்டு உரையை யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியை திரு மதி. யாழினி மதீபன் நிகழ்த்துவார்.

முதற்பிரதியை சுவாமிஜிடம் இருந்து நல்லூர்இலங்கைவங்கிமுகாமையா ளர் தங்கராசா சுதாகரன் பெற்றுக் கொள்வார். (4)

## பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலைய புதிய கிளை திறப்பு

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணம்-கிளிநொச்சிபிரம்மகுமாரிகள்இராஜயோகநிலையத்தின்புதிய கிளை சித்தன்கேணியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதில்முதன்மைவிருந்தினராகவலி.மேற்குபிரதேசசெயலகஉதவிப்பிரதேச செயலர் திருமதி.சி.செந்தூரன், மதிப்புறு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத்தவிசாளர்த.நடனேந்திரன், சிறப்புவிருந்தினர்களாக, வலிகாமம்வல யக்கல்விவலயஆரம்பக்கல்விஉதவிக்கல்விப்பணிப்பாளர்லோ.ஸ்ரனிஸ் லாஸ், சுழிபுரம்விக்டோரியாக்கல்லூரிஅதிபர்திருமதிசி.சிவகுமார்ஆகியோர் கலந்துகொள்வர். கிருஷ்ண ஜெயந்தி விழா, கலை நிகழ்வுகளும் இடம்பெற வுள்ளன. தொடர்ந்து மூன்று தினங்கள் காலை 8மணி முதல் இரவு 8மணி வரை சுகவாழ்வு காணொலியும் படவிளக்கமும் இடம்பெறவுள்ளன.

நாளைதிங்கட்கிழமைமாலை4.30மணிக்குசமூகசேவகர்களுக்கானசிறப்பு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுகளுக்குக் கட்டணங்கள் அறவிடப் படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

## நல்லூர் சூழலில் அவதானிக்கிறது சுகாதாரப் பிரிவு

நல்லூர்ஆலயச்சூழலில்உள்ளஉணவகங்கள்தேனீர்ச்சாலைகள், ஐஸ்கிறீம் விற்பனைநிலையங்கள்மீதுசுகாதாரப்பிரிவினர்கண்காணிப்புதீவிரப்படுத் தப்பட்டுள்ளது. இந்த நிலையங்களை சுகாதாரப் பிரிவினர் தினமும் சென்று சுகாதார விதிகளைப்பார்வையிட்டும் வருகின்றனர்.

நடமாடும்காரம்சுண்டல்வண்டில்கள், தேன்முறுக்கு வண்டிகளில் சுகாதார விதிகளும்தினமும்கண்காணிக்கப்பட்டுவருகின்றன என்று மாநகர சுகாதா ரப்பிரிவினர்தெரிவித்தனர். ஆலயச்சூழலில்உள்ளஅன்னதானம்வழங்கும் மடங்களின் சுகாதாரமும் அவதானிக்கப்படுகின்றன. (4.17)

## பொதுச்சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 2

வலிகாமம்பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்க ளின் கொத்தணியின் பொதுச் சபைக் கூட்டம் நாளை திங்கட் கிழமை முமுற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

கொத்தணித்தலைவர் செ.செல்வ ராசா தலைமையில் நடைபெற வுள்ளஇந்தநிகழ்வுக்குமுதன்மை விருந்தினராகயாழ்ப்பாணமாவட் டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர். பொ. மோகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4.63)

## திருக்கார்த்திகை

யாழ்ப்பாணம், செப். 2

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் அலங்காரக் கந்த னுக்கு இன்று ஞாயிற்றுக்கி ழமை திருக்கார்த் திகை திருவிழா நடைபெறும். இன்று மாலை 6மணிக்கு முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமோதராய் அழகிய பூஞ்சப்பறத் தில் ஆரோகரித்து வீதிவலம் வரும் அற்புதக் காட்சியும் இடம் பெறும். (4,17)



கொடிகாமம்தாவளை இயற்றாலைகேசரப்பிட்டிப்பெரியதம் பிரான் பிள்ளையார் கோவில் அலங்காரத்திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற்று இறுதித் தினமான நேற்றுமுன்தினம் சங்காபி ஷேகமும் சிறப்புப் பூசைகளும் நடைபெற்றன. (159)



தென்மராட்சி மீசாலை கிழக்கு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா கடந்த 25ஆம்திகதி நடைபெற்றது. (159)

## நல்லூரில் இன்று

நல்லைஆதீனமண்டபத்தில்'ஈசனை இகழ்ந்தோர்பால்இருப்பரோ'என்றதலைப் பில் பிரசங்க பூசணம் சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்று வார். மாலை 6.30 தொடக்கம் இரவு 8.30 மணிவரை இது இடம்பெறும்.

★★★

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் வயலின் இசை, இசைக்கச்சேரி இடம் பெறும். வயலின் இசையில் இளங்கலைஞர் மன்ற மாணவிகள் நிகழ்த்துவர். வயலின் சிவசுப்பிரமணியம்பிருந்துஜா, பிரிந்தாபரன்தனசாயினி, தவகுமாரன் தாட்சாயினி, புஸ்பராசா தாரணி, மிருதங்கம் பி.ஞானவேல்.

இசைக்கச்சேரியில், பாட்டு பத்மநாதன் சிவமைந்தன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ஞா.வசந், முகர்சிங் ஜெ.சாரங்கன். மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15மணிவரை இடம்பெறும்.

★★★

நல்லூர்மனோன்மணிம்மன்கோவிலில் திருப்பெரும்வடிவம்என்றதலைப்பில் சைவசின்மயர்செ.த.குமரன்சொற்பொழிவாற்றுவார். மாலை6.45மணிதொடக் கம் 7.45மணிவரை இது இடம்பெறும்.

★★★

நல்லூர் சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞான சம்பந்தர்ஆதீனக்கலாமண்டபத்திலும்இந்துசமய, கலாசாரஅலுவல்கள்திணைக் களம் சிறப்புற ஆன்மீக நிகழ்வுகளை நடத்துகின்றது.

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறும்.

நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் தெல்லிப்பளைப்பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பிரசங்கபூஷணம், சைவப்புலவர் செ.கந்த. சத்தியதாசன் அவர்களின் "ஈசனை இகழ்ந்தோர்பால் இருப்பாரோ?" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், வவுனியா சிறி அகிலாண்டேஸ்வரி அருளக நுண்கலைக்கல்லூரி மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன.

## மரண அறிவித்தல்கள்

மலர்வு
05
.
03
.
1958



உதிர்வு
01
.
09
.
2018

# முருகையா ஆனந்தரட்ணராஜா (ஆனந்)

*(யாழ் மண்ணின் தலைசிறந்த பல்துறைசார் தொழில்நுட்பவியலாளரும், கராத்தே ஆசிரியரும், கலைஞாயிறு விருது பெற்ற இசைக்கலைஞரும், ஆனந் இசைக்குழுவின் உரிமையாளரும்)*

திருகோணமலை, கன்னியாவைப்பிறப்பிடமாகவும், ஆலங்குழாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ஆனந்தரட்ணராஜா நேற்று (01.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் அந்தோணியம்மா தம்பதியரின் அன்புமகனும் கமலறஞ்சினியின் (கலா) அன்புக்கணவரும் ராஜ்குமார் (ராஜ் மாஸ்டர் - எலக்ரோனிக் என்ஜினியர், RMTS எஞ்சினியரிங்), ஜீவானந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் அச்சுதன் (சிற்றி காட்வெயார் எழுதுவினைஞர்), அங்கவி ஆகியோரின் அன்பு மாமனும் சாரங்காராஜ் (சென் யோன்ஸ் கல்லூரி), கஸ்தூரி (யா/ வேம்படி உயர்தரப்பாடசாலை), பிரியங்கராஜ் (ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை), மதுஜா (மானிப்பாய் மகளிர் கலலூரி), கோபினா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), குஜானந் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேரனும் சாந்தன், நிருஜன், ராஜா, பிரணவன், ஜோதி, சாந்தி ஆகியோரின் சிறியதந்தையும் பிரகாஸ்கண்ணாவின் (ஜொனி) மாமனும் ராஜா, சாந்தி, சுதா, றஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலங்குழாய் சண்டிலிப்பாய்**
**077 286 6644, 077 600 8447**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

---



தோற்றம்
05
.
12
.
1932

மறைவு
01
.
09
.
2018

# திருமதி தங்கமணி குணசிங்கம்

யாழ்.கந்தர்மடம் அன்னசத்திரலேனைப் பிறப்பிடமாகவும், இல.171/3, W. A சில்வா மாவத்தை, வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கமணி குணசிங்கம் நேற்று (01.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற குணசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுபத்திரா, சுப்பிரமணியம் (உரிமையாளர் - இராசம் மோட்டர்ஸ்), கனகரத்தினம், கோதாவரி, பராசக்தி, தியாகராஜா, ஈஸ்வரி, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஜெயச்சந்திரன், பாலசந்திரன் மற்றும் நிர்மலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கவிதா, கந்தசாமி - பிரபாகரன் (பொறியியலாளர், சிறிலங்கா ரெலிகொம், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன் (ஆஸ்திரேலியா), தட்சாயினி (ஆஸ்திரேலியா), உமையாள், விதுஷா, சங்கவி, வக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யாழினியின் (ஆஸ்திரேலியா) அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல. 23, பிறவுண்றோட், 2 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 2 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.13, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி.**

**தகவல்:**
**பிரபாகரன் (மருமகன்)**

**071130 0288, 0212217541**

---

## சேவை நலன் பாராட்டும்
## 60 ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்தும்



முப்பத்தாறாண்டுகள் முழுதான சேவை தனை வங்கிக்கு நல்கி அகவை அறுபதில் பணி நிறைவு காணும்

**திருமதி நாளினி தேவானந்தன்**
(நிறைவேற்று உத்தியோகத்தர்)
(02.02.1982 - 31.08.2018)

பல்லாண்டு வாழ வாழ்த்துவதோடு இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Best Wishes

**வங்கிக்குழாம் BOC,**
**யாழ் 2ஆம் மேற்றரக்கிளை.**

Happy Birthday wishes



---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### பத்மநாதபிள்ளை கிஷோக்

தோற்றம்
18.11.1997

மறைவு
02.09.2016



ஈராண்டாய் இவ்வுலகை விட்டு
எங்கையா சென்றாய் நீ?
ஏங்கித் தவிக்கின்றோம் இங்குன்
இனிய முகம் தேடி
இராப்பகலாய் துடிக்கின்றோம்
உன் பிரிவால் நாமிங்கு

காலனும் பொறுக்கவில்லை
கைதவமும் பலிக்கவில்லை
வேலனை வேண்டியும்
வேணவா ஆயிற்று
வெந்துயர் கொண்டிங்கு
வேகின்றோம் நாமிங்கு
விரைந்தோடி வந்திடய்யா.....

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

# செல்லப்பா பாலசுந்தரம்



அன்னை மடியில் 02.05.1947
இறைவன் அடியில் 31.08.2018

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பாலசுந்தரம் கடந்த (31.08.2018) வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மரு்மகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் ஶ்ரீகௌரி (கனடா), பிறேம கௌரி (வருமான பரிசோதகர் மாநகர சபை), ஞானவேல் (வங்கி உத்தியோகத்தர் - இலங்கை வங்கி, சுன்னாகம்), காலஞ்சென்ற தேவப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரிமளம், அற்புதம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, சரவணமுத்து மற்றும் பத்மநாதன், மகாலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலகுமார், பாபுஜி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சின்மயியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சீரடி இல்லம்,**
**வீமன்காமம், தெல்லிப்பழை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 717 4217**

## மரண அறிவித்தல்

### திருமதி உமாகாந்தா கண்ணதாசன்


அன்னை மடியில் ஆண்டவன் அடியில்
11.06.1980 23.08.2018

யாழ்.நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உமாகாந்தா கண்ணதாசன் 23.08.2018 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் உருக்குமணி தம்பதிகளின் அன்பு மகளும், தங்கேஸ்வரன் - யோகாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும், கண்ணதாசனின் பாசமிகு மனைவியும், கலைமதி (ஜேர்மனி), தர்மராசா (சுவிஸ்), பத்மராசா (பிரான்ஸ்), கஜநிதி (கனடா), நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நற்குணலிங்கம் (ஜேர்மனி), ரேணுகா (சுவிஸ்), செல்வரஞ்சி (இலங்கை), கமலநாதன் (கனடா), மாலா (நோர்வே), அருட்செல்வி (நெதர்லாந்து), அன்புதாசன் (நெதர்லாந்து), பாரதிதாசன் (இலங்கை), மலர்ச்செல்வி (பிரான்ஸ்), யோகநாதன் (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் மற்றும் கயல்விழி கலியுகா, பகிதரன் ஆகியோரின் அன்பு சகலியும், மாறியோ, ரண்ணியா, பிரதாப், பிரகவி, கவிசன் ஆகியோரின் அன்புச்சித்தியும், மதுசன், விதுசன், கவிதாரணி, தினோசயன், துசானி, சிந்துசன், திலீபன், மதுஷா, ஷாருஜன், ஷாஹுஜா ஆகியோரின் அன்பு மாமியும், ரணிசாவின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2018) திங்கட்கிழமை பிரான்ஸ் நேரப்படி பிற்பகல் 12.30 - 02.45 மணிவரை (இலங்கை நேரம் பிற்பகல் 4.00 மணிக்கு) Crematorium of pere Lachaise, 71 Rue des Rondeaux, 75020 Paris, France இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

தகவல்:
குடும்பத்தினர்.

0763925214

## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

**மேற்படி சங்கத்தில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக தகைமையுள்ளவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01) பதவி :- காசாளர் (வெற்றிடம் - 01)**
**சம்பளக் குறியீட்டு இல :-** 306/13
**சம்பளத் திட்டம் :-** 14230 - 120 x 10 - 130 x 10 - 16730
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக்குறைந்தது 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்ட பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரம் சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது எண் கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியும் 03 பாடங்களில் சித்தியும் கூட்டுறவு சங்கமொன்றில் காசாளர் அல்லது விற்பனை நடவடிக்கைகள் பற்றி 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**02) பதவி :- விற்பனை உதவியாளர் (வெற்றிடம் 02)**
**சம்பளக் குறியீட்டு இல :-** 308/17
**சம்பளத் திட்டம் :-** 12800 - 100 x 10 - 110 x 10 - 14900
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் கணிப்பீட்டுப் பரீட்சை சான்றிதழ்

அல்லது

ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை நிலையங்களுடன் தொடர்புடைய 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**ஏனைய விபரங்கள்**

01) வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை பொருத்தமற்றது)

02) இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் சுற்றுநிருபத்துக்கமைய இதர படிகளும் காலத்துக்குக் காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

03) குறித்த பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.

04) ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.

05) தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் ரூபா 50.00 செலுத்திப் பெற்றுப் பூரணப்படுத்திக் கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் உரிய பதவியைக் குறிப்பிட்டு தலைவர், யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), இல.330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 15.09.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பனை தென்னை வள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.**

(E7850)(11.17)

## ஈர விழிகளுடன் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 . 04 . 1946

மறைவு
07 . 09 . 2012

### திருமதி குகானந்தவல்லி கனகலிங்கம்

(குகம் அக்கா)

திதி: ஸப்தமி (02.09.2018)

நேசத்துடனும் அன்பு பாசத்துடனும்
ஒரு கூட்டுக்கிளியாக எமை வளர்த்து
ஆளாக்கி நேர்வழியில் வாழவைத்த எம்
குடும்ப குலவிளக்கு எம் அன்புத்
தெய்வத்தை எம் உள்ளங்களில் இருத்தி
எந்நாளும் வணங்குகின்றோம்

"குகம் வாசம்"
விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

கடந்த 25.08.2016
இறைவனடி சேர்ந்த
எமது குடும்ப
குல விளக்கு

அமரர்
**இராஜேஸ்வரன்**
**சாந்தி**



அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவுதினம் நாளை
(03.09.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனையிலும் அதனைத்
தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

7 ஆம் ஒழுங்கை,
அனிஞ்சியன் குளம், மல்லாவி.

குடும்பத்தினர்.
077 650 1063

## மரண அறிவித்தல்



### ஆனந்தம் முகுந்தன் (பபா)

உசனைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தம் முகுந்தன் 27.08.2018 திங்கட்கிழமை கனடாவில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தம் மற்றும் நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்டி நவரட்ணம் ஹாட்ஸ்மேரி தம்பதிகளின் அன்பு மருமகனும், டொறிஸ்காமினியின் அன்புக் கணவரும், டெனி, லேனி ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி, காலஞ்சென்ற வசந்தன் (கண்ணன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜலிங்கம், காயத்திரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மயூரன், மாதங்கி, கஜீவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலக்‌ஷன், நிலக்‌ஷி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சாயுகனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2018) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உசன்,
மிருசுவில்.

தகவல்:
ந.இராஜலிங்கம் (மைத்துனர்)

(CS 19489)(11.17) 021 227 0135

**விற்பனைக்கு** நல்ல நிலையில் உள்ள மிககுறுகிய காலம் பயன்படுத்தப்பட்ட "ஸ்பிறிங் மெத்தை" 48" X 72" மலிவு விலை யில் விற்பனைக்கு உண்டு. - 077 805 2520

### காணி விற்பனைக்கு

யாழ். மருத்துவ பீடத்திற்கு அண்மையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
- 076 697 2287

### புதிய குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு

பெட்டி உடைக்கப்படாத புதிய LG இன குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்கு உண்டு. - 077 978 9752

### நாய்க்குட்டி விற்பனைக்கு

21/2 மாத கறுப்பு நிற லப்றடோர் (Labrador) பெண்குட்டி உடன் விற்பனைக்கு உண்டு. - 071 157 1835

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம், பழம் வீதியில் 4 அறைகளைக் கொண்ட TILE பதிக்கப்பட்ட வீடு வாடகைக்கு உண்டு.
T.P: 077 9915 147

### வேலைக்கு ஆள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வியாபார நிலையத்திற்கும், வாகனசுத்திகரிப்பு நிலையத்திற்கும் ஆள் தேவை.
தொடர்பு - 077 776 3533

### மணமகள் தேவை

யாழிந்து வேளாளர், நியூசிலாந்தில அரசாங்க பதவி வகிக்கும் பூரம் 3 ஆம் பாதம், 1984 இல் பிறந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. தொடர்பு - 077 740 7439, 077 9377 842

### தொழிலாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கும் தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் தேவை. சம்பளம் 55 000/=, உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. கிராம சேவகர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.
- 071 348 9079, 071 348 9086, 071 494 8309

### வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் இரும்பகத்திற்கு அனுபவமுள்ள காசாளர் மற்றும் விற்பனையாளர் தேவை.
(தென்மராட்சியில் உள்ளவர்கள் மட்டும்)
தொடர்பு - 077 225 0149

### தவறிவிட்டது

31.08.2018 வெள்ளிக்கிழமை I Phone 7 ஒன்று திருநெல்வேலி சந்திக்கும், ஸ்ரான்லி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. தகவல் தெரிந்தவர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - 077 968 6050

### பணிப்பெண் தேவை

கொழும்பில் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ் வைத்திய குடும்பத்தினருடன் தங்கியிருந்து பணிபுரியும் பணிப்பெண் தேவை.
(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்)
தொடர்பு - 077 2987 582

### வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடியபாத வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனத்துக்கு மட்டும்
தொடர்பு - 076 114 1040

### வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் உள்ள பாதணி வியாபார நிலையத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் (வயது எல்லை 18 - 30 வயது) சாவகச்சேரி நகர் எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. - 077 659 2941

### வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பெண்) தேவை

எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை அழைப்புக்களை முகாமை செய்வதற்கு ஆள் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையோர் 03.09.2018 திங்கட்கிழமை நேரில் வரவும்.
**வீனஸ் என்ரபிறைசஸ்**
**இல. 110, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம். 077 844 8300**

# குரங்குகளைக் கட்டுப்படுத்துமாறு விடுத்திருந்த கோரிக்கையைக் கண்டுகொள்ளாத அதிகாரிகள்

## தென்மராட்சியில் நேற்றைய கூட்டத்தில் இந்தநிலை

தென்மராட்சி, செப். 2

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாம்பழச் செய்கை இடம்பெறுகின்றபோதும், அவற்றைக் குரங்குகள் அழித்து நாசமாக்கியும் கடித்துக் குதறி உணவாக்கியும் வருகின்றன. குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பழமரச் செய்கையாளர்கள், கலந்துரையாடலில் கோரிக்கை விடுத்தபோதும் அதிகாரிகள் அதைக் கவனத்திற் கொள்ளாது பதில் வழங்காமலேயே சென்றனர்.

தென்மராட்சிப் பிரதேச மாமரச் செய்கையாளர்களுக்கான கலந்துரையாடல் மீசாலை பழமுதிர்ச்சோலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், உலக வங்கி மற்றும் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்ட நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பிரதேசத்தைச் சேர்ந்த ஏராளமான பழமரச் செய்கையாளர்களும் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. வருடாந்தம் மாமரங்கள் காய்க்கும் வேளைகளில் கூட்டம் கூட்டமாக வரும் குரங்குகள் மாங்கனிகளை. பழங்களை அழித்தும். உணவாக்கியும் பெரும் நட்டத்தை செய்கையாளர்களுக்கு ஏற்படுத்துகின்றன.

தமது உற்பத்திகளை அழிக்கும் குரங்குகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று அதில் பழமரச்செய்கையாளர்கள் கோரிக்கை முன்வைத்தனர். ஒட்டுமொத்தமாக அனைவரும் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர். எனினும் இது தொடர்பாக எந்தவித கருத்தும் அதிகாரிகளால் இறுதிவரை தெரிவிக்கப்படவேயில்லை என்று பிரதேச பழமரச் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்தவருடங்களில் கூடுகள் வைத்துக் குரங்குகளைப் பிடிப்பது தொடர்பாக எடுத்த முயற்சி வெற்றியளித்தபோதிலும் பிடித்த குரங்குகளை வெளியேற்றுவதில் சிரமங்களை எதிர்நோக்கியதால் அந்தத் திட்டத்தை கைவிட்டனர் எனவும் கூடுகள் வைத்து குரங்குகளைப் பிடித்து அவற்றை வனத் திணைக்கள அதிகாரிகள் மூலமாக வனங்களில் விடுவதென்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி பல இடங்களில் கூடுகள் வைத்துக் குரங்குகள் பிடிக்கப்பட்டு உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் வருவதில்லை. பிடிபட்ட குரங்குகளை அதிக நாள்கள் கூட்டில் வைத்திருக்க முடியாத நிலையில், அவற்றை வெளியே விட்டிருந்தோம் என்றும் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இடப்பெயர்வின் பின்னர் 2002 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த மக்கள் மற்றும் பழமரச் செய்கையாளர்கள், விவசாயிகள் பல்வேறு கூட்டங்களில் இந்த கோரிக்கையை முன்வைத்திருந்தனர். எனினும் உருப்படியாக எதுவும் நடக்கவில்லை என்று அவர்கள் கூறுகின்றனர். (4,9)



# பொலிஸ் திணைக்களத்தின் 152ஆவது ஆண்டு தினத்தில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 2

இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் 152 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரக்கன்றுகளை நடும் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பிராந்திய நிலையங்களுக்கான மரங்களை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசுந்தர கையளித்தார். மரக்கன்றுகள் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் உள்ள 9 பொலிஸ் நிலையங்களில் நடப்படவுள்ளன. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் 20 தென்னங்கன்றுகள், 20 மூலிகை மரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (4,8)

# பெண்ணின் விரலை கடித்துக் குதறியது வளர்ப்புப் பூனை

தென்மராட்சி, செப் 2

வளர்ப்புப் பூனையால் குடும்பப் பெண் கடியுண்ட சம்பவம் எழுதுமட்டுவாழில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. வெட்டிய மீன் தலையை நாய்க்கு எறிய முற்பட்ட வேளையில் பூனை திடீரென்று பாய்ந்து விரலைக் கடித்து மீன் தலையைப் பறித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பூனையால் கடியுண்ட பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார். குறித்த மருத்துவமனையில் கடந்த ஓகஸ்ட்டில் 7 பேர் வரையில் வளர்ப்புப் பூனைகளால் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,9)





# சரசாலை பொதுநோக்கு மண்டபத்தை சரவணபவன் எம்.பி. திறந்து வைத்தார்

கொடிகாமம், செப். 2

தென்மராட்சி சரசாலை வடக்கு நித்தியா மகளிர் ஐக்கிய நாணய சங்கத்துக்கென்று புதிதாகக் கட்டப்பட்ட பொதுநோக்கு மண்டபம் கடந்த 22ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் அந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கி மண்டபத்துக்கான அடிக்கல் நட்டு ஆரம்ப வேலைகளுக்கு உதவியிருந்தார்.

பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன். 17 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதியை ஒதுக்கிக் குறித்த கட்டடப்பணிகளை நிறைவு செய்தார்.

அதன் திறப்பு விழாவில் அவர் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

அந்த நிகழ்வில் ஏராளமானோர் கலந்துகொண்டிருந்தனர். (4,159)

# தெல்லிப்பழை மருத்துவமனையை போதனாவுக்கு நிகராக மாற்றவும்

## நேற்றைய கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 2

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையை போதனா மருத்துவமனைக்கு நிகராகத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு மருத்துவமனை நலன்புரிச் சங்கம் கோரியுள்ளது. மருத்துவமனைக் குறைபாடுகள் தொடர்பான கலந்துரையாடல் மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் மருத்துவர்களும் கலந்துகொண்டனர். அதன்போது சுமந்திரனிடம் மேற்குறித்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தெல்லிப்பளை மருத்துவமனைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. தேவையான உபகரணங்கள் இல்லை. மருத்துவர்களுக்கான தங்குமிட வசதிகள் இல்லை. இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கும் அப்பால் நீண்டகாலமாக மருத்துவமனைக்குப் போதிய ஆளணி இல்லை.

மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் இங்கு சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். புற்றுநோய்ச் சிகிசைக்கு ஏராளமானவர்கள் வந்து செல்கின்றனர். அவர்களுக்கான சேவைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். வெளிமாவட்டங்களில் இருந்துகூட இங்கு சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறான சேவைகளை மேற்கொள்ளும் மருத்துவமனையில் பல குறைபாடுகள் உள்ளன. அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மருத்துவர்களும் மருத்துவமனை நலன்புரிச் சங்கமத்தினரும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு. பாதீட்டில் எந்த வகையில் நிதி ஒதுக்கீடு செய்யலாம். மருத்துவமனை தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடுவதுடன் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முழுமுயற்சி எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கூறியதாக நலன்புரிச் சங்கத்தினர் மற்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர். . (4,8,26)



# பருத்தித்துறை– யாழ்ப்பாணம் இடையே புதிய பேருந்து பணி ஆரம்பிப்பு

வடமராட்சி, செப். 2

வடமராட்சி பருத்தித்துறையில் இருந்து தம்பசிட்டி வியா பாரி மூலை திக்கம் வதிரி நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கான புதிய பேருந்து சேவை ஒன்று நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டது. பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சேவை பருத்தித்துறையிலிருந்து காலை 6.35, முற்பகல் 10.35, பிற்பகல் 3.10 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 8.45, மதியம் 12.45, மாலை 5.15 மணிக்கும் நடைபெறவுள்ளது. (422) அதன் ஞாபகார்த்தமாக இருவருக்கு உதவிகளும் வழங்கப்பட்டன. முதலாவது பேருந்து காலை 6.50 மணியளவில் திக்கத்தை வந்தடைந்தபோது பொதுமண்டப முன்றலில் வைத்து திக்கம் வதிரி ஆகிய இடங்களைச் சேர்ந்த பொது அமைப்பினர் பேருந்தை வரவேற்றனர். கற்பூரம் கொழுத்தி. சிதறு தேங்காய் அடித்து அந்த இடத்தில் வைத்துப் பேருந்து சேவை ஆரம்பமானது. பருத்தித்துறைப் பிரதேசசபை உபதலைவர் கு. தினேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் புதிய பேருந்து வரவேற்பு நிகழ்வின் ஞாபகார்த்தமாக பாடசாலை மாணவர் ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியை பருத்தித்துறைப் பிரதேசசபைத் தலைவர் அ. சா. அரியகுமார் வழங்கினார். பருத்தித்துறை இ.போ.ச டிப்போ முகாமையாளர் கே. கந்தசாமி. பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு உதவுதொகை நிதியை வழங்கினார். இந்தப் புதிய பேருந்து சேவையை ஆரம்பிக்க பெரும் ஒத்துழைப்பை வழங்கிய டிப்போ முகாமையாளருக்குப் பிரதேசசபைத் தலைவர் பொன்னாடை போர்த்தி யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் எஸ்.எம். சரவணபவ மலர்மாலை அணிவித்து மதிப்பளித்தார். நிகழ்வில் திக்கம் மத்திய சனசமுக நிலையம். அல்வாய்பூமகள் சனசமுக நிலையம் உள்ளிட்ட நிர்வாகங்களின் குழுவினர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (4,173,422)

# பொன்ன...
# ஸ்ரீ வரதராஜப் பெருமா...
# தேர்த்திருவிழா சிறப்...









### தேவஸ்தான மஹோற்சவ பிரதமகுருவின் ஆசியுரை

தற்கால சூழலில் எமது வாழ்வில் அமைதியும் இன்பமும் ஏற்படுவதற்கு ஆலய வழிபாடொன்றே உகந்ததாகும். பல்வேறு துன்பங்களையும் இழப்புக்களையும் சந்திக்கும் மக்கள் வாழ்வில் நிம்மதியும் திருப்தியும் ஏற்படுவதற்காக தன் கடவுளாம் நாராயணன் கழல் தொழல் சாலச்சிறந்த தாகும். இலங்காபுரியின் வடபால் அமைந்த பெருமாள் தலங்களில் பொன்னாலையம் என்னும் திவ்வியமான இடத்தில் அமர்ந்திருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீ மந் நாராயணமூர்த்திக்கு ஆவணிமாதம் அட்டமித் திதியும் ரோகினி நட்சத்திரமும் கூடிய கிருஸ்ண ஜெயந்தி சுபநாளில் வருடாந்த இரதோற்சவப் பெருவிழாவும் உறியடி உற்சவமும் மிகவும் சிறப்பாக நடைபெறும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அத்தோடு இவ்விழாவானது ஞாயிற்றுக்கிழமை வருவது மிக மிக அரிதான பாக்கியம் ஆகும்.

ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராய் வரதராஜப் பெருமாள் அருள் சுரக்கும் இவ்வாலயம் பழமையும் பெருமையும் மிக்கது புராண இதிகாசங்களில் சிறப்பாகக் கூறப்படும் கூர்ம அவதாரத்தோடு தொடர்புபட்ட இதன் தோற்றம் போற்றுவதற்குரிய தாகும். இன்றைய புண்ணிய தினத்தில் எம்பெருமானை தரிசித்தும் எண்ணியும் மகிழ்கின்ற அடியவர்களுக்கு அவன் அருள்மழை பொழிய வேண்டுமென நாராயணன் பாதம் பணிந்து ஆசி கூறி மகிழ்கின்றேன்.

"ஓம் நமோ நாராயணாய நம"

**"ஸ்ரீ விஷ்ணு வித்யாசாகரம்"**
**ஸ்ரீ விஷ்ணு ஸ்ரீ க.ச. சோமஸ்கந்தச் சாரியார்**
**தேவஸ்தான மஹோற்சவ பிரதம குரு**
**குடியிருப்பு, சுழிபுரம்.**


## Vayuputhra Phone Shop
## வாயுபுத்ரா போன் சொப்



அதிசொகுசு பயணிகள் போக்குவரத்துச் சேவை

**வாயுபுத்ரா புக்கிங் சென்றர்**

சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.



யாழ் ⇆ கொழும்பு (தினமும்)

ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 36 44 246 / 077 8595 151

**நகுலேஸ்**
**ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
கட்டடப் பொருள்கள், பெயின்ற் வகைகள், மஸ்கன்கூரை சீற்கள், எஸ்லோன் பைப்கள், கம்பி வகைகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றின் மொத்த சில்லறை விற்பனையாளர்.
சித்தன்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
077 810 2898

**யாழ். காலணியகம்**
**Yarl Bata**
Yatl Trades Center
Agents For: Bata
சிறுவர்கள் முதல் பெரியவர் வரை அனைத்து விதமான பாதணிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
இல.11, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2223152

**கிருஸ்ண மஹால்**
**திருமண மண்டபம்**
அரங்கேற்றம், கூட்டம், ஒன்றுகூடல், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் மற்றும் பொது வைபவங்களும்
**Krishna Mahal Wedding Hall**
பிரதான வீதி, சங்கானை, (கொமர்ஷல் வங்கி முன்பாக)
077 958 7081

**விஷ்ணு ஜ...**
தங்கப்பவுண் நகை ...
**Vishnu Jew...**
Manufacturers of G...
22 கரட் தங்க நகைக...
உத்தரவாதத்துடன் செய்து ...
181, Kasthuriar Road, Jaffna.
077 661 8190
(Opposite Winser Theatre)

# யானை முத்துக்களுடன் நால்வர் கைது

கொழும்பு,செப்.2

யானை முத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை தெய்யத்த கண்டிய, சிறிபுர பிரதேசத்தில் வைத்து நேற்றுக் காலை சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலனறுவைபொலிஸ் நிலையத்தின் சட்டத்தை அமுலாக்கும் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்துத், தேடுதல் நடத்திய பொலிஸ் குழு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 முத்துக்கள், 2 இலட்சத்து 96 ஆயிரத்து 50 ரூபா பணம் மற்றும் அவர்கள் பயணித்த நவீன ரகக் காரும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தளை, ஹசலக, பிபிலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலனறுவைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ரி-2)













## பணியாளர்கள் தேவை

**சுஜித் என்டபிறைசஸ் நிறுவனத்தில் விற்பனை முகவர்களாகப் பணிபுரிய ஆண், பெண்** இருபாலாரும் தேவை.
வயது அவசியமில்லை.
சம்பளம் மாதாந்தம்
**30,000/ - 50,000/- வரை** பெறலாம்.

**சுஜித் என்டபிறைசஸ்**
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
**077 904 1258, 021 227 0586**

## திருமண இணைப்புச் சேவை

ஆவணித் திருநாளில் கந்தனின் அருள்நாளில் உங்கள் வீட்டில் மாங்கல்யம் மலர இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள். எம்மிடம் உள்நாட்டு உத்தியோகம் ஆண், பெண், வெளிநாட்டு ஆண், வெளிநாட்டு பெண் ( **RC**) வெளிநாட்டு வரன்களை எதிர்பார்க்கும் அழகிய உள்நாட்டு பெண்கள் உள்ளனர்.
**இன்றே தொடர்புகளுக்கு.**

**காளிதுணை**
**(சர்வதேச திருமண சேவை)**
**077 604 0920, 077 946 4287, 077 215 1329**

## வேலையாள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் லீசிங் கம்பனி ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

**077 739 5010, 076 652 0074**

இரண்டாம் மொழி දෙවන බස Second Language

## சிங்களப் பாடநெறி
## සිංහල පන්ති
## SINHALA CLASSES

பாடசாலை செல்லும் மாணவர்களுக்காகவும் (ஆண்டு 6 முதல்) அரச. தனியார் துறைகளில் பணி புரிபவர்களுக்காகவும் தேர்ச்சி பெற்ற ஆசிரியரால் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட விசேட சிங்கள வகுப்புக்கள்.

APPLY NOW
T.P: 0771506621
sinhala.panthi@gmail.com

Every Saturday & Sunday
From September 2018
(Stanley Road/Nallur)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 50 வயதுடைய நற்பண்புள்ள, அழகிய இளமைத் தோற்றமுள்ள யாழில் வர்த்தகம் செய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு ஏறத்தாழ 35 வயதுடைய டாக்டரோ, சட்டத்தரணியோ புகைப்படத்துடன், ஜாதகம், குடும்ப விவரம், தொலைபேசி இலக்கத்துடன் விண்ணப்பிக்கவும்.

Email:- jarul82@gmail.com
**குறிப்பு:- சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது**
**(உங்கள் இரகசியம் காக்கப்படுவதுடன் அனைத்து விண்ணப்பங்களுக்கும் பதில் வழங்கப்படும்)**

## கனரக வாகனம் விற்பனை



JAPAN IMPORTAN
PCM 830 Veellodar Multi BACKET உடன்
விற்பனைக்கு அத்துடன் D 85 Komatsu DOZER விற்பனைக்கு
077 711 4370 / 077 333 3546

## வெளிநாட்டில் கல்வி பயிலுங்கள்



இலவசமான ஆலோசனைகளுடன் உங்கள் எதிர்காலத்திற்கான ஆயத்த முன் முயற்சிகளுக்கு வருகை தாருங்கள்.

உங்கள் நேர்முக பதிவுகளுக்கு அழையுங்கள்
**திவாகர் - 077 738 8599**
நியூஸ்லண்ட் | கனடா | அவுஸ்ரேலியா
அமெரிக்கா | சிங்கப்பூர் | மலேசியா | ஜப்பான்

**Benchmark International Consultancy Pvt. Ltd.**
228/B, சேர்.பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
Tel: 077 738 8599 / 021 437 6199
கிளைகள் - கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை
jaffna@benchmarklk.co.nz | www.benchmarklk.co.nz
benchmarkinternationalconsultancy

# KINGS ELECTRONICS(PVT) LTD

SPECIAL OFFERS

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

## மாபெரும் மலிவு விற்பனை SEPTEMBER 15 வரை

**மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்**

### LED TELEVISIONS



WARRANTY 3 YEARS

| | |
|---|---|
| Samsung 32'' | -28,750/= |
| LG 32" | -29,600/= |
| Hisence 32'' | -22,400/= |
| Sony 32 | -34,500/= |
| VideoConn 32'' | -22,900/= |
| Innovex 24'' | -17,400/= |
| Panasonic 32" | -26,250/= |
| Abans 32'' | -21,900/= |
| Maxmo 32" | -18,750/= |
| Haier 32" smart | -28,900/= |
| Unic Ulta | -19,900/= |
| Haier 32" | -20,500/= |
| Innovex 20" | -12,250/= |
| JVC 24" | -16,750/= |

MAXMO 40" LED TV 48900/= Free DVD PLAYER

### INNOVEX AC

| | |
|---|---|
| 41,900/= | 9000BTU |
| 44,900/= | 12000BTU |
| 55,900/= | 18000BTU |
| 74,900/= | 24000BTU |

No Warranty
Without Installation



6KG
INNOVEX
WASHING MACHINE
34500/=
FIVE YEAR WARRANTY
WARRANTY 5 YEARS

SOFA SET 3+1+1 39,900/= ONLY





SISIL SL-ECO192
REFRIGERATOR
RS.36900/=
FIVE YEAR WARRANTY

IG Dual Inverter AC



99,900/= 12000BTU

LG TOP LOADER WASHING MACHINE
12KG LGWM2312VSAM
INVERTER
64,500/=



SAMSUNG 55" 4K SMART
RS.164,000 ONLY

Hisense 55 4K SMART
RS.126,900 ONLY + DVD PLAYER FREE

WARRANTY 3 YEARS

SAMSUNG 43" 4K SMART
RS.94,000 ONLY



5.5KG
Abans
FULLY AUTOMATIC WASHING MACHINE
RS.32500/=

LG INVERTER REFRIGERATOR
GL-B272SM



63,900/=

021-4546699 | 076-3594665 | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna

இலங்கையின் முன்னணி கட்டட நிர்மாண நிறுவனம்

# உங்கள் கனவு இல்லங்களை யாழ் மண்ணில் நனவாக்கிட

**Blue Ocean** ™ GROUP OF COMPANIES | **LINK** LINK ENGINEERING





திட்டமிடலும் வடிவமைப்பும்



பொறியியலும் கட்டுமானமும்



ஆலோசனைகளும் கொள்வனவும்

+94 777 546 546 | +94 771 546 539 www.blueoceancad.com



### What We Build ?
- Individual Houses & Villas
- Commercial Buildings

### What We Do ?
- Architecture & Structural Design
- Land Surveying
- Project or Construction Management
- Cost Estimation (BOQ)
- Modern Interior Designs



### What Materials We Serve ?
Imported Tiles, Bathroom Fittings, Light Fittings, Home Appliances, Doors & Windows, Pantry Cupboards can be provided.

(*Conditions Apply)



Lands and Plots



Individual Houses



Commerical Buildings



Condominiums

### Are You Looking to Sell Your Property ?

We. Blue Ocean Group will help you **SELL** or **RENT** your properties such as Lands, Condos, Individual Houses and Commercial Space which are located in the heart of

- Wellawatte
- Bambalapitiya
- Kollupitiya
- Dehiwala
- Jaffna
- Kilinochchi
- Chavakachcheri

### How Can We Help You ?
- Acquiring and Selling Land, Home & Commercial Properties
- Assisting Non-Sri Lankan citizen to invest in Sri Lankan Properties
- Where to buy a property with sustained capital growth
- How to use your equity effectively and investing successfully
- How to read the Property Clock

Call Us on +94 777 755 323



S.Thumilan (Group Chairman)
ACA, ACMA (UK), ACCA, CGMA
MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

# Discover the Locations that Embraces the Ultimate Luxurious Living

*from*

## Sri Lanka's Largest Property Developer

Luxurious Living • Investment Property • Holiday Home

**Blue Ocean** ™ GROUP OF COMPANIES

## இலங்கையின் முன்னணி கட்டட நிர்மாண நிறுவனம்




பம்பலப்பிட்டி
No.20, Vajira Road, Colombo 04

வெள்ளவத்தை
No.35, Ramakrishna Road, Colombo 06





PropertyGuru ASIA PROPERTY AWARDS

## BEST DEVELOPER (SRI LANKA) 2017
& WINNERS OF THE MOST NUMBER OF AWARDS - 2018

- **Best Sustainable Development Company (Sri Lanka) 2017**
  Asia Property Awards Singapore
- **Top 100 Asia's Greatest Brand & Leader (Sri Lanka) 2017**
  Asia's Greatest Leader & Brand Awards
- **Best CSR, Condo Architecture & Interior Design (Sri Lanka) - 2018**
  Asia Property Awards Sri Lanka

### Our On-Going Projects



No.06, 19th Lane,
**Colombo 03**



No.30, Hotel Road,
**Mount Lavinia**



No.34/2, De Serem Rd,
**Mount Lavinia**



No.15A, Layard's Road,
**Colombo 04**

| Head Office | Platinum Branch | Int. Branch | Int. Branch | Int. Branch | Int. Branch |
|---|---|---|---|---|---|
| Sri Lanka | Sri Lanka | United Kingdom | Austraila | United Arab Emirates | Canada |
| #32,,1st & 2nd Floors, Galle Road, Dehiwala, Sri Lanka | #9A,De Fonseka Place, Bambalapitiya, Colombo - 04 | Base Point, Dartfort Business Park, Victoria Rd, Dartford, Kent, DA1 5FS | #32, Brolin Terrace, Cranbourne North, Vic. 3977 | Office 1403, Al Manara Tower, Burj Khalifa District, Business Bay, UAE | No.01 Helicon Gate, Toronto, Ontario, M1G3R7 |

### HOW TO PAY ?
30 - 35% Down Payment, Balance by INTEREST FREE MONTHLY PAYMENTS up to 24 Months or Bank Loan can be obtained

(*Conditions Apply)

+94 777 121 924
+94 774 873 893
+94 777 121 926

www.blueocean.lk

## விபத்தில் இருவர் உயிரிழப்பு

கொழும்பு.செப்.2
வானூர்திப்படைக்குச் சொந்தமான பாரவூர்தி மற்றும் வான் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வெல்லவாய தனமல்வில. குடாஓயா பகுதியில் இடம்பெற்றது.
விபத்தில் வானில் பயணித்த நான்கு பேரில் மூவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
வான் சாரதியான தம்புள்ளைப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடைய நபரும். புத்தளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பெண்ணுமே விபத்தில் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குடாஓயாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## வீரவன்சவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு.செப்.2
நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளிநாடு செல்வதற்கு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.
இதற்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை வீரவன்ச, சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன அறிவித்துள்ளார்.
கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில் அரச தலைவர் செயலகம் தேசிய சுதந்திர முன்னணிக்கு வழங்கிய 40 அரச வாகனங்களைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கை விசாரித்து வரும் நீதிமன்றம். வீரவன்ச வெளிநாடு செல்லத் தடைவிதித்திருந்தது.
இந்த நிலையில், முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய வெளிநாடு செல்ல வீரவன்சவுக்கு தற்காலிமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ரி2)

## ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,செப்.2
கொழும்பு கடவத்தை, மங்கட பகுதியில் ஒருதொகை ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடமிருந்து 88 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளைப் பொலிஸார் கைப்பற்றினர்.
மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

# சர்வாதிகாரமாக செயல்படும் அரசு

### ஞானரதன தேரர் குற்றச்சாட்டு

**கொழும்பு,செப்.2**
**அரசு எதேச்சதிகாரமாகச் செயல்பட்டு வருகின்றது என்று அஸ்கிரிய பீடாதிபதி வராகொட ஸ்ரீ ஞானரதன தேரர் தெரிவித்துள்ளார்.**

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம், அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தனர். இதன் போதே தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:
நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றச் செயல்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துச் செல்கின்றன. எவரும் இது குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. அனைத்துப் பகுதிகளிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன- என்றார்.
நாடாளுமன்ற உறுப்பினர்களானநாமல் ராஜபக்ச, மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் திலும் அமுனுகம உள்ளிட்ட மகிந்த அணி உறுப்பினர்கள் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்தனர். (ரி2)

## ஞானசாரரின் சார்பில் மீள மேன்முறையீடாம்

### அவரது சட்டத்தரணி கூறுகின்றார்.

கொழும்பு.செப்.2
பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய சிறைத் தண்டனை மற்றும் மேன் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு என்பவற்றுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சிறப்பு மேன்முறையீடொன்றை முன்வைக்கப்போவதாக தேரரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.
ஞானசார தேரரின் தீர்ப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு நேற்று முன்தினம் வெளியானதையடுத்தே இதனைக் கூறியுள்ளார்.
மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனு நிராகரிக்கப்பட்டால் அதனை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஞானசார தேரருக்கு எதிரான தீர்ப்பு கடந்த ஓகஸ்ட் 8 ஆம் திகதி நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டது.
இந்தத் தீர்ப்புக்கு எதிராக 42 நாள்களுக்குள் முறைப்பாட்டை முன்வைக்க வேண்டியிருந்தது. தற்பொழுது மேன் முறையீட்டுக்கு 20 நாட்களே செலவாகியுள்ளன.
தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து கொண்டு அடுத்த வாரத்துக்குள் உயர் நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் தேரரின் சார்பில் முன்னிலையாகியுள்ள சட்டத்தரணி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

## சி.சு.கட்சியின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழா

கொழும்பு.செப்.2
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்படவுள்ளது.
இதன்போது மத நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவுள்ளதாக அதன் பொதுச் செயலர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.
நிகழ்வு களனி ராஜ மஹா விஹாரையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
கட்சிக்காகச் சேவையாற்றிய அரசியல்வாதிகளும் இதன்போது நினைவு கூறப்படுவர்.
இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் ஏனைய அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் சிலரும் பங்கேற்கவுள்ளனர் என்றும் லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.
இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை சிலாபம் பகுதியிலுள்ள விஹாரையில் முன்னாள் பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தலைமையில் சில வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளதாகக் கட்சியின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி2)




## வர்த்தக மாநாட்டில் மைத்திரி பங்கேற்பு

கொழும்பு.செப்.2
நேபாளம் இலங்கை வர்த்தக, சுற்றுலா மற்றும் முதலீட்டு மாநாடு நேற்று முன்தினம் காத்மண்டு நகரில் இடம்பெற்றது.
மாநாட்டின் தலைமை விருந்தினராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.
நேபாள நாட்டின் மூலோபாய சமூக ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாட்டில் இரு நாடுகளுக்கிடையிலா்ன வர்த்தக, சுற்றுலா மற்றும் முதலீட்டு
துறைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் மேலும் மேம்படுத்துவது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
இதில் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க மற்றும் நேபாள அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி அந்த நாட்டின் அமைச்சர்களும், நிபுணர்களும் கலந்துகொண்டனர்.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேபாளத்தின் மூலோபாய சமூக ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருடன் கலந்துரையாடல் ஒன்றையும் இதன்போது. மேற்கொண்டார். இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## கூட்டு அரசில் பௌத்த மதம் வேட்டையாடப்படுகிறதாம்

### இப்படிக் கூறுகிறார் மகிந்த



கொழும்பு.செப்.2
தற்போதைய ஆட்சியில் பிக்குகளும், பௌத்த மதமும் வேட்டையாடப்படுவதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
நேற்று முனதினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் 5 ஆம் திகதி கொழும்பில் வரலாறு காணாத சனக் கூட்டம் ஒன்றைக் கண்டுகொள்ளலாம்.
இந்த ஆர்ப்பாட்டம் எங்கு நடைபெறும் என்பது குறித்து இதுவரை நாம் அறிவிக்க வில்லை. ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ள தினத்துக்கு முந்திய தினத்தன்றே ஊடகங்களுக்கு அறிவிக்கவுள்ளோம்.
நாம் முன்னதாகவே இடத்தை அறிவித்தால், அதற்கு அரசு தடைகளை ஏற்படுத்தும். தடை உத்தரவுகளையும் நீதிமன்றத்திடம் பெற்றுக் கொள்ளும் என்றும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். (ரி2)

## அடையாள அட்டை: புதிய கட்டணம் நேற்றுமுதல் நடைமுறைக்கு

கொழும்பு,செப்.2
தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக அறவிடப்படும் கட்டணம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக ஆள்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.
15 வயதை எட்டிய முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையைப் பெறுவோரிடமிருந்து 100 ரூபா கட்டணம் அறவிடப்படவுள்ளது.
தேசிய அடையாள அட்டையைத் திருத்தி. அதன் இணைப் பிரதி ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்காக 250 ரூபா அறவிடப்படுவதுடன், காணாமல்போன அடையாள அட்டை ஒன்றின் இணைப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்காக 500 ரூபாவும் அறவிடப்படவுள்ளது .
வசதியின்மை காரணமாகக் கட்டணத்தைச் செலுத்த முடியாதோர் பிரதேச செயலரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட "கட்டணம் செலுத்தத் தேவையில்லை" என்ற உறுதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும் என்றும் ஆள்பதிவுத் திணைக்களம் கூறியுள்ளது. (ரி2)

## மரண அறிவித்தல்



தோற்றம்
22 . 12 . 1932

மறைவு
01 . 09 . 2018

### செல்வி ஞானலட்சுமி நமசிவாயம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - அப்பாக்குட்டி தங்கம்மா கனிஷ்ட வித்தியாலயம் - மல்லாகம்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஞானலட்சுமி நமசிவாயம் நேற்று (01.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - கயிலாயம் தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, அருணாசலம், தங்கலட்சுமி, நடராசா மற்றும் நந்திராசா, வள்ளிநாயகி (சோதி) ஆகியோரின் சகோதரியும், திருமதி புவனேஸ்வரி, திருமதி ராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், சறோஜினி (மாலினி), சிவதில்லை நாதன், செந்தூரணி, பதுமினி, பாலசெந்தூரன், கயிலாஜினி, பார்த்தீபன், லட்சுமிதீபா ஆகியோரின் அருமை மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 08 - 10 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீலியம்பனை,**
**மல்லாகம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 255 4988, 071 310 0608**

## மரண அறிவித்தல்



பிறப்பு
15 . 05 . 1927

இறப்பு
30 . 08 . 2018

### மகேஸ்வரி வைத்திலிங்கம்

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி வைத்திலிங்கம் கடந்த (30.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற வல்லிபுரம் வைத்திலிங்கத்தின் அன்புமனைவியும் பர்வதபத்தினிதேவி, சரவணபவன் (ஜேர்மனி), காலஞ்சென்ற அருந்ததிதேவி மற்றும் பவானந்தன் (லண்டன்), கோதைநாயகி ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் அம்பிகாதேவி காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் புஸ்பராணி, நடராசா ஆகியோரின் அன்புமாமியும் சோமசுந்தரத்தின் அன்புச்சகோதரியும் இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனியும் இராஜஸ்ரீ (கனடா), இராஜதேவி (பிரான்ஸ்), கலைச்செல்வி (ஆஸ்திரேலியா), இராஜேஸ்வரி (இலங்கை), சோபியா (லண்டன்), பிரணவன் (ஜேர்மனி), பார்த்தீபன் (ஜேர்மனி), பத்மஸ்ரீ (கனடா), நிரஞ்சன் (பிரான்ஸ்), அகிலன் (கனடா), கார்த்திகா (கனடா), சஞ்சீவன் (ஆஸ்திரேலியா), தரங்கினி (பிரான்ஸ்), யாசோதரன் (சிங்கப்பூர்), யாதவன் (சிங்கப்பூர்), ஹம்சவாகினி (இலங்கை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் வித்தகன் (கனடா), சுபாணன் (கனடா), சுபாங்கன் (பிரான்ஸ்), சங்கரன் (பிரான்ஸ்), சாருஜா (பிரான்ஸ்), சிவானி (ஆஸ்திரேலியா), சிவானுஜன் (ஆஸ்திரேலியா), சாயகீத் (இலங்கை), அவினா (லண்டன்), அகன்யா (லண்டன்), விதுனன் (லண்டன்), வனிஷா (கனடா), பவிஸ் (கனடா), பிரதீன் (பிரான்ஸ்), பிரதியும்னன் (கனடா), ஸ்ருதிகா (கனடா), அக்ஷா(பிரான்ஸ்), அகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் கோண்டாவில் குமரகோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
**021 205 3603**

## மரண அறிவித்தல்



பிறப்பு
**04.10.1934**

இறப்பு
**31.08.2018**

### திருமதி ஜெகசோதி இராஜரட்ணம்

**(இளைப்பாறிய ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி, சுதுமலை சின்மய பாரதி)**

யாழ். சுதுமலை வடக்கு, ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டன் Newmalden ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகசோதி இராஜரட்ணம் 31.08.2018 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாக்கியலஷ்மி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜரட்ணம் அவர்களின் பாசமிகு மனைவியும், அறிவழகன், அன்பழகன், மதியழகன், நிர்மலா, கலையழகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, மகேஸ்வரி, அப்பாப்பிள்ளை மற்றும் தவமணிதேவி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கதிரவேல், நடராஜா, சண்முகரட்ணம், நாகராஜா, நவரத்தினம் மற்றும் நிகமவள்ளி, விஜயரட்ணம், பஞ்சரத்தினம், தவமணிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலைநிதி, சுமதி, தயானி, ஆனந்தசிவம், சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏரகன், திவ்யன், அபிராமி, வைதேகி, கௌதம், சங்கீத், சாணிக்கா, ராஜவள்ளிகா, கவித்ரா, பாலகுமார், பிரகிதா, அக்ஷயா, ஐஸ்வர்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்**

(CS/19471)(11,17)

**+ 44 79 3203 0261, +44 7828 153 321**

# CCTV CAMERA

## சிறப்பு அதிரடி விலை குறைப்பு




OUR PRODUCTS

- CCTV Wire & Wireless
- Biometric Attendance Systems
- Cash Counting Machine
- Smart Door Lock
- Intercomm
- Alarm System

PACKAGE INCULDES

| | |
|---|---|
| Cameras | - 4No |
| Digital Video Recorder (DVR) | - 1No |
| Hard Disk Drive (500GB) | - 1No |
| Cables | - 1No |
| Power supply Units | - 2 No |
| Connectors | - 8 No |

Offer price 34,800\=

- உங்களிடம் Android அல்லது Iphone Mobile; Application மூலமாக உங்கள் கமரா பொருத்திய இடத்தை கண்காணிக்கும் வசதி செய்து தரப்படும். (Free online view in your mobile phone)
- முன்பே பொருத்தப்பட்ட cctv system -ல் ஏதேனும் குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்து தரப்படும். (cctv service & maintenance).

## Solar Lights

15W, 30W

4W, 6W, 8W

மின் கட்டண கவலையில்லா சூரிய ஒளியில் மின்சாரம்.
மின் இணைப்பில்லா பூங்கா மற்றும் அழகு சார்ந்த சூரிய மின் விளக்குகள்.

வீட்டின் வெளிப்புற எல்லைப்புறங்களில் பொருத்தக்கூடிய சூரிய மின் விளக்குகள்

3W

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

No.218, Hospital Road Jaffna / Email: jaffna@micropcsystems.com
Contact No. 021 222 5893, 0773963280, 0773039536, 0777425974
No.66B 2nd Cross Street Vavuniya
Contact No:- 0710356070, 0242221969

## வரவேற்பாளர் தேவை

யாழ் நகரில் உள்ள விடுதி ஒன்றுக்கு இரவு வேலைக்கு வரவேற்பாளர் தேவை (ஆண்). இரு மொழிகளிலும் தேர்ச்சி உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

**T.P: 021 222 4605**

## JCB, DOZER வாடகைக்கு



077 871 5430, 076 857 3798
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat (Sri Lanka)**
(AA 1, AA 2, AA 3)
Qualification: - G.C.E.O/L 06 Passes
Medium: Tamil & English

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification: - G.C.E.O/L 06 Passes
With 5 Credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level &Business level
(Tamil & English Medium)
Qualification: - G.C.E. A/L 3 Passes
Note: 2018 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.

**Certificate Course in English**
Students Awaiting (A/L) Results Enrich your Proficiency in English
17 th Batches have successfully Completed the course Register your names

Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலிருந்து நல்லூர் நோக்கிய பாதையில் முதலாவது ஒழுங்கையில் மேல்மாடி வீடு வாடகைக்குண்டு.
(வீட்டை நேரில் பார்வையிடலாம்)

**077 639 8097, 077 666 9055** (CS/19474)(11,17)

## கடைகள் வாடகைக்கு உண்டு

பிறவுண் வீதி, கொக்குவில் புகையிரத நிலையம் அருகில் கடைகள் வாடகைக்கு உள்ளன.

**077 990 0017, 077 514 2859** (CS/19475)(11,17)

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தை பகுதியில் A9 வீதியில் மேட்டுக் காணி உடன் விற்பனைக்கு.

**T.P: 076 265 9541**

## House for Sale

House with four Rooms in Highly Residential area in Temple Road, Jaffna Land Area 2.5 Lachams. Building area 1750 sqft Details in Lanka Property.com

Please Contact :-
**077 238 5668** (IN 10101)(11,17)

## Wonder of Energy Engineering

If you want to run Air condition for Home / Business without CEB connection we can do. So ! Yes! we are a uk company Based in colombo more than 7 years saved millions of rupees for sampath bank, commercial bank ETC, Also we can wipe out your electricity bill forever using hybrid technology. shops. Rice mills, Big Factories welcome

Contact - 077 712 5111 (IN 10099)(11,17)
E-mail - sales@bo5online.co.uk

# சிவில் பொறியியலாளர் வேலை வாய்ப்புக்கள்

மீள் சுழற்சி முறையிலான சக்தி அபிவிருத்தித் திட்டங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ்ப்பாண பிரதேசத்தில் வசிக்கும் சிவில் பொறியியலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அனுபவமும் தகைமைகளும்

- அனுமதி பெற்ற உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழத்திலிருந்து சிவில் பொறியியலில் பெற்ற முதல் அல்லது இரண்டாம் வகுப்பு மேல்தரம் கொண்ட பட்டம்.
- நிர்மாணத்துறையில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவம். திட்ட முகாமைத்துவ அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- போதுமான அனுபவத்தைக் கொண்டிராத விண்ணப்பத்தாரிகள், சவால்களைச் சமாளிக்க முடியும் என்ற தைரியம் கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- மிகச் சிறந்த முறையில் பொதுத் தொடர்பைப் பேணும் திறன்கள் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாக தொடர்பாடலை மேற்கொள்ளும் திறன்.
- நீண்ட நேரம் வேலை செய்யும் ஆற் றல்

## சம்பளம் மற்றும் பிற நன்மைகள்

விண்ணப்பதாரியின் அனுபவம் மற்றும் தகைமைகளுக்கேற்ப சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

உங்கள் சுயவிபரக் கோவை, கல்வித் தகைமை, அனுபவங்கள் ஆகியவற்றுடன் இரு நடுவர்களின் விபரங் களையும் உள ்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் info@ceylex.com / careers@ceylex.com என்ற மின்அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மின்அஞ்சலின் விடயப் பகுதிக்குள் "சிவில் பொறியிலாளர்கள்-மீள் சுழற்சி-2018" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

CEYLEX Engineering (Pvt.) Ltd
சீலெகஸ் என்ஜினியரிங் (தனியார்) கம்பனி
17வது மாடி, பார்க் லேண்ட்,
இலக்கம் 33, பார் க் வீதி கொழும்பு-02

# MODERN City Inn

WiFi Available




Comfortable Air Conditioned Rooms with Attached Toilets and Hot & Cold Water
**Very Moderate Room Charges**
Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties
**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)
For inquiries and Reservations
Contact No:- 031-2233967 / 031 2231 961 / 076 205 3302
moderncityinn@yahoo.com moderncityinn.com



# SLIIT

*Discover Your Future*

"உங்கள் மேன்மையை நோக்கிய பாதையின் ஆரம்பம்"

## புதிய மாணவர்களுக்கான அனுமதி 2018 / 2019

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

COMPUTING | BUSINESS | ENGINEERING | ARCHITECTURE | QUANTITY SURVEYING | TOURISM & HOSPITALITY | EDUCATION | PSYCHOLOGY | NURSING | LAW












### BSc (HONS) DEGREE IN INFORMATION TECHNOLOGY SPECIALISING IN

- Information Technology
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering
- Software Engineering
- Interactive Media
- Cyber Security
- Data Science

**BSc (HONS) IT**
பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்

ஒரே தடவையில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (இலங்கை / இலண்டன்) மூன்று பாடங்களில் (ஏதேனும் பிரிவில்) சித்தி இருப்பதுடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

*ADMISSIONS TO COMPUTER SYSTEMS AND NETWORK ENGINEERING*
மேலே கூறப்பட்டவாறு ஆனால் விண்ணப்பதாரர்கள் கணிதம் அல்லது பௌதிகவியலில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது தொழில்நுட்பத்துறையிலிருந்தான மாணவர்கள விண்ணப்பிக்கலாம்.

### BBA (HONS) DEGREE SPECIALISING IN

- Business Management
- Human Capital Management
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management
- Business Analytics
- Management Information Systems

**BBA (HONS)**
பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்

ஒரே தடவையில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் (இலங்கை / இலண்டன்) மூன்று பாடங்களில் (ஏதேனும் பிரிவில்) சித்தி இருப்பதுடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் நடாத்தப்படும் நுண்ணறிவு பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

### BSc ENGINEERING (HONS) DEGREE IN

- Civil Engineering
- Electrical & Electronic Engineering
- Materials Engineering
- Mechanical Engineering
- Mechanical Engineering (Mechatronics)

**BSc ENGINEERING (HONS)**
பட்டங்களுக்கான நுழைவு தகைமைகள்

இலங்கை க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தபட்சம்(இணைந்த கணிதம், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியல்) "C" சித்திகள் 02 மற்றும் "S" சித்தி 01 இருப்பதுடன், SLIIT இனால் நடாத்தப்படும் நுண்ணறிவுப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.
அல்லது
இலண்டன் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் இணைந்த கணிதம், பௌதீகவியல், மற்றும் இரசாயனவியல் அடங்கலாக குறைந்தபட்சம் "B" சித்திகள் 02 மற்றும் "C" சித்தி 01 இருப்பதுடன், SLIIT இனால் நடாத்தப்படும் நுண்ணறிவுப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

### HUMANITIES AND SCIENCES

**BEd (HONS) DEGREE IN**

- Physical Sciences - (04 Years)
- Biological Sciences - (04 Years)
- English - (04 Years)

**HIGHER DIPLOMA IN**

- Psychology - (02 Years)
- Nursing - (03 Years)

**CERTIFICATE IN**

- Advanced English - (04 Months)
- Engineering Physics - (01 Year)

மேற்கூறிய பாடதிட்டங்களுக்கான தகைமை

மேற்கூறிய பாடதிட்டங்களுக்கு தேவையான தகைமைகளுக்கு www.sliit.lk/humanities-sciences/ இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்.

*These degrees are offered by SLIIT as approved by the University Grants Commission and Ministry of Higher Education.*

**விண்ணப்பிப்பது எவ்வாறு**

- **Option 1** Visit: apply.sliit.lk → Register Online
- **Option 2** Download the Application from www.sliit.lk.
- **Option 3** Obtain the Application from any of our Campuses or Centres.

Send the duly filled Application form to *Manager - Student Enrollment* SLIIT Malabe Campus, New Kandy Road, Malabe

2018 க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**SLIIT OPEN DAY 2018**

**PROGRAMME INFORMATION SEMINAR**
08TH SEPTEMBER | 9.00 AM ONWARDS | SLIIT CAMPUSES & CENTRES

**நினைவுபடுத்தும் திகதிகள்**
OPEN DAY
2018 செப்ரெம்பர் 08
விண்ணப்ப முடிவுத்திகதி
2018 செப்ரெம்பர் 21

**நுண்ணறிவு சோதனை**
நுண்ணறிவு சோதனை
2018 அக்டோபர் 14
(மு.ப 10.00 - மு.ப 11.00)
மொழி மூலம்
ஆங்கிலம், சிங்களம், தமிழ்
பரீட்சை நிலையம்
கொழும்பு, மாலபே, கண்டி, குருநாகல், காலி, மாத்தறை, யாழ்ப்பாணம்

**SCHOLARSHIPS**
PERFORMANCE BASED SCHOLARSHIPS ARE OFFERED

☎ 011 754 4801, 011 230 1904

SLIIT *Discover Your Future*
SLIIT Malabe Campus
New Kandy Road
Malabe

MEMBER
*Association Of Commonwealth Universities*
*International Association Of Universities*

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
25.05.1944

மறைவு
12.09.2017

திதி: அபரபக்க ஷ்டமி
(02.09.2018)

## சின்னப்பு விஜயரட்ணம்

(ஓய்வுபெற்ற விவசாய போதனா ஆசிரியர்)

ஓராண்டு கடந்தாலும் உங்கள் ஆடம்பரமில்லாத
அன்பான பேச்சும் செயல்களும்
இன்னமும் எங்கள் எல்லோரினதும் மனங்களிலும்
அகலாது நிற்கின்றதே ஐயா!
நீங்கள் இல்லாத எங்கள் இல்லங்கள்
வெறிச்சோடிக் கிடக்கின்றது எங்கள்
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்றுவிட்டது ஐயா!
சொந்த பந்தங்களின் உணர்வுகள் உறைந்துவிட்டது
உற்றார், உறவினர்கள் உங்களைத் தேடுகிறார்கள்
சகோதரர்களின் இதயங்கள் இயங்கவில்லை ஐயா!
உங்களது நெறிமுறை தவறாத வாழ்வின் பயனாக
நிச்சயம் உங்களது ஆத்மா இறைவனிடம் சங்கமிக்கும்

இன்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராஜ வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 727 4360

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 . 03 . 1931



மறைவு
03 . 08 . 2018

கடந்த (03.08.2018) காலமாகிய புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

## அமரர் தம்பையா சுப்பையா

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் 31.08.2018 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இந்து சமுத்திர (தென்கடல்) புண்ணிய தீர்த்தத்தில் சங்கமிக்கப் பட்டது. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நண்பகல் 12 மணியளவில் முத்துமாரியம் மன் கோயில் அன்னதான மண்டபத்தில் மதிய போசன நிகழ்வு நடைபெறும். அன்னா ரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ் விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது துயரசெய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் மற்றும் இணையத்தளங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் பல் வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

2 ஆம் வட்டாரம் புங்குடுதீவு. குடும்பத்தினர்.

# திருமணநாள் நினைவு



திருமதி. சுகுணதீரன் வசந்தாதேவி

02.09.1965 02.09.2017

52 ஆண்டுகள் சிறப்பாக
வாழ்ந்து, கைநழுவ
விட்டுவிட்டேனே
மன்னிப்பாயா?
என்றென்றும் உன் நினைவுடன்...!

சுகுணதீரன்
கணவன்

திருமண வாழ்வின் அகவை 52 இல் தடம்பதித்த
திரு.திருமதி. சுகுணதீரன் குடும்பம்

உயிர்வோர் வாழ்பதி
உத்தம உயர் ஊர் ஊரெழு
பயன் வளர் தருவும் ஆநிரை
பயிர் விளைமண்ணும் பக்தியும்
நூலறிவாலும் சண்ணறிவாலும்
பலம் வலுப்பெற்றுப் பாரில்
பங்குறஎழும் ஊர் ஊரெழு
பண்புளர் வாழும் பதியதுவாமே

கற்றவர் நிறைஊரெழுதன்னில்
கணக்காளராகக் கணிப்பும் பண்பும்
உற்றவர்க்கல்லால் ஊரும் உலகும்
மற்றவர்காக மதியுறுசேவையில்,
வற்றாஊற்றாய் வாழ்வாங்கு வாழும்
சுகுணதீரன் வாண்மையுயர
நற்பெயர் விளங்கிநயபணியாலே
நானிலம் போற்றும் நற்கணக்காளர்

போரால் நாடுபொலிவிழந்ததுவும்
போக்கிடம் தெரியாமக்களுக்காக
யாரால் முடியும் யாழ்ப்பணத்து
கல்வித் திணைக்களக் கணக்கு
ஆள்வாராகப் பணியை ஏற்றமை
சுகுணதீரன் எனும் தூய இதயம்
சோர்விலாத உடலின் முயற்சி
அகமும் புறமும் அழகால் ஆனவர்.

ஆளுமை ஆற்றல் அவையறிதல்
அசையா உறுதி ஆழ்மனப்பணிவும்
தகைமைபலவாம் வடகிழக்கு
மாகாணக்கல்வி அமைச்சின் கணக்கர்

வகைதெரி ஆற்றலால் சுடரொளி
நாளிதழ் பணிவழிதொடர்ந்து
நிறைவுறுநியம நேர்வழியாலே
நீருயர் கணக்காளரின்புகழ்வாழி
வாழ்வியல் நிறைவுவாழ்துணை
வகையாய் பெற்றுஉளம்மகிழ்தலாமே
எழ்பிறப்பிற்கும் இனியென இறைவன்
இன்னருளாலே திருமணவாழ்வை
கோப்பாய் மண்ணின் குலக்கொழுந்தென
குலமகள் வசந்தாதேவியை ஏற்று
அன்றிலும் பேடுமாய்ப் அவனியில்வாழ
அரும் பெரும் சொத்தாம் மகனின் வரவாம்


கணவரைப் போற்றிகடமை புரியும்
கண்ணியமானவர் துணைவி
வசந்தாதேவி
உணவுதொட்டு உணர்வுகள் வார
உயிராய்ப் பேணி இல்லத் தலைவர்
கணக்காளர் சுகுணதீரன் கடமை
கண்ணியவானாய் கனியுறச் செய்ததும்
பணவருவாய்க்கேற்றபக்குவம் குடும்பம்பாங்கினை
உயர்த்தியபதிவுரதைதாமே.

அறிஏரும் ஆனறோர் அவளுடன் அருளும்
ஆங்கே ஆராதிக்க ஆண்டுகள் வாழிவாழி
52 அகவைத் திருமணம்
அன்பு அறன் வழிவாழ்வுநிறைந்து
நெறிதவறாதமேன்மையும் பணியதுபற்றும்
நீண்டபுகழ் கமல் சுகுணதீரனின்
குறிதவறாத தலைவன் வாளியாய்
குவலயம் போற்ற 100 ஆண்டுகள் வாழி

தம்பிப்பிள்ளை முத்துக்குமாரசாமி
ஓய்வுநிலை அதிபர்
யா/நாவற்குழி ம.வி,
யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி
கொ/ பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி

# சோதிடம் எனும் பரிகாரம்

கே.எஸ்.சிவஞானராஜா



**சோதிடம்**

*கல்லாமல் பண்டிதர்தம் கண்டபடி குளறிப்பலன்*
*இல்லாமல் குறப்பெண் கூடத் தாய் இசைத்திடில்*
*கசையேயாகும்*
*அல்லால் சோதிடப்பலன்கூறி அவதியை சாதகர்க்கு*
*சொல்லாமல் சொல்லி வைப்பார் சோர்வுபடச் சொல்லார்*
*தானே!*

ஆம், மனித குலம் எச்சரிக்கையோடு வாழ்வதற்கு இறைவன் அருளிச் செய்த சாஸ்திரிய வாழ்வுக் கணக்கு முறைமையையே சோதிடம் என்கிறோம். உண்மையில் தவமிருந்து விரதமோடு குரு சிஷ்ய முறையில் கவனச் சிதைவின்றி மொழியப்பட்ட சோதிடக்கலையை இன்றும் அதே மகத்துவங்களோடு பயபக்தியாகக் கூறி சோதிடக் கலையின் தனித்துவங்களைப் பேணுவோர் இன்றும் இருக்கின்றனர். மாறாக உள்ளதை உள்ளபடி கூற முன்வராது சொல்ல வேண்டியவற்றைத் திரிபுபடுத்திச் சொல்வோரும் எம்மிடையே இருக்கவே செய்கிறார்கள்.

**அருள்வாக்கு**

இங்கு அருள் வாக்கு என்பது, சோதிடக் கலையை கற்காமல் அரை குறையோடு கற்றவர் போலக் காட்டிக்கொண்டு வேண்டத்தகாதனவற்றை உளறியும், சாதகரைத் தளம்பல் நிலையில் வைத்தும் அவதியுறச் செய்யும் காரியமாக இருந்துவிடக்கூடாது. மாறாக, சாதகர்க்கு நடக்கப் போவதை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்துவதும், அவரவர் நிலைக்கு ஏற்ப விடயங்களை சொல்லாமல் சொல்லி உணரும்படியாக வெளிப்படுத்துகின்ற தனித்துவ நிலையாக அமைய வேண்டும்.

இதனிடையே வியாபார நோக்கோடு தோஷநிவாரண பரிகார பாவனை செய்து பணமீட்டும் காரியம் ஒரு போதும் சித்திக்காது. சோதிடமும் பலிக்காது.

> அனுமானங்கள் இல்லாத போது சாதகர்களுக்கு தோஷம் ஏற்படும். அது சந்ததி சந்ததியாகச் சாதகரை துன்புறுத்தும். ஆக, கொடுக்க இயலுமானதை உபகாரம் செய்ய வேண்டும்.
> முற்பிறப்பிலே ஆத்மாவுக்குப் பொறுப்பானவர்கள் செய்த நல்வினைப் பயன்கள் நற்பலாபலனை அள்ளித்தரும்.



## நம்பிக்கை ஊட்டும் மனோதிடம்

**பலாபலன்**

*கதிரவன் உதிக்குமுன்பும் காரிருள் மறைக்கும் பின்பும்*
*மதியவன் வெளிச்சமுன்னும் வருஞ்சுடர் தீபமுன்னும்*
*அதிர்பெற சோதிடத்தில் துர்ப்பலன் நற்பலன் யார்க்கும்*
*சதிர்பெறத்தோற்றா தாகும் சாதகம் கூறத்தானே!*

இங்கு, முதல் நாயகனாகிய சூரியன் உதிப்பதற்கு முன்பும், அஸ்த்தமித்த பின்பும், வெண்ணிலாவின் பட்டொளி வெளிச்சத்திலும், மங்கலான வெளிச்சத்திலும், இருள் கவிந்த பின்பும், வழி, தெருவிலும், வீட்டுக்கு வீடுசென்றும் சொல்லுகின்ற சோதிடத்தால் எந்தவித பலாபலனும் இல்லை. இதன்வழியே சோதிடர்கள் நன்மை பெறுகின்றனர். சாதகர்கள் கவலையும் துன்பமும் பீடையும் பெருக அந்தரிக்கின்றனர்.

சோதிடம் பார்ப்பதற்கும், சொல்வதற்கும், கேட்பதற்கும், எழுதுவதற்கும் குறித்ததோர் கால வரையறை உண்டு. ஆங்கு பக்குவம் உண்டு. அகால நேரங்களில் சோதிடம் பார்த்தால் இறைவன் திருவருள் பாலிக்க மனம் கொளார். சாதகர்களுக்கு ஆபத்து நேரும். எனவே சாதகர்கள் அசுப நேரங்களில் செல்லாது, சுபநேரங்களில் சென்று, பணிந்து வெற்றிலை பாக்கு தட்சணையுடன் பலன் கேட்பதே சிறந்தது. யாவும் வாழ்வில் சித்திக்கும். தட்சணை என்பது கூலியல்ல. இறைவாக்குக்குரிய அனுமானம்.

**தோஷம்**

அனுமானங்கள் இல்லாதபோது சாதகர்களுக்கு தோஷம் ஏற்படும். அது சந்ததி சந்ததியாகச் சாதகரை துன்புறுத்தும். ஆக, கொடுக்க இயலுமானதை உபகாரம் செய்யவேண்டும்.

முற்பிறப்பிலே ஆத்மாவுக்குப் பொறுப்பானவர்கள் செய்த நல்வினைப் பயன்கள் நற்பலாபலனை அள்ளித்தரும். ஆற்றப்பட்ட தீவினைகள் வாழ்வில் சமத்துவமின்மையை தந்திருக்கும். குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் தீவிரமாகும். எனவே தான் அவரவர் சொந்த உழைப்பால் ஏற்பட்ட சொத்துக்கள் நீடுழி வாழ்கின்றன. சுரண்டப்பட்ட அத்தனை சொத்துக்களும் மண்ணோடு மண்ணாய்ப் போகின்றன.

**தீண்டத்தகாத மனித இயல்புகள்**

மேலும், "கள்ள உறுதி முடிப்பவர்கள், கடமை நேரத்தில் மேலுமொரு வருமானத்துக்கு வழிகோலுவோர், வீதிவிபத்து நிகழ ஏதுவாக இருத்தல், போலிகளை உற்பத்தி செய்தல், பிறந்த குழந்தைகளைக் கொலை செய்தல், கருக்கலைத்தல், பசுவதை செய்தல், பழங்களுக்கு நஞ்சூட்டுதல், பேயோட்டுதல், உண்டியல் திருடுதல், விக்கிரகம் திருடுதல், விக்கிரகம் உடைத்தல், இன மத மொழி ஜாதியம் துவேஷித்தல், வீட்டு நாய்களின் காலைக் கடன்களை வீதியிலிருக்க விடுதல், வீட்டில் பிறந்த நாய்க்குட்டிகளை மூட்டை கட்டி சந்தியிலும் சந்தையிலும் அந்தரிக்க விடுதல், ஆபாசப் படங்களைக் கசிய விடுதல், ஓரினச் சேர்க்கையாளர்களது நடவடிக்கை, விரும்பியோ விரும்பாமலோ உடலுறவு கொள்ளுதல், முதுமையை இளமையாக்குதல், வேத மந்திர திருமறை திருமுறை சமய சம்பிரதாயங்களுக்குக் குந்தகம் விளைவித்தல், பதவிக்காகவும் கதிரைக்காகவும் சூழ்ச்சி செய்தல்." என அனைத்து விடயங்களையும் இறைவன் ஏற்புடையதாக கொள்ள மாட்டார். வாழ்வில் நற்பலபலன்களை அருள மாட்டார்.

இணுவை காணா.பாலசுந்தரமூர்த்தி தனது சோதிட நூலில் குறிப்பிடும் போது, "பெரியோர் செலவுக்காக வைத்திருந்த முதுசொம்களைக் கவர்ந்து அவர்களைக்கொன்ற தோஷம், ஆடு, மாடு, கோழி, நாய் முதலான பிராணிகளை தண்டித்துக் கொன்ற தோஷம், பொருள்களைக் களவாடிய தோஷம், வறியவர், சிறுவர், முதியோர், பாடசாலை, ஆலயம், அரச பொதுச் சொத்துக்களில் குடும்ப நலன் பேணி பசியாறியவர்கள், மந்திர தந்திர, வைத்திய மருந்து, விவசாய, வியாபார, வாகன, வாடகை,தரகு, அடகு முயற்சிகளில் பாதகம் செய்தோர், பிறர் மனைவியோடு சல்லாபம் புரிந்தவர்கள், புரிபவர்கள், பாலியல் இம்சை, பாலியல் உறவு, பாலியல் லஞ்சம், பாலியல் வேட்கை என மாணவ மாணவியரின் வாழ்வியலை சிதைத்த மிருகங்கள், நிதி, நீதி, நிர்வாக விடயங்களில் ஊழல் மோசடி புரிந்தவர்கள், கடத்தல், களவு, போதை, மது, விபச்சாரம், அபகரிப்பு, கொலை, கொடூரம், அடாவடித்தனம்,தூஷித்தல், வாள்வெட்டு, பயமுறுத்தல், பரீட்சையில் குளறுபடி செய்யும் ஆசிரியர் மற்றும் மாணவர்கள், ஒரு தாரம் போதாதென்று இரண்டு மூன்று நான்கு தாரம் செய்தவர்கள், பெண் வீட்டாரை வருத்தி இலட்சோப இலட்சம் பெறுமதி உடைய சொத்துக்களைச் சுதாகரித்தவர்கள், மாதா, பிதா, குரு, தெய்வ சம்பிரதாயங்களை மீறுவோர்." என அனைவருமே தோஷம் உடையவர்கள் என்று சுட்டுகிறார். ஆம், இவர்கள் அனைவருமே பொதுவிடயங்களிலிருந்து விலக்கப்பட வேண்டியவர்களே.



## நல்லூர் கந்தன் 18ஆம் நாள் திருவிழா

### கந்தவேளைக் கண்டால்!

தேனையுண்டு தெவிட்டுதென
செப்புவாரு முண்டு!
மானைக் கண்டு யானை என
மருளுவாரு முண்டு!
பாலையுண்டு குமட்டுதென
பகருவாரு முண்டு - நரி
வாலைக் கண்டு சிங்கமென
குளறுவாரு முண்டு!
கான மயில் மீதில் வரும்
கந்த வேளைக் கண்டால்
கலக்கமெலாம் நீங்கிவிடும்
கைகள் கூப்பிக் கொள்ளும்!
தான தன தான தன
தந்தன தோம் என்று
தாளம் போட்டு ஆட வைக்கும்
தடைகள் நீங்கிப் போகும்
தங்கவடி - வேல் வரவால்
சகத்திலுள்ளோர் எல்லாம்
தளைகள் நீங்கி சுகம் பெறுவார்
சளைத்தல் இல்லை கண்டீர்!

எஸ்.பெருமாள்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் பயன்படுத்தப்படுவாரா முதலமைச்சர் விக்னேஸ்வரன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்திப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் நேரம் கேட்டிருந்த நிலையில், அப்படியொரு தேவை இருந்தால் சந்திக்கலாம் என்று சம்பந்தனும் விட்டேத்தியாகப் பதிலளித்த பின்னணியில் கூட்டமைப்புடனான தனது விவாகரத்து முடிவு குறித்து வெளிப்படையாகக் கூறத் தொடங்கியிருக்கிறார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

விக்னேஸ்வரன் கூட்டமைப்புக்குள் நம்பியிருந்த ஒரே தலைவர் சம்பந்தர்தான். தனக்கெதிராக மற்றெல்லோரும் இருந்தாலும், தன்னைச் சகித்துக்கொண்டு அனுமதிக்கச் சம்பந்தர் ஒருவரால்தான் முடியும் என்று அவர் நம்பியிருந்தார். ஆனால், மாகாணசபையின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வரும் நிலையில், தன்னுடனான சந்திப்புக்கு நேரம் கேட்டும் சம்பந்தர் உடனடியாக அதனை ஒதுக்கிக் கொடுக்க முன்வராதமை உறுதியான ஒரு செய்தியை முதலமைச்சருக்குத் தெரிவித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.


இந்தப் பின்னணியில்தான் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தை நேற்றுமுன்தினம் கூட்டினார் முதலமைச்சர். அதில் உரையாற்றிய அவர் தனக்கு முன்பு நான்கு தெரிவுகள்இருக்கின்றனஎன்று குறிப்பிட்டார். அரசியலில் இருந்து ஓய்வெடுப்பது அல்லது இருக்கும் கட்சிகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து போட்டியிடுவது அல்லது புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவது அல்லது மக்கள் பேரியக்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்குவது ஆகிய நான்கு தெரிவுகள் பற்றியே அவர் குறிப்பிட்டார். இந்தத் தெரிவுகள்கூட தனக்குக் கூறப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தாரே தவிர, அவை தன்னுடைய தெரிவுகள் என்று கூறவில்லை என்பதையும் கவனத்தில்கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் அவர் தீர்க்கமான, தெளிவான ஒரு கொள்கை முடிவுடன் இப்போது வரைக்கும் இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

அதே சமயம் அவரது முதலாவதும் நான்காவதுமான தெரிவுகளை பேரவையில் உள்ளவர்கள் நிராகரித்துவிட்டனர் என்றுதகவல்கள்கூறுகின்றன. விக்னேஸ்வரன் அரசியலில் தொடரவேண்டும் என்பதையும் , அதிலும் கட்சி அரசியலில் அவர் நீடிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினர்என்றும்கூறப்படுகின்றது. இது குறித்து பேரவை உத்தியோகபூர்வமான அறிக்கை எதனையும் வெளியிடவில்லை என்றாலும் கசியும் தகவல்கள் இதனையே எடுத்துக் கூறுகின்றன.

குறிப்பாகப் பேரவையில் அங்கத்துவம் பெற்றுள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே இருக்கும் தரப்புகளான இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் சுரேஸ்பிரேமச்சந்திரனது ஈபிஆர்எல்எவ் ஆகிய கட்சிகள் முதலமைச்சர் கட்சி அரசியலில் தொடரவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. அவரைவிட்டால் வாக்குகளைத்திரட்டுவதற்கான கவர்ச்சி தம்மிடமோ , தமது கட்சிகளிடமோ இல்லை என்று கருதும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் அவரைப் பயன்படுத்திக் கொள்வதில் தீவிரமாக இருக்கிறார்கள் என்பது வெளிப்படுகின்றது.

அவரைத் தமது கட்சிகளுக்குள் உள்வாங்குவதன் மூலமோ, அது முடியாது போனால் அவரைத் தனிக் கட்சி தொடங்க வைத்து அதனுடன் கூட்டணி அமைத்துக் கொள்வதன் மூலமோ முதலமைச்சருக்கு இருப்பதாகக் கருதப்படும் மக்கள் கவர்ச்சியில் குளிர்காய்ந்து இன்னும் ஒரு படி மேலே தமது கட்சிகளை நகர்த்திவிடுவதற்கு அவர்கள் விரும்புவது வெளிப்படையானது. இதைப் புரிந்துகொள்வதற்கு பெரிய இராஜதந்திர அறிவு ஏதும் வேண்டியதில்லை.

இதில் உள்ள பெரும் கேள்வி என்னவென்றால், மீண்டும் ஒரு தடவை அரசியல் கட்சிகள் தன்னைப் பயன்படுத்திக் கொள்வதற்கு விக்னேஸ்வரன் அனுமதிக்கப் போகிறாரா என்பதுதான். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இப்படித்தான் விக்னேஸ்வரன் என்கிற மனிதரைப் பயன்படுத்திக் கொண்டது. பின்னர் அவரால் சிக்கல்களும் முட்டுக்கட்டைகளும் வந்தபோது தூக்கிக் கடாசி விட்டது; அல்லது கடாசப் போகிறது. சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாக கூட்டமைப்பினால் பயன்படுத்தப்பட்ட முதலமைச்சர் மீண்டும் தன்னைக் காங்கிரசும் ஈபிஆர்எல்எவ்வும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப் போகிறாரா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்லும். ஆனால் கட்சி அரசியல் வரையறைகளுக்குள் பொருந்திப் போகும் இயல்பைக் கொண்டிராத முதலமைச்சர், மக்கள் இயக்கம் ஒன்றைத் தலைமை தாங்கி நடத்துவதுதான் பொருத்தமானதாக இருக்கும்.



# அனைவருக்கும் சமநீதி என்பதுதான் ஜனநாயகத்தின் உயர்ந்த தத்துவம்

சேரலாதன்

ஞானசார தேரருக்கு உடனடியாகப் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பெரும்பான்மை இனத்தவர்கள் மத்தியில் மீண்டும் வலுப்பெற்று வருகின்றது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஞானசார தேரர், தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பௌத்த மத தர்மத்துக்கு நேர் விரோதமாகச் செயற்பட்ட இவர், அடாவடித்தனங்களுக்குப் பெயர்போனவர். இனவாதக் கருத்துக்களை உதிர்ப்பதில் வல்லவர். சட்டத்தையும், ஒழுங்கையும், நீதித்துறையையும் துச்சமாக மதிக்கின்ற மனப்பான்மையைக் கொண்டவர். தமது கருத்துக்களை மற்றவர்கள் ஏற்க வேண்டுமென எதிர்பார்க்கின்ற ஒருவர். சிறுபான்மை இனத்தவர் மற்றும் அவர்களது வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்பட்டதில் இவருக்கு முக்கிய பங்கு இருந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் பௌத்த உயர் பீடங்கள் அப்போதெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. ஞானசார தேரர் மீது பௌத்தமத உயர் பீடங்களால் அந்த வேளையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால், அவர் இன்று சிறையில் அடைபட்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

**பௌத்த பிக்குமார் அனைவரும் பௌத்த மகாசங்கத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவர்களே!**

இலங்கையை ஒரு பௌத்த நாடு என்று கூறுகிறார்கள். அதற்கு ஏற்றாற்போன்று ஏராளமான பௌத்த பிக்குமாரும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே பௌத்த மகா சங்கத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். இந்த நிலையில், பௌத்த பிக்குகள் சிலரின் தவறான நடவடிக்கைகள் காரணமாக பௌத்த மதத்துக்கு அபகீர்த்தி ஏற்படுகின்றது. அரசியல்வாதிகள் தமக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும் என்பதற்காக இவற்றைக் கண்டு கொள்வதில்லை. தற்போது ஞானசார தேரருக்குப் பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பாக அவர்கள்தான் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அமைச்சர் ராஜித சேனாரத்ன இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பு வழங்குவதில் தவறொன்றும் இல்லையெனத் தெரிவித்திருக்கிறார். ஆனால் அரச தலைவரின் முடிவே இதில் இறுதியானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பௌத்த பிக்குகள் குற்றம் புரிந்தால் விசேட நீதிமன்றங்கள் ஊடாகவே அவர்கள் விசாரிக்கப்பட வேண்டுமெனவும், பௌத்த நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டுமெனவும் பௌத்த தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகப் பிறிதொரு தகவல் தெரிவிக்கின்றது. ஆனால் இவையெல்லாம் சாத்தியமான விடயங்களாகத் தோன்றவில்லை.

**சிறைக் கைதிகளுக்கான உடையையே அணியவேண்டிய நிர்ப்பந்த நிலை ஞானசார தேரருக்கு**

ஞானசார தேரரின் காவியுடைகள் களையப்பட்டதோடு, சிறைக் கைதிகள் அணிகின்ற ஆடைகள் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பௌத்த தேரர் என்ற அந்தஸ்தை அவர் இழந்துவிட்டார். அரசதலைவர் தமது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி அவரைச் சிறையிலிருந்து விடுவித்தாலும்கூட, மக்களின் பார்வையில் அவரொரு குற்றவாளியாகவே நோக்கப்படுவார். அவருக்கு முன்னர் இருந்த கௌரவம் மீளக் கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகின்றது.

தவறு இழைத்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் குற்றவாளிகள்தான். மத, இன, சாதி, வர்க்க வேறுபாடுகளின் அடிப்படையில் வைத்து அவர்களது குற்றங்களுக்கான தண்டனையை எடைபோட இயலாது. ஞானசார தேரர் ஒரு பௌத்த பிக்கு என்பதற்காக அவர் இழைத்த குற்றங்களிலிருந்து அவருக்கு விதிவிலக்கு வழங்க முடியாது.

**அரசியல் கைதி ஆனந்த சுதாகரனது குடும்ப நிலையைக் கருத்தில்கொண்டு விடுதலை வழங்குமாறான கோரிக்கை இன்றுவரை சாத்தியமாகவில்லை**

ஆனந்தசுதாகரன் என்ற அரசியல் கைதி, தமது மனைவி சாவடைந்த வேளையில் கிளிநொச்சியில் உள்ள தமது வீட்டுக்கு மரணச் சடங்கில் கலந்து கொள்ள அழைத்து வரப்பட்டபோது, அங்கு நடந்த சம்பவங்கள் கல் நெஞ்சர்களின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்து விட்டது. அவரது பிள்ளைகள் அவரைப் பிரிவதற்கு மனமில்லாமல் தவித்த தவிப்பும், வேதனையும் அங்கு நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களது கண்களிலும் கண்ணீரை வரவழைத்து விட்டது. பின்னர் சுதாகரனின் விடுதலை தொடர்பாக பல தரப்புக்களிடமிருந்தும் அரசதலைவரிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. சுதாகரனின் பிள்ளைகள் தமது தந்தையின் விடுதலைக்கு உதவுமாறு அரசதலைவரிடம் நேரடியாகவே வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் அதேவேளை, தெற்கில் உள்ள இனவாதிகள் சுதாகர னின் விடுதலைக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

இன்றுவரை சுதாகரனின் விடுதலை விடயம் அரசதலைவரது பொதுமன்னிப்பின் அடிப்படையில் இன்றுவரை சாத்தியமாகவில்லை. இந்த நிலையில் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளி யான ஞானசார தேரருக்கு அரசதலைவர் பொதுமன்னிப்பு வழங்குவது எந்த வகையிலும் நியாயமானது என எண்ணத்தோன்றுகிறது.

ஒரு ஜனநாயக நாட்டில், அனைவருக்கும் சமனான நீதி வழங்கப்பட வேண்டும். ஞானசார தேரராக இருந்தாலும் சரி, வேறு பிரபல்யம்மிக்க எவராக இருந்தாலும் சரி, சமனான நீதியே வழங்கப்பட வேண்டும்.

## SLIIT CS Student Achievement: Facebook Bug Bounty Programme

SLIITCyber Security degree,has produced yet another student achiever, NakarajahThuvakaranwho was also the recipient of the recentFacebook Bug Bountyprogramme. He subsequently received a monetary prize of USD500, and was listed under the 2018 Bug Bounty Researchers list on the Facebook White-Hat Page. Nakarajah has brought fame to SLIIT and Sri Lanka, by being the first Sri Lankan to achieve this status in the year 2018.

Popularly known as the 'White-Hat Programme' or a Vulnerability Rewards Programme (VRP), it is a crowd-sourcing initiative that rewards individuals for discovering and reporting software bugs. Many software vendors and websites run bug bounty programmes, paying out cash rewards to software security researchers and white-hackers (ethical hackers) who report software vulnerabilities that could potentially be exploited. Bug reports must document enough information for the organisation offering the bounty to be able to reproduce the vulnerability.

'Through SLIIT's MSc and BSc Cyber Security programs, we believe in enabling students to be on par with global standards as it gives them exposure to international brands and organizations as the concept has yet to gain ground within Sri Lankan organizations. This gives potential students a limitless opportunities to explore their capabilities in an area which has much scope globally." stated Professor ChandimalJayawardane, Dean of the Faculty of Computing.

Elaborating further on the subject of the SLIIT Cyber Security program, Dr. Pradeep Abeygunawardane, Head of Information Systems, Faculty of Computer said, "We are proud of the achievement by our own student as achievement at international level is not easy. SLIIT Cyber Seeurity degree program enables students to participate in such competitions and programs during their course of study. As part the compulsory course content of the Information Security project SLIIT students are required to involve themselves in the bug bounty programs. Therefore, such a achievement by our students means that our programs are at international standards. While congratulating him, I am really proud of our cyber security program"

'We are continuously assisting our students,with the aim of helping them achieve international levels of recognition in the field of cyber-security. We also consistently motivate them to up-scale their talents in this area, so they may bring in value to the country as well as the organisations they are employed at. Hence, we have created a curriculum which is on par with international standards. NakarajahThuvakaran's achievement is a direct result of this best practice in our curriculum and academic delivery,'statedLakmal Rupasinghe, BSc/MSc Cyber Security Co-ordinator, Faculty of Computing.

'The lecturers for the SLIIT cyber-security degree have been instrumental in crafting my interest in this sphere, and I am grateful for it. Although, cyber-security and bug bounty programmes are yet to capture Sri Lankan organisations, we as students of SLIIT, gain access to all the internationally renowned bug bounty programmes which has enhanced our knowledge in the field.' stated the award-winner Nakarajah, adding that 'SLIIT's innovative approach to cyber-security studies, has compelled students to test their skills in various areas of expertise and opened a portal for achievements within global websites and organisations.'

The SLIIT Faculty of Computing provides a wide range ofIT related courses to choose from. Students are granted the opportunity to follow the most suitable course of study pertaining to their interest and career objectives. With a professional panel of lecturers, dedicated to providing the best knowledge, state-of-the art computer laboratories and practical learning experiences, the Faculty of Computing at SLIIT is the most suited environment to enhancecomputer knowledge.

The computer degrees awarded by SLIIT are approved by the University Grants Commission and the institute is also a Member of the Association of Commonwealth Universities and International Association of Universities (IAU). Interested students have the added option of participating in the Curtin University Offshore programmers in Sri Lanka at SLIIT, or opt to complete their degrees at one of SLIIT's partner universities in the UK, USA, Canada and Australia.

## இலங்கையின் முன்னணி கட்டட நிர்மாணிப்பாளர்களான

## Blue Ocean Group நிறுவனத்தின் முன்னோக்கிய பயணத்தில் மேலும் சிலசாதனைகள்

கட்டட நிர்மாணத்துறையில் இலங்கையில் முதலிடம் வகிக்கும் Blue Ocean Group சர்வதேச ரீதியில் மேலும் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. இத்துறையில் உயரிய விருதாகக் கணிக்கப்படும் ஆசியாவின் Property Guru Asia Property Award விருதுக்கு வரலாற்றில் முதன் முறையாக கடந்த வருடம் இலங்கை தெரிவு செய்யப்பட்டது. சிங்கப்பூரில் நடந்த அந்நிகழ்வில் இலங்கை கட்டட நிர்மாணத் துறையில் முதலிடத்துக்கான விருதையும் ஆசியாவின் மிகச் சிறந்த வர்த்தக நாமத்துக்கான விருதையும் எமது குழுமம் பெற்றுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து இவ்வருடம் அதே துறையில் எட்டு உயரிய விருதுகளை நாம் சுவீகரித்துக் கொண்டமை எமது வாழ்நாள் சாதனை என்பதுடன் எமது தாய் நாட்டுக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம் எனவும் கருதுகிறோம்.

Blue Oceanகுழுமம் வடிவமைக்கும் குடியிருப்புகள் அழகியகலையம்சத்துடன் உச்சபட்ட பாதுகாப்புடன், கௌரவமான, ஆரோக்கியமான, அமைதியான, நெரிசலற்ற சுற்றுப்புறங்களைக் கொண்டதாக விளங்குவதால் வாடிக்கையாளர்கள் திருப்தியுடனும்,நிம்மதியுடனும் வாழ்வதற்கானஉத்தரவாதம் கிடைக்கின்றது. அத்துடன், சட்ட அங்கீகாரம் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் அனுமதி ஆகியவற்றுடன், சட்டபூர்வ எல்லைகள் வகுக்கப்பட்டு, தெளிவான உறுதிப்பத்திரத்துடன் (Clear Title) கையளிக்கப்படுவதால் குடியிருப்பாளர்களுக்கு எதிர்காலத்தில் எவ்வித சிக்கல்களும் ஏற்படுவதில்லை.

**எமது சிறப்பம்சங்கள்**

ஒருசில நிறுவனங்கள் குறைந்த தரப் பொருட்களைப் பயன்படுத்தி இல்லங்களை அமைத்து குறைந்த விலைக்கு விற்கின்றன. வேறு சில நிறுவனங்கள் உயர்தரப் பொருட்களைப் பயன்படுத்தி கட்டடங்களை நிர்மாணித்து சாதாரணப் பிரஜைக்கு எட்ட முடியாத விலைக்கு விற்கின்றன. ஆனால், Blue Ocean குழுமம் உயர்தரப் பொருட்களைப் பயன்படுத்தி தரமான கட்டடங்களை நிர்மாணித்து சாதாரணப் பிரஜைக்கும் எட்டக் கூடிய நியாயமான விலையில் கையளிப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

அபிவிருத்தியின் உருவாக்கம், புதுமைகளின் பிரயோகம் ஆகியவற்றின் மூலம் சிருஷ்டிக்கப்பட்ட சூழ் நிலையில் இலாபமீட்டுதல்" என்பதே இந்நிறுவனத்தின் வர்த்தககோட்பாடாகும். தெளிவான தொலை நோக்குடன் வாடிக்கையாளர்களிடம் நிலைத்து நிற்கும் ஆணித்தரமான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் இக்குழுமம் இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்று Blue Ocean என்ற பிரதான வர்த்தக இலச்சினையின் கீழ் பொறியியல், காணி அபிவிருத்தி வர்த்தகம் (ரியல் எஸ்டேட்), பொதுவணிகம், மின்னியல் கூட்டுறவு ஆலோசனைகள், கல்வி உட்பட பல்வேறு துறைகளில் பிரகாசித்து வருகிறது.

பாரம்பரிய கட்டட நிர்மாண முறைகளை விடுத்து அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் நாம் முன்னணியில் உள்ளோம். அதன் மூலம் வாடிக்கையாளருக்கு ஏற்படக் கூடிய கால விரயமும் மேலதிக பண விரயமும் தவிர்க்கப்படுவதுடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாகி குடியிருப் பாளருக்கு கட்டடம் பூரண உத்தரவாதத்துடன் ஒப்படைக்கப்படுகின்றது.

Blue Ocean மிகவும் மதிக்கப்படுகின்ற, யதார்த்தபூர்வமான, திடமான, சமூகப் பொறுப்புணர்வு கொண்ட நிறுவனம்" என்ற அடிப்படைச் சித்தாந்தமே எமது மகத்தான வெற்றிக்கு மூலகாரணம். பொறுப் பேற்ற பணியை நேர்த்தியாகவும், தரமாகவும், பொறுப்புணர்வுடனும் ஒப்புக்கொண்ட காலஎல்லைக்குள் முடிப்பதில் எமது நிறுவனம் எப்போதுமே தவறியதில்லை" எனும் திரு.தூமிலனின் திடமான கருத்து, ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்கள் அவரது நிறுவனத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையின் பிரதிபலிப்பாகத் தெரிகிறது.

Blue Ocean நிறுவனத்தின் மகத்தான வெற்றிக்குப் பிரதான காரணம் வாடிக்கையாளர்களுக்கு கட்டட நிர்மாணம் சம்பந்தமான சகல சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்குவதேயாகும். கட்டட வரைபாக்கம், காணிச் சீரமைப்பு, வசதிகள் முகாமைத்துவம் மற்றும், சட்ட ஆலோசனைகள் உட்பட சகல தேவைகளும் தாமதமின்றி நேர்த்தியாகவும் நிறைவாகவும் நிறைவேற்றப்படுவதால் வாடிக்கையாளர்களின் சிரமங்கள் முற்றாக நீக்கப்படுகின்றன.

Blue Ocean குழுமத்தின் தலைவர் திரு.எஸ்.தூமிலன் (ACA, ACCA ,ACMA (UK) ACMA CPA (AUS) FM AAT (SL) ACS) அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிவரும் முகாமைத்துவக் குழுவில் உயர் கல்வித் தகைமைகளையும், சிறந்த நிபுணத்துவத்தையும் கொண்டகட்டடக் கலைஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், பொறியியலாளர்கள், சட்ட வல்லுனர்கள் மற்றும் கட்டடநிர்மாணத் துறையில் பாண்டித்தியம் பெற்ற ஏனைய தரப்பினர் அங்கம் வகிப்பது இக்குழுமத்தின் வெற்றிக்கு மற்றுமொரு முக்கிய காரணமாகும்.

ஏற்கனவே கட்டட நிர்மாணத் துறையில் இலங்கையிலும், வெளி நாடுகளிலும் ஸ்திரமாகக் காலடிபதித்துள்ள Blue Ocean குழுமம் அதே துறையில் 40 வருட அனுபவத்துடன் மற்றொரு ஜாம்பவானாகத் திகழும் Link Engineering நிறுவனத்துடன் ஒன்றிணைந்தது இலங்கை நிர்மாணத் துறை வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகின்றது. லிங்க் எஞ்சினியரிங் இலங்கையின் கட்டடநிர்மாணத்துறையில் ஆற்றிய சிறந்த சேவைக்காகவும் பொறுப்பேற்ற நிர்மாணத் திட்டங்களை செவ்வனே நிறைவேற்றியமைக்கும் சான்றாக ஏராளமான உயர்தரச் சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

லிங்க் இன்ஜினியரிங் நாடளாவிய ரீதியில் 35 பாரியகட்டுமானத் திட்டங்களை பொறுப்பேற்றுள்ளது. அதே சமயம் Blue Ocean 10 முக்கிய நகரங்களில் முன்னெடுக்கும் 32 பாரிய திட்டங்கள் மூலம் ஒரேசமயத்தில் 1250 இல்லங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இவ்வருடத்தில் மாத்திரம் எமது குழுமம் 55 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுள்ள வீடமைப்பு திட்டங்களை பொறுப்பேற்றுள்ளது. தனியார் நிறுவனமொன்று இந்த அளவுக்கு பாரிய திட்டங்களை ஒரே சமயத்தில் பொறுப்பேற்று வழி .நடத்திச் செல்வது இலங்கை வரலாற்றில் ஒரு சாதனையாகும்.

இலங்கை அரசு முன்னெடுக்கும் துரித அபிவிருத்தித் திட்டங்களால் உள்நாட்டு ஆதனங்களின் பெறுமதி துரித கதியில் அதிகரித்துச் செல்கிறது. தாராளப் பொருளாதாரக் கொள்கையால் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கையில் பாரிய முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றன. கட்டட நிர்மாணத்துறை முன்னெப்போதும் இல்லாதவாறு துரிதமான வளர்ச்சியைக் கண்டுவருகின்றது. அதற்கேற்ப மக்கள் பாரம்பரிய பண சேமிப்பு முறைகளுக்கு அப்பால் கட்டட நிர்மாணத்தில் தங்கள் பணத்தை முதலீடு செய்ய விரும்புகிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான நிலை. என்றுமே தளர்ந்து போகாத சிறந்த முதலீடு" என்பது இன்று சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் எமது பிரவேசம்:**

எமது குழுமம் இந்நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் கால்பதித்துள்ளமை அங்குள்ள மக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. எமது திட்டங்கள் பற்றிய அறிவிப்புகள் வெளியானவுடனேயே எம்முடன் தொடர்பு கொண்டு தங்களது இல்லங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்வது அம்மக்கள் எம்மீது கொண்டிருக்கும் ஆணித்தரமான நம்பிக்கைக்கு சான்றாக விளங்குகின்றது.

**இம்மாகாணங்களில் இதுவரை நாம் நிறைவேற்றியுள்ள திட்டங்களில் குறிப்பிடத்தக்க திட்டங்கள்**

யாழ்ப்பாணம்: மக்கள் வங்கி பிரதேச அலுவலகம், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம், யாழ் விரிவுரை மண்டபம், புனித திருக்குடும்ப கன்னியர் பாடசாலை கட்டடம், நகர அபிவிருத்தி அதிகார சபை பிராந்திய அலுவலகம், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை கட்டடம், திருகோணமலை ஆதார வைத்திய சாலைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, இலங்கை வங்கி அதியுயர் கிளை, மட்டக்களப்பு புதிய மாவட்ட நிர்வாக அலுவலகம்.

**எமது சர்வதேச வலையமைப்பு**

சர்வதேச மட்டத்தில் எமது சேவைகளை விஸ்தரிப்பதற்காகவும், இலங்கையில் கட்டட நிர்மாணத் துறையில் முதலீடு செய்யவிரும்பும் வெளிநாட்டவர்களினதும் மற்றும் அந்நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் வசதிக்காகவும் எமது கிளை அலுவலகங்களை ஐக்கிய ராஜ்யம், கனடா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் நிறுவியுள்ளோம்.

(C/32018)(10)

### வேலையாள் தேவை

அம்பாள் சேவிஸ் நிலையத்துக்கு சேவிஸ் வேலைக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.

**077 787 2322** (CS/19430)(11,17)

K.K.S. றோட், மருதனார்மடம்

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அழகிய நற்குணமுள்ள 5' 9" உயரமுள்ள தனியார் நிறுவனத்தில் வேலைபுரியும் கிறிஸ்தவ மணமகனுக்கு வேலைபார்க்கும் / வெளிநாட்டு மணமகள் தேவை.

**076 373 6998** (CS/19430)(11,17)

### விற்பனைக்கு

TOYOTA PREMIO
2017 - 07 CAV XXXX
Doctor used car

**077 880 4348** (CS/19450)(11,17)

### காணி விற்பனைக்கு

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையாக பனைமரங்களுடன் கூடிய ஐந்தரைப் பரப்பளவுள்ள காணி விற்பனைக்குள்ளது. தொடர்புகளுக்கு தொலைபேசி இல.

**077 720 9554** (CS/19440)(11,17)

### பனைகள் விற்பனைக்கு

நேர்த்தியான பனைகள் ஒருதொகை விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

**075 760 4313, 077 666 0344**

காலை 9.00 - பி.ப. 3.00 மணிவரை தொடர்பு கொள்ளலாம். (CS/19417K)(11,17)

### வீடு வாடகைக்கு

செட்டிதெரு லேன், நல்லூரில் 5 அறைகளுடன் கூடிய பெரிய வீடு வாடகைக்கு உண்டு.

**076 674 2931, 077 248 7845** (CS/19430I)(11,17)

### தொடர்பு கொள்ளவும்

பெயிண்டிங் வேலைகள், குழாய் பொருத்தும் வேலைகள், மேசன் வேலைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.

**077 483 5500** (AVA/378)(11,17)

### வாடகைக்கு உண்டு

நுணாவில் A9 வீதிக்கு அருகாமையில் கல்விக்கூடம் நடத்துவதற்கு உகந்த விசாலமான பெரிய வீடு வாடகைக்கு - உண்டு.

தொடர்பு:- **077 6329403 / 021 5675196**

**இப்போது பூபாலசிங்கம் புத்தகசாலையில் .....**

**சமகால நடப்புக்கள் - சமயோசித பாணி - நகைச்சுவைப் பாங்கு,**
**இலகு தமிழில் உலவும் கவிதைகள் - காரையூர் கவிஞர் வடிவழகையனின் கவிதை நூல்**

**முகிலெனக்கு துகிலாகும்** (CS/19367)(11,17)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1984 அவிட்டம் பாதம் 2 CIMA Fully Qualified, Masters In Business Administration (MBA) 7 இல் செவ்வாய் Chartered Management Accountant (ACMA,CGMA) தகுந்த உள்நாடு / வெளிநாடு பட்டதாரி மணமகள் தேவை.

**Viber/Mobile:-076 855 0019**

### வேலையாள்கள் தேவை

தெஹிவளையில் உள்ள சைவ உணவகத்துக்கு வேலையாள்கள் தேவை

சைவ உணவகத்துக்கு **சமையல் காரர் & உதவியாள்கள்** தேவை.

அனுபவமுள்ள **சமையல்காரர், உதவியாள்கள்** தேவை.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தோசை, இட்டலி, பரோட்டா, சப்பாத்தி, வடை மற்றும் மேலதிகமான உணவுகளை தயாரிக்கத் தெரிந்த சமையல்காரர் தேவை. தங்குமிட வசதிகள் தரப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 109 4086 குகா

### அறை வாடகைக்கு

நாவலர் வீதி, நல்லூரில் உள்ள வீட்டில் இரு அறைகள் வாடகைக்கு உண்டு.

**T.P: 076 216 0099**

### வேலை ஆள் தேவை

போட்டோ கொப்பி தெரிந்த / பழக விரும்பும் பெண் பிள்ளை தேவை.

**070 322 0891 / 078 5030 914**

### நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
021 222 9306, 077 138 7596 (CS/18781/15/17)

### காணி விற்பனை

சாவகச்சேரி, சங்கத்தானையில் வீடு கட்டக்கூடிய பயன்தரும் மரங்களுள்ள 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

**076 488 7231** (IN/10102)(11,17)

### Accounting Servies

அனுபவம்-வாய்ந்த கணக்காளர் குழுவினால் நேரடியாக கணக்குப்பதிவு **VAT, NBT, SUAT,** வருமானவரி, சம்பளக்கோவை, **EPF, ETF** சேவைகள் வழங்கப்படும்.

**077 803 9581** (IN/10100)(11,17)

### காணி விற்பனைக்கு

நுணாவில் குளம் கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் பதினொரு(11) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. திருமண மண்டபம் அமைக்கச் சிறந்தது

தொடர்பு :- **077 990 6268**

### வாடகைக்கு

வெளிநாட்டிலிருந்து அல்லது வேறு இடங்களிலிருந்து குடும்பமாக யாழ்ப்பாணம் வருவோர் தங்குவதற்கு சகல வசதிகளையும் கொண்ட வீடு யாழ் பிறவுண் வீதியில் நாள் வாடகைக்கு உண்டு.

(A/C and Non A/C)

**T.P: 77 429 1246, 77 6333 000**

### வாடகைக்கு

5 அறைகள் கொண்ட வீடு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் விபுலானந்தர் வீதியில் (யாழ். கச்சேரியிலிருந்து 1Km) வாடகைக்கு உண்டு

**T.P: 077 042 2523**

### வாடகைக்கு உண்டு

சிறிய குடும்பத்திற்கு ஏற்ற தனி வீடு நல்லூர் சுற்றாடலில், தனியார் கல்விக் கூடங்கள், சுப்பர் மார்க்கற் கோவில்கள் சூழவுள்ள இடத்தில் உள்ளது.

வாடகை விவரம் :- **0777 109 735**

### சாரதி தேவை

வீட்டு வாகனம் ஓடுவதற்கு சாரதி ஒருவர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் .விரும்ப தக்கது.

தொடர்புகொள்ள:-

**T.P: 075 059 6214, 021 222 6884**

### தேவை

**யாழ் - கொழும்பு செல்லும் கனரக வாகனத்துக்கு உதவியாளர் (கிளினர்) தேவை.**

**077 027 7365**

### பதவி வெற்றிடம்

யாழ்.நகரில் இயங்கும் கம்பனி ஒன்றுக்கு யாழ். மாநகர எல்லைக்குள் வசிக்கும் **கணினி உதவியாளர் (பெண்) தேவை.**

**077 427 5311, 076 253 4275**

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ, 1988, சுவாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷம் அற்ற கிரகபாவம் 06 CIMA, BSc முடித்த கொழும்பில் கணக்காளராக தொழில்புரியும் 6 அடி உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

**075 028 4640**

# நித்திய சுகம் 380

உடலே கோயில்

# இயற்கையை நேசிப்போம்!

சி.சிவன்சுதன்

## நோய்த்தடுப்புக்கும் நோய் குணமாக்கலுக்கும் உரிய சாதனமாக இயற்கை விளங்குகிறது



**காற்று**

ஐம்பூதங்களுள் இயற்கையின் தனித்துவக் கூறாக நித்தமும் உயிர்நிலை வருடுகின்ற சுத்தமான காற்றுபலவித நோய்களையும் குணப்படுத்துகிறது. நுரையீரலைப் பாதுகாத்துக் கொள்கிறது. ஆம்,பருவ காலத் துக்கு ஏற்ப காற்றுப் பலமாக வீசத் தொடங்கும் சந்தர்ப்பங்க ளில் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் நோயாளர்க ளின் எண்ணிக்கை குறைவடைகின்றமை இதற்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது.

இயற்கையான காற்றை நாம் நிறைவாக சுவாத்தியம் செய்ய வேண்டும். அவற்றைத் தடுத்து நிறுத்தி கதவடைப்புச் செய்து விடக்கூடாது. உண்மையில் நாங்கள் அனைவருமே பூட்டிய அறையினுள் செயற்கை மின்விசிறி தருகின்ற ஆபத்தான அசுத்தக்காற்றை சுவாசித்து அந்தரிக்கிறோம். நோயை இரு கரம் கூப்பித் தொழுது அழைத்திருக்கிறோம். இத்தகு செயற் காரியுங்களில் இருந்து நாம் விடுபட முயற்சிக்க வேண்டும். ஆபத்தை விலைகொடுத்து வாங்கும் ஒவ்வாத வாழ்க்கை முறையில் இருந்து ஒதுங்கியிருப்போம்.

**இயற்கையை பேணுவோம்**

பூமியில் உள்ள மரங்கள் அழிக்கப்படும் போது அசுத்தக் காற்று எங்கும் நிரம்பலடைகிறது. அசுத்தக் காற்று எமது சுவாசப்பைகளில் நிறைந்து நோய் நிலைகளை தருகிறது. ஆக இங்கு நாம் ஆற்ற வேண்டிய காரியங்கள் பல உள்ளன. குறிப்பாக, நாம் சுவாசிக்கும் காற்றை தூய்மைப்படுத்திக் கொள்ள இயற்கையை பாதுகாக்க வேண்டும். அங்கத்துவம் பெறுகின்ற பச்சையங்களான மரங்களை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். மரங்களை சிந்தனையின்றி வெட்டிச் சாய்க்கும் போது, அதற்குரித்தான பரிகாரமாக ஒரு தொகை மரங்களை நடுகை செய்ய முயற்சிப்போம். எமது சுகத்தை யும் சுற்றாடலையும் காத்திருக்கின்ற, சூழலிலுள்ள அசுத்தக் காற்றை வடிகட்டி சுத்திகரிக்கின்ற, சுவாசக்காற்றான ஒட்சி சனை தருகின்ற, நிழலையும் குளிர்ச்சியையும் மழை வீழ்ச்சியையும் தன்னிறைவாகக் கொடுக்கின்ற, நோய்த்தாக் கங்களிலிருந்து மனிதங்களை காப்பாற்றுகின்ற தாய் மண்ணைப் பேணிப் பாதுகாத்திருப்போம்.

உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலையைக் காத்திருக்கும் 'மரம்' என்ற மருத்துவச் சுடரை தாய் தேசமெங்கும் ஏற்றி வைப்போம். அச் சுடர்களின் ஒளியில் மிளிர்ந்து ஆரோக்கிய வாழ்வியலில் நாமும் பங்காற்றுவோம்.

**இரசனை உணர்வும் இயற்கை உணவும்**

இயற்கையை இரசனை கொள்வோம். நற் பழக்க வழக்கமாய் அதனைக் கைக்கொண்டு பல நோய் களை குணப்படுத்து வோம். இத்தகு பழக்க வழக்கம் மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். மனதில் ஏற்பட்ட காயங்கள் பலவற்றையும் மாற்றிவிடும். அதுவிதமே கலப்படமற்ற இயற்கையான உணவுவகை கள் நோயைத்தடுக்கவும், நோயைத் தீர்க்கவும் வல்லவை. குறிப்பாக, "ஊர்க்கோழி முட்டை, இளநீர், இயற்கையான உணவை உண்ணும் பசுவினுடைய பால், மோர், பச்சை யிலையை உண்ணும் ஆட்டின் பால், இயற்கை உரமிட்டு மருந்து தெளிக்காமல் வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகள், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையாக வளரும் அகத்தி, சண்டி, முருங்கை, தவசி முருங்கை போன்றவற்றின் இலை வகைகள், வாழைப்பொத்தி, தானாகப் பழுத்த பழவகைகள், கடலிலே பிடித்த உடன் மீன்வகைகள், இறால், தேசிக்காய், சுண்டங்கத்தரி" என அத்தனை இனிமையான இயற்கை யான இலகுவில் கிடைக்கக்கூடிய உணவு வகைகளை அதிகம் பயன்கொள்வோம். மாறாக நவீனத்தின் அழிவாயு தமான சத்துமாப் பேணிகளையும், இரசாயன உணவு வகைகளையும் புறக்கணிப்போம்.

**ஆகாய முதல்வன்**

சூரிய பகவான் சக்தியை மட்டுமே கொடுக்காது பல நோய்க் கிருமிகளின் தாக்கத்தில் இருந்து எமைப் பாதுகாத்து வருகின் றான். அன்றாட பாவனைப்பொருள்களான தலையணை, பாய், மெத்தை போன்றவற்றை சூரிய வெயிலில் காயவிடுவ தன் மூலம் பல ஆபத்தான கிருமிகளை இயற்கையான முறையிலேயே அழித்துவிட முடியும். இயற்கையாகப் பொழி யும் மழை நீரைச் சேகரித்து அருந்திவருவது உடல் ஆரோக் கியத்துக்கு இன்றியமையாதது மட்டுமன்றி, புற்றுநோய்கள் மற்றும் சிறுநீரக நோய்களிலிருந்தும் எமைப் பாதுகாக்கிறது.

**சுத்தம் சுகம் தரும்**

இயற்கையை இறைவனாகச் சித்தரித்து வழிபடும் வழக்கம் எம்மிடையே தொன்றுதொட்டே இருந்துவருகின்ற மரபாக காணப்படுகிறது. இத்தகு சிறப்புடைய இயற்கை என்ற இறை வன் மருத்துவத்திலே நிபுணத்துவம் கொண்டிருப்பதால் அந்த இறைவனை வைத்தீஸ்வரன் என்ற நாமகரணம் சூட்டி அழைக்கிறோம். சில நோய்க் காரணிகளின் அழிவுக்கும், நோய் குணமாதலுக்கும் இயற்கையான நடைமுறைகள் மட்டும் போதாமல் போகலாம். அந்தச் சந்தர்பங்களில் மட் டுமே செயற்கை என்ற ஆயுதங்களை ஏந்துவோம். மொத் தத்தில் அவற்றைச் சாதுரியமாகப் பயன்படுத்த முயல்வோம். இயற்கையின் கவனிப்பில் என்றுமாய் சுகம் பெறுவோம்.

*கட்டுரையாளர் : பொது மருத்துவ நிபுணர், போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம்.*

# காயங்களை நேயமுடன் பராமரிப்போம்

கோ.நந்தகுமார்

- எமது உடலில் பல்வேறு காரணங்களாலும் காயங்கள் ஏற்பட லாம். 'உராய்தல் மூலம் ஏற்படும் காயங்கள், வெட்டுக்காயங்கள், குத்துக்காயங்கள், கிழிவுக்காயங்கள்' என அத்தனையும் பல் வேறு சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்றன.
- சத்திர சிகிச்சையின் போது காயங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இதில் முதல் வகைக் காயங்களில் தொற்றுதல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் மிகவும் அதிகம். ஆனால் சத்திரசிகிச்சையின் போது ஏற்படுத்தப்படும் காயங்களில் தொற்றுதல் ஏற்படுவது மிகவும் அரிது.
- 'காயங்களில் காணப்படும் இறந்த கலங்கள், காயப்பகுதிக்குப் போதியளவு ஒட்சிசன் கிடைக்காமை, காயம் ஏற்பட்டவரில் காணப்படும் மந்த போசணை' போன்ற காரணங்களால் நோய்த் தொற்று ஏற்படும்.
- மனிதனின் உடலில் காணப்படும் ஒருவகை பக்ரீரியாவான, 'Staphy lococcus Aureus' எமது உடலில் காயம் ஏற்பட்டவுடன் காயத்தினுள் ஊடுருவித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- சுற்றாடலில் காணப்படும் பல்வேறு பக்றீரியாக்களான, Eschcri chia, Klebeisella,Entrobacter and Proteus| போன்றவை யும் தொற்றுதலை ஏற்படுத்துகின்றன. .
- காயம் ஏற்பட்ட பகுதியில் காணப்படும் அந்நியப்பொருள்களும், காயம் ஏற்பட்டவரில் காணப்படும் நோய் எதிர்ப்புச் சக்தியும் காயம் குணமாவதில் முக்கிய பங்காற்றுகின்றன.
- காயம் ஏற்பட்டவரின் வயது, மதுசாரம் பாவித்தல், நீரிழிவு போன்ற நோய்நிலமைகளும் காயம் மாறுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
- ஒருவருடைய காயத்தில் தொற்று ஏற்பட்டுள்ளமைக்கு அறிகுறி களாக, 'காயம் ஏற்பட்ட பகுதி சிவந்து காணப்படுதல், வீக்கம், சூடாகக் காணப்படுதல், தொடும் போது நோ என்பவற்றுடன் காயம் ஏற்பட்ட பகுதியில் இருந்து சீழ் வெளியேற்றம்' போன் றவை அமைந்திருக்கும்.
- தொற்றுக் காயங்கள் எனின், ஏற்புத்தடை ஊசிபோட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒழுங்கான முறையில் எடுக்கப்பட வேண்டும்.
- காயத்தின் தன்மையைப் பொறுத்து அதனைப் பராமரிக்கும் தன்மையும் வேறுபடும். நாய்க்கடி காயங்கள், பாம்புக்கடி காபங் கள் எனின் அந்தப்பகுதி ஓடும் நீரினால் சவர்க்காரமிடப்பட்டு நன்றாகக் கழுவப்பட வேண்டும். இயலுமானவரை தொற்று அற்ற அணியத்தினால் மூடிய பின்பு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.
- சிறிய வெட்டுக்காயம் தொடக்கம் பெரிய வெட்டுக்காயம் வரை தொற்று அற்ற அணியத்தினால் மூடிப் பராமரிக்க வேண்டும்.
- மருத்துவமனைகளில் காயங்களின் தன்மையைப் பொறுத்து வெவ்வேறான பராமரிப்பு முறைகள் பின்பற்றப்படுகின்றன.
- சில சமயங்களில் தொற்று நீக்கிகள் பாவிக்கப்பட்டு நன்றாகக் கழுவிய பின்னர் காயங்கள் இலகுவில் ஆறுவதற்காகத் தையல் போடவேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படும்.
- காயங்கள் பெரியதாயின் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். இதன் ஊடக தேவையற்ற குருதியிழப்பு ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ளலாம்.
- சத்திர சிகிச்சைக் காயங்கள் தொற்று அற்ற முறையில் ஏற்படுத் தப்படுவதனால் அவற்றுக்கு தொற்றுநீக்கிகள் எவையும் இட வேண்டிய தேவையில்லை. சிலசமயங்களில் நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள், அன்ரிபயோட்டிக் என்பன காயங்கள் இலகுவில் மாறுவதற்காகக் கொடுக்கப்படுகின்றன.
- வீடுகளில் சிலசமயம் ஏற்படுகின்ற எரிகாயங்கள், சுடுநீர் ஆவி மூல மாக ஏற்படுத்தப்படுகின்ற காயங்களிலும் கவனம் செலுத்தப்பட வேண் டும். சில சமயங்களில் இவ்வகையான காயங்கள் தோலின் மேற் பரப்பில் ஏற்படுத்தப்படுவதனால் நோ அதிகரித்துக் காணப்படும்.
- எரிகாயங்களில் உடையின் பாகங்கள் அல்லது வேறு பொருள் கள் ஒட்டிக் காணப்படின் அவற்றை வீட்டில் வைத்து அகற்ற முயற்சிக்கக்கூடாது. மருத்துவமனையில் வைத்து அவை தகுந்த முறையில் அகற்றப்பட வேண்டும்.
- காயம் மாறுவதற்காகப் பொருத்தமற்ற பதார்த்தங்களைப் பயன் படுத்துவது, மருத்துவ ஆலோசனையின்றி நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளைப் பாவிப்பது போன்ற காரியங்கள் சில சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவை ஏற்படுத்தும்.
- "கழுதைப்புண்ணுக்கு புழுதி மருந்து என்பது ஆதிகாலத்தில் இருந்து வழங்கிவரும் பழமொழி. அதன்வழியே சிலர் புழுதி, சாணம், கோப்பி போன்றவற்றைக் காயங்களை மாற்றப் பயன் படுத்தும் வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் இருந்துவருகி றது. இதனால் ஏற்புவலியை ஏற்படுத்தக்கூடிய கிருமிகள் உட் செல்லக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் காணப்படுகின்றது.
- காயங்கள் மாறுதல் உடலில் நடைபெறுகின்ற சாதாரணமான பொறிமுறைகளில் ஒன்று. எமது உடலில் காயம் ஏற்பட்டதும் இயற்கையான பல செயற்பாடுகள் தூண்டப்பட்டு குருதி உறை தல், தின்குழியச் செயன்முறை மூலம் உடலில் புகுந்த நுண்ணு யிர்களின் செயற்பாடுகளை இல்லாமல் செய்தல் போன்ற செயல்விளைவுகள் நடைபெறுகிறது. இவ்வாறான செயற்பாடு கள் சிறப்பாக நடைபெறுவதற்கு உமது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிக செயற்திறனோடு இருத்தல் வேண்டும்.
- அழிவடைந்த இழையங்கள் புதுப்பிக்கப்படுவதற்குப் புரதம் நிறைந்த உணவுகள், பொஸ்பரஸ், கல்சியம் என்பவற்றுடன் விற்றமின் 'சீ' உம் மிக அவசியமாகிறது. எமது உணவு முறை சீரான தாக அமையின், காயங்கள் இலகுவில் ஆறிவிடும்.

இந்த நிலையிலே இன்றைய காலநகர்வுகள் அதிகரித்த விபத்து களை தந்திருக்கிறது. சர்வ சாதாரணமாக அவை இடம்பெறுவதுடன் அதிகரித்த உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. காயம் என்பது அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாக மாறிவிட்டது. இது குறித்து சிந்திப்போம். காயங்கள் ஏற்பட்டதும் அவற்றைச் சரியான முறையில் பராமரிப் போம். குறிப்பாக நீரிழிவு நோயாளர்களுக்கு காயங்கள் அதிக பாதிப்பை தரவல்லன என்பதை உணர்ந்தும் புரிந்தும் கொள்வோம். காயங் களை ஒழுங்காக பராமரிப்பதன் ஊடே ஆரோக்கியம் காண்போம்.

*கட்டுரையாளர்: விரிவுரையாளர், தாதியர் கல்லூரி,யாழ்ப்பாணம்.*

ஞாயிறு சிறப்பம்சம்

02.09.2018

சூரியகாந்தி




# மத்திய வங்கியின் கண்ணில் மண்!

## குத்தியில அடிச்ச செய்ன்!

"ஐஞ்சு ரூபாய்க் குத்தியில அடிச்ச செய்ன் இது! கறுக்காது! கனநாளுக்குப் பாவிக்கலாம்! கே.கே.எஸ்.றோட்டிலையும், சிவன்கோயிலடிப் பக்கமாயும் இருக்கிற, நகைத் தொழிலகங்களிலைதான் இது செய்தது! அக்காமார்!தங்கச்சிமார்! இதை ஒருக்காப் பாருங்கோ! சின்னன் இருநூறு ரூபா, பெரிசு ஐநூறு ரூபா."

யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து புறப்படுவ தற்குத் தயாராக இருக்கின்ற, தூர மற்றும் உள்ளூர்ச் சேவைகளில் ஈடுபடுகின்ற பஸ்களுக்குள் இருக்கும் பயணிகளுக்கு மேற்படி விளம்பர வாக்கியங்கள் நன்கு பரிச்சயமானவை.

கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி



தக தகக்கும் 'தங்கநிற' கழுத்துச் சங்கிலிகளை இடது கையில் அதிகமாகவும், வலது கையில் சொற்பமாகவும் கொழுவியபடி ஏறி இறங்கும் இளவயது வியாபாரி ஒருவரின் விளம்பர உச்சாடனங்களே இவை. பயணம் செய்வதற்குத் தயாராக இருக்கும் பயணிகளில் தமக்குரிய வாடிக்கையாளரைக் கண்டறிவதில் அவர் மும்முரமாக இருந்தாலும், அவருடைய விற்பனைப்படுத்தலுக்கு வலுச்சேர்க்கும் சொல், "ஐஞ்சு ரூபாக் குத்தியில அடிச்ச செயின்! இது கறுக்காது!" மனதில் பதிந்துபோய் விடுகின்ற ஒன்று!

சில்லறைத் தட்டுப்பாட்டு நிலைவரத்தைப் பயன்படுத்தி பஸ் நடத்துநர்கள் நடத்தக்கூடிய சிறிய ரக வழிப்பறியைத் தடுப்பதற்கு, பயணிகள் தமது கைப்பைகளுக்குள்ளும், பணப்பைகளுக்குள்ளும் ஏன் பயணப்பைகளுக்குள்ளும் சல்லடை போட்டுச் சில்லறை தேடிக் கொண்டிருக்கையில், இந்த வியாபார மனிதர் தனது இந்த 'பிரஷன்டேசனை' நிகழ்த்திவிட்டுச் செல்வார்.

செய்னுக்குள் செத்துப்போன 5ரூபாக் குத்திகள் அவ்வேளையில், தேடுதல் வேட்டை போடும் பயணிகளைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கும்.

### திருட்டுக் கும்பல்களுக்கு 'டிமிக்கி'

உலக சந்தையில் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக ஏற்றங்கண்டு வருகிறது. அணிந்திருக்கும் 'தங்கநிற' ஆபரணங்களில்தான் தமது சமூகத் தரம் மற்றும் பொருளாதார மதிப்பு நிர்ணயிக்கப்படுகின்றது என்னும் சமூக நிலைப்பாடு அல்லது மாயை நம்மவரிடத்தில் ஆழ வேரூன்றி இருக்கிறது. அது மாத்திரமல்லாது, யாழ்ப்பாணத்தில் நிகழக்கூடிய, அபகரிப்பு, வழிப்பறி, திருட்டு, கொள்ளை, களவுகளின்போது திருட்டுக் கும்பல்களுக்கு 'டிமிக்கி' கொடுக்கக்கூடிய வழிமுறைகள் பற்றியும் வேலிக்குப் பின்னால் ஆலோசனை செய்து வருகிறார்கள் எம்மவர்கள். இதன் தொடர்ச்சிகள் பொது மக்களை இவ்வகையான போலி நகைகளை நோக்கி ஈர்க்கச் செய்கின்றன எனலாம்.

### ஐந்து ரூபாவுக்குப் பின்னால்..!

குறிப்பிட்ட வகையான உலோகச் சேர்மானங்களைக் கலப்பதன் மூலம் கிடைக்கும் கலப்பு உலோகத்தால் செய்யப்படும் ஐந்து ரூபா நாணயம் கொண்டிருக்கின்ற உலோகக் கலவை, சூழற் காரணிகள் காரணமாக மங்கிப்போகாது என்கிற அடிப்படையே இங்கு முதன்மையானது. குறித்த உலோகக் கலவை மலிவான விலையில் கிடைக்கிறது. இந்தப் பின்னணியிலேயே, "ஐஞ்சு ரூபாக்குத்தியில அடிச்ச செய்ன்" சந்தையில் இடம் பிடித்திருக்கிறது. இலங்கை மத்திய வங்கியால் புழக்கத்தில் விடப்பட்டுள்ள ஐந்து ரூபா நாணயங்கள் பொதுவில் 9.50 கிராம் நிறை உடையவையாகவும் 23.50 மில்லிமீற்றர் குறுக்களவுடையவை ஆகவும் இருக்கின்றன. 2007ஆம் ஆண்டில் உலகக் கிண்ண ஞாபகார்த்தமாக மற்றும் 2014ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவின்போதும் வெளியிடப்பட்ட ஐந்து ரூபா நாணயக்குற்றிகள் 7.70 கிராம் நிறை உடையதாக இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட இரண்டு ஆண்டுகளிலும் வெளியிடப்பட்ட ஞாபகார்த்த ஐந்து ரூபா நாணயக்குற்றிகள், பித்தளையால் முலாமிடப்பட்ட உருக்கு - இரும்பு உலோகத்தால் ஆனவை.

அதற்கு முந்தையவை நிக்கல் மற்றும் பித்தளை கலப்பு உலோகங்களால் ஆனவை. தற்போது புழக்கத்திலிருக்கும் சில ஐந்து ரூபா நாணயக் குற்றிகள், தங்கநிறமல்லாத வெள்ளிநிறத்திலும் கிடைக்கின்றன. இதைவிட கையாளுவதை இலகுவாக்குவதற்காகவும், வார்ப்புச் செலவை ஈடுசெய்யவும் ஏதுவாக ஐந்து ரூபா நாணயத்தின் பரிமாணத்தை மேலும் சிறியதாக்கவும் மத்தியவங்கி கடந்த ஆண்டில் தீர்மானித்திருந்தது.

வருடா வருடம் இலங்கை மத்தியவங்கி வார்த்து வெளியிடும் நாணயக்குற்றிகளின் விவரம் மிரள வைக்கிறது. கடந்த ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் பிரகாரம், கடந்த ஆண்டில் மாத்திரம் 970மில்லியன் நாணயக் குற்றிகளை வார்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கடந்த ஆண்டில், நூற்று இரண்டு மில்லியன்களே நான்கு லட்சத்து எண்பத்து ஆறாயிரம் (102.486.000) வரையான 5ரூபா நாணயக்குற்றிகள் புழக்கத்தில் இருந்ததாக மத்தியவங்கி தனது 2017ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இதை விட 2017,2018 ஆகிய ஆண்டுப்பகுதியில் புழக்கத்தில் விடுவதற்காக 230மில்லியன் எண்ணிக்கையான 5ரூபாக் குற்றிகளை வார்ப்பதற்கும் மத்திய வங்கி திட்டமிட்டிருந்தது.

### மாட்டுவண்டியில் மாட்டிய சதங்கள்!

இப்போது இந்த ஐந்து ரூபா சின்னா பின்னப்படுவது போல சில காலங்களுக்கு முன்னர், கொடுக்கல் - வாங்கலில்இருந்து ஒதுங்கிய பத்துச் சத நாணயக்குற்றிகள் மாட்டு வண்டில் சட்டங்களில் ஆணிகளால் அறையப்பட்டிருந்தமை உங்களுக்கு நினைவிருக்கலாம்.

### தண்டனைக்குரிய குற்றம்!

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரகாரம், மத்திய வங்கியின் நாணய வாரியத்தின் அனுமதியின்றி நாணயக்குற்றிகளை உருக்குவது, உடைப்பது, துளையிடுவது, உருச்சிதைப்பது மற்றும் சட்ட வரையறையை மீறி ஏனைய நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும். அதேவேளை, நாணயக்குற்றிகளில் இருந்து பெறப்பட்ட உலோகத்திலிருந்தோ, அல்லது நாணயக் குற்றிகளைப் பயன்படுத்திச் செய்த பொருள்களையோ பாவித்தல், உடைமையாக வைத்திருத்தல் அல்லது கையாளுதல் என்பனவும் தண்டனைக்குரிய குற்றச் செயல்களாகும்.



### மத்தியவங்கியின் பிராந்திய அலுவலகம் வடக்கில்

பல வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் ஐந்து ரூபா நாணயத்தைச் சுற்றோட்டத்திலிருந்து நீக்கம் செய்யும் இந்த நடவடிக்கை, மத்திய வங்கியின் காதுகளுக்கு எட்டாமல் இருப்பது ஆச்சரியமளிக்கிறது. அதுவும் இந்த வியாபர நடவடிக்கை இடம்பெறுவது ஒன்றும் இரகசியமாக அல்ல. அதைவிட யாழ்ப்பாணம் மத்திய பஸ் தரிப்பு நிலையத்திலி ருந்து 2கிலோ மீற்றர்களுக்கும் குறைவான தூரத்தில் தான் மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகம் அமைந்திருக்கிறது. அரசடி வீதியில் இயங்கிவந்த மத்தியவங்கியின் வடபிராந்திய அலுவலகம் கடந்த ஆண்டில்தான் கிளிநொச்சி- அறிவியல் நகர் அலுவலகத்துடன் இணைந்தது. யாழ்ப்பாண அலுவலகம் 2010ஆம் ஆண்டிலிருந்தும் கிளிநொச்சி அலுவலகம் 2015ஆம் ஆண்டிலிருந்தும் இயங்கி வருகின்றன.

### சிக்கல் தரும் சில்லறைத் தட்டுப்பாடு

உலகசந்தையில் பொருள்கள் விலையேறினாலும், பணப்பரிமாற்ற நடவடிக்கைகளில் எத்தனையோ விதமான இலத்திரனியல் அட்டைகள் வந்து புகுந்து கொண்டாலும், நாளாந்தக் கொடுக்கல் - வாங்கலில் சில்லறை நாணயங்களுக்கு இருக்கும் மாண்பும் மதிப்பும் குறையவே இல்லை. கடந்த ஆண்டில் பணச் சுற்றோட்டத்துக்குத் தேவையான தாள்களுக்கும், நாணயங்களுக்கும் அதிக கேள்வி இருந்ததாக மத்தியவங்கி குறிப்பிடுகிறது. இதனால் கடந்த ஆண்டின் இறுதி நிலவரப்படி, நாணயப் புழக்கத்தின் பெறுமதி 598பில்லியன் என்கிறது மத்திய வங்கி. இது முன்னைய ஆண்டுகளை விட எழுச்சியைக் காட்டியிருக்கிறது. இந்த எழுச்சி நாணயக் குற்றிகளிலும் ஏற்பட்டிருக்கிறது.

### தேங்குவதால் பாதிப்பு

என்னதான் மத்தியவங்கி பணச் சுற்றோட்டத்துக்கு எனச் சில்லறைகளை வருடாவருடம் இறைத்தாலும், ஆங்காங்கே சென்று தெய்வ சந்நிதான உண்டியல்களுக்குள்ளும், குபேர சிலைகளைச் சூழவரவும் பயன்பாடின்றி அவை தேங்குவதன் காரணமாகப் பொதுமக்கள் மாத்திரமின்றி மத்தியவங்கியும் நெருக்கடிக்கு உள்ளாகிறது. நாணயக்குற்றிகளைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் உலோகங்கள் விலையேற்றம் அடைதல் மற்றும் வார்ப்புச் செலவுகள் அதிகரித்தல் என்பன மத்தியவங்கியின் தலையைப் பிய்த்துக் கொள்ளும் பிரச்சினைகளாகும். சில சந்தர்ப்பங்களில் நாணயங்களின் முகப்பெறுமதியை விட அதன் உருவாக்கச் செலவு அதிகமானதாக அமையும் நிலவரமும் காணப்படவே செய்கிறது. தங்கநிற நாணயக்குற்றிகளை மாற்றி, வெள்ளி நிற 5ரூபாக் குற்றிகளை மத்தியவங்கி சந்தைக்குள் அனுமதித்தாலும் புழக்கத்தில் பற்றாக்குறை நிலவவே செய்கிறது.


தங்க வர்ண 5ரூபாக் குற்றிகளைப் பயன்படுத்தி செய்த கழுத்துச் சங்கிலிகள் கறுக்காமல் இருக்கிறதோ இல்லையோ, அவை மக்களைக் கவர்கின்றனவோ இல்லையோ, குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடரவே செய்கிறது. சில்லறைகளைச் சீரழிக்கும் இந்த முறைகேட்டுக்கு முற்றுப்புள்ளி இடப்படவேண்டும். மத்திய வங்கி இந்த விடயத்தில் விழித்துக்கொள்ளாதவிடத்து, பொதுமக்களுக்குப் பொருத்தமான முறையில் அறிவூட்டாதவிடத்து, சில்லறைக் குற்றிகளைக் காய்ச்சி, வடித்து செய்யப்படுகின்ற சட்டி, பானைகளும் நாளை சந்தைக்கு வந்தடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தங்க வர்ண 5ரூபாக் குற்றிகளைப் பயன்படுத்தி செய்த கழுத்துச் சங்கிலிகள் கறுக்காமல் இருக்கிறதோ இல்லையோ, அவை மக்களைக் கவர்கின்றனவோ இல்லையோ, குறித்த சட்டவிரோத நடவடிக்கை தொடரவே செய்கிறது. சில்லறைகளைச் சீரழிக்கும் இந்த முறைகேட்டுக்கு முற்றுப்புள்ளி இடப்படவேண்டும்.

facebook Search Home Profile Inbox Friends Account

# சின்தரா ஓர் அரட்டை

அரட்டை
மேரிகிரேஸ் வரதராஜன்


வவுனியாவை வாட்டியெடுக்கும் வறட்சி



## ஏன் இந்த இரட்டை நிலைப்பாடோ?

யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ உள்ள தமிழ்ப் புத்தகக் கடைகள், தமிழ்நாட்டு நூல்களைப் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்கின்றன. ஆனால், ஈழத்து நூல்களை பத்து அல்லது ஐந்து பிரதிகளைக்கூட பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள மறுக்கின்றன. முப்பது வீதம் தரகுப் பணமாகத் தரவேண்டுமென வலியுறுத்துகிறார்கள். ஆனால் தரகுப் பணத்தைக் கழித்துவிட்டு உடன் பணம் தரமாட்டார்களாம் நூல்கள் விற்ற பின்னரே பணம் தருவார்களாம்! ஏன் இந்த இரட்டை நிலைப்பாடோ?

காரைநகர் களவோடை
கிணற்றில் தண்ணீர் இல்லை!






தயவு செய்து ஒரு நல்ல திரை அரங்கில் சென்று பொறுமையாகப் பாருங்கள். இந்த படம் உங்களை அப்படியே மெய்சிலிர்க்க வைக்கும். ஒவ்வொரு காட்சியிலும் கதை இருக்கும், நன்றாகக் கவனித்துப் பாருங்கள், கண்டிப்பாக இந்தப் படத்தை பா்ருங்கள்.

சிறந்ததொரு படம். இப்படி ஒரு படத்தைத் தயாரிப்பதற்கு முன் வந்த விஜய் சேதுபதியின் கைகளுக்கு முத்தங்கள்!

மாஸ் ஹீரோஸ் படம் என்று சொல்லி, குப்பைப் படங்களை 400,500திரையரங்குகளில் திரையிட்டு, இதுபோன்ற படங்களுக்கு, திரையரங்குகள் கிடைக்காமல் செய்கிறார்கள். எப்படி உருப்படும், தமிழ்த் திரையுலகம். வெகுளித்தனமான படங்களுக்குரிய இயக்குநர்கள் இந்தப் படத்தைப் பார்த்து வெட்கப்பட வேண்டும்.
ஆமாம்.

சரியாகச் சொன்னீர்கள்... தமிழ் சினிமா இயக்குநர்கள் பலருக்கும் ஒருதடவை இந்தப் படத்தைப் போட்டுக் காட்டுங்கள்.





## தமிழனே விழித்திரு.... மகாவலியை எதிர்த்திடு

பொருளாதார ஊக்கிகளை விட அரசியல் தீர்வே தமிழர்களுக்கு தேவையானது எனக்கூறியிருக்கிறார் முதலமைச்சர் இது சரியா? தவறா? விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. பொருளாதார ஊக்கிகளாக வேலைவாய்ப்பு, மீள் கட்டுமானம், மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு என யாவும் அமையும்.

ஏன் இன்னும் ஐந்து வருடம் இருக்க போறாரமா?

10இல்லை 100 வருசம் போனாலும் அரசியல் தீர்வை எந்த ஒரு தழிழனும் பெற்றுத் தர மாட்டான். ஒன்றும் வேண்டாம் மக்களுக்குப் பொருளாதார ஊக்கிகள் தான் காலத்தின் தேவை. அரசியல் வாதிகள் அரசியல் செய்ய அரசியல் தீர்வைக் கேட்பார்கள்.
பொருளாதார வளர்ச்சி இல்லாமல் அரசிடமிருந்து எமக்கான தீர்வை எவ்வாறு பேரம்பேசிப் பெறமுடியும்? அவர்கள் தருவதைதான் பெறலாம். ஆக பொருளாதார அபிவிருத்தி என்பது தமிழ் மக்களுக்கு அவசியமான ஒன்று

இரண்டும் சம நேரத்தில் சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அது அறிவியல் ரீதியாக கட்டமைக்கப்பட வேண்டும் கிடைக்கின்ற வாய்ப்புகள் மக்களுக்குரியதாக்கப்படும். அப்பாவி மக்களின் உணர்வுகள் அறிந்து அதற்கு மருந்திடுவதோடு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவும்.

சென்ற ஆட்சியில் என்னத்தைப் புடுங்கினவர். இவரை முதலமைச்சராக நியமிப்பதற்கு சார்பாக இருந்த தமிழ்த் தலைமைகளைக் கேட்க வேண்டும். ஊடகத்துக்கு ஒழுங்காகப் பேட்டி வழங்கத்தெரியாது. மாகாண சபைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெறும்போது மாகாணசபை அமர்வுக்கு வராமல் வீட்டில் இருந்தவர். அப்படிப்பட்ட அரசியல் நடைபெறும்போது. எனியும் அரசியல் தீர்வே வேண்டாம்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஏதாவது அரசியலில் தீர்வு கிடைத்ததா? இல்லை. எத்தனை இடத்தில் எத்தனை ஆர்ப்பாட்டங்கள் அரசியலால் தீர்வு வழங்கப்பட்டதா? இல்லை இவர் மறுபடியும் முதலமைச்சராக வருவன் என்று கனவு காணுறார். எல்லாம் எடுத்துக்கொண்டு கொழும்புக்குப் போகவேண்டியதுதான். இது தான் எனது கருத்து.

# வேலையளுக்கு ஆளில்லை ஆக்களுக்குத் திறமையில்லை...

அறிக்கை

கதிரேசன் காத்தவராயன்


கிட்டடியிலை எங்கடை மாகாணப் பெரிய ஐயா ஒண்டைச் சொல்லிக் கவலைப்பட்டவர் நினைவிருக்கே? அதுதான் வேலையளுக்குப் பொருத்தமான ஆக்களில்லை எண்டுற நிலை இருக்க வேலையில்லாத ஆக்கள் பெரிய தொகையிலை இருக்கினம் எண்டதுதான் ஐயாவின்ர கவலை. வடக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுத்துச் சிக்கிச் சின்னா பின்னமாகியும் சளைக்காமல் ஆயுள் (மாகாண) முடியிற கடைசியிலையாவது நாட்டு நடப்பை மனிசன் அறிய முயற்சி செய்யுது எண்டதை உதுகாட்டுது பாருங்கோ! அவரைப் பிடிக்காத ஆக்கள் இனிமேல் அவரை ஒண்டும் தெரியாதவர் எண்டு சொல்லக்கூடாதெண்டமாதிரி இருக்கல்லே?

நல்லதம்பியர் நெடுகவும் சொல்லுறவர், நல்லவங்களுக்கு அரசியல் தெரியாதெண்டு. அதோட இன்னொண்டையும் சொல்லுறவர் நாட்டு நடப்பு விளங்காதவையும் அரசியலுக்குள்ள வரக்கூடாதெண்டு. இதெல்லாம் அந்த மனுசன் எங்கடை ஐயாவை நினைச்சுச் சொன்ன மாதிரியல்லே கிடக்குது. இல்லையோ? வேலையளுக்கு ஆளில்லை. ஆக்களுக்கு வேலையில்லை. இதிலை எது தான் பிரச்சினை? கோழியிலையிருந்து முட்டை வந்ததோ? முட்டையிலையிருந்து கோழி வந்ததோ? எண்டமாதிரி ஒரு சுத்துச் சுத்துதல்லே...?

●●●

பட்டதாரியள், ஏ.எல்., ஓ.எல்., அதைவிட ஸ்கொலசிப் எல்லாத்துக்கும் பறந்து பறந்து பள்ளிக்கூடம், ரியூசன், பேர்சனல் கிளாஸ் எல்லாத்திலையும் கரைகண்ட எங்கடை பிள்ளையளுக்குத் திறமையில்லையோ? உவர்கொழும்போட கிடந்துவந்தவர், உவருக்கு என்னதான் தெரியுமெண்டு யு.எஸ்.கொம்பனியாக்கள் கேக்கிற மாதிரித்தான் மணியத்தாரும் கேக்கிறார்.

முன்னமொருக்கா ரணில் ஐயா மொழி தெரியாத ஆக்களெண்டு பகிடி பண்ணினதையும் ஞாபகப் படுத்தவேணும் கண்டியளே. பிரச்சினை என்ன? உலகத்தின்ர போக்குக்கு ஏற்ற மாதிரியான அறிவும் செயற்பாட்டுத் திறமையும் இல்லையெண்டதுதான். வேறையொண்டுமில்லை. நான் இதுகளை முன்ன மொருக்காச் சொல்லி ஆறினனான் ஞாபகப்படுத்திப்பாருங்கோ. அதுதான் பிள்ளையளுக்குப் பாடப்புத்தகம், கேள்வி-பதில் புத்தகங்களைத் தவிர வேறையொண்டையும் காட்டாமலுக்கு வளத்துப்போட்டு,



பிறகு போட்டியெண்டு வரேக்குள்ள அவனவன், உலகமடிபட்டவங்கள் பறிச்சுக் கொண்டு போகிறதைப்பாத்து வாய்க்கு வந்த மாதிரிக் கதைக்கிறதிலை என்ன பிரயோசனம்?

எதிர்காலம் தொழிலை நோக்கின பரந்த உலகமெண்டதைச் சரியா விளங்கினா பிள்ளையளைப் போட்டு இடிச்சு இறுக்காமலுக்குத் திறமைசாலியான ஆக்களாக ஆக்கலாம். ஆனால் பெத்ததுகளுக்கு தங்கட கௌரவம், வாத்திமாருக்கு றிசல்ற்ஸ், அதிகாரியளுக்கு பேர்சன்ரேர்ஜ்தான் குறிக்கோள். நாட்டுக்கு நல்ல தொழிலாளரும் இல்லை சேட்டிபிக்கற்றுகள் கனக்க இருந்தும் பிள்ளைக்கு வேலையில்லை.

●●●

ஓகஸ்ட் லீவு இண்டையோட முடியுது. நாளைக்குப் பள்ளிக்கூடங்கள் தொடங்குது. லீவுக்குள்ள பிள்ளையள் செய்ததெண்டு சொல்லுறதெண்டா ரியூசன், பள்ளிக்கூட வகுப்பு, இரவிலை பிரத்தியேகத் தனிக் கவனிப்பு வகுப்பு எண்டதைத் தவிர வேறயேதும் சொல்லக் கூடினமாதிரி இருக்காதெண்டு தான் நினைக்கிறன். சாப்பாடு, குளிப்பு முழுக்கு, மலம், சலம் கழிக்கிறது, நித்திரை எண்டதுகள் ஒழுங்க நடந்திருக்கச் சந்தர்ப்பமே இருந்திராது. நீங்கள் என்ன நினைக்கிறியள்?

●●●

யாழ்ப்பாணம்-புத்தூர் நிலாவரைக் கிணத்தைப் பாக்கிறதுக்கு அம்பாந்தோட்டைச் சனம் குடும்பமாய் வரிசையிலை நிக்குதுகள். எங்கடை பிள்ளையளிலை, நிலாவரைக் கிணறு எண்டு ஒண்டு இருக்கெண்டும், யாழ்ப்பாணத்திலைதான் அது இருக்கு எண்டு கூட அறியததுகளும் இருக்குதுகள். இதுக்கெல்லாம் பொறுப்புச் சொல்லுறது யார்?

இதுக்குள்ள இன்னோரு துன்பம் (வேடிக்கை) பிள்ளை குறைய மாக்ஸ் எடுக்கிறதுக்கான முழுக் காரணத்தையும் பிள்ளை படிக்கப்போன வாத்தியாரின்ர தலையிலை கட்டி உடனயே பிள்ளையை இன்னோராளிட்டை அனுப்புறது. இல்லையெண்டா வாத்தியாரை வீட்டை கூப்பிட்டுப் படிப்பிக்கிறது எண்ட பெயரிலை, பிள்ளையைத் தனியாகச் சிறப்பாகக் கவனித்து வதைக்கிறது. இது இப்ப வந்திருக்கிற புதுப் 'பாஷன்'. சில வாத்திமாருக்கும் காசுக் கஸ்ரம் தீர இது உதவுது. "கொள்ளக்கூடிய அளவுதானே கொள்ளும்? இடிச்சு இறுக்கி அறிவையோ அனுபவத்தையோ குடுக்க ஏலுமோ எண்டதைக்கூட யோசிக்க முடியாத முட்டாளுகளாயல்லே இருக்கிறம்?" எண்டு சோமண்ணை எரிச்சல் படுகிறதிலை பிழையில்லையல்லே?

**பட்டதாரியள், ஏ.எல்., ஓ.எல்., அதைவிட ஸ்கொலசிப் எல்லாத்துக்கும் பறந்து பறந்து பள்ளிக்கூடம், ரியூசன், பேர்சனல் கிளாஸ் எல்லாத்திலையும் கரைகண்ட எங்கடை பிள்ளையளுக்குத் திறமையில்லையோ? உவர் கொழும்போட கிடந்து வந்தவர், உவருக்கு என்னதான் தெரியுமெண்டு யு.எஸ்.கொம்பனியாக்கள் கேக்கிற மாதிரித் தான் மணியத்தாரும் கேக்கிறார்.**

இப்பிடியாச் செய்து பிள்ளையைச் சாக்குகளாயாக்கிப் போட்டுச் சந்தோசப்பட்டு றிசல்ற்ஸ் வந்த உடனயே பேப்பரிலை படம் போடுறதாலை பிள்ளையின்ர எதிர்காலம் சரியாகிப் போகுடும் எண்டிருக்கிற சிந்தனையை மாத்திறதை எங்கையிருந்து தொடங்குகிறது? ஆர் தொடங்குகிறது? இதைச் சொன்னால், கிழடுகளுக்கு என்ன தெரியும்? எண்டல்லே கோவப்படுகுதுகள். என்ர மோளே நேசரிக்குப் போறதுக்குத் தயாராக்கிற இரண்டரை வயதுக் குழந்தையை மூண்டு இடங்களுக்கு ரியூசனுக்கு ஏத்தியிறக்கிறாள். பிள்ளைக்குச் சாப்பிட்டவுடன ஓர் ஐஞ்சு நிமிசம் ஆறவும் விடாமல் துன்புறுத்துறாள். சொல்லப்போனா பிரச்சினை. என்ன செய்ய?

உலகம் எண்டது பெரிசு. இதுக்குள்ள ஊரையே தெரியாமல் வளத்து அதுகளின்ர எதிர்காலத்தைப் பற்றி யோசிக்காத ஆக்களாயல்லே இருக்கிறம். பாடப்புத்தகத்துக்குள்ளதான் உலகம். கேள்வியையும் விடையையும் பாடமாக்கிக் கூடின மாக்ஸ் எடுக்கிறதுதான் வாழ்க்கை. எண்டு இருக்கிறதின்ர் விளைச்சல்தான் முதலமைச்சற்றை பெருமூச்சு. எதிர்காலத்திலை என்னதான் நடக்கப்போகுதோ?





## விடியலைத்தேடி...

கலியுகம் ஆட்டிப் படைக்க
கணங்கள் தோறும்
கல்வி எனும் ஒளிக்கீற்றால்
கரை சேர்த்திட
விரைந்து நான்
விடியலைத் தேடி
ஓடுகின்றேன்

கற்பு எனும்
பொக்கிசத்தை
சூறையாடும் அற்ப
பிசாசுகளை
அழித்து விழித்திட
அவனியிலே நான்
விடியலை நோக்கி
விரைகின்றேன்.


போட்டி போடும்
உலகில்
ஆட்டிப் படைக்க
எத்தனிக்கும்
விடிவெள்ளியாய்
பலரோடு
போட்டியிட்டு வெல்ல
விரைகின்றேன்
விடியலைத் தேடி

நாடகச் சந்தையிலே
நடிக்கும்
பாத்திரங்களால்
என் கண்முன்
வேசமிடும்
வேடதாரிகளை
இனங்காண
செல்கின்றேன் விடியலின்
திசையில்

வாக்குக்காக அலைந்து
வெற்றி பெற்ற பின்
ஏறெடுத்தும் பார்க்காத
ஏகாந்திகளை இனங்காண
ஏறுகின்றேன்
விடியற்படியில்

கவிதை

பீ.மேரி சிந்துஜா



# "சினிமாத்துறை சீரழிந்துள்ளது"

லெனின் பாரதி



அறிமுக இயக்குநர் லெனின் பாரதியின் திரைப்படம் மேற்குத் தொடர்ச்சி மலை. அண்மையில் வெளியாகி விமர்சன ரீதியாகப் பெருவரவேற்புப் பெற்றிருக்கிறது. ஆனால், ஒன்றிரண்டு திரையரங்குகளில் மாத்திரம்தான் காட்சிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. வெளியாவதற்கு முன்னதாகப் பல பன்னாட்டுத் திரைவிழாக்களிலும், நிகழ்வுகளிலும் குறித்த திரைப்படம் திரையிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. குறித்த பட வெளியீடு மற்றும் அதற்குக் கிடைத்த பெரு வரவேற்பைத் தொடர்ந்து இயக்குநர் லெனின் பாரதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

"சினிமா என்பது மிகப்பெரிய ஆயுதம். ஆபாசம், வக்கிரம் என்ற பெயரில் அதன் இரசனையைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள். பாடலாசிரியர் நா.முத்துக்குமாரின் மறைவுக்குப் பிரபல நடிகர்கள், நட்சத்திரங்கள் அஞ்சலி செலுத்துவதற்கு வந்தபோது இரசிகர்கள் உற்சாகக் குரல் எழுப்பும் அளவுக்கு அவர்களைச் சீரழித்து வைத்திருக்கிறார்கள். திரையரங்குகளில் திரையிடப்படும் முன்னரே இந்தப் படம் 11வரையான விருதுகளைப் பெற்றிருக்கிறது. ஆனால், தேசிய விருதுக்கு முதல் பரிந்துரையிலேயே புறமொதுக்கப்பட்டது. விருதுக்காக இந்தப் படத்தை நாங்கள் எடுக்கவில்லை. இது அடிநிலை மக்களுக்கான படம். அவர்களைப்போய்ச்சேர வேண்டும். படத்தை வெளியிடுவதற்குப் பெரிய சவால்களை எதிர்கொண்டோம். இங்குள்ள மாநிலங்களின் ஒன்றிரண்டு திரையரங்குகளில்தான் படம் காண்பிக்கப்படுகின்றது. நல்ல படம் எடுக்கமாட்டார்களா? என்று விமர்சனங்கள் உள்ளன. அதைப்போராடி எடுத்தால், அங்கீகாரம் கிடைப்பதில்லை." என்று அவர் ஆதங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.








## பாராட்டத்தக்க சினிமா

தமிழகத்தின் தேனி மாவட்டமும், கேரளாவின் இடுக்கி மாவட்டமும் சந்தித்துக்கொள்ளும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழும் விளிம்பு நிலை தோட்டத் தொழிலாளர்கள்தான் கதை மாந்தர்கள். ஏலக்காய் மூடைகளைத் தலைச்சுமையாகத் தூக்கிக்கொண்டு இடுக்கியின் மலை அடிவாரத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிற கூலித் தொழிலாளி ரங்கசாமி (ஆன்டனி). கை அகலமளவிலாவது சொந்த நிலம் வாங்கி, அதன் மூலம் உழைத்து முன்னேற வேண்டும் என்பது அவனது கனவு. பல போராட்டங்களுக்குப் பிறகு அவனை வந்தடையும் ஒரு துண்டு நிலமும் கைநழுவிப் போய், இழந்த நிலத்திலேயே அகதிபோல அவன் வேலை செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. அந்தப் பின்னணியையும் விரித்துச் செல்கிறது கதை.

### ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஒவ்வொரு கதை

கதையின் நாயகன் ரங்கசாமியின் வாழ்க்கைக் கதையை முதன்மைப்படுத்துவதோடு, சின்னச் சின்ன துணைக் கதாபாத்திரங்களின் கதைகளையும் கச்சிதமாகக் கோர்த்துக் கூறுவதன் வழியாக மேற்குத் தொடர்ச்சி மலையின் இன்றைய சித்திரத்தை ஒரு தொகுப்பாகக் காட்டுகிறார் அறிமுக இயக்குநர் லெனின் பாரதி.

ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் ஓர் அழகான, அழுத்தமான, சோகமான, நகைச்சுவையான கதை இருப்பது படத்தின் சுவாரசியம். குருதி வெளியேறும் வகையில் வாந்தி எடுத்த போதிலும் தனது மூட்டையைத் தான் மட்டுமே சுமக்க வேண்டும் என வைராக்கியம் காட்டும் வனகாளி, சேர்த்துவைத்த பணத்தோடு மகள் திருமணத்துக்காக மலை யிறங்கி வரும்போது யானைக்குக் கணவன் பலியாகிவிட மனநிலை பாதிக்கப்படும் கிறுக்குக் கிழவி, வெறுங்கையோடு மலைப் பகுதிக்கு வந்து நிறுவன அதிபராகும் லோகு, தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்காகத் திருமணம் செய்துகொள்ளாமல் உழைக்கும் தோழர் சாக்கோ, கிண்டல் செய்பவர்களைக் கையில் கிடைப்பதைக் கொண்டு அடிக்கும் கங்காணி, தனக்காகப் பொதி சுமக்கும் கழுதைகளை அடித்துவிட்டு பின்னர் அவற்றைக் கொஞ்சும் மூக்கையா, பேத்தியைக் கரைசேர்க்க வேண்டி ஆட்டுரலில் மாவாட்டித் தனியாளாகச் சாப்பாட்டுக் கடை நடத்தும் அடிவாரம் பாக்கியம் என ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் யதார்த்தமான ஒரு கதை உள்ளது.

### பாத்திரங்கள்

பெரும்பாலான கதாபாத்திரங்கள் புதுமுகங்கள் என்றாலும், அந்த மண்ணின் மைந்தர்கள் என்பது படத்தின் பலம். நாயகன் ரங்கசாமியாக வருகிற ஆன்டனி உடல்வாகு, முகத்தோற்றத்தில் அச்சு அசலாக மலையடிவார மூட்டை தூக்கும் தொழிலாளி போலவே காட்சியளிக்கிறார். அவர் மற்றும் அவரது மனைவியாக வருகிற புதுமுகம் காயத்ரி கிருஷ்ணாவின் நடிப்பு, வசன உச்சரிப்பு அற்புதம். மலையாள நடிகர் அபு வளையங்குளம், ஆறுபாலா, அந்தோணி வாத்தியார், பாண்டி உள்ளிட்டோரின் நடிப்பும் படத்துடன் பார்வையாளரை ஒன்றச் செய்கிறது.

### நிறைவான திரைக்கதை

மேற்குத் தொடர்ச்சி மலையடிவார மக்கள், ஏலக்காய்த் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை மிக நுட்பமாகப் பதிவு செய்திருக்கிறார் இயக்குநர். ஒவ்வொரு காட்சியும் நிறையச் செய்திகளைச் சொல்கின்றன. ரங்கசாமி, தான் வாங்கப் போகிற இடத்தை மனைவிக்கும், மகனுக்கும் அடையாளம் காட்டுவதற்காக அங்குள்ள ஒரு மரத்தில் தனது வேட்டியை அவிழ்த்துக் கட்டிவைக்கும் காட்சியில், உற்சாகத்தில் பார்வையாளர்களைத் துள்ளிக் குதிக்க வைக்கிறார் இயக்குநர். அவனது கனவு, மலையில் இருந்து உருண்டு கிழிந்து கொட்டுகிற ஏலக்காய் மூட்டைபோல சிதறும்போது, தேம்பித் தேம்பி நம்மையும் அழவைக்கிறார். தேனி மக்களின் மொழியை அட்சரம் பிசகாமல் அப்படியே கொண்டுவந்திருக்கிறார் வசனகர்த்தாவான ராசி தங்கதுரையின் உதவியோடு.

### இசை – ஒளிப்பதிவு – சில குறைகள்

இரண்டு பாடல்களே என்றாலும் கதையையும், களத்தையும் மனதுக்குள் கடத்துகிறது இளையராஜாவின் இசை. பாடல்கள் மற்றும் பின்னணி இசை படத்துக்கு உயிர் என்றால், படத்தின் உடல் தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு. அத்தனை பெரிய மலையின் அழகைத் திரைக்குள் அடக்கியிருக்கிறார். மக்கள் உழைப்பால் வரைந்த ஒற்றையடிப் பாதைகள், வளர்ச்சியின் பெயரால் உருவான கொண்டை வளைவுச் சாலைகள் தொடங்கி மேற்குத் தொடர்ச்சி மலையின் முகடுகள், தோட்டங்கள், சாதாரண மக்களின் வீடுகளையும் தனது ஒளிப்பதிவால் சிறப்பாகக் காட்சிப்படுத்தி இருக்கிறார்.

உழைக்கும் மக்களுக்குத் துரோகம் செய்த இருவர் கொல்லப்படும் காட்சி நாடகத்தனமாக இருப்பது, கதை நிகழும் காலத்தில் தெளிவு இல்லாதது எனப் படத்தில் ஓரிரு குறைகளும் இருக்கின்றன. வளர்ச்சி என்ற பெயரில், உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் தற்காலத்தின் கதையை அடி நிலை மக்களின் காவியமாகத் தந்திருக்கும் இயக்குநர் லெனின் பாரதியைப் பாராட்டி வரவேற்போம். படத்தைத் தயாரித்த விஜய் சேதுபதிக்கும் பல்லாயிரக்கணக்கில் பாராட்டுக்கள். சினிமா இரசிகர்கள் மட்டுமல்லாது, ஒட்டுமொத்த சமூகமும் தவறவிடக் கூடாத காவியம் 'மேற்குத் தொடர்ச்சி மலை'



சிறுகதை


# அப்பா எப்ப வருவாரம்மா?

விவேகானந்தனூர் சதீஸ்



"என்ன மகள் முகம் வாடிக்கிடக்கு... காய்ச்சலோ பிள்ளைக்கு...?" பாடசாலையிலிருந்து வீடு வந்த ஓவியா சீருடையை மாற்றாமல் நாடியில் கைவைத்து எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். மற்ற நாள்களில் என்றால் ஏழே வயதான சின்னவள் துள்ளிக்குதித்துப் பெற்றவளை உச்சிமுகர்ந்து ஆரவாரிப்பாள். ஏதோ நீண்ட நாள் கழித்து தாயைக் கண்ட சேயைப் போலவே அவளது நாளாந்தச் செயற்பாடுகள் இருக்கும். வழமைக்கு மாறாக அன்று அவள் மனதுக்குள் ஒரு நெருடல் இருப்பதை உணர்ந்த தாய், மகளின் தலையை வருடியவாறு "என்ன செல்லம் ஒரு மாதிரி இருக்கிறீங்கள்...?" எனக் குழைவாகக் கேட்டாள்.
தாயின் வருடலில் தன்நிலைக்கு வந்த ஓவியா, "இல்லையம்மா எல்லாப் பிள்ளைகளும் அவையின்ர அப்பாக்களோட மோட்டச்சைக்கிளிலை ஸ்கூலுக்கு வருவினம். நான்மட்டும் தனிய நடந்து போய் வாறனம்மா..." எனச் சிணுங்கிக் கொண்டு "நாளைக்கு எங்களுக்கு கோட்டமட்ட ஆங்கிலப் போட்டியில முதலாமிடமா வந்ததுக்கு 'பிறைஸ்' குடுக்கினமாம். ரீச்சர் சொன்னவா. எல்லாரின்ர அப்பா, அம்மாவையும் கூட்டிக் கொண்டு வரச்சொல்லி" எனத் தன் வேண்டுகோளை நிறைவு செய்தாள்.
தாய் தாரணிக்கு தர்மசங்கடமாக இருந்தாலும் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "மகள் அம்மா இருக்கிறனெல்லே. அம்மா கூட்டிக் கொண்டு போறன். இதுக்குப் போய்க் கவலைப்படுவதா? சரி சரி முகத்தை கழுவிப் போட்டு வாங்கோ மகள், பிள்ளைக்கு அம்மா சாப்பாடு போடுறன்" எனக் கூறியவாறு சமையலறைக்குள் மறைந்தாள் தாரணி.
தாய்க்கு மகளும், மகளுக்குத் தாயுமே தூணாகவும் துணையாகவும் இருக்கிறார்கள். இந்த இளம் வயதில் இப்படியொரு நிலை. ஓவியா மூன்றாமாண்டுதான் படிக்கிறாள். சற்று விவரமும் விவேகமும் கூடியவள். சுட்டித்தனம் மிக்க கெட்டிக்காரியும்கூட. சாப்பிட அமர்ந்தவள் மீண்டும் தாயிடம் வினவுகிறாள்....
"அம்மா.. அப்பா எப்ப வருவார்? போனமுறை பிறைஸ் குடுக்கிறண்டைக்கு நீங்களும் அப்பான்ர வழக்குத் தவணையெண்டு கொழும்புக்குப் போட்டீங்கள். எல்லாப் பிள்ளையளும் பிறைஸ் வாங்கிக் கொண்டு வரேக்க அவையின்ர அம்மா, அப்பா கொஞ்சிப் போட்டு மடியில தூக்கி வைச்சிருந்தவை. நான் மட்டும் பிறைஸ் வாங்கிக் கொண்டு பேசாமக் கிளாஸ் ரூமில போய் இரந்திட்டனம்மா..." மகளின் நியாயமான ஆதங்கத்தைக் கேட்ட தாரணியின் இதயம் இரண்டொரு முறை இயங்க மறுத்தது. மனதுறையும் அகவுணர்வுகளை மறைபொருளாக வெளிக்கிளர்ந்து கண்மடல் தாண்டி கண்ணீர் வென்றது.
"ஏனம்மா அழுறீங்கள்...? அழதேங்கோ. நான் இனி இப்படிக் கதைக்கமாட்டனம்மா..." பெற்றவளை ஆறுதல்படுத்த வேண்டிய நிலையை சிறுமி யவள் உணர்ந்து கொண்டால் போலும். வழமைக்கு வலிந்து வந்த தாய், "கவலைப்படாதேங்கோ மகள் அப்பாவை இன்னும் கொஞ்ச நாளிலை விட்டிருவினம்..." என மகளது தலையைத் தடவிக் கொடுத்தாள் தாரணி.
"இவர் இருந்தாரெண்டால் இண்டைக்கு இத்தனை கஷ்டங்கள் துன்பங்கள் எங்களைத் தீண்டியிருக்குமா? விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்குத்தான் என்பதைப் போல மனுசனைப் பொலிஸ் பிடிச்ச உடன வந்த உறவு நட்புகளெல்லாம் வெறும் ஆறுதல் தெரிவிப்புடன் காற்றில்பட்ட தூசாக கலைந்து போட்டுதுகள். இண்டைக்கு இத்தனை வருசமாக் கோட்டும் கேசும் எண்டு காலமழியுது..." தாரணியின் பெருமூச்சு மாலைக்காற்றை ரணப்படுத்தியது.
வடக்கிலங்கையின் கிளிநொச்சி நகரத்துக்கு அண்மையில் உள்ள ஒரு சிறிய கிராமம் விவேகானந்தநகர். மேட்டு நிலப் பிரதேசமென்பதால் இரணைமடுவால் எட்டிப் பார்க்க முடியவில்லை. நீர்வளம் சற்று ஆழம்தான். இவ்வூர்வாசிகள் பற்பல தொழில்துறைகளைச் செய்து தமது ஜீவனோபாயத்தை கொண்டு நடத்துகின்றனர். ஊரின் மத்தியில் ஒரு முருகன் கோவில். அதை அண்மித்துப் படிப்பகம், கிராம அபிவிருத்திச் சங்கம், பொதுநோக்கு மண்டபம், முன்பள்ளி என ஒரு சிறந்த சமூகத்திடல். இவைகளின் அன்றாட சுளர்வோராக சுமார் நூற்றிநாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரியதும் சிறியதுமான வீடுகளில் வாழ்கின்றனர். சத்தியனின் வீடு ஊரின் நுழைவுப் பகுதியில் அமைந்திருக்கிறது. ஊருக்குள்

> இவர் இருந்தாரெண்டால் இண்டைக்கு இத்தனை கஷ்டங்கள் துன்பங்கள் எங்களைத் தீண்டியிருக்குமா? விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்குத்தான் என்பதைப் போல மனுசனைப் பொலிஸ் பிடிச்ச உடன வந்த உறவு நட்புகளெல்லாம் வெறும் ஆறுதல் தெரிவிப்புடன் காற்றில்பட்ட தூசாக கலைந்து போய்ட்டுதுகள். இண்டைக்கு இத்தனை வருசமாக் கோட்டும் கேசும் எண்டு காலமழியுது..." தாரணியின் பெருமூச்ச மாலைக் காற்றை ரணப்படுத்தியது.



இலகுவில் அறிந்துகொள்ளக்கூடிய ஒரு பொதுச் செயற்பாட்டாளராக அடையாளப்படுத்தப்பட்டிருந்தான். அவன் அரச திணைக்கள மொன்றில் அவசர சேவைப் பணியாற்றி வந்த அதேவேளை மனைவி தாரணியும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனமொன்றில் உதவிக் கணக்காளராகக் கடமையாற்றி மனைக்கும் மணாளனுக்கும் அயலவர்களுக்கும் கூட அன்பானவளாகவும் பண்பானவளாகவும் இருந்தாள்.
கடமையின் நிமித்தம் கொழும்பு சென்ற சத்தியனைச் சந்தேகத்தின் பெயரில் கைது செய்த செய்தி தாரணியை நிலைதடுமாற வைத்தது. அவள் வாழ்வில் கண்ட முதல் துயரம் அது. அன்றைய நீண்ட நெடுமிரவை துரத்தி மறுநாள் அவளது பணியிடத்தில் தலைமைக்குக் காலவரையறையற்ற விடுப்பினை எழுதிக் கொடுத்துவிட்டு புறப்பட்ட அவளது பயணம் தொடர்கதையானது. கணவனின் பிரிவால் திடீர்த் தற்துணிவைத் தேடிக் கொள்ள அவள் சற்று சிரமப்பட வேண்டியிருந்தது. இருந்தும் சங்கடங்களைச் சவால்களாக ஏற்று, தோல்விகளைக் கண்டு துவண்டு விடாமல் கணவனின் விடுதலைக்காக எதிர்நீச்சல் போட்டாள். எடுக்கும் கருமங்களில் ஏமாற்றங்கள் விளையும்போது அவ்வப்போது சோர்வதும் பின் தானே கையூன்றி எழுவதுமாகக் காலத்தை நோக்குகிறாள் தாரணி.
சத்தியன் விடுதலைப் போராட்டத்துக்கு வலுச் சேர்த்தான் என்ற காரணத்தைக் கண்டறிந்த நீதிமன்றம் அவனுக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தது. நீதித்துறையின் தீர்ப்பு அவனது குடும்பத்தாரை மட்டுமன்றி ஊர், உறவுகளையும் கூட அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மனைவி மாற்றுச் சக்தி கொண்டெழுந்தவளாகத் தீர்ப்பை ஆட்சேபித்து மேல்முறையீடு செய்தாள். சத்தியன் இரும்புக் கதவுக்குள் இருந்தாலும் தன் சமூகம் சார்ந்த ஏதாவதொன்றை நாளுக்கொரு கதைகளாகக் கூறிக் காலத்தைக் கடத்திவரும் நிலையில் என்றாவதொரு நாள் தனக்கு விமோசனம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் நாள்கள் நகர்கின்றன அவளுக்கு. கடந்த காலங்களில் ஏற்பட்ட இன முரண்பாடுகளின் விளைவுகளால் மூவினத்தையும் சார்ந்த பலரும் பாதிக்கப்பட்டனர். ஆனாலும் சத்தியனைப் போன்ற பல தமிழ் இளைஞர்கள் தமது வாழ்வைத் தொலைத்து இன்று வரை சிறையில் வாடுகின்றனர். போர் முடிவுக்கு வந்து ஆண்டுகள் பலதை எட்டியுள்ளபோதும் இவர்களுக்கு விடிவு இன்னுமில்லை.
ஓவியா அவளது தத்தாவின் ஆதரவில் கல்வியைத் தொடர்ந்து பாடசாலையில் பற்பல போட்டிகளிலும் பங்குபற்றிச் சான்றிதழ்கள், கேடயங்கள் எனப் பெற்று வந்தாள். அவற்றைச் சிறையிலிருக்கும் தந்தைக்கும் கொண்டு சென்று காட்டிப் பூரிப்படைவாள். தான் இல்லாவிட்டாலும் தனது பிள்ளையைக் கெட்டித்தனமாக வளர்க்கும் மனைவியையும் மாமனாரையும் உள்ளாரப் பாராட்டிக் கொள்வான் சத்தியன். மகளின் குறும்புக் கதைகளால் தனது கவலையைப் போக்கிக் கொண்டு அவ்வப்போது இடம்பெயர்ந்து பின் மீள்குடியேறும். தனது அன்றாடச் செலவுகளை ஈடுகட்டும் பொருட்டு சிறிய அளவிலான கோழி வளர்ப்பையும் மேற்கொண்டு வருகிறாள் தாரணி.
சட்டத்தரணியிடம் சென்று கணவனின் வழக்கு விடயம் தொடர்பில் கதைத்தவிட்டு வீடு வந்த தாரணியிடம் "அம்மா... அம்மா..." என ஆரவாரித்தபடி "அப்பாவை யாழ்ப்பாண சிறைச்சாலைக்குக் கொண்டு வருகினமாம்... சிங்களத்தில் ஒரு கடிதம் வந்திருக்குதம்மா... தாத்தா பாத்துப் போட்டுச் சொன்னவர்" என தந்தையின் முகம் பார்க்கும் ஆவலில் குதூகலித்தாள் சின்னவள். தாரணியின் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி இழை படந்தோடியது. வீட்டுக்கு வரவில்லையே என்ற கவலை இருந்தாலும் கணவனைப் பார்த்துப் பேசி, விரும்பிய சாப்பாட்டைச் சென்று கொடுக்கலாம் என்ற திருப்தி வெளிப்பாடே அது.
ஓவியா தன் பாடசாலை றிப்போட், சான்றிதழ்கள் எனத் தன்பாட்டில் புறுபுறுத்துக் கொண்டு தேடினாள். "நாளைக்கு அப்பாவுக்குக் கொண்டுபோய்க் காட்டவேணும்" என்ற துடிப்பு.
மறுபுறம் தாரணி "அவருக்குப் பிடிச்ச சாப்பாடுகள் எல்லாம் செய்து கொண்டுபோய்க் குடுக்க வேணும். மகளைப் பார்த்து எவ்வளவு சந்தோசப்படுவார். வெறும் பதினாலு நாள்தான் யாழ்ப்பாணத்தில வைச்சிருப்பாங்கள். பிறகு கொழும்புக்குக் கொண்டு போயிடுவாங்கள்... " என மரக்கதிரையில் அமர்ந்து கற்பனையில் ஆழ்ந்தாள் தாரணி.

*(கைதியின் கதை)*

தொகுப்பு
தி.இராஜநாயகி

# கலை இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்


**கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்தளிக்கும் பகுதி இது. ச.தமிழ்ச்செல்வன் எழுதிய 'அரசியல் எனக்குப் பிடிக்கும்' என்கிற நூலில் இருந்து 'கொய்யப்பட்ட' ஒரு பகுதி இது.**

பொதுவாக யாரிடம் கேட்டாலும், "நமக்கு எதுக்குங்க அரசியல் எல்லாம்" என்று சொல்லுவார்கள். பொதுவாக நாம் என்ன நினைக்கிறோம் என்றால், நாம் அரசியலுக்குப் போய்விடக்கூடாது. அது நமது வேலை இல்லை. ஆனால், தேர்தல் வந்தால் மட்டும் ஒரு ரெண்டு மாதங்களுக்கு "அவன் அப்படி, இவன் இப்படி, அவா என்ன கிழிச்சா" என்று உற்சாகமாகப் பேசுவோம். பிறகு அஞ்சு வருசங்களுக்கு எவன் எக்கேடு கேட்டுப்போனால் எனக்கென்ன என்று இருந்து விடுவது. கேட்டால், அரசியலே சாக்கடை சேர்... என்பது. இது ஒரு ரகம்.

இன்னொரு பக்கம் யாராவது கமுக்கமாகச் சில காரியங்களைச் செய்தால் "ஏ... அவன் பயங்கரப் பொலிட்டிக்ஸ் பண்ணுறான்" என்போம்.

இந்த இடத்தில் அரசியல் என்றால், சதி, வஞ்சகம், சூது என்ற அர்த்தத்தில்தான் பேசுகிறோம்.

இன்னும் ஒரு வாதம் உண்டு. "இப்ப எல்லாம் என்ன சேர் அரசியல் நடக்கு? கக்கன், காமராஜ் காலம் மாதிரியா இப்ப இருக்கு? அரசியல் என்றாலே பணம் சம்பாதிக்கிறது என்று ஆகிப் போச்சு... சேச்சே மானம், ரோஷம் உள்ளவன் அரசியலுக்குப் போவானா?" மேலே சொன்ன வாதங்களில் பொய் ஒன்றும் இல்லைத்தான். ஆனால், இவையே முழு உண்மையும் இல்லை. இது மட்டுமே அரசியல் என்பதும் சரி இல்லை. காலம் காலமாக ராஜாக்கள் ஆண்ட காலம் முதல் அரசியல் என்றால் அது அரண்மனைக்குள் நடப்பது - மந்திரிகளும், சேனாதிபதிகளும், ராஜரிஷிகளும், சகுனிச் சூதுகளும் சம்பந்தப்பட்டது என்றுதான் மக்களுக்கு அறிமுகம் ஆகியுள்ளது. அரண்மனை அரசியலை விட்டு மக்கள் வெகு தூத்தில் வைக்கப்பட்டிருந்தனர். ஆண்டாண்டு காலமாக அப்படித் தொலைவிலேயே இருந்த மனங்களில் "இது நமக்குச் சம்பந்தமில்லாதது - ராசாங்க விசயம்" என்று பதிவாகி விட்டது. ராஜாக்கள் போய், வெள்ளைக்காரனின் காலனி ஆட்சி வந்து அதுவும்போய் மக்களாட்சி வந்து 57 வருசங்கள் ஓடி விட்டன. ஆனாலும் ஏழை எளிய மக்களின் மனதில் படிந்துவிட்ட தாழ்வு மனப்பான்மை அரசியல் நம்மோடு தொடர்புடையது அல்ல என்ற நினைப்பு இன்றளவும் நீடிக்கிறது. ஆனால், ஒரு முக்கியமான உண்மையை நாம் எல்லோரும் மறந்து விடுகிறோம். சாக்கடை என்றும் மானம் கெட்டது என்றும் நாம் பேசுவது இந்த ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வருகின்ற தேர்தல் அரசியலைத்தான். இப்படி இந்த அரசியலைச் சாக்கடையாக வைத்திருப்பதன் மூலம் நல்லவர்கள், உழைப்பாளிகள் இதைவிட்டு விலகி இருக்கும்படி செய்யப்படுகிறது. இது ஏதோ தற்செயலாக நடப்பதுபோல் தோன்றினாலும் இது திட்டமிடப்பட்ட சதியாகும். தொழிலாளிகளை, விவசாயிகளை, நடுத்தர வர்க்கத்தை - எனப் பாடுபடும் எல்லோரையும் மேலும் மேலும் அரசியலற்றவர்களாக ஆக்குவதுதான் இதன் பின்னணியில் உள்ள உண்மையான அரசியலாகும்.




நம் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் பல முடிவுகளை எடுப்பது அரசியல் அல்லவா? அது பற்றி நாம் அக்கறை இல்லாமல் இருப்பது எப்படிச் சரியாகும்? உன்னை என்ன செய்வது என்று அங்கு நான்கு பேர் உட்கார்ந்திருந்து முடிவு செய்துகொண்டு இருக்கி றார்கள். நீ அதைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பாயா? என்பதுதான் கேள்வி.

இப்படி அரசு என்ற வார்த்தையைக் கேட்டதும் நமக்கு இத்தனையும் ஞாபகத்துக்கு வருகிறது. மேலே உள்ள எல்லாத்தையும் ஓர் ஒழுங்குபடுத்தி வரிசைப்படுத்தினால் கீழே உள்ள நான்கு பிரிவுகளில் அடங்கி விடும்.

நிர்வாகம், இராணுவம், பொலிஸ், சிறைச்சாலை நீதிமன்றம் நாடாளுமன்றம்-சட்டமன்றம்.

இப்படி இந்த நான்கும் சேர்ந்தது தான் அரசு. இந்த அரசைப் பற்றியதுதான் அரசியல். ஆனால், நாம் இந்த நான்கில் ஒரே ஒரு பிரிவான சட்டமன்றம் அல்லது நாடாளுமன்றம் மற்றும் அதில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறைபோய் உட்கார்வது என்பதுதான் அரசியல் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். முதல் மூன்று பிரிவுகளான நிர்வாகம், இராணுவம், பொலிஸ், சிறைச்சாலை, நீதி இவைதான் நிரந்தரமாக இருக்கின்றன. இவை இல்லாமல் அரசு ஏது?

பல நாடுகளில் சட்டமன்றம், நாடாளுமன்றம்(பாகிஸ்தான், கொரியா, சீனா) இல்லாமல் கூட அரசு நடக்கிறது. ஆனால், எப்போதும் அரசு இருந்து கொண்டுதானிருக்கும். அது இருந்துகொண்டு தான் இருக்கும். இந்த அரசை நாம் தேர்ந்தெடுப்பதில்லை. நீதி, நிர்வாகம், இராணுவம், பொலிஸ் இதையெல்லாம் நாம் வாக்களித்துத் தெரிவுசெய்வதில்லை.

ஆகவே, நமது விருப்பம், தெரிவுகளுக்கு அப்பால் கல்லாக நின்று நம்மீது இடையறாது ஆட்சி செலுத்திக் கொண்டே இருக்கிறது அரசு.

ஜேர்மன் நாடு உலகுக்கு அளித்த மேதை கார்ல் மார்க்ஸ் 1848ஆம் ஆண்டு 'கம்யூனிஸ்ட் அறிக்கை' என்றொரு புத்தகத்தை அவருடைய நண்பர் எங்கல்ஸ்சுடன் சேர்ந்து வெளியிட்டார். அந்தப் புத்தகம் அரசியல் பற்றி அதுவரை இருந்த கருத்துக்கள், எண்ணங்கள், அர்த்தங்கள் அத்தனையையும் தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட்டது. அதுவரை ஆட்சி - அரசு - அரசாங்கம் என்று பேசி வந்தது எல்லாம் தவறு என்பது உலகத்துக்குப் புரிந்து விட்டது. மக்கள் என்று பொதுப்படையாகப் பேசுவது தவறு. . தொழிலாளிகளும், விவசாயிகளும் ஆகிய பாட்டாளி வர்க்கம் என்பது வேறு இந்தப் பாட்டாளிகளின் உழைப்பால் சுகமாக வாழும் முதலாளி வர்க்கம் என்பது வேறு என்பதை கார்ல் மார்க்ஸ் உலகத்துக்குப் புரிய வைத்து விட்டார்.

அன்று முதல் உலகத்தில் இரண்டே இரண்டு அரசியல்தான் உண்டு.

ஒன்று-இடதுசாரி அரசியல்
இரண்டு - வலதுசாரி அரசியல்

நாட்டின் சொத்துக்கள் எல்லாம் பொது உடமையாக இருக்கவேண்டும் என்று சொல்வது இடதுசாரி அரசியல். பாட்டாளிகளின் ஆட்சி இது. சோசலிச அரசு இது. சோசலிசம் என்றால் சமூக உடமை என்று பொருள். சொத்துக்கள் எல்லாம் முதலாளிகளிடமே இருக்கவேண்டும் என்று சொல்வது வலதுசாரி அரசியல். இது தனியுடமை ஆட்சி. சொத்துக்கள் யாரிடம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்று சொல்வதும் இதே அர்த்தம்தான். வலதுதான்.

அரசியல் என்றாலே ஒரு சமூகத்தின் சொத்துக்கள் அதாவது பொருளாதாரம் யார் கையில் இருக்கவேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம்தான். இப்படி இரண்டே இரண்டு அரசியல்தான் என்றாகிவிட்டால் கட்சிகள் இரண்டு தானே இருக்கவேண்டும். ஒன்று பொதுவுடமைக் கட்சி. இன்னொன்று தனியுடமைக் கட்சி. அவ்வளவுதானே. பின் ஏன் இத்தனை கட்சிகள்?

இப்படி அப்பாவியாகத் தொழிலாளர்களாகிய நாம் கேள்வி கேட்பது சரி. ஆனால் முதலாளிகள் நம்மைப்போல அப்பாவிகள் இல்லையே. வெளிப்படையாக முதலாளி கட்சி அல்லது தனியுடமைக் கட்சி என்று பெயர் வைத்தால், மக்கள் ஆதரவு கிடைக்குமா? ஆகவே பலப் பலவிதமான பெயர்களில் இத்தனை நூறு கட்சிகள்.

அரசியல் என்பது அரசு சம்பந்தப்பட்டது. அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்காக உருவான வன்முறைக் கருவி. தனிச் சொத்துக்கு ஆதரவாக - தனிச் சொத்தைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட கூலிப்படையின் நாகரீக(!) வடிவம்தான் அரசு. நீதி, நிர்வாகம், இராணுவம், பொலிஸ், சிறைச்சாலைகள் என்கிற இந்த நாகரீகப்படுத்தப்பட்ட சட்டைகளுடன் திரிவது பழைய கூலிப்படைதான். அதை நாம், பாட்டாளிகள் புரிந்து கொண்டுவிடாமல் இருப்பதற்காகத்தான் பள்ளிகள், சினிமாக்கள், கோயில்கள், சாதிகள், குடும்பப் புனிதங்கள் என்கிற பண்பாட்டு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

உண்மையான அரசியல் என்பது பொருளாதாரம் யார் கையில் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியதுத்தான். அதில் இரண்டெ இரண்டு அரசியல் தான் இருக்க முடியும். இடதுசாரி மற்றும் வலதுசாரி அரசியல். பொதுவுடமை என்பது இடது. தனியுடமை என்பது வலது. வேறு அரசியலே கிடையாது.

வாக்களிப்பதும் சட்டமன்ற - நாடாளுமன்ற நடவடிக்கைகளும்தான் அரசியல் என்று சிலர் நம்புகிறார்கள். அது சாக்கடையாகிவிட்டது. ஆகவே அரசியலே வேண்டாம் சாமி என்று ஒதுங்கிவிடுகிறார்கள். ஆம். இதுதான் முதலாளி களுக்குத்தேவை. உரிமை, சுதந்திரம், சமத்துவம் என்று பேசுவதுதான் அரசியல். அந்த அரசியலே வேண்டாம் என்று தொழிலாளி சொல்லிவிட்டால் எல்லாவற்றையும் முதலாளிகளே பார்த்துக்கொள்ளலாம். எந்த மனித குணங்களும் இல்லாத உழைக்கும் இயந்திரங்களாகத் தொழிலாளிகளைப் பாவிக்கின்ற முதலாளித்துவம் நாம் மேலும் மேலும் அரசியலற்றவர்களாக மாறுவதை ஆவலுடன் எதிர்பார்க்கிறது.

இப்போது பன்னாட்டு முதலைகளும் கூட்டுச்சேர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள அதிநுட்ப, அதிவேக, அதிபயங்கர மின்னணு ஊடகங்கள் மூலமாக நம் மூளைகளைத் தகவமைக்கிறார்கள். பாருங்க... பாருங்க... பார்த்துக்கிட்டே இருங்க. கேளுங்க... கேளுங்க... கேட்டுக்கிட்டே இருங்க...(அரசியலில் இருந்து விலகி) முதலாளிகளும் ஏகாதிபத்தியவாதிகளும் நம் மீது திணிக்கும் 'அரசியல் வெறுப்பு' என்கிற குணத்தை நிராகரித்து நமக்கான இடதுசாரி அரசியலை அடையாளம் கண்டு - வெறும் பார்வையாளர்களாக நின்றுவிடாமல் அதில் உற்சாகத்துடன் பங்கேற்பவர்களாக மாற வேண்டாமா? அது பாட்டாளிகளின் சரித்திரக் கடமை அல்லவா?

முதலாளிகளின் ஆசையில் மண் விழும்படியாக, அவர்களின் கனவுகள் இற்று விழும்படியாக, அவர்களின் சகல வசதிகளும் உடைந்து நொருங்கும்படியாக - உழைக்கின்ற மக்களாகிய நாம், படிக்கின்ற மாணவர்களாகிய நாம், வேலை தேடும் இளைஞர்களாகிய நாம், அடுப்புப் புகையில் ஆயிரம் ஆண்டுகள் மூச்சுத்திணறும் பெண்களாகிய நாம், சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம் பாட்டாளி வர்க்கமாகிய நாம், அனைவரும் கரங்கள் இணைத்துச் சந்தேகத்துக்கு இடமே இல்லாத உறுதியான குரலில்- ஓங்கி ஒலிக்க வேண்டிய இன்றைய யுகத்தின் முழக்கம். 'அரசியல் எனக்குப் பிடிக்கும்'.

ஒரு முக்கியமான உண்மையை நாம் எல்லோரும் மறந்து விடுகிறோம். சாக்கடை என்றும் மனம் கெட்டது என்றும் நாம் பேசுவது இந்த ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை வருகின்ற தேர்தல் அரசியலைத்தான். இப்படி இந்த அரசியலைச் சாக்கடையாக வைத்திருப்பதன் மூலம் நல்லவர்கள், உழைப்பாளிகள் இதைவிட்டு விலகி இருக்கும்படி செய்யப்படுகிறது.

தொடர்

தாஸ் மாஸ்ரர்

# சிறைக் கதவில் எத்தனை கம்பிகள்?

13



வெயிலின் வெம்மையத் தாங்க முடியாமல் இருந்தது. இருவரும் உள்ளே போனதும் அருகில் இருந்த கட்டடத்தின் ஓரத்தில் நிழலுக்காக ஒதுங்கி நின்றோம். யாருமே எம்முடன் கதைப்பதாக இல்லை. அந்தப் பக்கமாகப் போய் வருகின்ற சிறைச்சாலை ஊழியர்கள் "எங்கிருந்து வந்தீர்கள்?" என்று உதட்டளவில் அல்லது கடமைக்காகக் கேட்டுக் கொண்டே போனார்கள்.

களுத்துறைச் சிறைச்சாலையில் அனைவருமே புலிச் சந்தேக நபர்களாக இருப்பதால் சிறைச்சாலை ஊழியர்கள் யாருமே, "என்ன விடயத்தில் கைதாகியிருக்கிறீர்கள்?" என்று எங்களைக் கேட்கவில்லை. அதுவும் ஒருவகையில் எங்களுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது. நாம் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டு இருந்தோம். தேவை ஏற்படும்போது ஓரிரு சொற்கள், வார்த்தைகளில் எமது அபிப்பிராயங்களைப் பரிமாறிக் கொண்டோம்.

ஏறத்தாழ 45நிமிடங்கள் வரை அந்த இடத்திலேயே நின்றிருப்போம். ஒரு சிறைச்சாலை ஊழியர் வந்து "சாப்பிட்டீர்களா?" என்று கேட்டார். "இல்லை" என்றோம். "கோப்பை வைத்திருக்கிறீர்களா" என்றார். "இல்லை" என்றோம். ஒருவரைக் கூப்பிட்டு "இவர்களுக்கு இரண்டு கோப்பைகள் கொடுத்து, சாப்பாடு கொடு" என்றார். அவர் எம்மைச் சமையலறைக்குள் கூட்டிச் சென்றார். அங்கு சுத்தம் என்பது துளிகூட இல்லை. இலையான்களின் இராச்சியமே எங்கும் நடந்து கொண்டிருந்தது.

இரண்டு பிளாஸ்ரிக் கோப்பைகளில் சோறு, பருப்பு, பூசனிக்காய் கறிகளை ஊற்றித் தந்தார். நாங்கள் போகம்பரையிலிருந்து புறப்படும்போது அங்கிருந்த ஒருவர் சொன்னார், "களுத்துறைக்குப் போனால் 'சி3' வாட்டில் தனக்குத் தெரிந்த குருக்கள் ஒருவர் இருக்கிறார் முடிந்தால் அங்கு போங்கள் உதவி செய்வார்" என்று. நாம் சாப்பாட்டுக் கோப்பையுடன் குசினியை விட்டுவெளியே வந்தபோது எமது அருகில் நின்ற சிறைச்சாலை ஊழியர் கேட்டார் "இங்கு உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று. "யாருமில்லை, ஆனால் 'சி3' பகுதிக்குப் போனால் நல்லது" என்றோம்.

அவர் எம்மை அழைத்துக்கொண்டு 'சி' பகுதி நோக்கிச் சென்றார். கடமையிலிருந்த ஊழியரிடம் கூறினார் 'இவர்கள் இருவரையும் சி3 பகுதிக்குப் போடுகிறேன்' என்று பின்பு தான் தெரிந்து கொண்டோம் எம்மைக் கூட்டிச் சென்ற அவர் களுத்துறையில் லொக்கேசனுக்குப் பொறுப்பானவர் என்று.

• • •

சி3 பகுதி நீண்ட மண்டபமாக இல்லாமல் அறைகளாக இருந்தது. எல்லா இரும்புக் கதவுகளிலும் பிளாஸ்ரிக் பாய்களைக் கட்டி மறைப்புச் செய்திருந்தார்கள். நாங்கள் ஒரு கையில் சொப்பிங் பாக்குடனும், மறுகையில் சாப்பாட்டுக் கோப்பையுடனும் உள்ளே நுழைந்தோம். அங்கு ஒரே சத்தமாக இருந்தது. சிறிய வானொலிப் பெட்டி ஒன்று தன்னால் சத்தமிடக் கூடிய அளவுக்கு உச்சஸ்தாயியில் கத்திக் கொண்டிருந்தது. அதையும் மீறிய சத்தத்தில் கதைக்க வேண்டியுள்ளதால் அங்கு சத்தம் அதிகமாக இருந்தது. கட்டடத்தின் இருபுறமும், அறைகளின் நடுவே 5 அடி அகலமான சாலை ஒன்று இருந்தது. எம்மை யாரும் அறைக்குள் எடுக்கவில்லை. சாலையிலேயே பாக்குகளை வைத்து விட்டுச் சாப்பாட்டுக் கோப்பைகளை ஏந்தியவாறு நின்றோம். அங்கு ஏற்கனவே நிறைந்திருந்த கைதிகளுடன் மேலதிகமாக நாமும் நுழைந்தால், இடநெருக்கடியையும் வேறு தொல்லைகளையும் கொடுக்கக்கூடும் என்பதால் எம்மை யாரும் உள்ளே எடுக்கவில்லை. நாம் குருக்களை விசாரித்தோம். அவர் நான்காவது அறையில் இருப்பதாக அங்கு கூட்டிச் சென்றார்கள். அவருக்கு 65வயது. தாடியும், தலைமயிரும் வளர்த்திருந்தார். எம்மை அறிமுகப்படுத்திக் கதைத்தோம் "முதலில் சாப்பிடுங்கோ" என்றார். அவரது அறையிலே ஓர் ஓரமாக இருந்து சாப்பிட்டோம். போகம்பரைச் சிறையில் வழங்கப்பட்ட சாப்பாட்டை விடவும் களுத்துறையில் வழங்கப்பட்ட சாப்பாடு மோசமாக இருந்தது. சாப்பாடு முடிந்ததும் எம்மை எந்த அறைக்குள் போடுவது என்ற முயற்சியைக் குருக்கள் மேற்கொண்டார். யாரும் எம்மை விரும்பி எடுக்கவில்லை. "அண்ணே எங்கு பிடிபட்டனீங்கள்?" என்றனர் பலர்.

"கண்டி" என்றதும் கதையைவிடு என்றதுபோல அவ்விடம்விட்டு அகன்றார்கள்.

எனக்கும் முஸ்லிம் நண்பருக்கும் எதுவும் புரியவில்லை. இடைநெருக்கடி தான் காரணமாக இருக்கும் என நினைத்தோம். பின்னர் தான் தெரிந்தது மனநெருடல் தான் காரணமென்று.

குருக்கள் சொன்னார் "தம்பி உங்களை அறைக்குள் எடுக்க யாரும் உடன்பாடாய் இல்லை. நீங்கள் உந்த பாக்குகளை இந்த அறைக்குள் தொங்கவிட்டுவிட்டு சாலையில் தான் படுக்க வேண்டிவரும். ஆட்கள் குறையும்போது தான் இடம் தருவார்கள்" என்றார். நாம் கூறினோம் "எங்களுக்கு எங்கு படுத்தாலும் பரவாயில்லை" என்று.

யன்னலில் தொங்கிய ஒரு கயிற்றில் எமது சொப்பிங் பாக்குகளையும் தொங்க விடுவதற்கு இடம் தந்தார். குருக்கள் மேலும் சொன்னார் "படுத்து எழும்புவது பிரச்சினையில்லை. நீங்கள் சாப்பாடு எடுப்பதற்கு ஏதாவது ஒரு சங்கத்துடன் சேருவது தான் நல்லது" என்று. ஒரு கைதியைக் கூப்பிட்டு எங்கள் இருவரையும் அவருடைய சங்கத்தில் சேர்த்துச் சாப்பாடு எடுக்க முடியுமா? என்று கேட்டார். அவன் எங்கள் இருவரையும் பார்த்துவிட்டு கொஞ்ச நேரம் சுவரில் சாய்ந்து கொண்டு யோசித்தான். எனக்கு எதுவும் விளங்கவில்லை. போகம்பரையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு உட்பட்ட கைதிகள் குறைவாக இருப்பதால் இத்தகைய பிரச்சினைகள் இருக்கவில்லை. சாப்பாடு, தங்குவது எல்லாவற்றையும் சிறைச்சாலை ஊழியர்களே தீர்மானித்திருந்தார்கள். இங்கு அப்படியில்லை.

• • •

களுத்துறைச் சிறைச்சாலையில் சங்கம் என்பது ஒரு சில கைதிகள் இணைந்து குழுவாக இருப்பதைக் குறிக்கும். ஐந்து பேர் சங்கத்தில் இருந்தால் சாப்பாடு எடுக்கும்போது பொதுவாக ஒருவர் சென்று எடுக்கமுடியும். பாத்திரம் கழுவுவது, தேனீர் குடிப்பது, பீடி புகைப்பது கூட இந்தச் சங்கம் தீர்மானிக்கிறது. அனேகமாக நண்பர்கள், ஊர்க்காரர், சொந்தக்காரர் எனப் பல வகையில் சங்க உறுப்பினர்கள் சேர்ந்திருப்பர்.

நீண்ட யோசனையின் பின் "சரி பரவாயில்லை" என்றான் அவன். ஏதோ நமக்கு நல்லது நடந்து விட்டதாக எண்ணிக்கொண்டேன். ஒருபடியாகக் களுத்துறையில் நிலைகொண்டு விட்டோம் என்ற நிலையில் கட்டடத்தை விட்டு வெளியே வந்தோம். 'சி' பிரிவில் சாப்பாட்டுக்காக வரிசையில் நின்று கதைத்துக் கொண்டிருந்தபோது எனது பொலிஸ் விசாரணையின்போது கைது செய்யப்பட்டு ஏற்கனவே சிறையில் இருந்த நண்பர் ஒருவர் என்னைக் கண்டதும் கோபப்பட்டு "தன்னைக் காட்டிக் கொடுத்தவன் இவன் தான் என்று" என்று சண்டைக்கு வந்தார். நான் சொன்ன விளக்கத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏனைய பல கைதிகள் வந்து "இதுக்கெல்லாம் யோசிக்க வேண்டாம், இது இங்கு சாதாரணமாக நடப்பது தான். சிறையில் இருக்கின்றவரைக் கண்டு ஆத்திரப்படுவது இயல்பு தான்" என்றனர்.

எனக்கு மிகவும் துக்கமாகவிருந்தது. ஒரு கைதியாக இருப்பது இழிநிலை என உணர்ந்தேன். ஆத்திரமும், வேதனைகளும், பழிவாங்கிவிடவேண்டும் என்ற உணர்வும் ஒரு மனிதனைச் சிறைக்குள் அடைத்துவிட்டபின்பும் அவனுக்கு ஏற்படுகிறது. அந்தச் சூழலை அவன் எதிர்கொள்வது என்பது அவனது கடந்த கால அனுபவத்திலிருந்து தான் பெற்றுக்கொள்ள முடியும். வெளியில் மிக வலிமை மிக்கவன் சிறைக்குள் வலுவிழந்துவிடவே வாய்ப்புண்டு. சிறையில் நடக்கின்ற எந்தவொரு சம்பவத்தையும் வரவேற்பதற்கும், எதிர்ப்பதற்கும் கைதிகள் இருக்கின்றனர். குறிப்பிட்ட இரண்டு நபர்களைக் கையாள்வதற்கு இரண்டு கூட்டமே அணிதிரண்டு நிற்கும். இதில் எனக்குச் சார்பாகக் கதைத்தவர்களுடன் கூட நான் ஒன்றித்துவிடவில்லை. இது எனக்கும் அவருக்குமான பிரச்சினை என்று மட்டுமே நினைத்துக் கொண்டேன்.

• • •

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் ஒருவர் கைதாகினால் உடனடியாகவே அவரது நண்பர்கள் பற்றிய விவரங்களை விசாரணையாளர்கள் தேடத் தொடங்குகின்றனர். அவர்களும் ஏதோ ஒரு வகையில் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்றால் அவர்களிடமும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுவது இயல்பு. அந்தவகையில் தான் இலங்கையின் குற்றப்புல னாய்வுத் துறைகளுக்குப் பெரும் வெற்றி ஏற்பட்டது. நண்பர்களாக இருந்தவர்களைக் கைது செய்து, வேறு வேறாக விசாரணைகளும், வழக்குகளும் போடப்படுவதால் அவர்கள் அனைவரும் நிரந்தர எதிரிகளாக மாறிவிடுகிறார்கள். அதன்பின் அவர்கள் இணைந்து செய்ற்படுவதற்கான வாய்ப்புக்கள் அறவே இல்லாது போய்விடுகிறது. இன்னோர் வகையில் கூறுவதானால் இணைந்து செயற்படாதவாறு ஆக்கிவிடுகின்றனர்.

அன்று மாலையில் பூட்டப்பட்டவுடன் புதிதாக வந்த எங்கள் இருவரின் பெயரும், சிறைச்சாலை இலக்கமும் கைதிகளின் பெயர்ப்பட்டியல் உள்ள மட்டையில் இறுதியாகப் பதியப்பட்டது. அங்குள்ள நடைமுறைகள் பற்றியும் சொல்லித்தரப்பட்டது.

'சி3' பகுதியில் அறைகள் ஒவ்வொன்றாகப் பூட்டப்படுவதில்லை. முன்னால் இருக்கும் இரும்புக் கதவு மட்டும் பூட்டப்பட்டது. அறைகளுக்குள் போட்டு அடைக்காததால் நினைத்தபோது மலசலம் கழிக்கும் வசதி இருந்தது. போகம்பரையை விட இந்த விடயத்தில் களுத்துறை மேலானதாகக் காணப்பட்டது. இரவு பூட்டப்பட்ட சிறிது நேரத்தில் ஒருவர் ஒரு பிளாஸ்ரிக்கிலான சிறிய பாத்திரத்தில் சீனி கொண்டு வந்தவாறு "சீனி எடுக்க வாங்கோ" என்று பெரிதாகச் சத்தம் போட்டார். ஆற்றில் தண்ணீர் ஓடுவதுபோல எந்நேரமும் அங்குள்ள வானொலிப் பெட்டி இரைந்துகொண்டேயிருந்தது.

பிளாஸ்ரிக் பாத்திரத்தில் இருந்த சீனியை ஒரு பேப்பரில் கொட்டி, சின்னக் கரண்டியால் அளந்து கொடுத்தார். ஒவ்வொரு சங்கத்தினரும் தமது எண்ணிக்கைக்கு ஏற்ப வாங்கிச் சென்றார்கள். எனதும் நண்பரினதும் சீனிப் பங்கை நாம் அன்று சேர்ந்து கொண்ட சங்கத்தினரிடம் கொடுத்தார்கள்.

சி3 பகுதியில் 40கைதிகள் வரை இருந்தோம். பலர் எம்முடன் கதைக்கவில்லை. நாம் குருக்களுடனும் எமது சங்க நண்பர்களுடனும் கதைத்துக் கொண்டிருந்தோம். எல்லாச் சங்கத்தவர்களும் இரவு உணவுக்காகக் கொடுத்த மரக்கறி, இறைச்சித் துண்டுகளைத் துப்புரவு செய்து, சிறிதாக வெட்டி அறைக்குள்ளேயே சமையல் செய்தனர். சிறைச்சாலைக்குள் களவாகச் சமைப்பதை அன்று தான் கண்டேன். நான் தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறைக்கு (இலக்கம் 5) ஓர் இரகசியக் குசினி இருந்தது. இரண்டு மின்சாரச் சுருள் அடுப்புக்கள் இருந்தன. (மாலையில் பூட்டியதன் பின் மறுநாள் காலையில் தான் சிறையைத் திறப்பார்கள். அதனால் பயமின்றிச் சமைப்பார்கள்.)

எல்லாச் சங்கத்தவரும் மாறிமாறி அந்த அடுப்புக்களில் அலுமினியக் கோப்பைகளை வைத்துச் சூடாக்கினர். இந்த அடுப்பைத் தயாரிப்பதற்கு எல்லோரும் காசு போட்டு மின்சார சுருளை வாங்கி ,ஓடு அல்லது செங்கல்லில் அதைப் பதித்து, சுற்றிவர அலுமினியத் தகட்டால் சுற்றி அந்த அடுப்புக்கள் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தன. சிறைச்சாலைக்குரிய மின் இணைப்பிலேயே இந்தச் சமையலும் நடந்தது.

(தொடரும்)

தொடர்கதை

கே.எஸ்.ஆனந்தன்



# நின்னைச் சரணடைந்தேன்

அத்தியாயம் 29

மறுநாள்.
அலுவலகத்தில் மதிய உணவு இடைவேளை.
"மேஜகம் இன்மேடம்" என்ற குரல் கேட்டுத் திருப்பிப் பார்த்துவிட்டு "விசாலியா வாரும்" என்றாள் சுவோதா.
"மேடம் அமுதசுரபியில் வேலை பார்த்த றோஸி என்ற பெண் நேற்று இறந்து விட்டாளாம். வேலை செய்யிறவை எல்லாரும் அடக்கத்தில் கலந்து கொண்டார்களாம். ரவி சோர் மட்டும் வரவில்லையாம். அங்க அவரைப் பற்றித் தான் பாதர் டேவிட் பாராட்டிப் பேசினாராம்"
"அவர் கொழும்புக்குப் போய்விட்டார் பாதர் என்ன பேசினாராம்?"
"அந்தப் பெண் ஒரு கான்சர் நோயாளியாம். சாகப்போகின்ற நாள்களை எண்ணிக்கொண்டிருந்தாளாம்" அவளைப் பற்றிய விடயங்களைக் கூறியதுடன் "ரவி சோர் அவளைப் பற்றித் தெரிந்துகொண்டு கடைசி வரை அவளுக்குச் சாவின் நினைவே வராமல் பழகி வந்தாராம். அவள் இறக்கும்போது, பாதர்! அநாதை என்ற பாவச் சொல்லிருந்து மீட்டு, என்னைத் தனது சொந்தச் சகோதரியாக நினைத்து, சாவின் வாசல் வரை என்னைத் துன்பத்தின் நிழலே தெரியாது உதவிய அன்புச் சகோதரனுக்காக, அவர் நல் வாழ்வுக்காகப் பிரார்த்தியுங்கள்" என்று கூறி உயிரை விட்ட அந்தக் குழந்தையின் வேண்டுகோளை ஏற்று நாம் ஆண்டவனிடம் பிரார்த்திப் போமாக! என்று கூறினாராம்! எல்லோரும் கண்கலங்கி விட்டனராம் என்று என்னுடைய கணவர் கூறினார்" என்றாள் விசாலி.
"அப்படியா? எனக்கு அவர் ஒன்றும் கூறவில்லை. அவசரமாகக் கொழும்புக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டுப் போனார்" கூறிவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டிருந்தாள். அவர் கொழும்பால் திரும்பி வரட்டுக்கும் கதைக்கலாம் என்று தீர்மானித்துக்கொண்டு தனது வேலைகளைப் பார்த்தாள்.

❝ ❝ ❝

ஒருவாரத்தின் பின்பு கொழும்பிலிருந்து திரும்பிய ரவி, நேராகத் தனது தாய் வீட்டுக்கே சென்றான். தேனீர் பருகிக் கொண்டே தாயை அழைத்தான்.
"என்ன ரவி? நல்ல சந்தோஷமாயிருக்கிறாய்?"
"குட் நியூஸ் ஒன்று சொல்லப் போகின்றேன் உங்கள் நெடு நாளையக் கனவு நிஜமாகப் போகின்றது"
"என்னடா புதிர் போடுகின்றாய்? எனக்குப் புரியவில்லை"
"சுவேதா கர்ப்பமாய் இருக்கிறாளா?"என்றாள். அவன் கூறிய பதிலைக் கேட்டுத் திகைப்புற்று நின்றாள் செல்லம்மா.

❝ ❝ ❝

வலது கை கொடுப்பதை இடது கை அறியாத வண்ணம் கொடுப்பதுதான் உயர்ந்த கொடை என்று ஒரு முதுமொழி உண்டு. நல்லது செய்ய வேண்டும் என்றால் பிறருக்குத் தம்பட்டமடிக்காது இரகசியமாகவே செய்வார்கள். பெயருக்கும், புகழுக்குமாகச் செய்வதனால் பலரும் அறியும் பொருட்டு விளம்பரம் செய்து தான் செய்வார்கள். ஆனால் ரவிசங்கர் விளம்பரம் செய்யாமல் காரியமாற்றும் பழக்கமுடையவன். சில பழிச்சொற்களும் வருவதுண்டு. அப்படித்தான் றோஸியின் விடயமும் கட்டிய மனைவியே சந்தேகப் படுமளவுக்குச் சென்றுவிட்டது. அவன் அவளுக்குக் விளக்கமாகக் கூறுவதற்கு முன்பு அவளுடைய அவசர புத்தியால் தன்னைத் தானே தாழ்த்திக்கொண்டு விட்டாள். அது மட்டுமின்றி அவ னுடைய தன்மானத்தையும் தூண்டி விட்டாள்.
இரவாகியதும் மனைவியின் வீட்டுக்கு வந்தான். அவளிடம் எதுவும் பேசவில்லை. அவளும் எதுவும் பேசவில்லை. படுக்கை அறையிலும் மௌனமாகவே படுத்துறங்கினர். காலையில் எழுந்து வழமைபோல புறப்பட்டுச் சென்றான். அவளுடன் கதைக்கவேயில்லை. அவனுடைய செயல் அவளை மிகவும் பாதித்துவிட்டது. அவனுடைய பிடிவாதத்துக்கு எதிராக நடந்தால் கதைப்பான் என நினைத்து மாலையில் உஷாவிடம் சென்றாள். அவள் எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் அவளுடைய சிறுவர் இல்லத்திலிருந்து சிறுவன் ஒருவனைத் தூக்கி வந்தாள். வழமைபோல வீட்டுக்கு வந்தவன் கட்டிலில் குழந்தை தூக்கிக்கொண்டிருந்ததைக் கண்டு. சமையல்காரப் பெண்ணை அழைத்துக் கேட்டான்.
"அம்மா வீட்டுக்கு வரும்போது கூட்டி வந்தார்கள்" என்றாள் அவள்.
"அப்படியா? நல்லதுக்குத்தான்" என்று கூறிவிட்டு உடைமாற்றிக்கொண்டு வந்தான். கோவிலுக்குச் சென்றிருந்த சுந்தர மூர்த்தியும் வந்துசேர்ந்தார். "வாருங்கள் மாமா. எனக்குப் பிடிக்காத வேலைகளில் சுவேதா ஈடுபட்டிருக்கிறாள். இதனால் வரப்போகும் பின் விளைவுகளைப் பற்றிச் சிந்திக்க வேயில்லை. உங்களிடம் சொல்ல வேண்டியது எனது கடமை பின்பு என்னைக் குற்றம் சொல்லக் கூடாது" என்றான்.
அதேசமயம் அங்கே வந்த சுவேதா "அப்பா! எனக்கு ரோசம், மானம் இருக்கிறது. ஆள்களை வைத்து செற்றப் செய்து நடந்ததை மூடி மறைப்பதற்குக் கதை கட்டி விடும் பழக்கம் எனக்குக் கிடையாது. பாதர் டேவிட்டும், சண்முகமும், விசாலியும் இதற்கு உடந்தை. இவரது பணம்தான் இதற்குக் காரணம் என நினைக்கிறேன். நான் ஆசைப்பட்ட ஒன்றைச் செய்ய எனக்கு உரிமை இல்லையா? சிறுவன் இஞ்சை தானிருப்பான். இந்த விடயத்தில் நீங்கள் என்ன சொன்னாலும் என் முடிவு மாறாது. அப்பா மன்னித்து விடுங்கள்" என்று கூறிவிட்டுத் தன்னுடைய அறைக்குள் சென்றாள்.
சந்தரமூர்த்திக்கு எதுவும் விளங்கவில்லை. இருவருக்கிடையிலும் ஏதோ பிணக்குப்போல விடிந்தால் பிரச்சினை ஆறிவிடும் என நினைத்துக்கொண்டு மௌனமானார். சில நிமிடங்கள் மௌனமாய் நின்ற ரவிசங்கர் சண்முகத்தைத் தொடர்பு கொண்டு கேட்டான். அவன் அன்று சவ அடக்கத்தின்போது பாதர் கூறியவற்றைக் கூறினான்.
"சண்முகம் இந்த விடயத்தை விசாலியிடம் நீ கூறினாயா?"
"என்ன சோர் உங்கள் பெருமை பற்றி சொல்லாமல் விடுவேனா?"
"விசாலி நின்றால் கூப்பிடும்"
"ஹலோ சோர் நான் விசாலி, என்ன விடயம்"
"நீங்கள் சண்முகம் கூறிய கதை பற்றிச் சுவேதாவிடம் கூறினீர்களா?"
"மதியம் லஞ் ரைம்மில் மேடத்திடம் கூறினேன். மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஏன் சோர் ஏதும் பிரச்சினையா?"
சும்மாதான் கேட்டன். நான் எதுவும் கேட்கவில்லை. சொல்லவில்லை. அங்கே நடந்தவை பற்றிச் சுவேதா கூறினாள். யார் சொல்லியிருப்பார்கள் அன்று அறியத்தான் கேட்டேன். வேறு ஒன்றுமில்லை என்று கூறித் தொடர்பைத் துண்டித்தான்.

❝ ❝ ❝

பொய்யைச் சொன்னால் நம்புவர்கள். உண்மையைச் சொன்னால் நம்பமாட்டார்கள். இதற்குக் காரணம் மனதில் ஒருவர் மீது வெறுப்பு ஏற்பட்டால் நல்லதைச் சொன்னாலும் நல்லதைச் செய்தாலும் அவர்கள் அதைத் தவறாகவே புரிந்து கொள்வார்கள். அந்த வகையில் விசாலி கூறிய வற்றுக்குச் சுவேதா தவறான அர்த்தம் கற்பித்துக்கொண்டு விட்டாள். அவள் மனதில் முளைவிட்ட முட்செடி விசலித்து வளர்ந்து விட்டது. எந்த விதமாகச் சொன்னாலும் அதை அவள் தவறாகவே அர்த்தப்படுத்திக்கொள்வாள். அத்துடன் அவள் தனக்கு மாறாகச் செயற்பட ஆரம்பித்து
விட்டாள் என்பதை உணர்ந்து கொண்ட ரவி பேசாமல்சென்று படுத்துக் கொண்டான்.
மறுநாள் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். அவனுடைய வரவை எதிர்பாராத செல்லம்மா.
"என்னப்பா காலையில் வந்திட்டாய் சாப்பிட்டியா?"என்றுகேட்டாள்.
"அவள் ஒரு சிறுவனை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறாள். எனக்கு அது பிடிக்கவில்லை. அதனால் இஞ்சை வந்தனான்" என்றான்.
"சரி ரவி. நேற்று நீ சொன்ன விசயம் உண்மையா? எனக்கு றீல் விட்டியா?" என்று சிரித்துக்கொண்டே தேனீர் கொடுத்தாள்.
"அம்மா நிச்சயமாகத் தான் சொன்னேன். கீர்த்திகா முன்பே உங்களுக்கு ஸ்பொன்சர் செய்திருந்தாள். ரிக்கற் எல்லாம் போட்டாச்சு நீங்கள் தனியாகப் போகப் பயப்பட்டீர்கள். அதனால் நானும் உங்களோடு வாறன்"என்றான்.
"இப்பதான்டா எனக்கு நிம்மதியாய் இருக்கு. நீ வருவது என்றால் எனக்கு என்ன பயம்? நான் முதலில் நம்பவில்லை. இப்பத்தான் நம்பிக்கை வந்தது" என்றாள்.
"மூன்று நாள்களில் இங்கிருந்து புறப்பட வேண்டும். கொழும்பில் ஒரு வாரம் தங்கி நிற்க வேண்டியிருக்கும். பயணத்துக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுங்கள்" என்று கூறிப் புறப்பட்டான்.
அன்று தொடக்கம் சுவேதா வீட்டுப் பக்கம் போவதைத் தவிர்த்துக்கொண்டான். செல்லம்மாவுக்கு ஏதாவது சொல்லிச் சமாளித்தான். அதேபோல சுந்தரமூர்த்தி கேட்டதற்கு அவர் கொழும்புக்குப் போறதாகச் சொன்னவர் என்று சுவேதாவும் தகப்பனைச் சமாளித்தள். எத்தனை நாளைக்கு வராமல் நிற்கப் போகிறார் பார்ப்போம் என்ற இறுமாப்பிலிருந்தாள்.
நாள்கள் கழிந்தன. மறுநாள் மதியம் சுவேதாவின் வீட்டுக்கு வந்த ரவிசங்கர் கையில் ஒரு சிறிய சூட்கேஸ் எடுத்து வந்தான். சுந்தரமூர்த்தியிடம் கொடுத்து விட்டு "இதைச் சுதோவிடம் கொடுங்கள் நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.
செல்லம்மா, சுவேதாவிடம் கதைப்பதற்குப் போனில் முயற்சித்தாலும் அவள் தொடர்பைத் துண்டித்துக்கொண்டிருந்தாள். போகும்போது வீட்டுக்குப் போய் சொல்லலாம் என்று அவளும் பயணம் போகும் ஏற்பாட்டிலிருந்து விட்டாள்.
மாலையில் வீடு வந்த சுவேதாவிடம் சுந்தரமூர்த்தி சூட்கேஸைக் கொடுத்து மருமகன் வந்துபோன விடயத்தைக் கூறினார்.
அவள் திறந்து பார்க்கவில்லை. சிறுவனுடன் விளையாட்டிலிருந்து விட்டாள். காலையில் எழுந்து சூட்கேஸைத் திறந்து பார்த்தாள். அவளுடைய பெயர் எழுதப்பட்ட கவர். சுந்தர மூர்த்தி யால் சுவேதாவின் பெயரில் போடப்பட்ட வங்கிப் புத்தகம், இன்னும் சில நகைகளும் வேறு பொருள்களுமிருந்தன. கடித உறையை எடுத்துக் கிழித்துப் பார்த்தாள். படித்தாள்.
சுவேதா!
இதுதான் முதலும் முடிவுமாக எழுதும் கடிதம். நான் நடந்ததைக் கூறுவதற்கு முயற்சித்தபோது நீ கேட்க மறுத்தாய். உன்னுடைய மனதில் தோன்றிய கீழ்த்தரமான எண்ணங்களால் நீ என்னையும் கீழ்த்தர மனிதனாக மதித்து விட்ட பின் நான் எதுவும் சொல்லிப் பயனில்லை என்று விட்டு விட்டேன். உன் தந்தையின் முன்னிலையில் நீ கூறிய விடயத்தால் இனி நாம் சேர்ந்து வாழ முடியாத இடைவெளியைத் தோற்றுவித்து விட்டது. உன்னை உன் போக்கில் விட்டு விட்டு விலகி வாழ முடிவு செய்து விட்டேன். நான் அம்மாவுடன் நாட்டை விட்டுப் போகிறேன். நீ உன் விருப்பம்போல வாழ்ந்து கொள்ள வழிவிட்டு விலகுகின்றேன். உன் அப்பா என்க்குத் தந்த வங்கிப் புத்தகம் மற்றும் நீ தந்த அத்தனையும் இதில் உள்ளன. உனக்கு ஒரு குழந்தையை என்னால் தர முடியவில்லைஎன்றகவலை தவிர உன்மீது எனக்கு எந்த வெறுப்பும் இல்லை. நீ என்னை வெறுத்ததால் விலகி வாழ விரும்புகின்றேனே தவிர என் உணர்வுகளோடு உணர்வாய்க் கலந்துவிட்ட உன்னை நான் வெறுக்கவில்லை. என்னுள் நீ வாழ்கின்றாய். அதுவே எனக்குப்போதும்.
ரவிசங்கர்.
முதலில் படித்தபோது சாதாரணமாக உணர்ந்தாள். இரண்டாம் முறை படித்தபோது கண்கள் கலங்கின. மூன்றாம் முறை படித்ததும் "நீ என்னை வெறுத்ததால் விலகி வாழ விரும்புகின்றேனே தவிர உன்னை வெறுக்கவில்லை. என்னுள் நீ வாழ்கின்றாய். அதுவே எனக்குப் போதும்" என்ற வரிகள் அவளது உணர்வுகளைக் கசக்கிப்பிழிந்தன. 'ரவி'என்று கூறியபடி மயங்கிச் சாய்ந்தாள். அந்த வேளை தேனீர் கொண்டு வந்த சமையல்காரப் பெண் "ஐயா! இங்கே வாருங்கள். அம்மா மயங்கி விழுந்திட்டா" என்று கத்தினாள். சுந்தரமூர்த்தி அவளைப் பக்கத்திலுள்ள மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றார்.

(தொடரும்)

கட்டுரை


சி.சந்திரகலா

# தத்தெடுப்பது தரக்குறைவானது அல்ல!

கனடாவில் வாழுகின்ற எனது நண்பி ஒருத்தி இலங்கைக்கு வந்திருந்தாள். என்னைச் சந்தித்த தருணம் ஒன்றில் பல விடயங்களைப் பரிமாறினாள். இலங்கையிலும் கனடாவிலும் வாழுகின்ற எமது இளவயது நண்பிகள் பலருக்குக் குழந்தை இல்லை என்ற தலைப்பு பேசுபொருளாக வந்தமைந்தது. "என்னை என்ர அப்பாவும் அம்மாவும் தத்தெடுத்துத்தானே வளர்த்தார்கள். அவர்கள் என்னைப் பிள்ளையாகப் பார்க்கவில்லையா? இன்று எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தவள் பல்கலைக்கழகப்படிப்பை முடிக்கவிருக்கிறாள்.

என் அப்பாவும், அம்மாவும் என்னைத் தத்தெடுத்ததால் அவர்களுக்குப் பிள்ளை இல்லை என்ற குறை நீங்கியது. அவர்களுக்கு 3பேரப் பிள்ளைகள் இருக்கிறார்கள். அப்பாவும் அம்மாவும் தமது வயதான காலத்தை எவ்வளவு சந்தோசமாகக் கழிக்கின்றனர். இதைவிட வாழ்க்கையில் என்ன வேண்டும்" என்றாள்.

அவள் ஒரு கிறிஸ்தவக் குடும்பப் பெண். கிறிஸ்தவ மதமும், அந்த மதத்திலுள்ள மற்றவர்களுக்கு உதவும் பண்பும், தமக்குப் பிள்ளைகள் இல்லாதவிடத்து வேறு ஒரு குழந்தையை எடுத்து வளர்க்கும் நிலையை அவர்களிடத்தே தோற்றுவித்திருக்கலாம். இந்து மதம் சார்ந்த தமிழர்கள் இவ்வாறான விடயத்தில் இவர்களைப்போன்ற அளவுக்கு ஈடுபடு காட்டுவதில்லை.



### செயற்கைக் கருத்தரிப்பு முறை

பிள்ளைப்பேறு இல்லாத தம்பதியர் ஒரு குழந்தையைத் தத்தெடுக்க முன்வருவதற்கு முதலில், செயற்கை முறைக் கருத்தரிப்பில் நாட்டம் கொண்டு அதிக பணத்தைச் செலவளித்து நிற்கிறார்கள். வெளிநாட்டில் வாழுகின்ற பல தம்பதியர் இந்தியாவுக்குச் சென்று செயற்கைக் கருத்தரிப்பிலோ, அது சாத்தியப்படாவிடில் ஒரு வாடகைத்தாயைப் பணத்துக்கு அமர்த்தியோ தமக்கான பிள்ளையைப் பெற்றுச் செல்கின்றனர். பல வறுமைப்பட்ட பெண்கள் வாடகைத் தாயாகி இதை ஒரு வருமான மார்க்கமாகச் சட்டபூர்வமற்ற முறையிலும் மேற்கொள்கின்றனர். இதைத் தெளிவுபடுத்தும் வகையில் பிரபல சிங்கள நடிகை சுவர்ணா மல்லவராய்ச்சி நடித்த ஒரு திரைப்படம் உண்டு.

### தத்தெடுப்பதற்கு மதத்தில் தடைகள்

குழந்தைகளைத் தத்தெடுக்கும் விடயத்தில் இந்து மதம் மிகப்பெரும் தடையாக உள்ளது. குழந்தை இல்லாத பெற்றோரை நல்ல காரியங்களின்போது முன்னுக்கு நின்று செயற்படுவது சகுனப் பிழை என்கிற இந்து மதம் குழந்தையைத் தத்தெடுக்கும் விடயத்தில் வர்ணாச்சிரம தர்ம கோட்பாட்டை நம்புவதால், தத்தெடுக்கும் விடயத்திலிருந்து பின்வாங்கவேண்டியுள்ளது. இனம், மதம், சாதி, கோத்திரம் எனப் பல விடயங்களில், தாம் சார்ந்த சமூகத்துக்குப் பயப்படவேண்டியிருப்பதால், ஒரு குழந்தையைத் தத்தெடுக்கும் துணிவு இந்து மதப் பெற்றொருக்கு இருப்பதில்லை.

இந்துக்களுக்குத் தத்தெடுக்கும் விடயத்தில் இருக்கின்ற இன்னோர் அச்சம் சாதி பற்றியதாகும். தமது குலத்துக்கு இசைவாக இல்லாவிட்டால், சமூகம் தம்மை ஒதுக்கி வைத்துவிடும் என்ற பயமும், தாம் வளர்க்கும் பிள்ளை பாடசாலை, வேறு விடயங்களுக்காக வெளியில் செல்லும்போது அயலவர்களும் சொந்தக் காரர்களும் "நீ அவையள் பெத்த பிள்ளை இல்லை" என்று கூறிவிட்டால், அந்தப் பிள்ளைக்கும் தமக்கும் இடைவெளி வந்துவிடும் என்ற பயமும் தமது சொத்துக்களைப் பிழையான வழியில் அழித்துவிடும் என்ற பயமும் தத்தெடுப்பதற்கு முனைகின்ற பெற்றோர்களுக்கு இருக்கவே செய்கின்றன.



### சமூகம் மீதான பயம்

வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் பலர் சுனாமி இடரின்போதும் வேறு சந்தர்ப்பங்களின் போதும் பிள்ளைகளைத் தத்தெடுத்த சந்தர்ப்பங்கள் நடந்தேறியுள்ளன. இதே விடயத்தை உள்நாட்டில் வாழுகின்ற தம்பதியினர் விரும்புவதில்லை என்பதைவிட சமூகத்துக்கு முகம் கொடுப்பதிலுள்ள சிக்கல்கள் காரணமாகத் தவிர்க்க வேண்டிய நிலையிலுள்ளனர் என்றுகூறுவதே பொருத்தமானது. நாய், பூனைபோன்ற எங்கோ பிறந்த மிருகங்களில் அன்பு செலுத்தி அவற்றை வளர்க்கும் மக்கள் பலர் ஒரு பிள்ளையைத் தத்தெடுத்து அன்பு காட்டுவதில் பின்னிற்கின்றனர். குழந்தை இல்லாத தம்பதியினருக்குத் தமது பிள்ளை ஒன்றை உத்தியோகபூர்வமாகத் தத்துக்கொடுத்த அரிதான சம்பவங்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்த விடயத்தில் தமது உறவுக்காரரின் குழந்தை என்ற நிலை காணப்படுகின்றது. குழந்தைகள் இல்லாத பல தம்பதிகள் இந்தியாவுக்குச்சென்று குழந்தை ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் இறங்குகின்றனர். இது சிலருக்குச் சாத்தியப்பட்டாலும் பலர் பெரும் தொகையான பணத்தை இழக்கின்றனர். அதுவும் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டால், அந்த மருத்துவர்களின் கவனம் பணம் பிடுங்கு வதில்தான் அதிகமாக இருக்கும் என இந்தியா சென்று வந்த பலர் கூறுகின்றனர்.

### உயிர்களுக்கு ஆதரவளிப்பது நற்காரியமே!

இந்து நிறுவனங்கள் பிள்ளைகளைத் தத்தெடுத்துப் பிள்ளைப்பேறு இல்லாத பெற்றோருக்கு வழங்கும் ஏற்பாடுகளைச் செய்ய முடியும். அதேவேளை மகப்பேற்று மருத்துவர்களும் இது விடயத்தில் நல்லதொரு சமூகக் கண்ணோட்டத்தில் சிந்திப்பது கட்டாயமாகும். இதன் மூலம் வாழ வழியின்றி வறுமையிலிருக்கும் குழந்தைகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்ப்பதைத் தவிர்த்து, அந்தக் குழந்தைகளை வசதியானவர்கள் காப்பாற்ற முடியும். இத்தகைய செயற்பாட்டின் மூலம் இனப்பெருக்கமின்றிச் சுருங்கி வரும் தமிழினம் தன்னை ஓரளவுக்கு அழிவின் வேகத்திலிருந்து காத்துக்கொள்ள முடியும்.

கொழும்பு லேடி றிச்வே மருத்துவமனையில் மகப்பேற்று வைத்திய நிபுணராகக் கடமையாற்றும் திருமதி. லியனகே என்பவர் 13வயதுடைய மாணவி ஒருவர் கர்ப்பமுற்றிருப்பதை அறிந்து அந்த மாணவியை மிகவும் கௌரவத்துடன் இரகசிய இடம் ஒன்றில் தங்க வைத்துப் பராமரித்து குழந்தை கிடைத்ததும் அந்தக் குழந்தையைத் தத்தெடுக்கக் காத்திருந்த ஒரு தம்பதியினருக்கு வழங்கியிருக்கிறார். இவரது இந்த நடவடிக்கையைப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு கௌரவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தவறுதலாகக் கர்ப்பமுறும் ஓர் இளம் பெண் அந்த அவமானத்தால் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்வதால், இரண்டு உயிர்கள் பலியாகின்றன. அவற்றைப் பொறுப்பாகவும், மதிப்பா ககவும் கையாண்டால் அந்தச் சமூகம் இரண்டு உயிர்களைப் பாதுகாத்ததாக அமையும். ஒரு பெண் முறைதவறிக் கர்ப்பமுறுவதைப் பழிக்கின்றவர்கள் அவ்வாறான குழந்தைகளைச் சமூகத்தில் நன்நிலைக்குக் கொண்டு வருவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொள்ள வேண்டும். "அதுதான் இறைவனின் விதி" என மிகச் சாதாரணமா கக் கூறிக் கடந்து விடுவது தவறானது.

### கர்ப்பம் என்பது கொடை


தமிழர்கள் கர்ப்பம் என்பதை ஒரு கொடையாகக் கருதுவதாக இல்லை. கார்ப்பமுற்ற பெண்ணை ஆங்கில நாட்டவர்கள் 'சீ இஸ் இன் த வ்பமிலி வே' அதாவது அவள் அடுத்த சந்ததியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறாள் என்று ஒரு கர்ப்பிணித் தாயைக் கௌரவிக்கின்றனர். 'சுகமில்லாமல் இருக்கிறாள்' என்பதில்லை. இந்துக்களின் சமயச் சடங்குகளால் அதிக மக்கள் விரதங்கள் போன்றவற்றில் ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர். இதனால், இயற்கையாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுகின்ற உடல் ஆரோக்கியம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றர். இந்த நிலை விரைவாகச் சீர் செய்யப்பட வேண்டும். பிள்ளையைக் கடவுள் தருவார் எனக் கடைசி வரை நம்பியிருந்தால், குழந்தை கிடைக்கக்கூடிய காலப்பகுதி வீணே கழிந்து விடுகிறது. இத்தகைய சூழலில் ஒரு குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கும் அவகாசமும் இல்லாது போய்விடுகிறது. பல தம்பதியர் பொருளாதார ரீதியில் வளமானவர்களாக இருந்து, அவர்களுக்குக் குழந்தைகள் இல்லாத நிலையில் மருத்துவ பரிசோதனைகள் மூலம் குழந்தை கிடைப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் தெரிந்தால் ஒரு பிள்ளையைத் தத்தெடுக்கும் முயற்சியில் இறங்குவதன் மூலம் தமது சொத்துக்களையும் அவர்களது இறுதிக் காலத்தையும் அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படும். எதுவுமே இல்லை என்பதைவிட ஏதாவது இருப்பது நல்லது என்று திருப்தி அடை யும் மன நிலையை மனிதன் பெறுவது என்பது ஒரு வரம்தான்.

### சீதனப் பிரச்சினை

தமிழ்ச் சமூகத்தில் குழந்தைப்பேறு இல்லாது போவதற்கு அடிப்படையிலுள்ள பிரச்சினை சீதனமாகும். இதனால், இளவயதுத் திருமணங்கள் தவிர்க்கப்பட்டு முதிர் வயதில் திருமணம் செய்து கொள்வதால், பிள்ளைப்பேறு இல்லாது போய்விடுகிறது. அல்லது மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளைப் பெறுவதற்கான வாய்ப்பே ஏற்படுகிறது. இவ்வாறான பிள்ளைகளால், பெற்றோர் மிக அதிகமான மன அழுத்தத்தையும், சுமையையும் சாகும் வரை தாங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

அதிக சீதனம் வாங்கித் திருமணம் செய்ய நினைக்கும் ஆண்களும், அதிக சீதனத்தை வழங்க முடியாது திண்டாடும் பெண்களும் எதிர்காலத்தில் பிள்ளைகளைப் பெறமுடியாத தம்பதிகளாக மாறுகின்றனர். அல்லது நோயுற்ற, நலிவடைந்த குழந்தைகளைப் பெற்றெடுக்கின்றனர். பொதுவாகத் தமிழ் மக்களை அவதானிக்கும்போது 300பெண்களுக்கு ஒரு தர்ப்பிணித்தாயைக் காண்பதே அரிதாகவுள்ளது. இது தமிழினத்தின் வளர்ச்சி வீதத்தை மிகத்தெளிவாகக் காட்டுவதாக உள்ளது. அதேவளை தற்போதைய நிலையில் இளவயதுத் திருமணம், இளவயதுப் பிள்ளைப்பேறு என்பன அதிகரித்திருப்பதால், அதிகம் மணமுறிவுகள் ஏற்பட்டு பிரிந்து வாழும் நிலையும் காணப்படுகின்றது. வெளிநாட்டில் திருமணம் செய்கின்ற பல பெண்களுக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. கோவில்கள் கட்டுவதற்குச் செலவிடுகின்ற அதிக பணத்தில் ஒரு தொகையை ஆவது, ஏழைப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கான அமைப்புக்களை உருவாக்க முயல்வது சிறந் தது. இத்தகைய அமைப்பின் மூலம் பிள்ளை களைத் தத்தெடுக்க முயலும் பெற்றோருக்கும் உதவ முடியும். ஓர் இனம் தனது எதிர்காலச் சந்ததி பற்றிச்சிந்திப்பது மிக மிக அவசியமாகும். இருப்பதைப்பேணிக்கொள்வது இப்போதைக்குப் போதுமானது.

குழந்தைகளைத் தத்தெடுக்கும் விடயத்தில் இந்து மதம் மிகப்பெரும் தடையாக உள்ளது. குழந்தை இல்லாத பெற்றோரை நல்ல காரியங்களின்போது முன்னுக்கு நின்று செயற்படுவது சகுனப் பிழை என்கிற இந்து மதம் குழந்தையைத் தத்தெடுக்கும் விடயத்தில் வர்ணாச்சிரம தர்ம கோட்பாட்டை நம்புவதால், தத்தெடுக்கும் விடயத்திலிருந்து பின்வாங்கவேண்டியுள்ளது




## - நடன மேடை -

தனது இலட்சியத்தையும் குருவின் கனவையும் வென்றெடுப்பதற்காக 'நடனம்' ஆடும் சிறுமியின் கதையே 'லக்ஷ்மி'.

**கதை**

வங்கியில் வேலை செய்யும் நந்தினியின் (ஐஸ்வர்யா ராஜேஷ்) மகள் லக்ஷ்மி (தித்யா). நந்தினிக்கு இசை, நடனம் என்றால் அறவே பிடிக்காது. மகள் லக்ஷ்மிக்குப் பேச்சு, மூச்சு, அசைவு, ஆர்வம், முயற்சி, பயிற்சி எல்லாமே நடனம்தான். இந்திய அளவில் மிகப் பெரிய நடனப்போட்டி ஒன்று நடைபெற இருப்பதைத் தொலைக்காட்சி மூலம் அறிந்துகொள்ளும் லக்ஷ்மி அதில் பங்கேற்க வேண்டும் என்ற ஆவலில் சென்னை டான்ஸ் அக்கடமியில் சேர நினைக்கிறாள். ஆனால், பெற்றோருடன் வந்தால்தான் அங்கு சேர முடியும் என்று நிபந்தனை விதிக்கப்படுகிறது. இதனிடையே பள்ளிக்குப்போகும் வழியில் 'தேநீர்க் கடையில்' இசையால் உற்சாகமாகி அங்கேயே ஆட ஆரம்பித்துவிடுகின்ற அந்தக் கடையின் உரிமையாளர் கிருஷ்ணாவுடன் (பிரபுதேவா) பேசிப் பழகும் லக்ஷ்மி, குறித்த டான்ஸ் அக்கடமியில் இணைவதற்காக அவரை அப்பாவாக நடிக்கச் சொல்கிறாள். அதன் மூலம் டான்ஸ் அக்கடமியில் சேர்கிறாள். ஆனால், போட்டியில் கலந்துகொள்வதற்கு லக்ஷ்மி தகுதி பெறவில்லை. இதனால் கலங்கி நிற்கும் லக்ஷ்மியை, கிருஷ்ணா தேற்றி, டான்ஸ் அக்கடமியில் அவரைத் தெரிவு செய்வதற்குப் பரிந்துரைக்கிறார் யார் இந்த கிருஷ்ணா? அவர் சொன்னவுடன் எப்படி லக்ஷ்மியைத் தெரிவு செய்கிறார்கள்?, இதனால் கிருஷ்ணாவுக்கு விதிக்கப்படும் நிபந்தனை என்ன, ஏன் நந்தினி தனது மகளை டான்ஸ் ஆடக்கூடாது எனக் கட்டுப்பாடு விதிக்கிறாள், அம்மாவுக்கே தெரியாமல் ஏன் லக்ஷ்மி டான்ஸ் ஆடுகிறாள்?, தனது கனவை லக்ஷ்மியால் அடைய முடிந்ததா? போன்ற பல கேள்விகளுக்குப் பதில் சொல்கிறது படம்.



**பாத்திர வர்ப்புக்கள்**

அலட்டிக்கொள்ளாமல் அளவாக நடிப்பது பிரபுதேவாவின் இயல்புதான். ஆனால், கண்கலங்கவேண்டிய சில காட்சிகளிலும் அந்த அளவைக் கடைப்பிடித்திருப்பது நெருடல். "நீங்கள் இதை நடனம் என்று சொல்றீங்க, நான் இதை மூச்சுன்னு சொல்வேன்" எனக் கவிதையை நடனமாகக் காட்சி ரீதியாக வெளிப்படுத்தும் விதத்தில் பிரபுதேவா அசத்துகிறார். தனது மாணவர்களுக்கு மூச்சுப் பயிற்சியின் அவசியத்தை, உணர்வை, ஆற்றலை வெளிக்கொணர்ந்து சிறந்த வெளிப்பாட்டு ஆற்றலைக் கொண்டுவரச் செய்வதில் சிறந்த டான்ஸ் மாஸ்ரர் தான் என்பதை நிரூபித்திருக்கிறார்.

தித்யா தமிழ் சினிமாவின் புதுவரவு. இடம், பொருள் பற்றிக் கவலைப்படாமல் உற்சாகத்துடன் டான்ஸ் ஆடும் விதத்தில் கவனம் ஈர்க்கிறார். குருவின் ஏக்கத்தையும் தனக்கான கனவாக மாற்றிக்கொள்ளும் இடத்தில் சிறந்த நடிப்பை வெளிப்படுத்துகிறார். ஐஸ்வர்யா ராஜேஷுக்குப் படத்தில் பெரிய முக்கியத்துவம் இல்லை. கிடைத்த இடங்களில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டார். கருணாகரனைப் படத்தில் வீணடித்திருக்கிறார்கள். கோவை சரளாவின் கதாபாத்திரம் சரியாகக் கட்டமைக்கப்படவில்லை. ஆனாலும், தன் பாவனைகளால் அந்தப் பாத்திரத்துக்கு நியாயம் சேர்த்திருக்கிறார். அர்ஜுனாக நடித்திருக்கும் ஜீத் தாஸும், அர்னோல்டாக நடித்திருக்கும் அக்ஷத் சிங்கும் சிரிப்பைப் படர விட்டு, நடனத்தில் வெளுத்து வாங்குகிறார்கள். போட்டிக்குச் சவால் விட்டு எதிர்வினையாற்றும் சல்மான் யூசுவ்ப்கான் பொருத்தமான தெரிவு.

**இயக்கம் – ஒளிப்பதிவு – இசை**

நடனத்தை மையமாகக் கொண்டு ஒரு முழுப் படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் விஜய். அதில் சில தருணங்களை உணர்வுப்பூர்வமாக்கி நெகிழ வைத்திருக்கிறார். சென்னை மும்பை நகரங்களின் அழகைக் கண்களுக்கும் கடத்தி இருக்கும் ஒளிப்பதிவாளர் நீரவ் ஷா கதையிலும் பங்களிப்புச் செய்திருக்கிறார். சாம் சி.எஸ். இசையில் பாடல்கள் இரசிக்க வைக்கின்றன. உயிரோட்டமான பின்னணி இசையால் படத்தைத் தூக்கி நிறுத்துகிறார். ஆண்டனியின் தொகுப்பும் நேர்த்தி.

**ஒருவகையில்**
**உண்மைக் கதையே!**

ஹிந்தி ரியாலிட்டி டான்ஸ் நிகழ்வில் சுப்பர் டான்ஸராக முத்திரை பதித்திருந்த தித்யாவைக் கதையின் நாயகியாக்கி, அவர் கதாபாத்திரத்தின் பெயரையே படத்தின் தலைப்பாக வைத்திருக்கிறார் இயக்குநர் விஜய். டான்ஸ் மாஸ்ரர் கதபாத்திரத்தில் பிரபுதேவாவை நடிக்க வைத்து கதாபாத்திரத் தேர்வில் சிறந்த இயக்குநருக்கான திறமையை வெளிப்படுத்தி இருக்கிறார். சென்னை நடனக்குழுவில் டான்ஸ் ஆடத் தெரிந்த அக்ஷத் சிங், ஜீத் தாஸ் ஆகிய நிஜக்கதாபாத்திரங்களைப் பயன்படுத்தி இருக்கும் விதமும் பாராட்டுக்குரியது. ஆனால், காட்சிகளில் நம்பகத்தன்மை இல்லாமல் நாடகப் பணியே மேலோங்கி இருப்பது உறுத்தலாக இருக்கிறது. தித்யா எதேச்சையாக தேநீர்க் கடைக்குள் நுழைவது, அங்கு இசையின் லயத்துக்கு ஏற்ப ஆடுவது, அதை உரிமையாளர் அனுமதிப்பது, பின் அவரே டான்ஸ் அக்கடமியில் சேர்ப்பது எல்லாம் செயற்கையாகவே உள்ளன. பள்ளி முதல்வர் – தித்யா ஊடாடும் காட்சிகளும் நம்பும்படி இல்லை. தித்யாவின் தந்தை யார்? என்பதற்கும் படத்தில் பதில் இல்லை. பிரபுதேவாவின் கடந்த கால வாழ்க்கையும் போதுமான அளவுக்குச் சொல்லப்படவில்லை. மிக முக்கியமான பிரிவுக்கான காரணத்தை வசனங்களிலேயே கடந்துபோவது ஏற்புடையதாக இல்லை. இவற்றைத் தாண்டி, கடைசி 25 நிமிட உணர்வுப்பூர்வ தருணங்கள் லக்ஷ்மியுடன் ஒரு பிணைப்பை ஏற்படுத்துகின்றன. டான்ஸ் இரசிகர்கள் குறிப்பாகப் பிரபுதேவாவின் டான்ஸ் இரசிகர்களுக்கு மற்றொரு விருந்து இந்தப் படம்.

கவிதை

அருணாசலம் அகிலன்

# எங்கே செல்கின்றோம்...!

நாங்கள் கண்ணீருக்குள்
வேர்களைத் தொலைத்துவிட்டு
கல்லறைகளில் பூக்களைத் தேடுகின்றோம்
நெடுந்தூரம் அலைந்துவிட்டு
பாதைகளின் முடிவில் நின்று
நிம்மதியின் முகவரியைக் கேட்கிறோம்



பிரளயங்களைத் தாங்கி நின்றோம்
சூழ்ச்சிகளை எதிர்த்து வென்றோம்
பேச்சில் மாறாத உறுதியைத் தரம்பிரித்து
காட்டிக் கொடுப்புக்களால்
களங்கப்பட்டு நிற்கிறோம்

முட்புதர்களின் நடுவில் நின்று
மூச்சடங்கி ஒளிந்து கொள்ள
சத்தியம் வாங்கிக் கொண்டு
புத்தரையும் காந்தியையும்
புதினமாய் நெஞ்சிருத்தி
நித்தியமாகிப்போன - எம்
நெஞ்சுரத்தை மறந்து விட்டோம்

உறவுகளைக் கொன்று
ஊர்ப்பழி ஏற்றுக்கொண்டு
மறுவாழ்வு வேண்டி நிதம் பாவங்களுக்காய்
சிலுவைகளை இறைஞ்சுகிறோம்
குருதிச் சூட்டோடு
வேட்டைகளை விசாலமாக்கி
சதைப் பிண்டங்களின் இச்சைக்காய்
சத்தியத்தை மறந்துவிட்டோம்

கண்ணுக்குள் பூட்டி வைத்த
பெண்ணழகைத் துயிலுரித்து - அதன்
வண்ணத்தில் பாதி அள்ளி
எண்ணமெல்லாம் பூசிக்கொண்டு
மதுக்கிண்ணத்தில் விருந்துண்டு
என்னத்தையோ அடைந்துபோல
புது உலகை நோக்கி - நாங்கள்
எங்கேதான் செல்கின்றோம்?



கட்டுரை

வி.அருணாசலம்



# கொழும்பு அரசும் வடக்கு அபிவிருத்தியும்

பிரித்தானியர் காலத்தில் மலேசியாவில் புதிதாக ஒரு ரயில் நிலையம் திறக்கப்பட இருந்தது. அந்த ரயில் நிலையத் திறப்பு விழாவுக்காக ரயில் துறைக்குப் பொறுப்பாக இருந்த பிரித்தானிய அதிகாரியும் மலேசிய முஸ்லிம் சமஸ்தானத் தலைவர்கள் இருவரும் ஒரு ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் அந்த ரயில் தரித்துத் தரித்துச் சென்றது. அவ்வேளைகளில் ஒன்றைக் கவனித்த சமஸ்தானத் தலைவர்களில் ஒருவர் அந்த வெள்ளைக்கார அதிகாரியிடம், "ஏன் எல்லா ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளாகவும் மற்றும் முக்கிய பதவிகளிலும் யாழ்ப்பாணத்துத் தமிழரை வைத்திருக்கிறீர்கள். மலேசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட சீனர்களோ, மலேயர்களோ இவற்றுக்குப் பொருத்தமில்லையா?" என்று கேட்டிருக்கிறார்.

அதற்குப் பதிலளித்த பிரித்தானிய அதிகாரி, "நாங்கள் உலகம் முழுதும் காலணித்துவ நாடுகளை வைத்திருப்பவர்கள். ஒவ்வொரு மக்களுக்குரிய பண்பாடுகள், உழைப்புத்திறன், அவர்களுக்குள் இருக்கம் முரண்பாடுகள், அவர்களின் குணாம்சங்கள், பழக்க வழக்கங்கள் போன்ற பல்வேறு விடயங்களையும் அறிந்திருக்கிறோம். அந்த அடிப்படையிலேயே யாழ்ப்பாணத் தமிழரை, மலேசியாவில் இந்தப் பதவிகளுக்கு நியமித்திருக்கிறோம். எல்லா நாடுகளிலும் பிரித்தானிய நிர்வாகத்துக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் பிரித்தானிய நிர்வாகத்தை முடக்குவதற்காகச் சுதேசிகள் எழுச்சியடைந்துள்ளார்கள். அது எமது நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்குப் பெரியதொரு நெருக்கடியாக உள்ளது. தமிழருக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள். அவர்கள் இணைந்து எங்களுக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க மாட்டார்கள். இதனால், நாம் சிறப்பாக நிர்வாகம் நடத்தக்கூடியதாக உள்ளது. தமிழர்கள் கடின உழைப்பாளிகள்" என்று கூறினாறாம். இது மலேசியாவில் ரயில் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்து தற்போது ஓய்வு பெற்று யாழ்ப்பாணம் -சுன்னாகம் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவர் கூறிய தகவல்.

**தமிழர்கள் தமக்காக ஒற்றுமைப்படுவதில்லை**

பிரித்தானியர் காலத்தில் இலங்கையிலும் ரயில் வலைப்பின்னலில் யாழ்ப்பாணத் தமிழர்கள் ரயில் ஓட்டுநர்களாகவும், ரயில் நிலைய அதிகாரிகளாகவும் மற்றும் தொழில் நுட்ப அதிகாரிகள், ஏனைய பதவிகள் எனப் பல வேலைகளுக்கும் அமர்த்தப்பட்டிருந்தார்கள். சிங்களச் சுதேசிகளுக்கு இந்த வாய்ப்பைக் கொடுத்திருந்தால் பிரித்தானிய நிர்வாகத்தை இலகுவாக முடக்கியிருப்பார்கள். தமிழர்கள் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிந்து, பணியாற்றுவார்களே தவிரத் தாமாக எதையும் செய்வதற்கு ஒற்றுமைப்படுவது அரிது. பிரித்தானியர் தமிழர்களைப் புரிந்து கொண்ட அளவுக்கு வேறு யாரும் புரிந்திருக்கவில்லை. பிரித்தானியர் காலத்தில் தமிழர்கள் கொடி கட்டிப் பறந்ததாகக் கூறப்படுவது, அவர்களிடம் இருந்த ஒற்றுமையின்மைக்குக் கிடைத்த நற்சான்றிதழாகும். இந்த விடயம் தமிழருக்குத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், இந்த விடயம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரிந்திருப்பதால்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை [illegible] சிங்களத் தலைவர்கள் [illegible] தற்போதுள்ள [illegible] அரசைக் கொண்டு [illegible] தெளிவாக உள்ளது. சாதாரண தமிழர் மத்தியில் காணப்படுகின்ற சுயநலமும், ஒற்றுமையின்மையுமே தமிழரை எவரும் இலகுவில் கையாளமுடிவதற்கு வாய்ப்பாகவுள்ளது.

**தேசிய அரசின் ஆளுகைக்குள் மாவட்டங்கள்**

வடமாகாண சபைக்கு வழங்கவேண்டிய அதிகாரங்களைத் தாருங்கள் என்று குரல்கள் எழுந்தபோதிலும் அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாத தலைமை அமைச்சர், தேசிய அரசின் ஆளுகையை நிலைநிறுத்தக்கூடிய விடயங்களில் அதிக அக்கறை செலுத்தி வருகின்றார். சுதந்திரத்துக்குப் பின்பான இலங்கை வரலாற்றில் சிறந்த ராஜதந்திரியாக மதிக்கப்படுபவர் ஜெ.ஆர். ஜெயவர்த்தன. இலங்கையின் அரசமைப்பு விடயத்தில் மற்றவர்கள் செல்வாக்குச் செலுத்த முடியாத அளவுக்குச் சட்ட வரம்புகளைப் போட்டவரும் அவர்தான். அதன் பின்னர், இலங்கை அரசமைப்பு விடயத்தைக் கையாளும் வல்லமை ரணில் விக்கிரமசிங்கவிடமே இருந்து வருகிறது. ஓர் ஐரோப்பிய நாட்டுத் தலைவருக்குரிய தனி மனித உள்ளடக்கம் ரணிலிடம் உண்டு. இந்த அடிப்படையிலேயே வடமாகாண சபையையும் தாண்டி வடக்கு அபிவிருத்தியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றார் அவர். வடமாகாணத்துக்கு வருகைதரும்போதெல்லாம் அபிவிருத்தி பற்றியே பேசுகின்றார். இதில் யாரும் எதிர்பார்க்காத அளவுக்குப் பெரிய பின்னடைவைத் தமிழ்த் தலைமைகள் பெற்று வருகின்றன.

**கல்வியில் தமிழர்கள் பின்தள்ளப்படும் நிலை**

1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக் கழகம் என்பதாகவும் தமிழர்களுக்கே உரிய பல்கலைக்கழகம் என்ற எண்ணப்பாட்டுடனும் இயங்கியது. போர் முடிவுற்றதன் பின்னர் சிங்கள மொழிமூல மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குக் கல்வி கற்க வந்தபோது தமிழ்த் தேசியம் பேசியவர்கள் மௌனிக்க வேண்டியாயிற்று. தற்போது விஞ்ஞானப் பிரிவுகளில் ஆங்கில மொழி மூலக் கல்வியில் சிங்கள மாணவர்கள் முன்னிலைக்கு வந்துவிட்டனர். அதேவேளை கலைப்பிரிவுப் பாடங்களையும் ஆங்கில மொழியில் ஆரம்பிப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திட்டமிடல் குழுவினர் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர். அதன் மூலம் சிங்கள மாணணவர்கள் கலைப் பாடங்களை ஆங்கில மொழியில் கற்பதன் மூலம் அந்தத் துறையிலும் இங்கு கால் பதித்துவிடுவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிங்கள மொழிமூலக் கல்வியை அதிகரித்தால் மட்டுமே தமிழ்த் தேசிய வாதிகளால் எதிர்ப்புக் குரல் கொடுக்க முடியும். ஆங்கிலக் கல்வி வேண்டாம் என்று குரல் உயர்த்த முடியாது. ஆங்கிலக் கல்வியின் ஊடாகச்சிங்களமாணவர்களின்தொகையை இலகுவாக அதிகரிக்க முடியும். தமிழ் மொழிமூலக் கல்வியில் பட்டம் பெறுகின்ற பட்டதாரிகள் எதிர்காலத்தில் தேசிய மட்டப் பதவிகளுக்குப் போட்டியிட முடியாத நிலை ஏற்படுவதால் இந்தப் பட்டதாரிகள் மெதுவாக ஓரம் கட்டப்படுவர். ஆகக் கூடியது ஆசிரியத் தொழில் அல்லது திட்டமிடல் என்ற அளவில் முடங்கவேண்டிய நிலை ஏற்படும். ஆங்கிலக் கல்வி தகவல் தொழில்நுட்ப அறிவு, சிங்கள மொழிமூல அறிவு உள்ளவர்களுக்கு இலங்கையின் எந்தப் பாகத்திலும் பணிபுரியும் வாய்ப்பு ஏற்படும். இது தமிழ் மாணவர்களுக்குச் சூனியமாகவே இருக்கும். இவ்வாறாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்த தமிழர்களின் தனித்தன்மையை எவ்வாறு இல்லாமலாக்குவது என்பது நன்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**கல்வி வாய்ப்புக்களில் அதிக அக்கறை**

அண்மையில் கிளிநொச்சியில் பொறியியல் துறைக்கான கட்டத் தொகுதியைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார். அதன் அடுத்த கட்டமாக அதிகமான சிங்கள மாணவர்கள் பொறியியல் துறைக்கு அனுமதிக்கப்படுவர். அதேவேளை திருகோணமலை வளாகத்தில் 340மில்லியன் ரூபா செலவில் பயன்பாட்டுவிஞ்ஞானப் பிரிவுக்கான மாடிக்கட்டடம் ஒன்றை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்தார். வடக்குக் கிழக்கில் ஏற்படுத்தப்பட்டு வரும் கல்விக்கான உட்கட்டுமானங்கள் மேலும் மாணவர்களின் தொகையை அதிகரிக்க வழிசெய்யும். அதை நிரப்பும் அளவுக்குத் தமிழ் மாணவர்களின் தொகை இருக்கப் போவதில்லை.

**வடக்குக் கிழக்கு மாவட்டங்களின் பின்தங்கல்**



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பட்டப்பயில்நெறிகளுக்கான அனுமதிக் கையேட்டில் 16மாவட்டங்கள் கல்வியின் பின்தங்கிய மாவட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுக்கு 5வீத விசேட நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. வடக்குக் கிழக்கில் 8மாவட்டங்களும், நுவரெலியா, அம்பாந்தோட்டை, புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை, பதுளை, மொனராகலை, இரத்தினபுரி ஆகியனவும் இதில் அடங்குகின்றன. முன்னிலையிலுள்ள மாவட்டங்களில் இணைந்து கொள்ளும் அளவுக்கு வடக்குக் கிழக்கின் எந்த மாவட்டங்களும் கல்வியில் முன்னேறவில்லை.

**தேவையைப் பூர்த்தி செய்வதற்கு மகாவலி வந்து சேரும்**

சிங்கள அரசியல்வாதிகள், திட்டமிடலாளர்கள் (பீரோகிரட்ஸ்), கல்விமான்கள் போன்ற அனைவரும் இணைந்து இது பற்றிச் சிந்தித்துச் செயற்படுகிறார்கள். மாணவர்களின் தொகையை அதிகரித்து விடுதி வசதிகள், ஏனைய உட்டுகட்டுமானங்கள், துறைசார் அபிவிருத்திகள் என விரிவாக்கம் செய்யும்போது குறிப்பிட்ட தமிழர் பகுதிகளில் (தரைகீழ் நீர்வளம் போதாது, மாசு) முதலில் குடிநீருக்கே பெரிய தட்டுப்பாடு ஏற்படும். இந்த நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன மகாவலி நீர் இரணைமடுக்குளத்துக்குள் திறந்து விடப்படும். அதேவேளை யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் வழங்கல் திட்டத்திலும் பெரிய குழாய் இணைப்பு வேலைகள் ஏ9வீதிகளுக்கு அமைவாக நடைபெற்று வருகின்றன. இது இரணைமடுக் குளத்தின் மழைநீரைமட்டும் வைத்துத் திட்டமிடவில்லை என்பது தெளிவாகிறது.

**மட்டுப்படுத்தப்பட்ட மாகாண ஆட்சி**

பொறியியல் பீடக் கட்டடத் திறப்பு விழாவின்போது இரணைமடுக்காட்டுப் பகுதியில் புலிகளால் பயன்படுத்திய விமான ஓடுதளம் சுற்றுலாப் பயணிகளுக்கான விமானத் தளமாக மாற்றப்படவுள்ளது பற்றியும் தலைமை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். புலிகள் தமது இராணுவ நகர்வுகளை மறைத்து வைத்திருந்த அடர்ந்த காட்டுப்பகுதியைச் சுற்றுலாப் பயணிகளுக்காகத் திறந்து விடும்போது பெரியளவிலான காடழிப்பும், கட்டடங்களும், காப்பெற் வீதி, மின்சாரர இணைப்புக்கள் எனப் பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. தொல்லியல் திணைக்களம், வனவளத்துறை, விமானப் போக்குவரத்து, மின்சாரம், பெரிய நீர்ப்பாசனம் போன்ற மத்திய அரசுக்குச் சொந்தமான அமைச்சுக்களின் ஊடாகவே இந்த அபிவிருத்திகள் திட்டமிடப்படுகின்றன. இதுவிடயத்தில் மாகாணசபையின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. இந்த அபிவிருத்திகள் வேண்டாம் எனத் தமிழ் அரசியல் தலைவர்கள் குறிப்பிட முற்பட்டால்; அது அவர்களைத் தமிழ் மக்களிடமிருந்து பிரிப்பதாகவே அமையும். அபிவிருத்தி என்பது இன்றைய சூழலில் தவிர்க்க முடியாத யதார்த்தமாக உள்ளது.

இந்தப் பின்னணியில்தான் இனிமேல் ஏற்படப்போகின்ற மாற்றங்கள் அனைத்தும் இருக்கப்போகின்றன. தமிழரின் ஒற்றுமையின்மை என்ற அத்திபாரத்தின் மீதே இவை கட்டியெழுப்பப்பட இருக்கின்றன. இவற்றைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையோ, அவற்றுக்கு எதிராகச் செயற்படக்கூடிய பொறிமுறைகளையோ தமிழர்கள் முன்னெடுக்க வேண்டும். நிலமை இப்படியே நீண்டால், இன்னும் பல வருடங்களுக்கு மலேசிய ரயில் ஊழியர்கள் போல பணியாற்றுவார்களே தவிர, தமிழர் தமக்கு என்று எதையும் உருவாக்கி விட வாய்ப்பில்லை.

# ட்ரெண்ட் த வேர்ள்ட்

தொகுப்பு
பிரகாஸ்

# மியன்மாரில் இடம்பெற்றது இனவழிப்பே!



மியன்மாரில் இடம் பெற்றது இன அழிப்புத்தான் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளதுஐக்கியநாடுகள் சபை.
பௌத்த பேரினவாத நாடுகளில் ஒன்றுதான் மியன்மார். அங்குள்ள ரக்கினே மாகாணத்தில்சிறுபான்மை மக்களாக ரொஹிங்யர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த நிலையில் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறிக்கொண்டுஅங்கு ஓர் ஆயுதக்குழுவும் போராடி வந்தது. ரொஹிங்ய ஆயுதக் குழுவை ஒடுக்குகிறோம் என்று கூறிக் கொண்டுமியன்மார்இராணுவம்முன்னெடுத்த நடவடிக்கைகளின் பாதிப்பெல்லாம் ரொஹிங்யப் பொதுமக்களையே சென்றடைந்தது. கடந்தவருடம்இமாலயஅளவில் இராணுவ நடவடிக்கை முன்னெ டுக்கப் பட்டது.
சுமார் ஆறு லட்சம் ரொஹிங்யர்கள் பாதிக் கப்பட்டுஅயல்நாடானபங்களாதேஷுக்குள் அடைக்கலம் தேடினர். பல்லாயிரக் கணக் கானவர்கள் கொல்லப்பட்டனர். அவர்களிடத்தில் ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக் கப்பட்ட 'உண்மையைக் கண்டறியும் குழுவால்' மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள், நகர்வுகள் என்பவற்றின் அடிப்படையிலேயேமியன்மாரில்மேற்கொள்ளப்பட்டது இன அழிப்புத்தான் என்று உறுதிபடத் தெரியவந்துள்ளது.

**'அங்குமொரு பௌத்த பேரினவாதம்'**

# இமாலயப் போர் பயிற்சி



சுமார் 3 லட்சம் சிப்பாய்கள் போர்ப் பயிற்சியொன்றில்கலந்துகொண்டால்எவ்வாறிருக்கும். ரஷ்யாவின் தலைமையில் அத்தகையதொரு பயிற்சி இடம்பெறவுள்ளது.
1981ஆம்ஆண்டுவாக்கில்இடம்பெற்றபனிப்போர்களின் பின்னர் நடைபெறும் மிகப்பெரும் போர்ப் பயிற்சியாக இது அமையவுள்ளது. ரஷ்யாவும் சீனாவும் நேரடி ஒப்பந்தங்கள் மூலம் இந்தப் போர்ப் பயிற்சியில் கலந்துகொள்கின்றன. மொங்கோலியாமூன்றாம்தரப்பாகசிப்பாய்களை அனுப்புகிறது.

**"அமெரிக்காவுக்கு எதிரான நகர்வுதானோ..."**

# மீண்டுமொரு போர்முனை

உலகிலுள்ள அனைத்து நாடுகளும் தமக்குள் நட்புப் பாராட்டியதாக வரலாறு இல்லை. போர்முனையாகஅல்லது உலகப்போரின் தோற்றுவாயாக ஏதேனும் விடயங்கள் தொடர்ந்து இருந்து கொண்டேதான் உள்ளன. இஸ்ரேல்-பலஸ்தீனம், இந்தியா - பாகிஸ்தான், அமெரிக்கா - கியூபா விவகாரங்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்கள். இவற்றை விடவும் அவ்வப்போதுசிலவிடயங்கள் பூதாகரமாவதுண்டு. அவ்வாறான தொரு போர்முனையாக அண்மைக் காலங்களில் உருவாகிவரும் விவகாரம் தான் ஈரான்-அமெரிக்கா இடையிலான பிரச்சினை.
ஈரானுடன் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அண்மையில்வெளியேறிய அமெரிக்கா, ஈரானின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது. அமெரிக்காவின் இந்த நகர்வால் தற்போது ஈரான் இருவேறு நிலைப்பாடுகளில் இருக்க வேண்டிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஒன்று, அமெரிக்காவைப் போன்று தானும் ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டு அணுவாயுதச் சோதனைகளில் ஈடுபடுவது. இரண்டாவது, அமெரிக்காவைத்தவிர்த்துகுறித்தஒப்பந்தத்துடன்தொடர்புடைய ஏனையநான்குநாடுகளுடனும்ஒப்பந்தத்தைத்தொடர்வது. இவற்றில் முதலாவது நிலைப்பாட்டை ஈரான் எடுக்க முடிவு செய்துள்ளது. அவ்வாறு ஈரானும் ஒப்பந்தத்தில் இருந்து விலகினால், அது மற்றொரு உலகப்போருக்கு தோற்றுவாயாக அமையலாம்என்றால் அது மிகைப்படுத்திய கருத்தாக இருக்காது.



**'மீண்டும் ஒரு போர்முனை...'**

# முதுபெரும் கலைஞருக்கு அமெரிக்காவின் அஞ்சலி






முதுபெரும்தமிழத்தலைவர்மு.க.கருணாநிதிக்கு உலக வல்லரசான அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில்இரங்கல்தீர்மானம்நிறைவேற்றப்பட்டமை பற்றிய தகவல்கள்தான் தற்போது 'ட்ரெண்ட்'.
இந்தத் தீர்மானத்தை அமெரிக்க நாட்ளுமன்ற உறுப்பினர் டேனி கே டெவிஸ் கொண்டு வந்தார். கருணாநிதியின்பொதுவாழ்க்கை,அரசியல்,எழுத்துலகம் ஆகியன சார்ந்த சாதனைகள் அதில் இடம் பெற்றுள்ளன.

**"தமிழ்த் தலைவனுக்கான சிறந்த அங்கீகாரம்..."**



ஹவாய் தீவில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெய்த கனமழை காரணமாக அங்குள்ளபல்வேறு இடங்கள்தற்போதுவெள்ளக்காடாக மாறியுள்ளன. வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சிறுசிறு படகுகளில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்



வாரம் ஒரு நாடு

# மக்காவு

## ஒரு நாடு: இரண்டு ஆட்சிகள்

7

இந்தத் தடவை ஆசியக் கண்டத்துக்குள் நுழைகிறோம். சீனாவின் பிடியிலிருக்கும் இரண்டு நாடுகளில் ஒன்று ஹொங்ஹொங். மற்றையது மக்காவு! மக்காவுவைச் சீன அரசு 'மக்காவு சிறப்பு நிர்வாகப் பிரிவு' என்றுதான் அழைத்து வருகின்றது. இதன் எல்லைப் பாதுகாப்புக்கும், வெளிநாட்டு உறவுக்கும் சீன அரசுதான் பொறுப்பேற்கிறது. அதே சமயம் உள் நாட்டு விவகாரங்களில் சீன அரசு தலையிடுவதில்லை. நாட்டுக்கான சட்டங்களை இயற்றுவது, பொலிஸ் நிர்வாகம், மக்களிடம் வரி அறவிடுவது, தமக்கென ஒரு நாணயத்தை உருவாக்குவது போன்ற உள்நாட்டு விவகாரங்கள் மக்காவுவிடமே இருக்கின்றன. ஆச்சரியமாக இருக்கிறதா? ஆச்சரியந்தான். இது ஒரு நாடாக இருந்தாலும் இரண்டு ஆட்சிகளைக் கொண்டுள்ளது. தென் சீனக் கரையோரப் பகுதியில் ஹொங்ஹொங் நகருக்கு அண்மையாக அமைந்திருக்கிறது மக்காவு.

### பணக்கார நாடாகப்போகிறது!

ஒற்றை ஆட்சியோ, இரட்டை ஆட்சியோ பிந்திய செய்திகளின்படி, இன்று உலகின் அதி பணக்கார நாடாகவிருக்கின்ற கட்டாரை ஓரங்கட்டி விட்டு, முதலாம் இடத்தை மக்காவு பிடிக்கப் போகிறது. உடனடியாக இது சாத்தியமில்லை என்றாலும், 2020ஆம் ஆண்டில் நிலமை அதுவாகத்தான் இருக்கும் என்கிறார்கள் அவதானிகள். இங்கேயும் எண்ணெய் வயல்கள் இருக்கின்றனவா? என்று நீங்கள் கேட்டால், அப்படியொன்றும் இல்லை. இது ஒரு பெரிய சூதாட்டக் கிடங்காக இருப்பதே வருங்காலத்தில் பணக்கார நாடாகும் என்கிற எதிர்பார்ப்புக்குக் காரணம். சீனாவில் சூதாட்டம் அடியோடு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இந்தக் குட்டி நாட்டின் பிழைப்பே அதுவாகத்தான் இருக்கின்றது. நான் விரதகாரி. நீங்கள் மீன் சாப்பிடுங்கள் என்று கணவனுக்கு மீன் சமைத்துக் கொடுக்கும் மனைவியின் கதை போலத்தான் இது இருக்கின்றது. அவதானிகளின் கணிப்புப்படி, 2020ஆம் ஆண்டில் முதலாம் இடத்தை மக்காவு பிடிக்க, கட்டார் இரண்டாம் இடத்துக்கு வரும். ஐரோப்பிய நாடான லக்ஸம்பேர்க் மூன்று, நான்காவது இடம் சிங்கப்பூர், ஐந்தாவது இடம். புரூணை டருஸலாம், ஆறாவதாக அயர்லாந்து, ஏழாவது நோர்வே, எட்டாவது ஐக்கிய அரபுக் குடியரசு, ஒன்பதாவது குவைத், பத்தாவது ஹொங்ஹொங் என்று வரிசை நீள்கின்றது.



### உலகின் சூதாட்டத் தலைநகரம்

உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் தலைநகரம் இருப்பது போல, உலக நாடுகளின் சூதாட்டத்துக்கும் ஒரு தலைநகரம் இருக்கின்றது. அதுதான் மக்காவு. போர்த்துக்கேயர்களின் காலனித்துவ நாடாக இருந்த காலத்தில், அவர்கள் மக்காவுவில் சூதாட்டத்தை ஆரம்பித்து விட்டார்கள். அண்ணளவாக 1850ஆம் ஆண்டில் இங்கு சூதாடுவதை அரசு சட்டரீதியாக அனுமதித்து விட்டது. இந்தக் குட்டிநாடு ஈட்டுகின்ற 76வீதமான அளவு வருமானம், சூதாட்டம் மூலமே கிடைக்கின்றது. ஹொங்ஹொங், சீனப் பிரதேசங்களில் இருந்து பெருந்தொகையினர், இங்கு வந்து மொய்க்கிறார்கள். உலகப் பிரபல்யமான அமெரிக்காவின் லெஸ் வெகாஸ் நகர இரவு நேரக் கேளிக்கை விடுதிகள் இங்கு இயங்குகின்றன. ஆஸ்திரேலியாவின் கேளிக்கை விடுதிகளும் இங்கு உண்டு. லெஸ் வெகாஸ் நகரின் வருமானத்தைப் பத்து வருடங்களுக்கு முன்பே மக்காவு முந்தி விட்டது. 20ஆம் நூற்றாண்டில் மேற்கத்தேய 'கசினோ' விளையாட்டுகள் அறிமுகமாவதற்கு முன்னர், இங்கு சீன விளையாட்டுக்கள் மாத்திரமே




விளையாடப்பட்டு வந்திருக்கின்றன. சீனக்குடியரசின் கைகளுக்கு மக்காவு மாற்றப்பட்ட ஆண்டு 1999. இந்த ஆண்டில் மக்காவு சீனாவின் சிறப்பு நிர்வாகப் பிரதேசமாக மாறியது. ஆனால் சீன அரசு, இந்த நாட்டின் சூதாட்டக் கொள்கைகளில் தலையிடவில்லை.

### நாட்டைச் சீராக்கிய அந்நிய நாடு

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் இங்கு குடியேறுவதற்கு முன்னர், எந்த விதமான அபிவிருத்தியையும் மாக்கவு காணவில்லை. முதற் தடவையாக 1535ஆம் ஆண்டில் மாக்கவுத் துறைமுகத்தில் தங்கள் கப்பல்களை நங்கூரமிட்டுத் தரித்து நிற்பதற்குப் போர்த்துக்கேய வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு தங்கி நின்று வியாபாரம் செய்ய அனுமதி கிடைக்கவில்லை. 1552ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் கரையோரத்தில் கடைகள் திறப்பதற்குத் தற்காலிகஅனுமதியை அளித்திருக்கிறார்கள். 1557ஆம் ஆண்டில் இது நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆண்டுக் கட்டணமாக 500 'ரெயில்ஸ்' செலுத்தியுள்ளார்கள்.(இது 18.9கிலோகிராம் வெள்ளிக்குச் சமனானது)

1564ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகளுடனான வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தினார்கள். 17ஆம் நூற்றாண்டில் மக்காவுவில் 5ஆயிரம் அடிமைகள் இருந்திருக்கிறார்கள். இந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கு ஒல்லாந்தர் பல தடவைகள் முயன்றுள்ளார்கள். போர் தொடுத்துள்ளார்கள் வெற்றி பெற முடிய வில்லை.

### ஆதிக்க ஆட்சியின் முடிவு

1999ஆம் ஆண்டு. டிசம்பர் 20ஆம் திகதியுடன் மாக்காவுவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த போர்த்துக்கேயரின் காலனித்துவ ஆட்சி முடிவுக்கு வந்திருக்கிறது. சீனா மாக்காவுவைத் தன்னுடைய சிறப்பு நிர்வாகப் பிரதேசமாக மாற்றியது. சீனாவிலிருந்து உல்லாசப் பயணிகள் இவ்விடம் நோக்கி அதிகளவில் வருகை தந்தமையும், இவ்விடத்தில் 'கஸினோக்கள்' உருவாக்கப்பட்டதுவும், மக்காவுவை மெல்ல வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு சென்றிருக்கின்றன.

### வந்து குவியும் சீனர்கள்

புள்ளி விவரங்களின்படி, வருடத்துக்கு 30மில்லியன் பேர் இங்கு வந்து போகிறார்களாம். இதில் 90வீதமானவர்கள் சீனர்கள். பணக்காரச் சீனர்கள் தமது பணத்தைப் பதுக்குவதற்கு இங்கேதான் வருகிறார்கள். சீனாவில் இந்த விடயத்தில்பெரும் கட்டுப்பாடு நிலவுகிறது. அங்கு கசினோக்களும் கிடையாது.

இங்கே வருபவர்கள் பணத்தைக் கொடுத்து சிப்ஸ்களாக மாற்றிக் கொள்கிறார்கள். பின்பு இதை ஹொங்ஹொங் டொலர்களாகத் தமக்கு வேண்டிய நேரங்களில் மாற்றிக் கொள்கிறார்கள்.

### கிடுகிடு வளர்ச்சி

தூங்குகின்ற மீனவர்களுடனான சிறு சிறு கிராமங்களைக் கொண்ட இந்த மாக்கவு, இன்று உலகின் அதி பணக்கார நாடாக மாறிக்கொண்டிருப்பதற்கு, இந்தச் சூதாட்டமே கைகொடுக்கின்றது. இங்கு வேலையில்லாதவர்கள் 2 வீதம் என்கிறார்கள். வேலையில்லாதவர்கள் இல்லைஎன்றேசொல்லிவிடலாம். 19ஆம் நூற்றாண்டின் முடிவில் ஹொங்ஹொங்கின் துறைமுகம் மாக்காவுவை ஓரங்கட்டிய போது, போர்த்துக்கேயருக்கு இந்தப் பிரதேசத்தின் மீதிருந்த நாட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. சூதாட்டமே இன்று நாட்டைச் சுபீட்ச நிலைக்கு மாற்றியிருக்கின்றது. அதிலும் குறுகிய காலத்தில் இதன் கிடுகிடு வளர்ச்சி, பார்ப்போரைப் பிரமிக்க வைக்கின்றது.

### மதுபானம் இல்லாத கசினோக்கள்


நீங்கள் ஜேம்ஸ் பாண்ட் திரைப்படங்கள் பலவற்றைப் பார்த்திருப்பீர்கள். லெஸ் வெகாஸின் காஸினோக்களில், கைளில் மதுபானக் கிண்ணங்களுடன், கொழுத்த பணக்காரர்கள் அங்குமிங்கும் நடமாடுவதைக் கவனித்திருப்பீர்கள். சூது விளையா டும் போது, மதுபானம் கொண்டுவரும்படி கட்டளையிடுவார்கள். மதுபானம் இல்லாத காஸினோக்கள் இங்கு கிடையாது. ஆனால் மாக்காவுவின் நிலைமை தலைகீழாக இருக்கின்றது. இங்குள்ள கசினோக்களில் மதுபானம் கிடையாது. தேநீர்தான் குடிக்க முடியும். ஆச்சரியமாக இருக்கிறதா? ஆனால் நிஜம் அதுவாகத்தானே இருக்கின்றது. மதுபானத்துக்கு இங்கே கும்பிடு போட்டுவிட்டார்கள். அமெரிக்க கசினோவில் பிரபல்யமாக உள்ள 'பிளாக்ஜாக்', 'போக்கர்' விளையாட்டுகள் மேசைகளில் இருப்பதில்லை. மிக இலகுவாக விளையாடக்கூடிய சீன விளையாட்டான 'பக்கறற்'றே இங்கு அதிகம் விளையாடப்படுகின்றது. அமெரிக்காவின் இரவல் என்றாலும், இங்கே எல்லாமே சீனமயம் என்பது நேரில் பார்க்கும்போது தெரியவரும். லாஸ் வெகாஸ் நகருடன் ஒப்பிடும்போது, இங்குள்ள சூதாட்ட மேசைகளின் தொகை குறைவுதான். ஆனால் உலகின் முதன்மையான மிகப் பெரிய கசினோக்களில் முதல் எட்டும் இந்த நாட்டுக்கு உரியதுதான்!

### அளவில் சிறிதானாலும் அடர்த்தியான சனச் செறிவு

உலகின் மிகச் சிறிய பிரதேங்களில் ஒன்றான இதன் பரப்பளவு 28சதுர கிலோ மீற்றர்கள் மாத்திரமே! இங்கு சனத்தொகை நெருக்கமாக உள்ளது. ஐ.நாவின் கணிப்புப்படி, அதிக சனச் செறிவைக் கொண்ட இங்கு ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்புக்குள் 21ஆயிரம் பேர் உள்ளார்கள். முழுவதுமான சனத்தொகை கிட்டத்தட்ட 6இலட்சத்து 50ஆயிரம் பேர். இங்குள்ள சனச்செறிவுபோல பணச்செறிவும் இருப்பதால், உலகின் அதி ஆடம்பரமான, வியக்கவைக்கும் விடுதிகளை யும், கசினோக்களையும், காணமுடிகிறது. "படித்தவன் சூதும் வாதும் செய்தால், போவான் போவான் ஐயோவென்று போவான்" என்று அன்று சொல்லி வைத்தான் பாரதி. 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்கிறது கொன்றை வேந்தன். தருமர் சூதாட்டத்தில் தனது ரதங்கள், சேனைகள், யானைகள், குதிரைகள், பணிப்பெண்கள், பணியாட்கள், நாடு என அனைத்தையும் இழந்த நிலையில், தனது சகோதரர்களைப் பணயம் வைக்கத் தொடங்கினார் என்கிறது இதிகாசம். பாம்பின் விடம் சில தருணங்களில் தலைசிறந்த ஔடதம் ஆகுவதுபோல், தீண்டத்தகாத சூதாட்டம், இவர்களைச் சிறப்பாக வாழவைக்கின்றதுபோலும்! ■








# முல்கி (ஹிந்தி)


**இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாக வாழும் பகுதியில், எப்படி ஒருவனின் குற்றச் செயல் அந்த ஒற்றுமையைச் சிதைக்கிறது என்பதைப் படம் இயல்பாக நம் கண் முன்னே விரிக்கிறது.**

தேசம்' என்னும் பொருள்படும் உருதுச் சொல் 'முல்க்'(mulk). ஹிந்தித் திரைப்பட இயக்குநர் அனுபவ் சின்ஹாவின் கைவண்ணத்தில் உருவாகியிருக்கிற திரைப்படம் இது.

### கதை

இந்தியாவின் வாரணாசிப் பகுதியில் வசித்து வருகிறது, வழக்கறிஞர் முராத் அலி முகமதுவின் (ரிஷி கபூர்) குடும்பம். தங்கள் வீட்டுக் கொண்டாட்டத்தில் இந்துக்களும் கலந்துகொள்ளும் அளவுக்கு மரியாதையான செல்வாக்கைப் பெற்றிருக்கிறார்கள் முகமதுவின் குடும்பத்தினர். முகமதுவின் தம்பி பிலாலின் (மனோஜ் போவா) மகன் ஷாஹித் (பிரதீக் பாப்பர்), சில தவறான தொடர்புகளால் 'ஜிஹாத்' பாதையைத் தெரிவு செய்கிறார். அவர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்படுகிறார். அதோடு பிரச்சினை முடிந்ததா என்றால் இல்லை.

ஷாஹித் விட்டுச்சென்ற குற்றம், அவர் குடும்பத்தின் மீது படிகிறது. முகமதுவின் வீட்டின் முன் சுவரில், 'பாகிஸ்தானுக்குப் போ!', கதவில் 'தீவிரவாதி' என்றெல்லாம் அருகில் உள்ளஇந்துக்களால் வாக்கியங்கள் எழுதப்படுகின்றன. ஷாஹித்தின் தந்தை பிலால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். அவரை வெளியில் கொண்டு வர, முராத் அலி முகமதுவும் அவருடைய மருமகளும் வழக்கறிஞருமான ஆர்த்தியும் (டாப்ஸி - பிறப்பால் இந்து) உதவியுடன் தாங்கள் நிரபராதிகள் என்பதை நிரூபிப்பதற்காக ரிஷி கபூர் சட்டப் போராட்டத்தை நடத்துகிறார். இதனிடையே, சிறையில் பிலால் இறந்துவிட,



வழக்கை முடித்துவிடலாம் என்று பலரும் முகமதுவிடம் சொல்கிறார்கள். ஆனால், அப்படிச் செய்தால், தன்னுடைய குடும்பம் தேசத் துரோகிப் பட்டத்துக்கு ஆளாகிவிடும் என்று வேதனைப்படுகிற முகமது, வழக்கைத் தொடர்ந்து நடத்துகிறார். அந்த வழக்கின் தீர்ப்பு அவர்களுக்குச் சாதகமாக முடிந்ததா? இல்லையா? என்பது மீதிப் படம்.

### இந்திய இஸ்லாமியர்களின் நிலை

படத்தின் முதல் பாதி குடும்ப நாடகமாகச் செல்ல, இடைவேளைக்குப் பிறகு நீதிமன்றக் காட்சியாக மாறுகிறது. அரச தரப்பு வழக்கறிஞராக வரும் சந்தோஷ் ஆனந்த் (அதோஷ் ராணா), "இஸ்லாமியர்கள் என்றால் தாடி வைத்திருப்பார்கள், ஐந்து வேளை தொழுவார்கள், கிரிக்கெட்டில் பாகிஸ்தான் வென்றால் பட்டாசு வெடிப்பார்கள்" எனப் பொதுப் புத்தியில் ஊறிப்போன வாதங்களை முன் வைக்கிறார். முராத் அலி முகமதுவும் ஆர்த்தியும் அவற்றை "இந்த வழக்குக்குச் சம்பந்தமில்லாதவை" என்று சொல்ல, "வழக்கே இதுதான்" என்கிறார் சந்தோஷ். அந்த இடத்தில், இந்தியாவில் இன்றைய இஸ்லாமியர்களின் நிலையை தெளிவாக உணர்த்திவிடுகிறார் இயக்குநர் அனுபவ் சின்ஹா.

கதாபாத்திரங்களின் தேர்ந்த நடிப்பு, ஒளிப்பதிவு (இவான் முல்லிகன்) ஆகியவற்றுக்குப் பிறகு, வசனங்கள் இந்தப் படத்துக்குப் பெரிய பலம். "வரைபடத்தில் உள்ள எல்லைகளுக்கு உட்பட்டு ஒரு நாடு வளர்வதில்லை", "என்னுடைய தாடிக்கும் ஒசாமா பின்லேடனின் தாடிக்கும் உங்களால் வித்தியாசம் காண முடியாவிட்டால், அப்போதும் நான் தாடி வைத்துக்கொள்வதற்கான உரிமை எனக்கு இருக்கிறது" , "தீவிரவாதம் என்பது குற்றச் செயல். அது எந்த ஒரு மதத்தின் தனிப்பட்ட செயலும் அல்ல" என்பன போன்ற வசனங்கள், 'நாம்' (இந்துக்கள்), 'அவர்கள்' (இஸ்லாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர்) என்ற பிளவு, இந்தியச் சமூகத்தில் எந்த அளவுக்கு ஊடுருவியிருக்கிறது என்பதைக் காட்டுகின்றன.

### இன்னொரு பின்னணி

இன்று 'பசு'வின் பெயரால் இரக்கமற்ற தாக்குதலுக்கு ஆளாகும் பெருமளவு இஸ்லாமியர்கள் பாதிக்கப்படும் மாநிலமாக உத்தரப் பிரதேசம் உள்ளது. வாரணாசி அங்குதான் உள்ளது. அது இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் தொகுதி. அங்கிருந்து 16 கிலோ மீற்றர்கள் தொலைவில் இருக்கிறது முகல்சராய் எனும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ரயில் நிலையம். அது அண்மையில், காவி நிறம் பூசப்பட்டு, 'தீன தயாள் உபாத்யாய்' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு அரசியல்மயப்பட்ட ஒரு பகுதியில் இப்படி ஒரு கதை நடப்பதாகச் சொன்ன துணிச்சலுக்காகவே இயக்குநரைப் பாராட்டலாம். அதுதான் படத்தின் வெற்றி! எது தீவிரவாதம்... யார் தீவிரவாதி? என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் நல்லதொரு திரைக்கதை மூலம்.

### திரைக் கதைப் பொருத்தம்

எடுத்துக்கொண்ட கருவை மட்டும் அலசும் விதமாக, நீதிமன்ற வளாகத்துக்குள்ளாகவே பெரும்பாலான காட்சிகள் கோர்க்கப்பட்டிருக்கும். இவ்வகைப் படங்களின் வெற்றிக்குத் தேவை மூன்றே மூன்று விடயங்கள்தான். சரியான கதைக் கரு, அர்த்தமுள்ள வசனங்கள், அதற்குத் தேவையான நடிப்பு ஆளுமைகள். இது மட்டும் இருந்துவிட்டால் போதும். திரைக் கதை கொஞ்சம் பலவீனமானதாக இருந்தாலும் கவலைப்படத் தேவையில்லை. ஆனால், திரைக் கதையும் சளைக்காமல் பொருந்தியிருக்கிறது. இந்தக் காலகட்டத்தில், இதுபோன்ற ஒரு படம் வருவது சவாலான விடயம்! கொஞ்சம் பிசகினாலும் ஒருதலைப்பட்சமான படம் என்ற விமர்சனம் வரக்கூடிய கதை. (அவ்வாறான விமர்சனங்கள் எப்படியிருந்தாலும் வரும் என்பது வேறு விடயம்!) உயரமான கம்பியின் மேல் நடக்கும்போது சமநிலையைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலைமை இயக்குநர் அனுபவ் சின்ஹாவுக்கு! அதைச் சரியாகவும் செய்திருக்கிறார்.

### மத நல்லிணங்கங்கள் பற்றிய பார்வை

இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்கள் நண்பர்களாக வாழும் பகுதியில், எப்படி ஒருவனின் குற்றச் செயல் அந்த ஒற்றுமையைச் சிதைக்கிறது என்பதைப் படம் இயல்பாக நம் கண் முன்னே விரிக்கிறது. அதுவரை நண்பராகக் கருதப்பட்ட ரிஷிகபூரை அந்தக் குடியிருப்புப் பகுதியில் இருக்கிற அனைவரும் தீவிரவாதியாகப் பார்ப்பது மனிதர்களின் ஆழ்மனதில் பதிந்திருக்கும் வன்மத்தை வெளிக்கொணர மதம் எப்படி ஒரு கருவியாகப் பயன்படுகிறது என்பதை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. எடுத்தவுடன் நீதிமன்றக் கருவுக்குள் நுழையாமல், சம்பந்தப்பட்ட கூட்டுக்குடும்பத் தின் பாசப் பிணைப்பு, சமூகத்துடனான நட்பு என முன் கதைகளைக் கூறிவிட்டு, இவர்கள் தீவிரவாதியா இல்லையா என்ற காட்சிகள் வழியாக நுழைந்தது படத்தின் பெரிய பலம். இதனாலேயே இந்தக் குடும்பம் நிச்சயமாகத் தவறு செய்திருக்காது என்பதை நாம் உணர்ந்துகொண்டு நம்மை அறியாமல், நீதி மன்றத்தில் அனிச்சையாக அவர்கள் பக்கம் அமர்ந்து விடுகிறோம்.

### இரண்டு பாத்திர வார்ப்புக்கள்

படத்தின் இரண்டு தூண்கள் ரிஷிகபூரும், டாப்ஸியும் தான். அதில் ரிஷிகபூருக்குப் பார்த்தவுடன் ஈர்க்கும் ஆளுமைகொண்ட ஒரு பாத்திரம். அதுவரை தன்னை மதித்தவர்கள், ஒரு சந்தேகம், ஒரு குற்றச்சாட்டு என்றவுடன் எப்படி அவரின் மதத்தைக் காரணம் காட்டி விலகிக் கொள்கிறார்கள் என்பதைக் கண்டு வருத்தம் கொள்வதும், தன் இயலாமையை நினைத்துத் தவிப்பதும், தன் வீட்டில் கற்கள் வீசப்படும்போது ஓடாமல் தைரியமாகத் தன் மனைவியைப் பாதுகாக்க நிற்பதும் என நடிப்பில் பல பரிமாணங்களைக் காட்டுகிறார்.

சட்டத்திரணி கதாபாத்திரத்தில் வரும் டாப்ஸிதான் படத்தின் நாயகி அவரின் மதத்தையும் சாதியையும் தெரிந்து கொள்ள, "பெயர் என்ன?" என்று கேட்கும் அதிகாரியிடம், "ஆர்த்தி முகமது" என்று அவர் பதில் கூறும் இடம், இரண்டு மதத்தைச் சேர்ந்தவளாகவும் தான் இருக்கக் கூடாதா? என்ற கேள்வியை முன் வைக்கிறது.

ஒரு தரப்பை மட்டுமே குறிவைத்துப் பேசாமல், "பாகிஸ்தான் ஜெயிச்சா ஒரு சாரார் கொண்டாடுறாங்க. அதை நிறுத்தணும்!" என்று அந்த மதத்தைச் சார்ந்த ஒருவரை வைத்தே ஒரு கருத்தை முன் வைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

அதேசமயம், "ஒரு மதத்தைச் சேர்ந்த அனைவரையும் குற்றவாளியாகவும் தீவிரவாதியாகவும் பார்ப்பது என்ன நியாயம்?" என்ற கேள்வியையும், இன்னமும் எத்தனை நாள்களுக்கு மதத்தின் பெயரால் 'நீயா, நானா?' விளையாடப்போகிறோம்? எப்போது இணைந்து ஒரு நாடாக வாழப்போகிறோம் என்ற கேள்வியையும் முன்வைக்கிறது படம். ஆனால், இந்தப் படம் எழுப்பியிருக்கும் கேள்விகள், நியாயத் தராசை சரியான சமநிலையில்தான் வைத்திருக்கிறதா என்பதற்கான விடை அவரவர் மனநிலையைப் பொறுத்ததே! ■



கட்டுரை

ந.ஜெகதீஸ்வரன்




# 21ஆம் நூற்றாண்டிலும் யாழ்ப்பாணத்தில் 'டோக்கன்' சேவை

1970ஆம் ஆண்டு தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் சிறிமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சி நிலவியது. உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டன. இதனால், உள்நாட்டில் பெரியளவில் உணவுத்தட்டுப்பாடு நிலவியது. உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக 'டோக்கன்' எடுக்கின்ற வழக்கம் ஏற்பட்டது. ஓர் இறாத்தல் பாண் வாங்குவதற்காக அதிகாலை நான்கு மணிக்கே வெதுப்பகத்துக்கு முன்பாக வரிசையில் நிற்க வேண்டிய நிலை வந்தது. ஐந்து இறாத்தல் பாண் வாங்குவதாக இருந்தால், வீட்டிலுள்ள ஐவர் அந்த வரிசையில் நிற்கவேண்டும். ஆளுக்கு ஒரு டோக்கனே தருவார்கள்.

இதேபோன்றதொரு நிலை தற்போதும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. யாழ்ப்பாணம் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகமே அதுபோன்றதொரு செயற்பாட்டுடன் இயங்கி வருகின்றது. சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கான மருத்துவத் தகுதிகளைக் கண்டறிந்து சான்றிதழ் வழங்குவதே இதன் பணி. யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அருகில் இந்த மையம் இருக்கிறது. தீவுப்பகுதி, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி என நாலா புறங்களில் இருந்தும் சாரதி அனுமதிப் பத்திரம் பெறவிருப்பவர்கள் அதிகாலை நான்கு மணிக்கே அங்கு வந்து சேர்கின்றனர். (இந்த இடத்தில் பெண்கள்கூட தமது இயற்கைத் தேவைகளை நிறைவு செய்யும் வசதி இல்லை)

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு முன் கண் பரிசோதனை, குருதிப் பரிசோதனை என்பன மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது போக்குவரத்துத் திணைக்களத்தின் விதிமுறையாகும். அதைப் பெற்றதன் பின்னரே சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பரீட்சைக்கான திகதியைப் பெறவேண்டும். இதனடிப்படையில் வைத்தியப்.பரிசோதனைக்கு 800ரூபாவும் பரீட்சை மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களச் சேவைகளுக்காக ரூபா 2ஆயிரத்து 700ஐயும் சாரதி அனுமதிப் பத்திரம் பெறவிருப்பவர்கள் செலுத்தவேண்டியுள்ளது.



### அதிகாலை நான்கு மணிக்கே அங்குசென்று டோக்கன் எடுக்கவேண்டும்

வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியமானவர்களே குறித்த தேவைக்கு விண்ணப்பிக்கின்றனர். ஆனால், நாளொன்றுக்கு நூறு பேர் வரையிலேயே வைத்திய பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பாகங்களில் இருந்து பெரும் தொகையானோர் வருவதால் சிரமப்பட வேண்டியுள்ளது. இதில் சில பெண்கள் கைக்குழந்தைகளுடன் காத்து நிற்கின்றனர். 29.8.2018 அன்று காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து பஸ் பயணம் மூலம் இதற்காக அங்கு வந்திருந்த ஒருவர் 130ஆவது நபராக நின்றிருந்தார். அன்று 120பேருக்கு மட்டும் அனுமதி கிடைத்ததால், அன்று அவர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. அந்த நபர் மறுநாள் அதிகாலை 4.30க்கு அந்த இடத்துக்கு மோட்டார் சைக்கிள் உடைய நபர் ஒருவரை வாடகைக்கு அமர்த்தி வந்து சேர்ந்திருக்கிறார். அதற்கான மேலதிக செலவு அவருக்கு ஏற்பட்டுள்ளது. குறித்த சேவை மட்டுப்படுத்தப்பட்டிருப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்தால்கூட 120ஐயும்விட மேலாகக் காவல் நின்றவர்களுக்கு அன்றே டோக்கன்களை வழங்கி மறுநாள் இந்த நேரத்துக்கு வாருங்கள் என்று அனுப்பியிருக்கலாம்.

அத்தகைய நடைமுறையைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்திருக்கலாம். அவ்வாறில்லாமல் முதல் நாள் காவல் நின்றவர் டோக்கன் கிடைக்காது போனால், காவல் நின்ற காலம் வீணாகிப்போகின்றது. மறுநாள் தொடர்ந்தும் காவல் நிற்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

### பாதுகாப்பற்ற பகுதி

இந்த வைத்திய பரிசோதனை நடக்கும் அலுவலகம் மாவட்டச் செயலக வளாகத்துக்குள் அல்லாமல் வேறொரு வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. இதனால், வயதான சிலர் அந்த வரிசையில் வந்து இடம்பிடித்து வேறு யாருக்காவது அந்த இடத்தை விற்று ஆயிரம் ரூபா வரை பணம் சம்பாதிக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

இதைவிட 30.8.2018 அன்று அதிகாலை, 55வயது மதிக்கத்தக்க தாடியும், தலைமயிரும் வளர்த்த அரைக்காற்சட்டையும், தலைக்கவசமும் அணிந்த ஒரு மர்ம மனிதர், தான் வைத்திருந்த ஒரு வெள்ளைத்தாளில் வரிசையில் நிற்பவர்களின் பெயரை எழுதி வாங்கிக் கொண்டிருந்தார். மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் சிலர் தனிப்பட்ட முறையில் வேறு ஏதோ தேவை நிமித்தம் அங்கு வந்திருந்தபோது அந்த மர்ம மனிதனிடம் "நீங்கள் யார்? ஏன் பதிவு செய்கிறீர்கள்?" என்று கேட்டனர். அவர் அந்த இடத்தை விட்டு மெதுவாக நழுவிவிட்டார். அவர் பிரபல வாகனப் பயிற்சி வழங்கும் ஓர் அமைப்பைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என அங்கு நின்றவர்கள் பேசிக்கொண்டார்கள். இவ்வாறான மர்ம நபர்கள் தூரத்திலிருந்து வருகின்ற மக்களை இலகுவில் ஏமாற்றிவிட வாய்ப்புண்டு. உத்தியோக பூர்வ அடையாள அட்டையைக் காண்பிக்காத எவரிடமும் மக்கள் பேசக்கூடாது. இதில் தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்திலும் தவறு இல்லை. அவர்கள் மக்களை அதிகாலையில் அங்கு வந்து காத்திருக்கச் சொல்லவில்லை. ஆனால், மட்டுப்படுத்தப்பட்ட சேவையே மக்களை அதிகாலையிலேயே அங்கு வந்து காத்திருக்கச் செய்கிறது.

"சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமல்ல இன்னும் பல மக்கள் சேவைகளை இணையத்தளங்களில் ஊடாக ஏற்படுத்திக்கொடுக்க முடியும். சகல திணைக்களங்க ளும் இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் மட்டுமே யாழப்பாண மக்களின் வாழ்வை 21ஆம் நூற்றாண்டுக்குரியதாக மாற்ற முடியும்."

### இணையச்சேவை இதற்கு நல்ல தீர்வு

இன்னொரு தந்தை தனது மகளுக்கான டோக்கனை எடுத்துவிட்டுப் பின்னர் மகளைக்கூட்டிவரும் நோக்குடன் அதிகாலையிலேயே அங்கு வந்து நின்றார். நீண்ட நேரம் வரிசையில் நின்றவர், டோக்கன் எடுக்கும் இடத்துக்குச் சென்றதும், "மகள்தான் வந்து டோக்கன் எடுக்க வேண்டும். உங்களுக்குத் தர மாட்டோம்" என்று மறுத்துவிட்டனர். அவர் திரும்பிச் செல்லவேண்டி ஏற்பட்டது. அவர் செல்லும்போது "இந்த அலுவலகத்தில் மக்களுக்கான அறிவுறுத்தல்கள் விளம்பரப் பலகையில் போடப்படவில்லை. அவ்வாறு போடப்பட்டால், யார் யாருடையதோ பேச்சைக்கேட்டு மக்கள் அலையவேண்டியிருக்காது" என்றுவிட்டுப் போனார். வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான நுழைவிசைவு அனுமதிகளைப் பெறுவதற்குக் கொழும்பிலுள்ள நுழைவிசைவு முகவர்களின் இணையச் சேவைக்குள் நுழைந்து, குறித்த சேவைக்காக 'எனக்கு ஒரு நேரத்தை ஒதுக்கித்தருமாறு' கோரிக்கை விடுத்தால் ஒரு சில நிமிடங்களில் அந்த நிறுவனங்கள், இத்தனையாம் திகதி, இத்தனை மணிக்கு இந்த இடத்துக்கு வருமாறு குறிப்பிடுவது மட்டுமல்லாது வரும்போது எத்தகைய ஆவணங்களை எடுத்துவரவேண்டும் என்பதையும் தமது இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கின்றன. இதனால் மக்கள் அலையவேண்டிய நிலை தவிர்க்கப்படுகிறது. அதேவேளை இடைத்தரகர்கள் ஏமாற்றிப் பணம் பறிக்கும் நிலையும் இல்லாது செய்யப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் பெருமளவான இளைஞர்கள் அதிக நேரத்தை அலைபேசிக்குள் புதைப்பதில்தான் செலவிடுகின்றனர். அத்துடன் சாரதி அனுமதிக்காக விண்ணப்பிப்பவர்கள் இணையத்துடன் அதிக பரீட்சயமுள்ள நடுத்தர வயதினரே.

எனவே இணையத்தளம் ஒன்றைத் தொடர்பு கொள்ளத்தக்க வசதி பெரும்பாலானவர்களிடம் உண்டு.இந்த விடயத்தில் இணையசேவை ஒன்றை அறிமுகப்படுத்துவது மிக மிக அவசியமாகும். அதேவேளை வினைத்திறன் மிக்க சேவையையும் மக்களுக்கு வழங்க முடியும். இதன் மூலம் போக்குவரத்துக்கான வைத்திய சேவை மற்றும் பரீட்சையில் பங்கெடுப்பது போன்ற விடயங்களில் ஏற்கனவே முற்பதிவு செய்து குறிப்பிட்ட நேரத்துக்குச் சமூகமளிக்க முடியும். அதிகாலை நான்கு மணிக்கு வருவதாயின் போக்குவரத்து வசதி இல்லாதவர்கள் துன்பப்படவேண்டியிருக்கிறது. 'காலம் பொன்னானது' என்ற வாசகம் தமிழரைப் பொறுத்தவரை பாடசாலைப் படிப்புடன் கைவிடப்படுகிறதே தவிர வாழ்க்கைக்குப் பயன்படுத்துவதில்லை. ஆயிரம் பயணிகளுடன் ஒரு ரயில் ஒரு நிமிடம் தாமதித்தால் அது ஆயிரம் நிமிடங்கள் தாமதித்ததாகவே அர்த்தப்படும்.

### வினைத்திறனற்ற செயற்பாடுகள்

போர்ச் சூழல் மாறி நாட்டில் இயல்புநிலை காணப்படும் போது யாழ்ப்பாணத்தில் 1970தொடக்கம் 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பாணுக்கு வரிசையில் நின்றதுபோல தெருவில் நிற்கவேண்டிய நிலைக்கு மக்களைத் தள்ளியது வினைத்திறனற்ற அதிகாரிகளே என்பதை யாரும் மறைக்க முடியாது. இவ்வாறான பல அன்றாடப் பிரச்சினைகளுக்குள் மக்கள் சிக்குப்பட்டிருக்கிறார்கள் வடமாகாண முதல்வருக்கோ, அமைச்சர்களுக்கோ, உறுப்பினர்களுக்கோ, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ இவை தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் அவர்களின் முழுச் சிந்தனையும் அடுத்து வரும் தேர்தலில் தாம் எப்படி வெல்வது என்பது பற்றியதாகும்.

சாரதி அனுமதிப்பத்திரம் மட்டுமல்ல இன்னும் பல மக்கள் சேவைகளை இணையத்தளங்கள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்க முடியும். சகல திணைக்களங்களும் இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் மட்டுமே யாழப்பாண மக்களின் வாழ்வை 21ஆம் நூற்றாண்டுக்கு உரியதாக மாற்ற முடியும். இல்லாவிடில் பாணுக்கு வரிசையில் நின்றதுபோல நாற்பது வருடங்கள் பிந்திய வாழ்க்கையையே வாழவேண்டியிருக்கும். ■




தொகுப்பு
செ.மகேஷ்

## ஆசிரிய வாண்மைக்கு உரமூட்டிய

# விளக்குகள்

**1993ஆம் ஆண்டில் கல்விக் கழகத்தால் ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து வெளியிடப்பட்டு வந்த விளக்கு சஞ்சிகைகள் குறித்த மீள் பார்வை.**

ஆசிரியர்களின் வாண்மையை மேம்படுத்தும் நோக்குடனும், அவர்களின் கற்றல், கற்பித்தலில் புதிய சிந்தனைகளை யும் செயற்பாடுகளையும் தூண்டும் வகையிலும் தொடக்கப்பட்ட விளக்கு சஞ்சிகை, தனது பயணத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட இதழ்களை வெளிக் கொணர்ந்திருந்தது. ஆசிரியர்களுக்கெனத் தேர்ந்த கட்டுரைகளும் ஆசிரியர்களால் ஆக்கப்பட்ட கவிதைகள், சிறுகதைகள் என்பனவற்றை அது தாங்கியதாக வெளிவந்தமையானது சஞ்சிகையின் சிறப்புக்குக் காரணங்களாக அமைந்திருந்தன. ஆசிரியர்களின் வாசிப்புப் பழக்கத்தைத் தொடர்வதற்கும் எழுத்துப் பயிற்சியைத் தூண்டுவதற்கும் அவை பெரிதும் உதவின. விளக்கின் மூலம் எழுத்தாளர்களாய் உயர்ந்த ஆசிரியர்களையும் நாம் காணலாம்.

### அட்டைப்படங்களும் சிறப்புக்குரியன

விளக்கு சஞ்சிகையின் அட்டைப்படங்கள் பலவும் ஆரம்ப இதழ்களில் சிறந்த சித்திர ஆசிரியர்கள் வரைந்த கார்ட்டூன் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவற்றுள்ளே பல கற்றல், கற்பித்தல் தொடர்பான கருத்துப் படங்களாகவும் அன்றைய அரசியல் சூழ்நிலைகளால் பாதிப்புற்றிருந்த கல்வி நிலைகளை மீட்டெடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவனவாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கனவாகும். இந்தப் படங்களை 'ரமணி', 'கஜன்', 'கோபாலி', 'மகேஸ்' ஆகிய ஓவியர்கள் வரைந்திருந்தனர். அமரர்களான துணை வேந்தர் துரைராசா, கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் ஆகியோரின் நிழற்படங்கள் அட்டைப்படங்களிலும், அவரவர் பற்றிய கட்டுரைகள் சஞ்சிகைகளிலும் அச்சாகியிருந்தன. அவை தவிர சிறுவர்களின் ஒளிப்படங்களும் கட்டுரைகளை எழுதிய கல்வியியலாளர்களின் ஒளிப்படங்களும் இடம்பெற்றிருந்தன. இவர்களுள். ப.தனபாலன், ந.அனந்தராசா, சுவர்ணராசா, சுந்தரம் டிவகலாலா, க.சரவணபவன், ஆகிய பலரதும் கட்டுரைகள், சிறுகதைகள் என்பனவும் தொடர்ந்து வெளிவந்த இதழ்களில் பதிப்பாகி ஆசிரியர்களின் கவனத்தையும் அவர்களின் செயற்பாடுகளில் மாற்றத்தையும் ஏற்படுத்தின எனலாம்.

### இடைநிறுத்தப்பட்ட சூழல்

காலத்தின் தேவை கருதி வெளிவந்த விளக்கு காலத்தின் எதிர்பாராத துயரமான சூழ்நிலைகளால் இடைநிறுத்தப்பட்டாலும் அவற்றின் பதிவுகள் எமக்கு என்றும் கல்வியின் தேவையையும் அதற்கான நவீன மாற்றங்களையும் ஏற்படுத்தும் வழிகாட்டிகளாகத் திகழும் எனலாம்.

இன்றைய நவீன கணினி யுகத்தில், இணையத்தளம் ஊடாகவும் விளக்கின் பதிவுகளை வாசிக்கலாம் என்ற வகையில் வாசகர்களாகிய உங்களை நூலகம் பதிவுகளில் விளக்கு சஞ்சிகைகளை வாசிக்க அழைக்கின்றேன்.

(நிறைவு...)

www (இணைய முகவரி: www.noolaham.org.)




கவிதை
செ.ஸ்ரீநிவாசன்


# மழை

ஆடி தாண்டி ஆவணி வந்தால்
நாடி ஒடுங்கி நெஞ்சம் கனக்கிறது..!
தேடிப்பறவைகள் நீருக்காய் அலையும்..!
ஓடி மாக்கள் குளிர்மைக்காய் ஒதுங்கும்..!
மாடி மனைகளில் நீரேற மறுக்கும்..!
கோடி கொடுத்து நீர் ஊற்று
துளைப்பர்...!
தாடி வளர்த்தும் தவங்கள் இருந்தும்
மூடி வைத்த நீர் வற்றிப்போகும்.....!

சிந்தாமல் சிதறாமல் கைகள் மட்டும் அல்ல
மற்றவையும் கழுவும் பக்குவம் தானாகவே வரும்....!
காகக்குளிப்புக் கூட அதிகம் என்றெண்ணி ....
உடல் மட்டும் கழுவும் மனது மெல்ல வரும் ...!
குளிப்பை நிறுத்தி வாசனை அடித்து மணம் பரப்பும்
புத்தியும் கூடவரும் .....!
வீட்டுக்கு வந்திட்ட விருந்தினர்
தங்கிட நினைத்தால்..
கை அலம்பிட நீர் அற்ற பரிதாபம் சடுதியில் முன்னிற்கும்...!

சந்துகள் , பொந்துகள் வரை நீர் இல்லா அவலம் நீளம் வரும் ....!
மழை வரும் மணம் தரும்
நீர் வருமென வானம் பார்த்த பூமியாய் நம் மனதும் மாறிவிடும்...!
வீடுகள் வறண்டு நா வற்றி நம்பிக்கை இழந்து
நாரியரின் மேனியும் நாற்றமடிக்கும்....!
குளம் வற்றிக் கருவாடாகும்

ஆடிப்பிறப்பு
ஆடி அமாவாசை
வரலட்சுமி விரதம், பௌர்ணமி எனக் கனத்த
நாள்கள் பார்த்துக் கண்கள் சுருங்கும் ....!
மெய் உலருமுன் வரவேண்டும் நீ கார்முகிலே...!
அழிவைத் தந்தாலும் வந்தாக வேண்டும்
கடும் மழையே....!



தொகுப்பு

அனார்கலி



# தென்கிழக்கு திசையில் இருந்து

## கடமைகளைப் பொறுப்பேற்றார்




தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக மீண்டும் நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ள பேராசிரியர் எம்.எம்.எம்.நாஜிம், பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
புதிய உபவேந்தரை வரவேற்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.
நிகழ்வில் கருத்தரைத்த அவர், " எனக்கு எதிராகச் செயலாற்றியவர்களிடம் இருந்து நல்ல பாடங்களைத் கற்றுக்கொள்ள முடிந்துள்ளது. சிலர் விதண்டாவாதம் புரிகின்றனர். தவறுகளை செய்து கொண்டே இருக்கின்றனர்.
தொடர்ந்தும் அவற்றை அனுமதிக்க முடியாது. அவர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படும். கசப்புணர்வுகளை மறந்து அனைவரும் ஒற்றுமையாக செயற்பட முன்வர வேண்டும். சகல தரப்பினரும் தூயதோர் இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும். ஒத்துழைப்பு நல்க வேண்டும்." - என்றார்.

***பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்
இது தொடர்பில் கரிசனை கொள்ளுமா?***

## எதிர்ப்பு! எதிர்ப்பு!!




தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்திலும், பல்கலைக்கழக சுற்றாடலிலும் எதிர்ப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
அதில், "உரிமைகோரி குரல் கொடுத்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம்." என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை குறித்து உரிமைகோரி குரல் கொடுக்கும் விதமாக அவை அமைந்துள்ளன.
கொழும்பில் கடந்தவாரம் இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் எதிரொலியாகவே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.
சுவரொட்டிகளின் சாயல் மற்றும் பின்னணி தொடர்பிலும் கதையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

## அனுதாப அறிக்கை

முஸ்லிம் சமூக ஆய்வாளரும், நூலாசிரியருமான பேராசிரியர் ஹஸ்புல்லாஹ்வின் மறைவு குறித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு அனுதாப அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பின் செயலாளர் ஐ.எல்.எம். பாறூக் வெளிப்படுத்தியுள்ள மேற்படி அனுதாப அறிக்கையில், " பன்முக ஆளுமை படைத்த பெரும் கல்விமானின் இழப்பு இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***ஆளுமைகளின் இழப்பு துயரமானதுதான்!***

## சமூகங்களின் ஒருமைப்பாடே முதன்மையானது

கல்முனை மாநகர் வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் பயன் பெறும் வகையிலேயே கல்முனை நகர அபிவிருத்தித்திட்டம் முன்னெடுக்கப்படும் என முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.
அரசியல் எதிர்காலம் பற்றிச் சிந்திக்காமல் கல்முனை நகர அபிவிருத்திக்கு வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து குறித்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இங்கு, "நகர அபிவிருத்தி என்ற வெளிப் பூச்சினுள் எமது பூர்வீகமான காணிகளை நாம் இழக்கத் தயாரில்லை." என்ற தமிழர் தரப்புக் குரலும் இடைவிடாது ஒலித்துக்கொண்டே இருக்கிறது.




## மட்டுப்படுத்துக!

அக்கரைப்பற்று - யாழ்ப்பாணம், பொத்துவில் - யாழ்ப்பாணம் இடையே பயணிகள் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகளின் பயண வேகம் அதிகரித்துள்ளது. பேருந்துகளை சீரான வேகத்தில் செலுத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மேலும், "இரவுப் பெழுதில் வாகனப் போக்குவரத்து நெரிசல் குறைவாக இருப்பதனை காரணம்காட்டி சில சாரதிகள் மிகவேகத்துடன் பேருந்துகளை செலுத்துகின்றனர். இவ் வழித்தட பேருந்துகளில் அச்சத்துடனேயே நாம் பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் சாலை முகாமையாளர் ஆகியோர் இது விடயம் தொடர்பில் சாரதிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்." எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

***அதிகவேகம் கூடாது! பாதுகாப்பான சாரத்தியமே சிறந்தது!***

## வருடாந்த உற்சவம்

துறை நீலாவணை ஸ்ரீ தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி அலங்கார உற்சவம், நாளை திங்கள்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவடையும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.
விசேட உற்சவங்களாக, எதிர்வரும் 9ஆம் திகதி மாம்பழத்திருவிழாவும், 10ஆம் திகதி விநாயகர் பெருமான் ஊர்வலமும், 11ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 12ஆம் திகதி பாற்குடபவனியும், 13ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அப்துல் மஜீதின் பெயரிடுக!

கிழக்கு இலங்கையின் மூத்த அரசியல்வாதியும், பீ.ஏ.மஜீத் என எல்லோராலும் அழைக்கப்பட்டவருமான முன்னாள் அமைச்சர் மர்ஹூம் (MAR HOOM) ம்.ஏ.அப்துல் மஜீத் வாழ்ந்த, அவரது வீடு அமைந்திருக்கும் சம்மாந்துறை 3ஆம் குறுக்குத் தெரு வீதிக்கு "மர்ஹூம் அப்துல் மஜீத் வீதி" எனப் பெயரிடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை மகிழ்ச்சிவட்டம், சம்மாந்துறை பொதுமக்கள் நலன்புரிச் சங்கம் என்பன இணைந்து இந்தக் கோரிக்கையை சம்மாந்துறை பிரதேச சபைக்கு முன்வைத்துள்ளதாக மேற்படி அமைப்புக்களின் செயலாளர் எம்.ஏ.சீ. யூசுப்லெவ்வை தெரிவித்துள்ளார்.

## சுனாமி ஒத்திகை

பன்னாட்டு சுனாமி அனர்த்த விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மக்களை விழிப்பூட்டும் ஒத்திகை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
குறித்த தினத்தில் மக்களை விழிப்பூட்டும் விதமாக 'சுனாமி அனர்த்த ஒத்திகை' நிகழ்வு தேசிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஆம், அம்பாறை மாவட்டம் சுனாமி அனர்த்தத்தால் சொத்தழிவுகளையும், உயிரிழப்புக்களையும் அதிகளவில் எதிர்கொண்ட மாவட்டம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் நினைவிருத்திக் கொள்வோம். ஆபத்துக்களில் இருந்து விடுபடுவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்ள முயற்சிப்போம்.



# தட்டிக் கேட்கப்படும் தலை அலங்கோலங்கள்

**மாணவர்களின் தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டிருப்பதுடன் தலையின் பிடரிப்புறத்தின் கீழாக 'ப' வடிவில் தலைமயிர் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவேண்டும். தலைமுடியின் நீளம் அரை அங்குலத்துக்கு மேல் இருக்ககூடாது. மாணவரின் மேற்சட்டையின் கழுத்துப்பட்டையிலிருந்து ஓர் அங்குலத்திலும் கூடிய இடைவெளியில் தலைமயிர் இருத்தல் வேண்டும். கன்னப்புறத்தில் காதுக்கு மேலாகத் தலைமயிர் (சைட்கட்) 'ப' வடிவில் சீராக்கப்பட்டு இருத்தல் வேண்டும். அது புற க்காதுச்சோணைக்கு அருகாகவோ, கீழாகவோ நீண்டிருக்கக்கூடாது. தலையில் வரிகள் வடிவங்கள் ஏற்படுத்துதல் முற்றாகத் தடை செய்யப்படுகிறது.**

கட்டுரை
டினேஷ் றெமூந்துப்பிள்ளை

கலாசாரம், பண்பாடு என்பன வெறுமனே இலக்கியங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல. நாம் கொண்டாடும் விழாவாக இருக்கலாம், கடைப்பிடிக்கும் நிகழ்வாக இருக்கலாம். இப்படிப் பலவற்றிலும் இவை செல்வாக்குச் செலுத்தியபடியேதான் இருக்கும். இவற்றுக்கு அப்பால் நமது நடை, உடை, பாவனை என்பவற்றில் எல்லாம் இந்தப் பழக்கவழக்கம் ஊடுருவி இருக்கும். ஆனால் கால ஓட்டத்தில், புறச்சக்திகளின் செல்வாக்கால் இந்தக் கட்டுக்கோப்புத்தனம் அல்லது தனித்துவம் தாக்குதலுக்கு உள்ளாகும் போது, எமது பாரம்பரியங்கள் பழுதுபட்டு விடுகின்றன. இதைவிட நமக்கென்று ஓர் ஒழுக்கநெறிமுறையைக் கொண்டிராதவிடத்தும் நமது நடைமுறைகள் காலவோட்டத்தில் தான்தோன்றித்தனமாய் மாறிவிட அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

**தலையிலே கலைவண்ணம்!**


அண்மைக்காலமாகப் பதின்ம மற்றும் இளவயதினரிடத்தில் தலைமயிரைக் கத்தரிப்பதிலும், வாரிவிடுவதிலும் முளைவிட்டி ருக்கின்ற தான்தோன்றித்தனம், கவனவீர்ப்பைப் பெற்றிருக்கிறதோ இல்லையோ கண்டனங்களைப் பெறத் தவறவில்லை. வழமையாகத் தலைமுடி ஓரளவு நீளத்துக்கு மேலே வளர்ந்துவிட்டாலோ அல்லது சவரம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டாலோ நாம் சிகையலங்கரிப்பு நிலையங்களை நாடிச் செல்வோம். ஆனால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சிகையலங்கரிப்பு நிலையத்தினர் சில பல அநாகரிக(சமகால நாகரிகம் என்று பொருத்தப்பாடும் உண்டு) தலையலங்கார முறைகளை அறிமுகப்படுத்திவிட, சாதாரணமாகக் காணப்பட்ட தலைகள் எல்லாம் சிகிரியா மற்றும் எல்லோராச் சுவரோவியங்களைத் தாங்கியது போன்ற தலைகளாக உலாவித் திரிகின்றன. தலையிலே கலைவண்ணம் காணும் இந்த கைங்கரியத்துக்குச் சில பெற்றோரும் உடந்தை என்கிறார்கள்.


**டிசைன் டிசைனாக வெதுளித்தனங்கள்!**

இந்த மாதிரியான நிலை வரத்தைக் கண்டும் காணாமல் விடும்போது பாடசாலை வகுப்பறையிலே மாணவர்களின் தலைமயிர் வெட்டு வடிவங்கள் ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. காதுக்கு அருகாமையில் உள்ள தலைமயிர்கள் யாவும் குறிப்பிட்டளவு உயரம் வரை எல்லையிட்டுச் சுற்றிவர மண்டையோடு தெரியுமாப்போல் நீக்கப்பட்டு, பாதி மொட்டை அடிக்கப்பட்டு, அசப்பில் பாவித்த பழைய சட்டியைத் தலையில் கவிழ்த்துக்கொண்ட தோற்றத்தில் ஒருவன், இன்னொருவனோ, யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவரை செல்லும் ஏ9 வீதியை இயக்கச்சியில் உள்ள வளைவு உள்ளடங்கலாகத் தலையில் வரைபடமாக வரைந்த மாதிரி, மற்றொருவனோ, பதுளையில் காணப்படும் சுற்றுலாப் பயணிகளால் அதிகம் இரசிக்கப்படும் ஒன்பது வளைவு ரயில் பாலத்தைத் தலையிலே செதுக்கிய மாதிரி, எழுதப்பழக ஆரம்பித்த சிறுபிள்ளைகள் உள்ள வீட்டின் உட்சுவர்கள் காணப்படுவது போல பிறிதொருவனின் தலை என நிலமை மோசமாகிக் கிடக்கின்றது.

**கல்வி அமைச்சு நடவடிக்கை**

நிலமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்ட பொழுதில், தனக்கு இருக்கக்கூடிய பொறுப்பை உணர்ந்து களமிறங்கியது வடக்கு மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு. பாடசாலை மாணவர் தலைமுடியை அழகுபடுத்தவும், ஒழுங்காக வாரிவிடவும், அதிலே நேர்சீரான தன்மை பேணப்படவும் நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்பொருட்டு சில வழிகாட்டுதல்களையும் அமைச்சு வழங்கியிருந்தது.





**மாகாண அமைச்சு வழங்கிய அறிவுரை!**

மாணவர்களின் தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டிருப்பதுடன் தலையின் பிடரிப்புறத்தின் கீழாக 'ப' வடிவில் தலைமயிர் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கவேண்டும். தலைமுடியின் நீளம் அரை அங்குலத்துக்கு மேல் இருக்ககூடாது. மாணவரின் மேற்சட்டையின் கழுத்துப்பட்டையிலிருந்து ஓர் அங்குலத்திலும் கூடிய இடைவெளியில் தலைமயிர் இருத்தல் வேண்டும். கன்னப்புறத்தில் காதுக்கு மேலாகத் தலைமயிர் (சைட்கட்) 'ப' வடிவில் சீராக்கப்பட்டு இருத்தல் வேண்டும். அது புற க்காதுச்சோணைக்கு அருகாகவோ, கீழாகவோ நீண்டிருக்கக்கூடாது. தலையில் வரிகள் வடிவங்கள் ஏற்படுத்துதல் முற்றாகத் தடை செய்யப்படுகிறது. விதிவிலக்காக, பூசகர்கள் மற்றும் மத அனுஷ்டானங்களை நடத்துபவர்கள் தமக்குரிய சம்பிரதாயபூர்வமான சிகையலங்காரங்களை மேற்கொள்ள முடியும். இவையே மாணவர்களுக்கு முடிதிருத்துவது தொடர்பில் வடமாகாண அமைச்சு வழங்கியிருந்த நெறிப்படுத்தலாகும். இந்தக் குறிப்புக்கள், வடமாகாண அழகக அலங்கரிப்பாளர் சங்கத்தின் தலைவர் ஆனந்தராசா உதயசங்கர் மற்றும் செயலாளர் கதிரமலை நாகராசா ஆகியோருடன் கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே வெளியிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி விடயத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அலங்கரிப்பாளர் சங்கத் தரப்பாலும் உறுதி வழங்கப்பட்டிருக்கிறதாம். இதற்கு மேலதிகமாக, தலைவாருவது தொடர்பிலும் பெற்றோர்களுக்கு அமைச்சு அறிவுறுத்தல் விடுத்திருக்கிறது.

பெற்றோர் தமது பிள்ளைகளின் தலைமுடியை இடதுபுறமாக, உச்சிபிரித்து, அழகாக வாரிவிடவேண்டும். அத்தோடு, எண்ணெய் தவிர்ந்த ஏனைய 'ஜெல்' மற்றும் சாய வகைகளைப் பூசுவதையும் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அமைச்சின் அறிவுரையாகும்.

**மாநகர சபையிலும் எதிரொலித்தது**

இந்த நவநாகரீக தலையலங்கார விவகாரம் கடந்த 21ஆம் திகதி யாழ். மாநகரசபையிலும் இடம்பிடித்திருந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகரசபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபனால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்று திருத்தங்களுடன் நிறை வேற்றப்பட்டிருக்கிறது அங்கே. பள்ளிச்சிறார்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிமுறைகளை நவநாகரீகம் எனும் பெயரில் அநாகரீகமாக்கும் சிகையலங்கார நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் எனும் தொனிப்பட அவர் முன்வைத்த கோரிக்கை, சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வடமாகாணக் கல்வியமைச்சு ஏலவே நடைமுறைக்கிட்டுள்ள அறிவுறுத்தலுக்கு வலுச்சேர்க்கும் வகையில் அமைந்த இந்தத் தீர்மானம் யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட முடிதிருத்தும் நிலையங்களைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தது. எனினும், இவ்வாறான தீர்மானத்தை ஏனைய உள்ளூராட்சி சபைகளில் கொண்டுவருவதன் மூலம், கல்வியில் கவனம் செலுத்தும் நல்லொழுக்கமுள்ள மாணவ சமுதாயத்தை உருவாக்க முடியும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

**கரைச்சி பிரதேச சபையிலும் கவனம் ஈர்த்த அலங்கோலம்**

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபையும் குறித்த விடயம் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தியிருக்கிறது. அந்தச் சபையின் ஐந்தாவது அமர்வில் பாடசாலை மாணவருக்கான முடிதிருத்தம் தொடர்பில் அழககங்களை அறிவுறுத்துவது சம்பந்தமாக உறுப்பினர் அருணாசலம் சத்தியானந்தன் கொண்டுவந்த பிரேரணை சகல உறுப்பினர்களாலும் வரவேற்கப்பட்டிருந்தது. இதைவிட இராணுவத்தால் நடத்தப்படும் முடிதிருத்தும் நிலையங்களும் இத்தகைய தாறுமாறான தலைமுடி அலங்கோலக் கத்தரிப்புகளுக்குப் பங்களிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிகையலங்கரிப்பு நிலையங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளைத் தம்மகத்தே கொண்டிருக்கும் பிரதேச சபைகள், இது விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்தி அழககங்களை வழிநடத்த வேண்டிய தேவை இப்போதைக்கு எழுந்திருக்கிறது. வெறுமனே பாடசாலைகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புக்கள் மாத்திரமல்லாது நேரடியாகப் பெற்றோர்களும் அழகக உரிமையாளர்களும் இது விடயத்தில் தமது வகிபாகத்தை உணர்ந்து கொள்ளவேண்டும். தறிகெட்ட தலை அலங்காரங்கள் சமவயதுத்தரப்பினரிடையே ஒரு கவனக்கலைப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அதனால் சம்பாதிக்கப்படப்போவது எதுவுமேயில்லை. இதனால்தான் 'குஞ்சி அழகும் மஞ்சள் அழகும் அழகல்ல' என்பதை நாலடியார் அப்போதே நவின்றுவிட்டுப் போயிருந்தார். ■



உ.தர்மிகா.
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.



கேதீசன் அக்ஷிதா.
மாதிரி முன்பள்ளி, கொக்குவில்.

# எந்தத் தீமைக்குள்ளும் ஒரு நன்மை உண்டு

ஒரு வியாபாரிக்கு தான் ஏதாவது ஒரு அன்னிய நாட்டுக்குச் சென்று வியாபாரம் செய்ய வேண்டும் என்ற ஆசைப் பிறந்தது. எனவே அவன் தன் நண்பர்கள் சிலருடன் சேர்ந்து ஒரு சிறிய கப்பலில் சரக்குகளை ஏற்றிக்கொண்டு பிரயாணம் செய்தான்.

கப்பல் நடுக்கடலை அடைந்தவேளை சூறாவளி ஒன்று வீசியது. சூறாவளியைத் தாக்குப்பிடிக்கக்கூடிய முன்னேற்பாடுகளை அவர்கள் செய்யாதுவிட்டிருந்தமையால், அவர்களின் கப்பலால் அந்த சூறாவளிக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. கப்பல் பிய்த்து எறியப்பட்டது. நண்பர்கள் என்ன ஆனார்கள் என்று அவன் நினைப்பதற்கு முன்னரே வியாபாரி நடுக்கடலில் தண்ணீரில் மிதக்கத் தொடங்கினான். அவன் கை கால்கள் செயலிழந்த நிலையில் எப்படியோ ஒரு மரத்துண்டைப் பிடித்து அதில் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

மரத்துண்டு மெல்ல மெல்ல மிதந்து ஒரு தீவின் கரையில் ஒதுங்கியது. உடலும் மனமும் மிகவும் சோர்ந்த நிலையில் ஆழரவம் அற்ற அந்தத் தீவில் கால்பதித்த வியாபாரி அத்தீவில் இருந்த மரங்களின் கனிகளைச் சிலநாட்கள் வரை உண்டு உயிர் வாழ்ந்தான்.

சற்று உடலில் தெம்பு வந்த பின்னர், அந்தத் தீவைச் சுற்றிப்பார்த்த அவன் அங்கு மனிதர்களையோ, மிருகங்களையோ, பறவைகளையோ காண வில்லை. தினமும் அந்தப் பக்கமாக ஏதாவது கப்பல் ஒன்று வந்து தன்னை மீட்க மாட்டாதா? என ஏங்கிக் கொண்டே நாள்களைக் கழித்தான். எப்படியோ ஒரு மாதகாலமாயிற்று. இப்போது அந்தத் தனிமை அவனுக்கு பழகிப்போனது. இனி மேல் தான், தனது ஊர் திரும்ப முடியாது. அந்தத் தீவுதான் தன்வீடு, வாசல், நாடு, நகரம், சொத்து, சுகம் என்று எண்ணி வாழ ஆரம்பித்தான். இப்போது அவனுக்குத் தெரிந்தவகையில் ஒரு குடிசையை அமைத்துக் கொண்டான்.


உலர்ந்து விழுந்த தென்னை மட்டைகளை ஓலையாக வேய்ந்தான், காய்ந்த மரக்கட்டைகளையும் சாய்ந்த மரங்களின் கிளைகளையும் முட்டுக் கம்புகளாகக் கொடுத்து அவன் தனக்கென்று ஒரு வீட்டைத் தயாரித்துக் கொண்டான்.

சிக்கிமுக்கிக் கற்களை உரோஞ்சி தீயை உண்டாக்கினான். ஒரு சின்னக் கட்டுமரம் கட்டி அதன் மூலம் கடலுக்குள் சென்று மீன்பிடித்து தீயில் சுட்டு உண்டு வந்தான். இவ்வாறு மீன்களையும் காட்டுக்கனிகளையும் உணவாக்கிக் கொண்டான்.

முன்னர் அவன் கப்பலில் கொண்டு வந்த உணவு சரக்குப் பொதிகள், கப்பல் உடைந்ததால் கரைக்கு மிதந்து வந்தன. அவற்றையும் ஆவலுடன் பிரித்து சமைத்து சிலநாள்கள் உண்டான். தான் விற்பனைக்கு கொண்டு வந்த உணவுப் பொருள்கள் எதிர்பாராமல் தனக்கே அந்தவேளை உணவானதை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறினான்.

இப்படியாக நாள்கள் ஓடிக் கொண்டிருந்தன. இயற்கையோடு ஒன்றித்து அவன் வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் அவன் தனது குடிசையில் அடுப்பைப் பற்ற வைத்து அதில் உணவு தயாரிப்புக்கான பொருட்களைப் போட்டுவிட்டு கடலுக்குள் மீன்தேடி சென்ற வேளை, குடிசை பற்றி எரிவதைக் கண்டான். ஐயோ எனது குடிசை எனது உணவுப் பொருள்கள் என்று அவன் கத்தியபடி குடிசையை நோக்கி ஓடிவந்தபோது குடிசை முழுவதும் எரிந்து சாம்பலாகிப் போனது.

"ஆ ஆண்டவன் கருணை என்மீது இவ்வளவு தானா?



கண்கெட்ட கடவுள் இப்படி என்னைவஞ்சிக்கிறாரே" என்று ஏங்கியபடி தரையில் விழுந்தவன். அப்படியே மயக்கமடைந்து தூங்கிவிட்டான். விழிந்தது. அந்தத் தீவுக்கருகே மிகப்பெரிய கப்பல் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து சிலர் இறங்கி வந்து தூங்கிக் கொண்டிருந்த வியாபாரியைத் தட்டி எழுப்பினார்கள். அவர்களைக் கண்டதும் வியாபாரி திக்குமுக்காடிப் போனான். அவனைப்பற்றி அவர்கள் விசாரிக்க தன்னைப்பற்றிய கதை முழுவதையும், குடிசை எரிந்தது முதல் கூறி முடித்தான்.

பின்னர் அவர்கள் அங்கு வந்த காரணத்தைக் கேட்டான். அவர்கள் இப்படி ஆளரவமற்ற கடல்பகுதி, தீவுப் பகுதிகளில் சிக்கிக் கொண்டவர்களை காப்பாற்றுவதற்காக தாங்கள் பயிற்சியளிக்கப்பட்டவர்கள் என்றும், அவன் குடிசை எரிந்து அதனால் எழுந்த தீயின் புகையே தமது கப்பலை அவன் இருந்த தீவை நோக்கி திருப்பியது என்று கூறினர்.

அப்போது வியாபாரி பெரும் ஆச்சரியம் அடைந்து "ஆண்டவா, உம் கருணை அற்புதமானது நான் கட்டிய வீட்டைத் தீயில் எரிய வைத்து எனக்கு பெரும் கெடுதி ஏற்படுத்திவிட்டீர்கள் என்று மனம் நொந்தேன். நீங்கள் கெட்டது ஒன்றின் மூலமும் நன்மை செய்வீர்கள் என்பதை இப்போது நான் உணர்ந்தேன்." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறிக்கொண்டான்.

**எல்லாம் நன்மைக்கே**

# எனது அண்ணா



- எனது அண்ணா தான் எங்கள் வீட்டின் இளவரசன்.
- எனது அண்ணாமேல் வீட்டிலுள்ள அனைவரும் அன்பு பாராட்டுவோம்.
- எனது அண்ணா சிறந்த துடுப்பாட்ட வீரன்.
- எனக்குப் பள்ளிப்பாடங்கள் சொல்லித்தருவார்.
- எவ்வேளையும் அவர் சுறுசுறுப்பாகவே இயங்குவார்.
- அண்ணா க.பொ.த சா/த வகுப்பில் படிக்கிறார்.
- அவர் காலையில் தாத்தாவோடு நடைபயில்வார்.
- தாத்தாவின் மெய்ப்பாதுகாவலர் அண்ணாதான்.
- அண்ணா அழகான கவிதைகளை எழுதி வாசிப்பார்.
- அண்ணாதான் அவரது வகுப்பின் தலைவராவார்.
- அவர் பெரியவர்களைக் கனம் பண்ணுவதில் சமத்தர்.
- பிறருக்கு உதவிசெய்வதில் பின்வாங்கமாட்டார்.
- சாரணியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்.
- பாடசாலை அணித் தலைவர்களில் அண்ணாவும் ஒருவர்.
- எனது அண்ணா படிப்பிலும் கெட்டிக்காரர்.
- நீச்சலடிப்பதில் வீரன். நீச்சல் போட்டிகளில் பங்குபற்றி பரிசுகளைப் பெற்றுள்ளார்.
- எங்கள் வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களுக்கு தினமும் தண்ணீர் இறைப்பார்.
- நாங்கள் வளர்க்கும் பசுக்களுக்கு உணவு கொடுப்பது அவரது கடமையாகும்.
- சைக்கிள் ஓடுவது அவரது பொழுதுபோக்கு ஆகும்.
- அண்ணா எனக்கு கணினிப் பாடம் சொல்லித் தருவார்.
- அண்ணா இந்த வருடம் க.பொ.த சா/த பரீட்சை எழுதுகிறார். அவர் அந்தப்பரீட்சையை திறம்பட எழுதி சித்திபெற்று உயர்கல்வி பெற்று ஒரு வைத்தியராக வர வேண்டி நாங்கள் அவரை வாழ்த்துகிறோம்.



# பாவைப்பிள்ளை



சின்னச் சின்ன பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

என்னைப் போலக் காலும்
என்னை போலக் கையும்
இனிய கண்ணும் வாயும்
இயைந்திருக்கும் பாவை

சட்டை இட்டுப் பார்ப்பேன்
தொப்பி இட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

என் மடியிலிருக்கும்
என் அருகிற் படுக்கும்
என்னுடனே பகலும்
இரவும் ஒன்றாய் இருக்கும்

த.றதிபா, தரம் – 3,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தி

# தெரிந்து கொள்வதற்கு சில தகவல்கள்

- ★ எம்மை நாமே பாதுகாக்க வேண்டும்.
- ★ வீதியைக் கடக்கும் போது இருபக்கமும் பார்த்துக் கடக்க வேண்டும்.
- ★ மஞ்சள் கோட்டின் வழியே கடக்க வேண்டும்.
- ★ ஒருவருடைய ஆடையில் தீப்பிடித்தால் ஓடக்கூடாது. நிலத்தில் வீழ்ந்து நன்றாகப் புரள வேண்டும்.
- ★ மின்சாரம் எமக்கு நல்ல பயன் தரும். அதனைக் கவனமாகக் கையாளத் தவறினால் அபாயம் உண்டாகும்.
- ★ நாம் எம்மைப் போல் பிறரையும் பாதுகாக்க வேண்டும்.
- ★ மின்சார உபகரணங்களைக் கவனமாகக் கையாள வேண்டும்.
- ★ தெருவில் நடந்து செல்வோர் வலப்பக்கமாகச் செல்லுதல் வேண்டும்.
- ★ தெருவில் செல்லும் வாகனங்கள் இடப்பக்கமாகப் போகவேண்டும்.
- ★ எந்தப் பொருள்களையும் உபகரணங்களையும் இருந்த இடத்தில் வைத்தல் வேண்டும்.



# இன்றைய நாள்

**மேடம்:** உற்சாக மனதுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர்ச்சி கூடும் வருமானம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.

**இடபம்:** முரண்பட்ட எண்ணம் கொண்டவர்களிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். திடீர் செலவால் சேமிப்புப் பணம் கரையும்.

**மிதுனம்:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர புதிய வாய்ப்பு உருவாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கடகம்:** வாழ்க்கைத் தரம் உயர்வு பெற நல்லவாய்ப்புவரும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர்.

**சிங்கம்:** பணிச்சுமையால் சிரமத்திற்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் வாக்குவாதம் செய்வது கூடாது.

**கன்னி:**முக்கியமான பணியை பிறர் பொறுப்பில் தர வேண்டாம்.தொழில், வியாபாரத்தில் முன்னர் இருந்த குளறுபடி சரியாகும். மிதமான பணவரவு கிடைக்கும். உடல்நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும்.

**துலாம்:** தெய்வ அருள் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் அபிவிருத்தி ஏற்படும். சராசரி பணவரவுடன் நிலுவைப்பணம் வசூலாகும்.

**விருச்சிகம்:**நண்பரிடம் குடும்ப விஷயம் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூலம் அதிகரிக்கும். பணம் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும்.

**தனுசு:** சூழ்நிலை உணர்ந்து எவரிடமும் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதம் உண்டாகலாம்.

**மகரம்:** குடும்ப விஷயம் பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரிசெய்வது அவசியம். மிதமான பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:**நண்பர்களிடம் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** பேச்சு, செயலில் படபடப்பு உண்டாகலாம். தொழில், வியாபார இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவை. இலாபம் சுமாராக இருக்கும்.


## நாளை

**03.09.2018**

திங்கட்கிழமை

ஆவணி 18

திதி: அட்டமி பி.ப. 03.58 வரை
நட்சத்திரம்: ரோகிணி மாலை 05.44 வரை
சுபநேரம்: 12.5 – 01.35 வரை
ராகுகாலம்: 07.35 – 09.5 வரை




## எஸ்.ஜே சூர்யாவுடன் தமிழில் அறிமுகமாகிறார் அமிதாப் பச்சன்!

கடைசியாக அட்லியின் 'மெர்சல்' படத்தில் நடித்திருந்தார் இயக்குநரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யா. தற்போது அஸ்வின் சரவணனின் 'இறவாக்காலம்', செல்வராகவனின் 'நெஞ்சம் மறப்பதில்லை' மற்றும் நெல்சன் வெங்கடேஷனின் படம் என அடுத்தடுத்துப் பல படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். இப்போது மீண்டுமொரு புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். 'உயர்ந்த மனிதன்' என தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யாவுடன் இணைந்து பிரபல ஹொலிவுட் நடிகர் அமிதாப் பச்சனும் நடிக்கிறார்.

அமிதாப் பச்சன் தமிழில் நடிக்கும் முதல் படம் இது. தமிழ், ஹிந்தி என இரு மொழிகளில் உருவாகும் இந்தப் படத்தை தமிழ்வாணன் இயக்கவிருக்கிறார்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | 3 | | 1 | |
| | | | | 7 | | 3 | | 5 |
| | | 8 | | | 6 | 2 | | |
| 6 | 8 | | | | | | 9 | |
| | | | | 5 | | | | |
| | 7 | | | | | | 2 | 3 |
| | | 6 | 2 | | | 1 | | |
| 5 | | 7 | | 4 | | | | |
| | 9 | | 7 | | | | | 2 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 1 | 8 | 3 | 6 | 7 | 4 |
| 7 | 3 | 1 | 2 | 4 | 6 | 9 | 8 | 5 |
| 4 | 8 | 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 2 |
| 2 | 1 | 9 | 6 | 3 | 5 | 7 | 4 | 8 |
| 3 | 4 | 7 | 9 | 2 | 8 | 5 | 6 | 1 |
| 5 | 6 | 8 | 7 | 1 | 4 | 2 | 9 | 3 |
| 8 | 9 | 5 | 3 | 6 | 2 | 4 | 1 | 7 |
| 6 | 7 | 4 | 8 | 5 | 1 | 3 | 2 | 9 |
| 1 | 2 | 3 | 4 | 9 | 7 | 8 | 5 | 6 |

நேற்றைய விடை

அம்மா சுருங்கி 'மொம்' ஆனாள்...
அப்பா சுருங்கி 'டாட்' ஆனார்...
சகோதரன் சுருங்கி 'புரோ' ஆனார்...
சகோதரி சுருங்கி 'சிஸ்' ஆனாள்...




இன்னும் சுருங்காதது நம
வாய் மட்டும் தான்...




என்னுடன் நான் எப்பொழுதும் முரண்படுவதே இல்லை. நான் செய்ய விரும்புவது எதுவாக இருந்தாலும், அதைச் செய்கிறேன்; எந்தக் குற்றவுணர்வும் இல்லாமல்.
**மொரியூவ்**

வன்மம் கையில்
வாள் கொடுக்கும்
அன்பு கையில்
பூங்கொத்தைக்
கொடுக்கும்

எல்லோரும்
மாற்று
வழியைத்தான்
யோசிக்கிறார்களே
ஒழிய, மாற்றும்
வழியை
யோசிப்பதில்லை!

"அய்யய்யோ! என் வைரத் தோடு, மூக்குத்தி எல்லாத்தையும் காணோம்."
"அதுக்கு ஏன்டி ஊரைக் கூட்டிற மாதிரி ஒப்பாரி வைக்கிறாய்? நான்தான் எல்லாத்தையும் வித்துட்டேன்"
"அடப்பாவி மனுஷா. ஏன்யா அப்படி செஞ்சே?"
"உன்னோட அப்பா சொன்னபடிதான் அப்படி செஞ்சேன்"
"அப்படி என்ன சொன்னார் என் அப்பா?"
"மாப்பிள்ளை! என் பொண்ணு முகத்தில புன்னகையைத் தவிர வேற எதையும் நான் பார்க்கக் கூடாதெண்டு சொன்னார்"

சொன்னதைச் செய்தேன்...





சம்பளம்
மட்டுமில்ல...
டுத்பேஸ்ட்
வாங்கினாலும்
ஆரம்பத்தில
கொஞ்சம்
தாராளமாகத்தான்
செலவு
பண்றோம்!

## சேவை நலன் பாராட்டுக்கள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பதிலதிபராகவும் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக பல பதவிகளில் வகித்து கல்லூரிக்கு சேவையாற்றி தற்போது மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச்செல்லும்

### திரு.சதா நிமலன் (S.L.P.S1)

அவர்கள் கல்லூரிக்கு ஆற்றிய சேவையினை நன்றியுடன் பாராட்டுவதோடு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் சிறப்புற சேவையாற்ற எல்லா வல்ல ஞான வைரவப்பெருமானின் அருளாசி கிடைக்க இறைஞ்சுகிறோம்.

பழையமாணவர்கள்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

**கார் விற்பனைக்கு**

**Maruti Suzuki, 800 AC (KL-XXXX)** கார் விற்பனைக்குண்டு.

**077 623 8129**

## வேலைவாய்ப்பு

**விஜித டிரேடிங் என்ட் இன்வெஸ்ட் மன்ட் இல்...**

- விற்பனை முகவர்
- பணம் வசூலிப்பவர்கள்
- பட்டா வாகனம் வாடகைக்கு மற்றும் சாரதிகள் தேவை

**(உணவு வழங்கப்படும்)**

**மாதாந்தம் 60000- 80000 வரை வருமானம் பெறலாம்.**

**011 432 0237, 076 535 0102**
A9 வீதி, நாவற்குழி சந்தி

(CS/19426)(11,17)

# Wanted
# Web developer / Programmer

**We are looking for talented PHP / MYSQL Programmers to work as Software Architects, Leader Developer, Senior or Junior Programmers**

**As an ideal candidate, you should have working Experience in web development and Internet based Application / Database management systems.**

**Salary from 100,000 - 300,000**

**Apply with your CV detailing qualification and work experience.**

**job@irstha.com**
**021 221 7871**
**www.irstha.com**
**No.64, Kannathiddy Rd, Jaffna.**

(CS/16821)(11,17)

## மாணவர்களுக்கான புதிய கற்கை நெறிகளுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்
## Sept.2018 முதல் வாரம் ஆரம்பம்

**Diploma Course**
- Information and Communication Technology (ICT) - (8 Months Full Time)

**Computer Certificate Courses ( 3- 4 Months Part time)**
- Computer Application Assistant (CAA) - NVQ Level 3 (Accredited)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & Power Point)
- Certificate in Graphic Designer - (Page Maker, Photoshop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing (HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Auto Cad 2D & 3 D Modeling
- Computerized Accounting Packages - ACC PAC, Tally & QuickBook
- Computer Programming - JAVA and C++ Programming

**Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேர தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி - Refrigeration & Air - Conditioning Mechanic
- மின் இணைப்பும் நிர்மாணமும் - Electrical Wiring
- மோட்டார் வாகனம் திருத்துதல் - Motorcycle & Light Engine Mechanism
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும் - NVQ Level - 3 (Accredited) - Aluminum Fabricator

**மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.**
(TVEC) **பதிவு இல** :- P25/ 0014, Facilities, Hostel, Library & Sports

**For More information :- Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai, Jaffna, Sri Lanka.**
**Tel: 021 321 3139/ 021 225 0975 E-mail: ejcit@sltnet.lk**

(C7658) (11,17)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.இந்துக் கல்லூரி அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**077 833 6848**

**வாடகைத் தாய் தேவை**

30 வயதுக்குக் குறைவான பெண் ஒருவர் **IVF** ஊசி மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.

**077 906 1406** (ACO/309) (11,17)

## விற்பனைக்கு

1 கியூப் ரிப்பர்

**077 480 1734** (CS/19383) (11,17)

**காணி தேவை**

**K.K.S,** மயிலிட்டி, பலாலி, வசாவிளான் பகுதிகளில்.

**077 480 1734**

**மணமகன் தேவை**

மீனராசி, பூரம் நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, 1990 ஆம் ஆண்டு பிறந்த ஆஸ்திரேலியா சிட்னியில் அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை. (பெற்றோர் தேடுகின்றனர்)

**+6140 1516492** (CS/19175) (11,17)

## விற்பனைக்கு

சவுக்கு, தேக்கு, மருது, நாவல், மலை வேம்பு, இலுப்பை, புங்கை, சமண்டலை, கயூ, கறுவா, கராம்பு, அன்னமுன்னா, சீதாபழம், வேம்பு, சித்திரவேம்பு, முழு நெல்லி, அரி நெல்லி, விலும்பி, கோப்பி, பாலை, முதிரை, நல்ல இன தென்னங் கன்று, மாங்கன்று வகை, தேசி, தோடை, பலா, கொய்யா, மாதுளை, செவிழை தென்னை, கமுகு, வெற்றிலை, பெசன் புறுட், ஈரப்பலா, ரெட்லேடி பப்பா, முருங்கை, யம்பு, கமுகு, கத்தாளை, முந்திரிகைக்கன்று, அம்பர் லாங்கன்று மேலும் பல இன பூங்கன்று வகை றோசா (ஒட்டு) சாடி வகைகளும் விற்பனைக் குண்டு.

**077 612 9343/ 077 279 0431**

**நியூ லங்கா பாம்.**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**கணேசா பாடசாலைக்கு அருகில்.**

**கிளை : கே.கே.எஸ். வீதி, இணுவில்.**

**வீடு வாடகைக்குண்டு**

நீர்வேலி சந்தி பருத்தித்துறை வீதியில் வீடு வளவும் சுற்றுமதில் கட்டப்பட்டுள்ளது. வாடகைக்குண்டு.

**077 633 1914**

**வீடு வாடகைக்கு**

நல்லூர், திருநெல்வேலி கிழக்கு, இல.76, செங்குந்தா வீதியில் மாடி வீடு, 4 அறைகள், சமையலறை, குளியலறை மற்றும் சகல வசதிகளுடன் கூடிய தனிவீடு இரண்டு வருட ஒப்பந்தத்துடன் வாடகைக்கு விடப்படும். முற்பணம் - 250.000/-, வாடகை - 25.000/-

**071 860 5623** (CS/19389) (11)

## விற்பனைக்கு

கொழும்புத்துறையில் 2.4 பரப்புக் காணி, சாவகச்சேரி சரசாலையில் 4 பரப்பு, முச்சக்கரக் கார், மோட்டார் சைக்கிள் - **Honda Super Cub, Multi cooker, Phone Samsung, Lumina**

**077 035 6468** CS/19348) (11,17)

**மணமகள் தேவை**

ஜேர்மன் குடியுரிமையுடன் **Soft ware . Engineer** ஆக தொழில்புரியும் 33 வயதான மணமகனுக்குப் பெற்றோர் 28 வயதுக்குட்பட்ட அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். மணமகள் புரட்டஸ்தான் சமயத்தினராகவோ அன்றி அதனைப் பின்பற்ற விரும்புபவராகவோ இருத்தல் வேண்டும்.

**077 738 9696** CS/19386) (11)

## கணக்காளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு அனுபவமுள்ள பெண் கணக்காளர் தேவை.

**077 262 2988**

## வேலையாள் தேவை

யாழில் இயங்கும் அரிசி ஆலைக்கு ஆண் வேலையாள்கள் (இரவு வேலை) தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

**077 257 5712**

(CS/19429)(11)

## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா - மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
**புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம், அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு**

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது




**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**
- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

**FAIR PHARMA (PVT) LTD**

**செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.**
**இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01**
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330**
**Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102**


APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை, BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.




## இளமைத் துடிப்புடன் dancing floor இல் வெற்றி பெறுங்கள்

**'பயோவிட்டா 40+ இல் உள்ள போஷன பதார்த்தங்களின் உதவியுடன் நடுத்தர வயதில் கவர்ச்சியான துடிப்பான வகையில், நயனங்களுடன் கால் வையுங்கள்'**

உங்கள் வயது 40 ஐத் தாண்டும் போது தலைமயிர் வெண்மையாதல் மூலம் முதிர்ந்த தோற்றத்தைக் காட்டும். வயது முதிர்வடைவதுடன் விட்டமின் B 12, போலிக் அமிலம், விட்டமின் C, B5, Calcium போன்ற போஷாக்குப் பிரிவுகள் உடலில் தேங்கி நிற்பது குறைவாகின்றது. ஆகையால் அவ்வாறான உள்ளீடு கொண்ட Biovita 40+ மேலதிமான போஷாக்கினால் அந்த சிக்கலைத் தீர்த்துக் கொள்ள முடியும்.



பயோவிட்டா 40+ மேலுள்ளவாறு நடுத்தர வயதிலும் உங்களை இளமையான தோற்றத்தில் வைக்கும்

மருத்துவர்
தினேஷ் விஜேதுங்க




போதி ஒன்றின் விலை ரூபா 1950.00

விநியோகிப்பு:
**ஆயுபாமா மற்றும் நியுட்ரா (தனியார்) கம்பனி,**
**இலக்கம் 981/A/1, மாஎலிய, ஜா எல.**
**உடனடி அழைப்பு: 0770 103 796**

கவிதை

டே.த.எட்வின்

# பாசம்



தானாடா விட்டாலும் தசையாடும் என்பதன்
தனிப்பொருள் பாசமே- அந்த
ஊனொடும் அளவிற்கு உள்ளத்தில் உறைந்து
உள்ளதும் பாசமே
வானெட்டும் வரைதூரம் வசதிகள் படைத்தாலும்
மாறாது பாசமே- அது
தான்கெட்டுப் போனாலும் தன்பாசம் கொண்டார்க்கு
போடாது வேசமே

ஒவ்வொரு உயிர்களும் சிக்குண்டு தவிப்பது
பாசத்தின் சிறையிலே- அது
எவ்வகை யாயினும் இணைந்து வளர்வது
தாயின்கரு அறையிலே
அவ்வகைப் பாசமும் அமைவது பிறந்திடும்
உறவெனும் முறையிலே- அதை
தெய்வத் தால்கூட திரைபோட்டு வைத்திட
முடியாது மறைவிலே

காசும் பொருளும் காணியும் பொன்னும்
காவிவராது பாசம்- அவை
வீசும் மணத்தில் வெறிகொண்டலைந்தால்
விளைந்துவிடும் மோசம்
மாசும் கறைதனைப் பூசும் மனங்கள்
நடிப்பது வெளிவேசம்- சிறு
தூசும் பிறர்க்கு துயர்தரக் காணின்
துடிப்பதுவே பாசம்.

ஆயிரம் ஆயிரம் உறவுகள் பாசத்தை
அள்ளி இறைத்தாலும்- யாரும்
வாயின் வார்த்தையால் பாசமெனும் சொல்லை
பலமுறை உரைத்தாலும்
கோயில் குளமென்று நேர்த்திக்காய் நிதிகோடி
கொட்டிக் குவித்தாலும்- ஒரு
தாயின் பாசத்திற் கிணையாமோ இந்த
பூமியை வைத்தாலும்

கண்ணையும் மணியையும் காப்பது இந்த
இமையதன் பாசமே- எம்
மண்ணையும் வளத்தையும் காப்பது மழைதரும்
மேகத்தின் பாசமே
விண்ணையும் மிஞ்சிடும் விசாலமானதொரு
உன்னத பாசமே- அது
உன்னையும் என்னையும் உலகிற்கு தந்த எம்
அன்னையின் பாசமே
தந்தையிக் பாசம் தாயுடன் இணைந்து
இருந்திடும் வரையிலே- அண்ணன்
தங்கையின் பாசமும் தமக்கென துணைதேடி
சென்றிடும் வரையினிலே
சொந்தமும் சுற்றமும் உன்பணம் பொருள்களை
சுகித்திடும் வரையிலே- இரத்த
பந்தம் இணைத்ததாய்ப் பாசத்திற்கு ஈரேழு
உலகமும் நிகரில்லையே.

## சொற்சிலம்பம் போட்டி இல: 538

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | ■ |
| | ■ | 9 | | 10 | | ■ | 11 |
| ■ | 12 | | ■ | | ■ | 13 | |
| 14 | | ■ | 15 | | 16 | | |
| 17 | | 18 | | ■ | | ■ | |
| | ■ | 19 | | 20 | ■ | 21 | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:....................................

முழுமையான தபால் விலாசம்: ............................

..................................................................

கையொப்பம்:................................................

**இடமிருந்து வலம்**

1. இதை ஆழப்படுத்துவது சர்ச்சையில் உள்ளது.
7. கீறுதல்
8. சோதிடத்தில் இது பன்னிரண்டு
9. சரஸ்வதி
12. பிரணவம்
13. கூட்டல் குறியீடு
14. இந்தியாவில் முன்னர் வழக்கில் இருந்த நாணய அலகு
15. தாமரை
17. கடும் ஆத்திர உணர்வு
19. மீளாத் துயில் கொள்ளும் இடம்
21. புதிய
22. திசை
23. முன்னாயத்த ஒழுங்கு

**மேலிருந்து கீழ்**

1. கோழி இனத்து ஆண் பறவை
2. உயர் அதிகாரி
3. ஓர் பிரபந்தம். நூறு செய்யுள்கள் கொண்டது
4. காடும், காடு சார்ந்த நிலமும்
5. வலு
6. அனுபவித்து மகிழ்
10. ஏழு நாள்கள் கொண்டது
11. செருக்கு
12. வேலிக்கு இதுவா காவல்?
13. கணிதக் குறியீடு
14. இழுக்குச் செய்
15. அன்னை
16. நெருப்பில்லாமல் இது வராது என்பது பழமொழி
18. சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய எண்ணெய் வகை
20. சிரார்த்த நாள்
21. அசையுமாறான ஏவல்

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 536 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) இருதய வால்வு (4)கனி (5) தாழ்ப்பாள் (8) கைகாட்டி (11) வடிவு (17) குளி (18) புதி(ர்)

**மேலிருந்து கீழ்**
(1) இனிப்பு (2)கரு (3)வாழ்க்கை (6)பாலூட்டி (7) செயலகம் (9) காவலாளி (12) இலகு (13)துட்டு (14)மடை (16)பேதி

*குறிப்பு :மேலிருந்து கீழ் இல 10இற்கான விளக்கம் தவறுதலாக விடுபட்டுள்ளது.*

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.538**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (12.09.2018 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத்தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 536 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்டசாலிகள் மூவரது பெயர் விவரங்கள் வருமாறு:**

**1 ஆம் பரிசு**
த.சிவநேசம்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

**2 ஆம் பரிசு**
ஸ்ரீ.அர்ச்சயன்,
பெரிய மதவடி ஒழுங்கை,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி

**3 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம்தோட்டம்,
கந்தசுவாமிகோயிலடி,
வட்டுக்கோட்டை

சொற்சிலம்பம் போட்டி இல.538இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 16.09.2018 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறா தவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 536 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்

**02.08.2018 முதல் 08.09.2018 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

குரு, சந்திரன் நற்பலன் தருவர். முக்கியபணி திட்டமிட்ட கால அவகாசத்தில் நிறைவேறும். உடன்பிறந்தவர் செயலை குறை சொல்ல வேண்டாம். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பணக்கடன் தொந்தரவு தரலாம். மனைவி வழி சார்ந்த உறவினர் ஓரளவு உதவுவர். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் கூடுதல் கவனமுடன் பணிபுரிவது அவசியம். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். பெண்கள் தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேச வேண்டாம். அரசு உதவி எளிதில் பெறலாம்.

## இடபம்

ராகு, புதன், சுக்கிரன் அனுகூலபலன் வழங்குவர். சமூக நிகழ்வுகளால் இனிய அனுபவம் காண்பீர்கள். உற்சாகத்துடன் புதிய பொறுப்புளை ஏற்று பணிபுரிவீர்கள். வெளியூர் பயணம் அதிகரிக்கும். பிள்ளைகள் மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். படிப்பு, வேலையில் நல்ல முன்னேற்றம் காண்பர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பும், சன்மானமும் அதிகரிக்கும். பெண்கள் கணவரின் அன்பில் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் நண்பர்களின் உதவியால் படிப்பில் முன்னேறுவர். பிள்ளைகளின் நற்செயல்கள் நிறைவேற உதவுவீர்கள்.

## மிதுனம்

சூரியன், சுக்கிரன், குரு அதிகளவு நன்மை தருவர். செயல்களை புதிய அணுகுமுறையால் நிறைவேற்றுவீர்கள். புதிய முயற்சியால் பணவரவு அதிகரிக்கும். தாய் வழி சார்ந்த உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மனைவியின் ஆலோசனை குடும்பத்தில் ஒற்றுமையை பலப்படுத்தும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால் வளர்ச்சியை ஏற்படுத்துவீர்கள். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்கள் மனம் விரும்பியபடி நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். உங்கள் மனதில் புத்துணர்வு உருவாகும். வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு கிடைக்கும். உடன்பிறந்தவரின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். பிள்ளைகள் விரும்பிய பொருள் கேட்டு பிடிவாதம் செய்வர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். எதிர் மனப்பாங்கு உள்ளவரும் உங்களிடம் அன்பு பாராட்டுவர். மனைவி குடும்ப ஒற்றுமையை பாதுகாத்திடுவார். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர் குறித்த காலத்தில் பணி இலக்கை பூர்த்தி செய்வர். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## சிங்கம்

சுக்கிரன், செவ்வாய், கேது, சந்திரனால் நன்மையுண்டு. திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர் உதவி கேட்டு அணுகுவர். புதிய வீடு, வாகனம் வாங்குகின்ற முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகள் உங்களிடம் அதிருப்தியை வெளிப்படுத்துவர். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். வழக்கு, விவ காரங்களில் அனுகூலதீர்வு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். தொழிலில் வளர்ச்சியும், ஆதாய பணவரவும் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் நன்மதிப்பைப் பெறுவர். பெண்கள் உறவினர்களை அன்புடன் உபசரிப்பர். மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி காண்பர்.

## கன்னி

சுக்கிரன், குரு, ராகு, சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சி பெருகும். குடும்பத்திற்காக அதிக பணம் செலவு செய்வீர்கள். பிள்ளைகளின் குறையை இனிய அணுகுமுறையால் சரி செய்வது நல்லது. கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். சொத்து தொடர்பான ஆவணம் பிறர் பொறுப்பில் வழங்க வேண்டாம். மனைவியின் செயல்கள் சிறப்பாக அமைந்து நற்பெயர் பெற்றுத் தரும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டியால் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பை ஏற்றுக் கொள்வர். பெண்கள் உறவினர்களின் குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## துலாம்

புதன், சூரியன், சுக்கிரன், சனீஸ்வரர் அனுகூல அமர்வில் உள்ளனர். முக்கியமான பணி இஷ்டதெய்வ அருளால் நிறைவேறும். அன்றாட வாழ்வியல் நடைமுறை சிறப்பாக இருக்கும். தாய்வழி உறவினர் தேவையான உதவியை வழங்குவர். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பு, செயல்திறனில் மேம்படுவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி பாச பந்தமுடன் இருப்பர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் வேண்டும்.

## விருச்சிகம்

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். உத்வேகமுடன் பணியில் ஈடுபடுவீர்கள். நற்பெயரும், புகழும் தேடி வரும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். பிள்ளைகள் பெற்றோரின் வழிகாட்டுதலை தயக்கமுடன் ஏற்றுக் கொள்வர். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். மனைவி கருத்திணக்கமுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரம் புதியவர்களின் ஆதரவினால் செழிக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் நன்றாக படித்துபரிசு வாங்குவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவர்.

## தனுசு

குரு, சந்திரன் நற்பலன் தருவர். நண்பர் உங்களின் நற்குணங்களை பாராட்டி மகிழ்வர். உடன்பிறந்தவர் வகையில் சுப நிகழ்ச்சி நடந்தேறும். தாய்வழி உறவினர்க்கு உதவுவீர்கள். வாகனப்பயணம் இனிய அனுபவம் தரும். பிள்ளைகள் பெற்றோரின் எண்ணங்களை மதித்து செயல்படுவர். உணவில் கட்டுப்பாடு பேணுவது நல்லது. மனைவியின் உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழிலில் இடையூறுகளை சரி செய்யவும். இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது. மாணவர்கள் படிப்பில் அதிக தேர்ச்சி பெறுவர்.

## மகரம்

புதன், சுக்கிரன், சந்திரன் சுபபலன் வழங்குவர். பணிகளை உரிய திட்டமிடுதலுடன் ஆரம்பிப்பது அவசியம். தாய் வழி உறவினரால் உதவி உண்டு. பிள்ளைகள் பெற்றோரின் கருத்தை வேதமென ஏற்றுக்கொள்வர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவியின் செயல்கள் நல்லவிதமாக அமைந்திட ஆலோசனை சொல்வீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நிறைந்திருக்கும். தொழிலில் வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். லாபம் உயரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். வெளியூர் பயணத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். பெண்கள் நற்செயலால் குடும்பத்திற்கு பெருமை சேர்ப்பர். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை.

## கும்பம்

ராகு, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் ராஜ யோக பலன் வழங்குவர். உறவினர்களுடன் இனிய சந்திப்பு ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். புதிய வீடு, வாகனம் வாங்குகின்ற முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும். பிள்ளைகள் உங்கள் சொல்லை மதித்து செயல்படுவர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். மனைவியின் அன்பு கண்டு மனம் மகிழ்வீர்கள். வீட்டில் சுப நிகழ்ச்சியை சிறப்பாக நடத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான பணி நிறைவேறும். பணியாளர்கள் பணியிடச்சூழல் உணர்ந்து செயல்படுவர். பெண்கள் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர். பூர்வீகச் சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும்.

## மீனம்

சூரியன், புதன், செவ்வாய், கேது அளப்பரிய நன்மையை வழங்குவர். உங்கள் பேச்சில் வசீகரம் இருக்கும். அக்கம் பக்கத்தவர் அன்புடன் பழகுவர். மனிதாபிமான சிந்தனையுடன் மற்றவருக்கு உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம் மருத்துவ சிகிச்சையால் மேம்படும். வழக்கு, விவகாரத்தில் சமரசத்தீர்வு கிடைக்கும். மனைவியின் செயல்களை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சீராக இருக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் புதிய சாதனை நிகழ்த்துவர். பணியாளர்கள் பணி இலக்கை சிறப்பாக நிறைவேற்றுவர்.



# மாட்டை ஏன் கையில் எடுக்கிறார்கள்?

கட்டுரை

சமஸ்



மாட்டைப் புரிந்துகொள்ள முற்படுவதன் மூலமாக ஒரு நாட்டின் அரசியலையோ, அந்நாட்டை ஆள்கின்ற அரசையோ புரிந்து கொள்ள முற்படுவது என்பது வேடிக்கையான ஓர் அரசியல் ஆய்வுதான். நாட்டின் 50% மக்கள் இன்னமும் விவசாயத்தைச் சார்ந்திருக்கும் ஒரு நாட்டில், அதுவும் 29.9 கோடி மாடுகள் வளர்க்கப்படும் ஒரு நாட்டில் மாடு வளர்ப்பைப் பாதிப்படையச் செய்யும் செயல்திட்டங்களை ஓர் அரசோ, அரசியல் கட்சியோ வெளிப்படையாக முன்னெடுக்க முடியுமா?

முடியவே முடியாது என்றே நான் நினைக்கிறேன்! இந்திய விவசாயிகளுக்கு, நேரடி வேளாண்மையைத் தாண்டி இன்றுள்ள பெரிய ஆதாரம் கால்நடை வளர்ப்பு. 1947ஆம் ஆண்டில் நம் நாட்டின் கால்நடைகளின் எண்ணிக்கை 29.29 கோடி. இன்றைக்கு 51.2 கோடி. இவற்றில் மாடுகளின் எண்ணிக்கை மட்டும் 29.96 கோடி. இந்தியாவின் சுதந்திரத் துக்குப் பிந்தைய 70 ஆண்டுகளில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மாடுகளின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறார்கள் நம்முடைய விவசாயிகள். நேர் எதிராக இந்த 70 ஆண்டுகளில் கால்நடை வளர்ப்புக்கான இயற்கையான சூழல், பாதிக்கும் மேல் அழிக்கப்பட்டிருக்கிறது. பல கிராமங்களில் கால்நடைகளுக்கு என்று இன்று மேய்ச்சல் நிலம்கூட கிடையாது. ஆனாலும், பால் உற்பத்தியைக் கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் இரண்டு மடங்குக்கு மேல் நம் விவசாயிகள் உயர்த்தியிருக்கிறார்கள்.

**வாழ்வாதாரத்துடன் பிணைப்பு**

இந்தியாவில் பாரம்பரியமாக மாடு வளர்ப்புத் தொழில் முக்கியமாக மூன்று துறைகளையே பெரிதும் நம்பியிருந்தது. இதில் பால், தோலுக்கு அடுத்த நிலையில் வருமானம் சார்ந்து சொற்ப இடத்திலேயே மாட்டிறைச்சி இருந்துவந்தது. அதாவது, ஒரு பாரம்பரிய இந்திய விவசாயி ஆடு வளர்ப்பதுபோல இறைச்சித் தொழிலை நம்பி மாடு வளர்ப்பதில்லை. ஆனால், இந்த நிலைமை பிற்பாடு வெகுவாக மாறியது. குறிப்பாக, உலகமயமாக்கலுக்குப் பிந்தைய இன்றைய காலகட்டத்தில் இறைச்சித் தொழிலானது மாடு வளர்ப்பின் பிரித்துப் பார்க்க முடியாத ஒரு அங்கமாகிவருகிறது. இன்றைக்கு இந்திய மாட்டிறைச்சி ஏற்றுமதி சந்தையின் மதிப்பு மட்டும் சுமார் ரூ.30,000 கோடி. மேலும், இறைச்சித் தேவைக்காக மாட்டை அனுப்ப முடியாத சூழல் ஏற்பட்டால் பெரும்பாலான இந்திய விவசாயிகள் மாடு வளர்ப்பையே விட்டுவிடும் அல்லது இன்றைக்கு விற்பதுபோல மூன்று மடங்கு விலைக்குப் பால் விலையை உயர்த்தி விற்கும் நிலை ஏற்படும்.

**அரசியலும் மாடும்**

உத்தர பிரதேசத்தில் இருந்த நாள்களில் நண்பர்கள் சொன்னார்கள், "மாட்டிறைச்சி விடயத்தில் பேசுவதைத் தாண்டி உண்மையாகவே கை வைத்தால் பாஜக அரசை வீட்டுக்கு அனுப்ப அதுவே போதுமானது. பாஜகவால் மட்டும் அல்ல. எந்த அரசியல் கட்சியாலும் இந்தியாவில் ஒருநாளும் மாடு மீது கை வைக்கவே முடியாது. சொல்லப்போனால், இந்தத் தேர்தலில் உத்தர பிரதேச மக்களுக்கு பாஜக கொடுத்திருக்கும் முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்று, 'குஜராத்தைப்போல உத்தர பிரதேசத்திலும் பால் உற்பத்தியை அதிகரித்து, வெண்மைப் புரட்சியை உண்டாக்குவோம்' என்பது. குஜராத் 'வெண்மைப் புரட்சி' சாஸ்திரி காலத்தில் காங்கிரஸ் உருவாக்கியது என்பது இன்றையதலைமுறைஉத்தரபிரதேசவிவசாயிகளுக்குத் தெரியாது என்றாலும், 'வெண்மைப் புரட்சி'க்கு மாடு வளர்ப்புத் தொழிலை அரசு எவ்வளவு தூக்கிப் பிடிக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். இந்த விடயத்தில் அரசு ஏதாவது கோளாறு செய்தால் அரசையே அவர்கள் தூக்கியடிப்பார்கள்!"

உண்மைதான். நாட்டிலேயே அதிகமான மாடுகள் உள்ள மாநிலம் உத்தர பிரதேசம். ஆனால், மாட்டிறைச்சித் தொழில் வளர்ந்த அளவுக்குப் பால் உற்பத்தி அங்கு வளரவில்லை. கடந்த 15 வருடங்களை எடுத்துக்கொண்டால், மாட்டிறைச்சி உற்பத்தி 253% வளர்ந்திருக்கிறது. ஆனால், பால் உற்பத்தி 25% மட்டுமே வளர்ந்திருக்கிறது. நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டாலும், அதனால் விவசாயிகளுக்கு இலாபம் அதிகம் இல்லை. ஏனென்றால், நாட்டுப் பசுக்களே இங்கு அதிகம். உதாரணமாக, 15 நாட்டுப் பசுக்களுக்கு ஒரு பசுதான் சீமைப்பசு. நாட்டுப் பசுவோடு ஒப்பிட்டால் ஒரு சீமைப்பசு குறைந்தது மூன்று மடங்கு பால் தரும்.

பஞ்சாப், ஹரியாணா, குஜராத்தில் எல்லாம் ஒரு நாட்டுப் பசுவுக்கு 8 சீமைப்பசுக்கள் என்கிற விகிதத்தில் மாடுகள் இருக்கின்றன. அதனால், அங்கெல்லாம் பால் உற்பத்தியும் அதிகம்; விவசாயிகளுக்கான இலாபமும் அதிகம். குஜராத்தை எடுத்துக்கொண்டால், அங்கு கொள்முதலாகும் பாலில் மூன்றில் ஒரு பங்கு பால் பொருள்கள் தயாரிப்புக்காகச் செல்கின்றன. இங்கு அந்த வசதி இல்லை.



இதையெல்லாம் பேசித்தான் இந்த முறை பாஜக அங்கு வாக்கு வாங்கியிருக்கிறது. மாட்டிறைச்சி அரசியலை அதிகம் பேசினால், விவசாயிகள் வெறுத்துவிடுவார்கள். ஏனென்றால், இன்றைக்குப் பாசுமதி அரிசி ஏற்றுமதியைக் காட்டிலும் அதிகம் பணம் தரும் தொழில் இது. தவிர, பசுப் பாதுகாப்பு என்று பகட்டுவது காலப்போக்கில் பசுக்களின் இனத்தையே இல்லாமலாக்கிவிடக் கூடியது. ஏனென்றால், ஒரு பசு அதிகபட்சம் 10 தொடக்கம் 15 வரையான வருடங்கள் வரைக்கும் பால் கொடுக்கலாம். ஆனால், 20 வருடங்கள் வரைக்கும் உயிரோடு இருக்கக் கூடியது. கறவையை நிறுத்திய பின், பயன் தராத ஒரு பிராணிக்கு யார் தினமும் தீனியிட்டு வருடக் கணக்கில் வளர்ப்பார்கள்?

**தாய் மாடும் இறைச்சிக்கு...**

இன்றைக்கு ஒரு விவசாயி மாடு வளர்க்கிறார் என்றால், குறைந்தது 10 வருடங்களுக்கு அது பால் கொடுக்கும், இடையில் அது கன்று போடும் அந்தக் கன்று பசுவாக இருந்தால் வளர்ப்புக்கு, காளையாக இருந்தால் இறைச்சிக்கு அப்புறம் கடைசியாக தாய் மாடும் அடிமாட்டுக்கு என்ற கணக்கிலேயே வளர்க்கிறார்கள். இப்படியெல்லாம் இல்லாமல், ஒரு மாட்டுக்கு அன்றாடம் ரூ.100ரூ.200 செலவிட்டு ஒரு லீற்றர் பாலை ரூ.30க்கு விற்று ஒரு விவசாயி வாழ்க்கை நடத்த முடியாது. ஆக, மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களே மறைமுகமாக மாடுகள், மாடு வளர்ப்பு, குறைவான பால் விலைக்கு உதவுகிறார்கள் என்பதே இன்றைய யதார்த்தம்.

2016ஆம் ஆண்டில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் உலகின் முதலிடம் நோக்கி நகர்ந்தது இந்தியா. மாட்டிறைச்சி ஏற்றுமதிச் சந்தையில் இன்று கிட்டத்தட்ட உலகின் ஐந்தில் ஒரு பங்கு தேவையை இந்திய விவசாயிகள் நிறைவேற்றுகின்றனர்; தவிர உள்நாட்டிலும் இறைச்சித் தேவையைக் கணிசமான அளவில் பூர்த்திசெய்கின்றனர். பாஜக அரசின் சமீபத்திய நடவடிக்கைகளுக்குப் பிறகு மாடுகளை வாங்கவே வியாபாரிகள் அஞ்சுகிறார்கள். குறிப்பாக, இறைச்சிக்காக மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளை விற்பதற்குச் சமீபத்தில் விதிக்கப்பட்டிருக்கும் தடைச் சூழல் நீடித்தால், மாட்டிறைச்சி வியாபாரத்துக்கே மாடுகளை அனுப்ப முடியாத நிலை உருவாகிவிடும். விளைவாக மாடு வளர்ப்புத் தொழிலே சீர்குலைந்து போகும். அப்படியென்றால், இப்படி ஒரு நடவடிக்கையை எப்படி பாஜக அரசு எடுக்கிறது? இதன் பின்னுள்ள அரசியல் கணக்குகள் என்னவாக இருக்கும்?

**பின்னாலுள்ள அரசியல்**

நிறையக் காரணங்கள் பேசப்படுகின்றன. மாட்டிறைச்சித் தொழிலில் கணிசமான எண்ணிக்கையில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதில் தொடங்கி, சிறு குறு விவசாயிகள் ஆதிக்கத்தில் இருக்கும் இந்திய மாடு வளர்ப்புத் தொழிலைப் பெருநிறுவனங்களின் களமாக்குவது வரை இருக்கலாம். இவை எல்லாவற்றையும் தாண்டி இரண்டு முக்கியமான அரசியல் நோக்கங்கள் பாஜகவுக்கு இருப்பதாக நான் கருதுகிறேன். 1-கவனத் திசைத் திருப்பல், 2-எதிர்மறை அணித்திரட்டல்! நிச்சயமாக இந்த மாட்டரசியலை நிரந்தரமாகவோ, தீவிரமாகவோ பாஜக தொடராது. அதன் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் தெரியும், இரண்டு பட அட்டைகள் அதன் கையில் எப்போதும் இருக்கின்றன; இந்திய ஆன்மாவோடு சிக்கலான வகையில் பிணைக்கப்பட்ட இரண்டு படங்கள்: ஒன்று ராமரின் படம், மற்றொன்று பசுவின் படம்! இரண்டையும் மாற்றி மாற்றிக் காட்டியே காலத்தை அது ஓட்டிவந்திருக்கிறது. ராமர் படத்தைக் காட்டி வெகுநாளாகக் காலத்தை ஓட்டிவிட்டபடியால், பசு படத்தை இப்போது அது கையில் எடுத்திருக்கிறது. இந்தப் படத்தைக் காட்டினால் ஒட்டுமொத்த தேசத்தின் கவனத்தையும் எதிர்க்கட்சிகள் இதை நோக்கித் திருப்பிவிடுவார்கள் என்று அது கணக்கிடுகிறது. அப்படித்தான் நடக்கிறது. பாஜக கணக்கிடுவதுபோலவே அது வைக்கும் பொறிகளில் எதிர்க்கட்சிகள் பெரிய அளவில் சிக்கிக்கொள்வதுதான் இன்றைய இந்திய அரசியலின் பெரும் துயரம். ஆம், மோடியாலும் பாஜகவாலும் தங்களுடைய இலக்குகளை மட்டும் அல்ல; எதிரிகளின் இலக்குகளையும் இன்று தீர்மானிக்க முடிகிறது!

(நன்றி: ஹிந்து)

கட்டுரை

பா.குமுதன்



# மகாவலியும் தமிழ் மக்களும்!

கடற்கரைப் பிரதேசத்தையும், அடர்ந்த பெரும் வனப்பகுதிகளையும் கொண்டமைந்த பசுமைநிறைந்த பகுதியாக இருக்கின்ற முல்லைத்தீவு மாவட்டமானது வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பூர்விகத் தமிழ்க் கிராமங்களைத் தன்னகத்தே கொண்டமைந்த மாவட்டமாக விளங்குகின்றது. அங்குள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி உட்பட்ட தொழில்களைத் தமது வாழ்வாதாரத்துக்காக மேற்கொண்டு வருகிறார்கள். இறுதிகட்டப் போரின் பிடியில் அகப்பட்டமையால், பெரும் அழிவுகளைச் சந்தித்த மாவட்டமாகவும் இது விளங்குகின்றது. வறுமை நிலையில் முன்னணியில் இருக்கிறது. இத்தகைய சூழலில் அரசினுடைய திட்டமிட்ட சிங்களக் குடி யேற்றங்களின் பரவல் குறித்த மாவட்டத்தில் அதிகமாகவே காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தின் ஊடாகப் பரவலடைந்து வந்த சிங்களக் குடியேற்றங்கள் வடக்கில் தமது இருப்பைப் பலமாக நிறுத்தமுயல்வதை முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய குடியேற்றங்கள் பறைசாற்றுவதாக உள்ளன. மகாவலி அதிகார சபை என்ற போர்வையிலேயே குறித்த குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் அதிவீச்சான செயற்பாடே தமிழ்மக்கள் மத்தியில் கடந்த வாரம் ஒருவித சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. இது காரணமாகக் கடந்த 28ஆம் திகதி மக்களின் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று பெரியளவில் நடந்திருந்தது.

**மகாவலி 'எல்' வலயமும் சிங்களக் குடியேற்றமும்**

இறுதியாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி மகாவலி 'எல்' வலயமானது முல்லைத்தீவின் பல பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான மண்கிண்டிமலை, ஆமையன்குளம், முந்திரிகைக் குளம், சிலோன் தியேட்டர்ஸ் பண்ணை, கென்பண்ணை மற்றும் வவுனியா வடக்கில் வெடிவைத்தகல், மயில்குளம், கொக்கச்சான்குளம் எனத் தமிழரின் பூர்விகக் கிராமங்களில் ஏற்கனவே சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்டு, சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டிருக்கின்றன. அந்த நிலையில் மகாவலி 'எல்' வலயத்துக்குள் முல்லைதீவு மாவட்டத்தின் நாயாறு, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் உட்பட்ட பூர்விகத் தமிழக் கிராமங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இங்கு வாழ்ந்த மக்களுக்குச் சொந்தமான 2ஆயிரத்து150 ஏக்கர் வயல் காணிகள் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளன.



மேற்குறித்த பகுதிகளை உள்ளடக்கிய கிராமங்களில் இருந்து 1984ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாகத் தமிழ்மக்கள் வெளியேறியிருந்தனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவேண்டி, கொக்கிளாய் கிழக்கு, மேற்கு, கருநாட்டுகேணி, கொக்குத் தொடுவாய் ஆகிய கிராமத்து மக்களை 24 மணித்தியாலங்களுக்குள் வெளியேறுமாறு குறித்த பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு இலங்கை அரசபடை 1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு அறிவித்தலை விடுத்திருந்தது. அதன்பிரகாரம் குறித்த பகுதியை விட்டு மக்கள் வெளியேறினர். பிரதேசங்கள் அனைத்தும் இராணுவத்தின் வசமாகின. இராணுவ நடவடிக்கைகள் எவையும்இடம்பெறாத நிலையில் சிங்களக் குடியேற்றங்கள் தோற்றம்பெற்றன. போர் முடிவுற்றதும், அவ்விடங்களில் குடியேறிய தமிழ் மக்கள் தமது நிலங்கள் பறிபோனதை உணர்ந்தனர். தமது வயல்நிலங்களை மகாவலி அதிகார சபையானது சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளித்து, அதில் சிங்கள மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதைப் புரிந்து கொண்டனர். குறித்த காணிகளுக்கான உரிமைப்பத்திரங்கள் தமிழ்மக்களுக்கு 30வருடங்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளன. உரிமைப் பத்திரங்களையுடைய, தமிழருடைய காணிகளை மகாவலி அதிகாரசபையானது கையகப்படுத்தி, சிங்கள ம்க்களுக்கு வழங்கி, அவர்களுக்குப் புதிய காணிப் பத்திரமும் கொடுத்திருப்பதானது நாட்டின் காணி சட்டவிதிமுறைகளில் முரணான நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அரசு அதை ஒரு பொருட்டாகக் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் எல்லைப் பகுதியிலேயே குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. குறித்த இரண்டு மாகாணங்களுக்கு இடையேயான நிலத்தொடர்பைத் துண்டித்துவிட்டால் வடக்குக் கிழக்கு இணைந்த எந்த ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்துக்கும் தடையை ஏற்படுத்த முடியும். இதுவே இந்தப் பகுதிச் சிங்களக் குடியேற்றங்களுக்குப் பின்னாலுள்ள அரசியல்.

**ஆக்கிரமிக்கப்பட்ட மீன்பிடித் துறைகள்**

1982ஆம் ஆண்டு காலப்பகுதியில் முல்லைத்தீவின் கொக்கிளாய், நாயாறு ஆகிய பகுதிகளில் இருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர். அங்கிருந்த மீன்வாடிகளை இராணுவம் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவியுடன் வெளி மாவட்ட மீனவர்கள் அக்கிரமித்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். 1980ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் கொக்குத்தொடுவாயில் 12வரையான கரைவலைப் பாடுகள் காணப்பட்டன. அதில் 11பாடுகள் தமிழர்களுடையன. ஒரு சிறிய கரைவலைப் பாடு மாத்திரம் வெளிப்பிரதேசத்தவருக்கு உரியதாக இருந்திருக்கிறது. ஆனால், 12 கரைவலைப்பாடுகளையும் பின்னர் வெளிமாவட்ட மீனவர்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஏற்கனவே போர் ஏற்படுத்திய பின்னடைவுகளைச் சுமந்து நிற்கும் மக்கள் தற்போதும் இழப்புக்களுடனேயே வாழ்க்கையைத் தொடர்கின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரத்தைப் பலப்படுத்த முனைவதை விடுத்து, சிதைந்துள்ள அவர்களின் தொழில் உள்ளிட்ட வாழ்வாதாரங்களில் கைவைக்கப்படுகிறது. தமிழ்மக்கள் தமது பூர்வீகப் பிரதேசங்களை விட்டுவெளியேறி விடுவார்கள் என்ற கபட நோக்கத்துடனேயே குறித்த அத்துமீறல்கள் அனைத்தும் மேற்கொள்ளபட்டுவருகின்றன.

**மணலாறு(வெலிஓயா) பிரதேச செயலாளர் பிரிவு**

அநுராதபுரம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பகுதிகளை எல்லையாகக் கொண்டமைந்துள்ளது மணலாறு (வெலிஓயா) பகுதி. தமிழரின் பூர்விக நிலமான இங்கு சிங்களக் குடியேற்றங்கள் பரவலாக மேற்கொள்ளபட்டு, பின்னர் அதன் பெயர் மாற்றபட்டு வெலிஓயா என்று அழைக்கப்படுகின்றது. எல்லைப் பிரதேசமாகவிருந்த மணலாறுப் பகுதியை அநுராதபுர மாவட்ட நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவந்து பரவலான சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டுவிட்டு வெலிஓயா எனப் பெயர்மாற்றப்பட்டு மீண்டும் முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைத்து வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு உருவாக்கப்பட்டது. குறித்த பகுதியில் 19கிராமங்களைக் கொண்ட ஒன்பது கிராமசேவகர் பிரிவுகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதுடன், 3ஆயிரத்து 500வரையான குடும்பங்களைச் சேர்ந்த 12ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மணலாறுப் பகுதி வடக்குக் கிழக்கு மாகாணங்களின் எல்லைப்பகுதியாக விளங்குகின்றது.

அந்த நிலத்தொடர்பைத் துண்டிக்கச் செய்வதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் குடிப்பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவது பேரினவாதிகளின் திட்டமாக இருக்கிறது. அரச இயந்திரத்தின் முழுவீச்சான செயற்பாட்டின் மூலம் மிகவும் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றது வெலிஓயா பிரதேசசெயலாளர் பிரிவு.

**அரசமைப்பின் 13ஆவது சீர்திருத்தம்**

இலங்கை-இந்திய அரசுகளால் உருவாக்கப்பட்ட 13ஆவது அரசமைப்புச் சீர்சிருத்த த்தில் காணிகள் தொடர்பான சரத்துக்கள் பல உள்வாங்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட, இடம்பெயர்ந்த மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் காணிகள் வழங்கப்படவேண்டும் என்றும் இனவிகிதாசாரம் பேணப்படுவதுடன், குடியேற்றங்களை மேற்கொள்ளும் போது முதலில் அந்த மாவட்டத்தில் காணி இல்லாத மக்களுக்குக் காணிகளை வழங்கவேண்டும் என்றும் தெளிவாக அந்த அரசமைப்பில் கூறப்பட்டுள்ளது. ஆனால், வடக்கு மாகாணத்தில் காணியற்ற தமிழ்மக்கள் பலர் இன்னமும் இருந்து வருகின்ற நிலையில் வெளிமாகாணங்களில் இருந்து பெரும்பாண்மையின மக்களை அழைத்துவந்து குடியேற்றும் செயற்பாடுகள் நடைபெறுவது குறித்த அரசமைப்புக் குறிப்பிட்டிருப்பதற்கு முரணானதே. அதுமட்டுமல்லாமல் இடம்பெயர்ந்துசென்ற மக்கள் திரும்பச் சென்று தமது பூர்விகக் காணிகளைத் துப்புரவாக்கி குடியமர்வதற்கும் வனவளத் திணைக்களம் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது. முல்லைத்தீவு, நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் காடுகளை அழித்துச் சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்ந்து வருவதைக் கண்டுகொள்ளாத வனவளத் திணைக்களம் தமிழ் மக்களின் பூர்விகக் காணிகளில் மாத்திரம் கண்வைத்திருப்பது அரசினுடைய ஏற்றத்தாழ்வு மனப்பாங்கையே வெளிப்படுத்துகிறது.

**பலவீனமான நிலையில் தமிழர் தரப்பு**

போருக்குப் பின்பான காலப்பகுதியில் குறிப்பாக விடுதலைப்புலிகள் தோற்கடிக்கபட்டதன் பின்னர் நாட்டில் தமிழருடைய அரசியல் இருப்பு அதிகம் கேள்விக்குள்ளான நிலையிலேயே இருக்கின்றது. பரவலான குடியேற்றங்கள், மக்களின் வாழ்வாதார விடயங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகள், வேலைவாய்ப்பு, வறுமை உள்ளிட்ட பிரச்சினைகளைத் தமிழ்த் தலைமைகள் சரிவரக் கையாள்வதில்லை என்ற பெரும் குறை மக்கள் மத்தியில் இருந்து வருகிறது.

ஆனால், ஆட்சியேறும் அரசுகள் தொடர்ந்தும் இந்தப் பலமற்ற தன்மையைத் தமக்கு ஏற்ற விதத்தில் கையாளுவதுடன் தமது பணிகளைக் கச்சிதமாக முழுமை செய்தும் வருகின்றன.

போர் காரணமான உயிரிழப்பு, இடப்பெயர்வு, வெளிநாட்டு மோகம் போன்ற காரணிகள் இன்றளவில் தமிழர் இனவிகிதாசாரத்தில் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றன. கடந்த ஆண்டளவில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிவரங்களின் படி இந்தியா உட்பட மேற்குலக நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்களின் எண்ணிக்கை 15இலட்சத்தையும் தாண்டியுள்து. தமிழர் பகுதிகளில் நிலவுகின்ற வறுமை, வேலைவாய்ப்புப் பிரச்சினை, பாதுகாப்பு விடயங்களால் பலர் வெளிநாடுகளை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருக்கின்றனர்.

ஆகையால் அபிவிருத்திகளும் அது சார்ந்த பொறிமுறைகளும் தமிழ்ச் சமூகத்துக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றன. அதன் மூலம் தமிழ்ச் சமூகத்தை ஆரோக்கிய நிலையில் நாட்டில் இருப்புக்கொள்ளச் செய்ய முடியும். அதில் குறிப்பிட்டளவான வலுவைக் கொண்டிருக்கும் பட்சத்திலேயே அரசியல் தீர்வு சார்ந்த குறிப்பிட்டளவான தாக்கத்தையாவது செலுத்துவதற்குத் தமிழர் தரப்பால் முடியும்.


Northway Family Mart
யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தி அருகில்
உங்கள் இல்லத்தின் அனைத்து தேவைகளையும்
ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்ய
Northway Family Mart
எம்மிடம்
தாராளமான தெரிவுகள்,
சிநேகபூர்வமான
வாடிக்கையாளர் சேவை,
வாகன தரிப்பிட வசதி,
இன்னும் பல...
இன்றே வாருங்கள்!
FRUITS
விசேட
விலைக்கழிவுகள்
வழங்கப்
படுகின்றன...
134, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6001 / 021 222 6002

# அமெரிக்க பகிரங்கத்தின் அதிர்ச்சிகள்!

பொதுவாக பன்னாட்டுப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் அதிர்ச்சிகள் அதிர்வலைகள் இருக்கத்தான் செய்யும். முன்னணி வீராங்களைகள் ஓரிருவர் ஆரம்பத்திலேயே தொடரில் இருந்து வெளியேறி புருவங்களை உயரச் செய்வர். நடைபெற்றுவரும் அமெரிக்கப் பகிரங்கத் தொடரும் அதற்கு விதிவிலக்கில்லை. அதிலும் பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டங்கள் ஒன்றன் பின்னர் ஒன்றாக பெரும் அதிர்வலைகளைத் தந்து கொண்டிருக்கின்றன. பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா கேலப் முதல் சுற்றுடன் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வோஸ்னியாக்கி, கெர்பர் வீனஸ் ஆகியோரும் ஒருவர் பின்னால் ஒருவராக அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறியுள்ளனர். இதனால் கிண்ணத்தைக் கைப்பற்றக் கூடிய வீராங்கனைகள் என்று எஞ்சியிருப்பவர்கள் செரீனா, செரபோவா, ஸ்ரீபன்ஸ் ஆகியோர் மட்டுமே. இவர்களில் செரபோவைத் தவிர்த்து ஏனைய இருவரும் அமெரிக்க வீராங்கனைகள். அதிலும் ஸ் ரீபன்ஸ் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் உள்ளவர். ரஷ்யப் புயலான செரபோவா தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தைப் பயன்படுத்தி தடைபெற்று பின்னர் மீண்டும் களந்திரும்பியதன் பின்னர் இதுவரை முக்கிய கிண்ணம் எதையும் கைப்பற்றவில்லை. இதனால் இந்தத் தொடரில் அவர் பெரியளவில் எதிர்பார்க்கப்படுகிறார்.

விளையாட்டு

பிரகாஸ்





## கோக்லி 6,000

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் விரைவாக 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த இரண்டாவது இந்திய வீரராகத் தன்னைப் பதிவுசெய்துள்ளார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் கோக்லி 46 ஓட்டங்களைச் சேர்த்தார். அவர் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 6 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரராகத் தன்னைப் பதிவுசெய்தார்.

## புஜாரா எனும் தடுப்புச் சுவர்

இந்திய டெஸ்ட் அணியின் மூன்றாவது வீரர்கள் எப்போதும் அணியைக் கட்டிக் காப்பதில் வல்லவர்களாகவே இருந்துள்ளனர். இதற்கு ஆகச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. ஜாபர், ராவிட் ஆகியோர் அந்த வகையறாக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. தற்போதும்கூட இந்திய அணியின் முன்வரிசை மிகப் பலமாகவே உள்ளது. இதன்படி இந்திய டெஸ்ட் அணியின் நிகழ்காலத் தடுப்புச் சுவராக, இன்னொரு தூணாக உள்ளவர் புஜாரா.


இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் முதலாவது இன்னிங்ஸில் புஜாரா வெளிப்படுத்திய பெறுபேறு இதற்கு ஆகச் சிறந்த எடுத்துக் காட்டு. மூன்றாம் நிலையில் களமிறங்கிய அவர் இறுதிவரை ஆட்டமிழக்காது 132 ஓட்டங்களைக் குவித்தார். அதிலும் பத்தாவது வீரரான இசாந் சர்மாவை வைத்துக்கொண்டு இணைப்பாட்டமாக 32 ஓட்டங்களையும், 11ஆம் நிலை வீரரான பும்ராவை வைத்துக்கொண்டு இணைப்பாட்டமாக 45 ஓட்டங்களையும் பெற்றமை அபாரம்.



## ஆடைக்குத் தடை

அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனையான சேரீனா வில்லியம்ஸ் அணிந்த ஆடையொன்று தற்போது பெரும் சர்ச்சையாகியுள்ளது.

முடிவடைந்த பகிரங்கத் தொடரான பிரென்ஞ் தொடரில் சேரீனா 'பிளக் பந்தர்' என்று அழைக்கப்படும் ஆடையை அணிந்து விளை யாடினார். இந்த ஆடைக்கு மிகப்பெரும் வரவேற்புக் கிடைத்தது. இந்த நிலையில் எவரும் எதிர்பாரா வகையில் பிளக் பந்தருக்குத் தடை விதித்துள்ளது பிரென்ஞ் நிர்வாகம். தொடரில் மட்டும்தான் வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கவனம் இருக்க வேண்டும். மாறாக அவர்கள் அணிந்து விளையாடும் ஆடைகளில் அல்ல. ரசிகர்களும் விளையாட்டைத்தான் கவனிக்க வேண்டும் மாறாக ஆடைகளை அல்ல. இதனால் அடுத்த வருடம்முதல் பிளக் பந்தர் தடை செய்யப்படுகிறது என்று அறிவித்தது பிரென்ஞ் நிர்வாகம்.







## மும்முனைப் போட்டி

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு மும்முனைப் போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடால், ஜோகோவிக், பெடரர் ஆகிய மூவருக்கும் இடையில் அவ்வாறு கடும் போட்டி இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன்படி மூவரும் தாம் சந்தித்த ஆட்டங்களில் நேர் செற் வெற்றிகளைப் பெற்று மிகச்சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர். மூவரும் சீரான அளவில் ஆதிக்கம் செலுத்துவதால் இந்தத் தொடர் மும்முனைப் போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ன்னாலை
# நமாள் தேவஸ்தானம்
# றப்பிதழ் - 02.09.2018





**தேர்த்திருவிழா**
**02.09.2018 ஞாயிற்றுக்கிழமை**
**மு.ப. 10.00 மணி வசந்தமண்டப பூஜை**
**நண்பகல் 12.00 மணி தேரில் ஆரோகணித்தல்**
**பி.ப 1.30 மணி உறியடி உற்சவம்**



### ஓங்கி உலகளந்த உத்தமன் புகழ் பாடுவோம்

திருவருள் பெருமையும், வரலாற்றுப் புகழும் ஒருங்கே அமையப்பெற்ற திருமால் ஆலயங்களுள் ஒன்றாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் ஈழமணித் திருநாட்டில் விஷ்ணு பக்தியை மகத்துவம் செய்கின்றது வைகாசன ஆகம முறைப்படி பூசை இடம்பெறும் இவ்வாலயத்தினைப் பற்றி தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ள மிகப் பழமை வாய்ந்த வரலாற்றுக் குறிப்பு தட்சண கைலாய புராணம் ஆகும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றின்படி துர்வாச முனிவரினால் சாபம் பெற்ற இந்திரன் வலைஞனாகப் பிறந்து கடலில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது வலையில் ஆமை ஒன்று அகப்பட்டதாகவும் பின்னர் அவன் அதனைக் கரைசேர்க்க முடிந்தபோது கல்லாமையாக உறைந்ததாகவும் கூறப்படுகின்றது. அச்சமயம் அவ்விடத்தில் பொன்விமானம் ஒன்று தோன்றி அவ் இளைஞனை அழைத்துச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. துர்வாச முனிவரின் கூற்றுப்படி ஸ்ரீமந் நாராயணன் கூர்ம அவதாரத்தின் ஒரு வடிவமாக பொன்னாலைப் பதியில் அருளாட்சி புரிகின்றார் என்று அறியப்படுகின்றது. அந்தக் கல்லாமை தற்போதும் ஆலயத்தின் கற்பக்கிரகத்தில் காணப்படுகின்றது. மூலவிக்கிரத்தின் தீபாரதனையின் பின் இந்தக் கல்லாமைக்கும் தீப ஆராதனை செய்யப்படுகின்ற வழக்கம் இன்று வரை தின்மும் இடம்பெற்று வருகின்றது.

ஆவணி கிருஸ்ணபட்ச அட்டமியில் அவதரித்துவரும் பொன்னாலைப் பதியிலே அருளாட்சி செய்பவருமாகிய அச்சுதபெருமானை யார் ஒருவன் அன்புடன் தரிசனம் செய்வானாயின் அவனுடைய பாவங்கள் அழிந்து இம்மையிலே சகல போகங்களையும் அடைந்து மறுமையில் வைகுண்ட யோகத்தை அடைந்து விஷ்ணுவுடன் களிப்புற்று வாழ்வான்.

இரதோற்சவம் காணும் ஸ்ரீ மந்நாராயணனின் அருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**இ.உமணகேணன்**
**விரிவுரையாளர்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



### பரிபாலனசபை தலைவரின் வாழ்த்துச் செய்தி

பொன்னாலை என்னும் ஊரிலே எழுந்தருளி வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களைத் தந்தருளி அருளாட்சி புரிகின்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் இன்று ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராய் அழகுத் தேரில் வருகிறார். நாராயணன் அருள்பெற்று ஆனந்தம் பெற அனைவரும் வாருங்கள். இத்திருநல்நாளில் அனைவருக்கும் நாராயணன் திருவருள் கிடைக்க எல்லாம் வல்ல பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

### தலப்பெருமை

செய்தற்கு அரிய பெரிய திருப்பணி குளக்கோட்டு மகாராஜனால் செய்யப்பட்டது. அவனால் அக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏழு வீதிகளும் பின்னே ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டு சங்கானை முதலிய ஏழு இடங்களில் கிறிஸ்தவ ஆலயங்களாகக் கட்டப்பட்டன. இப்போதும் சீரிய முறையில் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னே புலவர்களாலும் பக்தர்களாலும் பாடப்பெற்ற பதிகங்கள் அநேகம் இப்போது இல்லாமல் போயின சிலவே உள்ளன. பறாளாய் விநாயகர் பள்ளு என்ற நூலில் இத்தலப் பெருமை கூறப்படுகின்றது.


**கணேஸ் ஸ்ரோஸ்**
பல்பொருள் வாணிபம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் நியாயவிலைக்குப் பொருள்களை பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, பண்டத்தரிப்பு

அனைத்து விதமான பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
**விநாயகர் குரூப்**
சித்தன் கேணிச்சந்தி
021 225 1151

**பத்மராஜா அன் சன் நகைத் தொழிலகம்**
**Pathmaraja & son Jewellers**
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.: 077 600 2584

**கரன் ஸ்ரோர்ஸ்**
பல்பொருள் வாணிபம்
மூளாய் றோட், மாவடி.

**சிவாஸ் மில்**

பிள்ளையார் கோயிலடி, மூளாய்.
077 218 8987

**சாரங்கா**
நாணயமாற்று சேவை
இல.157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**சாரங்கா நகைமாடம்**
உங்கள் வாழ்க்கையின் அழகான தருணங்கள் எங்கள் தங்கத்தில் மிளிரட்டும்.
021 222 6972

**SUPER SHOES**

மொத்த விற்பனையாளர்,
154, Navalar Road, affna.
021 222 6809

**நல்லதம்பி ஸ்ரோஸ்**
மூளாய் வீதி, சுழிபுரம்.

**ஜுவல்லறி**
ன் நகை வியாபாரம்
**Jewellery**
rers of Gdd Jewels
க நகைகள் ஓடருக்கு
ன் செய்து கொடுக்கப்படும்.
oad, 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 561 8653
etre) வின்சர் தியேட்டர் எதிரில்

**கணேசா ஹாட்வெயர் ஸ்ரோஸ்**
மின்சார உபகரணங்கள் ஏகவிநியோகஸ்தர்.
காரைநகர் றோட், மூளாய்.

**SINGER Plus**

பிரதான வீதி, சங்கானை
021 225 1100
077 220 8232

**புதிய வினோ நகைமாடம்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
பிரதான வீதி, சங்கானை. (செலான் வங்கி அருகில்)
**New Vino Nagai Madam** Main Street, Chankanai.

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 . 11 . 1938



உதிர்வு 15 . 09 . 2003

**DR.நடராஜா இராஜரத்தினம்**

திதி: 31.08.2018

பதினைந்து ஆண்டென்ன பல ஆண்டுகள்
ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.

தையிட்டி கிழக்கு, காங்கேசன்துறை.
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவுகளுடன்

திருமதி
**புஸ்பமலர் தம்பிராஜா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ உடுவில் மகளிர் கல்லூரி, கிங்ஸ்ரன் சர்வதேச பாடசாலை - கொழும்பு)



மறைந்த மலரே புஸ்பமலரே - உன்
சிறந்த வாழ்வே மணம் வீசும் மலரே!
இறைவனடி சேர்ந்த இனிய
நல் மலரே - உன்
இனிய நினைவுகளை
நாம் மறவோமே!

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
நவாலி, மானிப்பாய்.
021 225 6932

## காணி விற்பனைக்கு

இயக்கச்சி சந்திக்கு அருகாமையில் உள்ள 5 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.
T.P: 076 9433 212

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் அப்பா அம்மா மட்டுமுள்ள வீடொன்றிற்கு தங்கிநின்று வேலை செய்யக் கூடிய பொறுப்பற்ற வடபகுதியை சேர்ந்த வயது 30-40 வரையுள்ள பணிப்பெண் தேவை.
சம்பளம் 28,000/= - 30,000/=
T.P: 076 225 6684

## வேலைவாய்ப்பு

தாதியர்களுக்கான பகுதிநேர வேலைவாய்ப்பு உதவித் தாதியருக்கான பயிற்சி பாடநெறியினை கற்பிப்பதற்கு தாதியர்கள் தேவை.
ஓய்வுபெற்ற தாதியர்களும் அழைக்கலாம்.
நெல்லியடி. T.P: 076 222 6438

## இந்திய துணை தூதரகம்
### யாழ்ப்பாணம்
### கூறுவிலை கோரல்

இல. 14. மருதடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். இந்திய துணைத் தூதரகமானது தூதரக தோட்டப் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகளுக்குரிய தகுதிவாய்ந்த பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்களி டம் இருந்து கேள்வி மனுக் கோரல்களை கோருகின்றது. கேள்வி மனுக் கோரலினை கீழ்வரும் இணையத்தள முகவரியில் பார்வையிட முடியும்.

https://eprocure.gov.in/epublish/app
http://cgijaffna.gov.in/

மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் மின்னஞ்சல் முகவரியை அல்லது தொலைபேசி இலக்கத்தினை தொடர்புகொள்ளவும்.

hoc.jaffna@mea.gov.in
021 222 0505

கேள்விமனு ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 15.09.2018
பிற்பகல் 5.00

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் மானிப்பாய் வீதியில் மேல் மாடி வீடு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு விடப்படும். (உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது)
T.P: 076 159 1645

## காணி விற்பனை

கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய வீதியில் அமைந்துள்ள நான்கு பரப்புக்காணி விற்பனைக்குண்டு
தொடர்பு - 077 937 7842, 011 236 0838

## House for Sale

House with four Rooms in Highly Residential area in Temple Road, Jaffna Land Area 2.5 Lachams. Building area 1750 sqft Details in Lanka Property.com

Please Contact :-
077 238 5668

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





சுப்பிரமணியம் இதயராஜ்
பிறப்பு 09.11.1981 இறப்பு 03.09.2007

சுப்பிரமணியம் கௌசிகன்
பிறப்பு 27.08.1979 இறப்பு 15.12.2007

கண்ணீர்ப் பிரளயத்தில் தவிக்கவிட்டு
பதினொரு ஆண்டுகள் சென்றுவிட்டன
வேர் அறுந்த விருட்சமாய்
விழுது இழந்து தவிக்கின்றோம்
எமன் உங்களில் பாசம் வைத்து
அழைத்து விட்டான் - நாங்களோ
எதுசெய்வது என்று தெரியாமல் தவிக்கின்றோம்.

68/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## 1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
### யாழ். கலாலயா பயிற்சியகம்



இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது.
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியர், வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையர், சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையர் மற்றும் ஆர்வமுள்ள பெண்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, சூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள், முறைகளும் பயிற்று விக்கப்படும்.
- கேக் ஐசிங் - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள், (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீசா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.

இம்முறை A/L பரீட்சைக் தோற்றிய மாணவிகளுக்கு மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் விஷேட கழிவு வழங்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க [illegible]து ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்று[illegible]ப்படும்!

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 14.09.2018 வெள்ளிக்கிழமை
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16-09-2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் 09.30மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

## ஓராண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 20 . 02 . 1932



கண் நெகிழ 11 . 09 . 2017

**அமரர் இராமலிங்கம் கந்தசாமி**
(S.R. கந்தசாமி)

திதி:- 02.09.2018 (சப்தமி)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்திட்டாலும்
ஆறவில்லை எம் துயரம் அப்பாவே!
பொறுப்புள்ள தந்தையாய் எமை வளர்த்தெடுத்து
எங்களுக்கும் ஊரார்களுக்கும் உத்தமனாய் வாழ்ந்து காட்டி
கடமைகள் அனைத்தையும் பூரணமாய் நிறைவேற்றி
இவ்வுலகை நீர் நீத்து ஆகினவே ஓராண்டு
எம் இதயக் கோயிலிலே என்றுமே நீர் உள்ளீர்
உம் நினைவு எம்மை விட்டு ஒருபோதும் அகலாது

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா இறைவன் திருவடிகளில் சாந்திபெற புங்குடுதீவு கிராஞ்சியம்பதியில கலியுக வரதனான வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானின் பாதம் பணிகின்றோம்.

இல.69, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.
க.சந்திரகுமார் (மகன்), திருமதி ச.சந்திரகலா (மகள்)

# சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வியை போதிப்பது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய தேவையாகும்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



ஊடகத்துறையை எப்படி மறைக்கல்வி துறைக்கும் பயன்படுத்தலாம். எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி மறைக் கல்வியில் ஊடகத்தின் பயன்பாடு என்ற தலைப்பில் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை இந்தியாவில் நடத்திய தேசிய மறைக்கல்விக் கருத்தரங்கை அடிப்படையாகக் கொண்டு கடந்த வாரங்களில் உதயன் பத்திரிகையின் சிறப்பு இணைப்பான சூரியகாந்தியின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதியில் நோக்கினோம். கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளை அறிவிக்கும் முதன்மைக் கல்வியான மறைக்கல்விக்கு எப்படி ஊடகத்துறையைப் பயன்படுத்தலாம்: என்பது பற்றியும் நோக்கினோம். சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வியை போதிப்பது தமிழ் மறைமாவட்டங்களின் இன்றைய காலத்தின் தேவையாகும் என்பதைப் பொதுவாகவும் சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வியை போதிப்பது யாழ் மறைமாவட்டத்தை பொறுத்தவரை இன்றைய காலத்தின் தேவையாகும் என்பதைக் குறிப்பாகவும் இந்த வாரத்தில் நோக்குவோம்.

> இன்றைய சமுதாயத்தில் குறிப்பாக் இளைஞர்கள் மாணவர்கள் மற்றும் வளருவோர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவரும் சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்வி அறிவிப்பிற்குப் பயன்படுத்தலாம் என்பது பற்றிய சிந்தனை முக்கியத்துவம் பெறவேண்டும். எல்லோருக்கும் மறைக்கல்வி எனும் கருப்பொருளில் தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து மறைக்கல்வி அறிவிப்பு பற்றி சிந்திக்கும் வேளையில் மறைக்கல்வி அறிவு எப்படி ஊடகங்கள் வழி ஊட்டப்படலாம். காலத்திற்கேற்ப நவீன மயப்படத்தப்படலாம். உடனயாக முழுமையாக செயற்படுத்தப்படாவிட்டாலும் மெதுமெதுவாக உட்புகுத்தப்பட வேண்டும். உட்புகுத்தப்படலாம் என்பதை ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்காகும்.

**மறைக்கல்வி ஆண்டாக 2012 அறிவிப்பு**

யாழ். மறைமாவட்டம் மன்னார் மறைமாவட்டம் மற்றும் திருமலை மட்டுநகர் மறைமாவட்டங்கள் (மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாக அப்போது பிரிக்கப்படவில்லை) இணைந்து2012ஆம் ஆண்டை மறைக்கல்வி ஆண்டாக அறிவித்தமை முதலில் இங்கு நோக்கப்பட வேண்டியதாகும். இது தமிழ் மறைக்கல்வி அறிவிப்பின் முக்கியத்துவத்தை தமிழ் மறைமாவட்டங்களில் காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீன மயப்படுத்தவேண்டும் என்ற உண்மையை சொல்லாமல் சொல்லி நின்றது.



இன்றைய சமுதாயத்தில் குறிப்பாக இளைஞர்கள் மாணவர்கள் மற்றும் வளருவோர் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவரும் சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்வி அறிவிப்பிற்குப் பயன்படுத்தலாம் என்பது பற்றிய சிந்தனை முக்கியத்துவம் பெறவேண்டும். எல்லோருக்கும் மறைக்கல்வி எனும் கருப்பொருளில் தமிழ் மறைமாவட்டங்கள் இணைந்து மறைக்கல்வி அறிவிப்பு பற்றி சிந்திக்கும் வேளையில் மறைக்கல்வி அறிவு எப்படி ஊடகங்கள் வழி ஊட்டப்படலாம். காலத்திற்கேற்ப நவீன மயப்படத்தப்படலாம். உடனடியாக முழுமையாக செயற்படுத்தப்படாவிட்டாலும் மெதுமெதுவாக உட்புகுத்தப்படவேண்டும். உட்புகுத்தப்படலாம் என்பதை ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்காகும்.

**இணையத்தினதும் வலையமைப்பினதும் வருகை**

கடந்த ஒரு தசாப்த காலத்தினுள் ஊடகமானது சமூக ஊடகங்களின் வழி வேகத்தையும் பெரிய மாற்றத்தையும் கண்டுள்ளது. ஆங்கில மொழி மூலமான மறைக்கல்வி அறிவிப்பு இணையத்தில் பெரிய வளர்ச்சிகண்டுள்ள நிலையில் தமிழ மொழி மூலமான மறைக்கல்வி அறிவிப்பு குறிப்பாக இலங்கை தமிழ் மறை மாவட்டங்களிடையே வளர்ச்சிபெறவில்லை என்றே கூறவேண்டும்.

சமூக ஊடகங்களை பாவிப்பதும் பயன்படுத்துவதும் இலகுவானது. ஒரு குறிப்பிட்ட எல்லை வரை இலவசமானது. இவ்வசதியையும் பெரும் வாய்ப்பையும் ஏன் நாம் இன்னும் பயன்படுத்தவில்லை என்பது ஒரு பெரிய கேள்வியாகும். சம்பந்தப்பட்டவர்கள் இதில் கூடிய கவனம் செலுத்தவும் தேவையான பயிற்சிகளைப் பெற்று போதுமான வசதிகளை செய்து இந்தச் சவாலை ஏற்று விரைவாகச் செயல்படுத்த வேண்டும்.

உலகலாவிய ரீதியில் நோக்குகின்றபோது இந்த மாற்றங்களை கத்தோலிக்க திருச்சபையும் தன்னுடையதாக்கி இந்த ஊடகங்களின் வேக வளர்ச்சிக்கு தன்னை ஈடுபடுத்திக்கொண்டு வந்திருக்கின்றது என்றே கூற வேண்டும்.

ஓய்வு நிலை திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தமது பணிக்காலத்தில் ஊடகத்தினை இன்னும் குறிப்பாக சமூக ஊடகங்களை தமது சமயப் பணிகளில் பெரிதும் பயன்படுத்தினார். திருத்தந்தை 16ஆம் பெனடிற் சமூக ஊடகங்களையும் அவற்றின் பாவிப்பையும் பெரிதும் விரும்பி ஊடகங்கள் வழியாக ஒரு இணையற்ற தொடர்பாடலை ஏற்படுத்த முடியும். அது கத்தோலிக்கத்தின் உள்ளக உறவையும் வெளிஉலகத்துடனான தொடர்பையும் ஏனைய திரு அவையின் செயற்பாடுகளையும் வளர்க்க உதவும் என நம்பினார். அதனை செயற்படுத்தி வெற்றியும் கண்டார்.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் தமது குருத்துவத்தின் 60ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் புனித இராயப்பர் சின்னப்பர் பெருவிழாவில வத்திக்கானின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான நியூஸ் வத்திக்கானை ருவிற்றர் எனும் சமூக வலையமைப்பை உத்தியோகபூர்வமாக தொடக்கிவைத்தார்.

வத்திக்கான் கத்தோலிக்க செய்திகளையும் காணொலிகளையும் யூ ரியூப்பில் ஆங்கிலம் இத்தாலியம் ஆகிய மொழிகளில் வெளியிட்டு வந்த நிலையில் பிரெஞ் மொழியிலும் செய்தி சேவையை ஆரம்பித்து வத்திக்கான் செய்திகளை வெளியிட ஒழுங்குகளை மேற்கொண்டார்.

திருத்தந்தை பிரான்சிஸ்ம் இந்த முயற்சியில் பின்நிற்கவில்லை. எங்கெங்கெல்லாம் திருச்சபையின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் நவீன ஊடங்களை பயன்படுத்தலாம் பயன்படத்த முடியும் என்பதை கற்றறிந்து செயற்பட அனுமதி வழங்கியுள்ளார்.

**சமூக ஊடகங்களை எவ்வாறு மறைக்கல்விக்குப் பயன்படுத்தலாம்?**

மறைக்கல்வி அறிவிப்பிற்கு சமூக ஊட்கங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும். இன்று இளைஞர்கள் மத்தியில் நினைத்துப்பார்க்க முடியாத அளவிற்கு பிரபல்யமடைந்துள்ள முகநூல் வழி மறைக்கல்வி அறிவிப்பை மிகவும் சிறந்த விதமாக ஆற்றமுடியும். இந்த விடயத்தில் எமது தமிழ் மறைமாவட்டங்கள் எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை என்றே கூறவேண்டும். இலகுவாக இலவசமாக கிடைக்கின்ற குறிப்பாக இளைய சமுதாயத்தை வெகுவாகக் கவருகின்ற இந்த முகநூல் வழி இளைஞர்களையும் மறைக்கல்வி மாணவர்களையும் கவரமுடியும்.

பங்குகளிலே இருக்கின்ற மறைக்கல்வி மாணவர்களுக்கென ஒவ்வொரு பங்கிலும் ஒரு முகநூலை ஆரம்பித்து அதனை பங்குகளுக்கிடையில் இணைத்துவிட்டு அவர்கள் தமக்கிடையே விடயங்களைப் பகிர்நதுகொள்ளவும். செய்திகளைத் தெரிவிக்கவும். மறைக்கல்வி அறிவினை வளர்க்கின்ற விதமாக எழுத்தாக்கங்கள். படம் வரைதல் போன்ற போட்டிகளை நடத்தவும் மேலும் ஒளிப்படங்களை பகிர்தல் போன்ற பல செயற்பாடுகளை ஆற்ற முடியும். முகநூல் இளைஞர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு செலுத்துகின்ற படியால் அதனை மறைக்கல்வி படிக்கின்ற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி அதன்வழி பெரிய மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

இலவசமாக உருவாக்கக்கூடிய இணையத்தளங்களைக் கூட பங்குகள்தோறும் உருவாக்கி அங்கு மறைக்கல்வி வகுப்புக்கள் பற்றிய விபரங்கள். மறைக்கல்வி பரீட்சை முடிவுகள். மறைக்கல்வி துணுக்குகள் போன்ற பலவற்றை பகிர்ந்து கொள்ள முடியும். மறைக்கல்வி மாணவர் அனைவரின் ஒளிப்படங்களைக் கூட அங்கு இணைத்துவிடலாம்.

மறைக்கல்வி அறிவை புகட்ட தயாரிக்கப்பட்ட மறை கல்வி அறிவுசார்ந்த நூல்களை இந்த மறைக்கல்வி இணைத்தளத்தில் இணைத்துவிட்டால் இறைமக்கள் அவற்றை தாமாகவே சென்று பார்க்கவும் படிக்கவும் பயன்பெறவும் முடியும்.

யூரியூப் என்பது காணொலிகளையும் படங்களையும் பார்க்கின்ற ஒரு தளமாகும். அங்குகூட இலவசமாக இணைப்பினைத் தொடங்கி குறும்படங்களையும் பங்கு மறைக்கல்வி நிகழ்வுகளையும் காணொலிகளாக்கி தரவேற்றம் செய்யலாம். குறும்படப் போட்டிகளை நடத்தி அவற்றை இங்கு தரவேற்றம் செய்யலாம். அது காலாகாலமாக இணையத்தில் இருக்கப்போகிறது. உலகம் முழுவதிலும் உள்ளோரால் பார்க்கப்படப்போகிறது.

விரும்புகின்ற போது யூரியூப்பில் தரவேற்றம் செய்யப்படும் காணொலிகளுக்கான போட்டிகளைக் கூட நடத்த முடியும். இதனால் மறைக்கல்வி மாணவர்களும் வளர்ந்தவர்களும் இணையத்தளத்தினுள் வரவும் இவற்றைப் பார்க்கவும் இதுபோன்ற காணொலிகளைத் தயாரிக்கவும் ஆர்வமூட்டப்படலாம்.

நேரத்தை வீண் விரயமாக்கவும் தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு குழப்பத்தை ஏற்படுத்தவும் முற்படுகின்றவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்காகவும் அதேவேளை அறிவூட்டலாகவும் அமையுமென்பதில் ஐயமில்லை.

**ப்ளிக்கர்**

ப்ளிக்கர் என்கின்ற தளமானது தரமான சிறந்த புகைப்படங்களை இலவசமாக தரவேற்றும் ஒரு தளமாகும். இது இலகுவானது. இலவசமானது. ஆனால் சில விதிமுறைகள் கண்டிப்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். மறைக்கல்வி சார்ந்த சிறந்த புகைப்படங்களையும் ஆலயங்களில் நடைபெறும் மறைக்கல்வி நிகழ்வுகள் மற்ற விடயங்களைக் கூட இங்கு தரவேற்றம் செய்யலாம்.

சமூக ஊடகங்கள் பெரிய தாக்கத்தை சமுதாயத்திலும் குறிப்பாக இளைஞர் மத்தியிலும் ஏற்படுத்த வல்லன. பழைய பாரம்பரியத்தை விட்டு புதிய பாணியில் வேகமாக அதே வேளை கவரத்தக்க விதமாக நவீன தொழில்நுட்பத்தின் வழி மறைக்கல்வி அறிவிப்பை காலத்திற்கேற்றவாறு மாற்றி அமைத்துக்கொண்டு செல்வது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும்.

இதற்கு போதுமான அளவு அடிப்படை அறிவ் புகட்டப்பட வேண்டும். குறிப்பாக ஊடகங்களின் செயல்பாடு சமூக ஊடகங்களின் நிலை அவற்றை இயக்குகின்ற விதம் என்பன பற்றிய அறிவு புகட்டப்படவேண்டும்.


இவற்றைப் பெறுவதற்கான இணைப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும். கணினி 'டொங்கிள்' வைபை போன்ற உபகரணங்கள் பெறப்பட்டு இணைப்பு மற்றும் வசதிகள் செய்யப்படவேண்டும். இந்த முயற்சி உடனடியாக முழுமையாக செயற்படுத்தப்பட முடியாது என்பது உண்மைதான். ஆனால் இப்போதே மெதுமெதுவாக ஆரம்பிக்கப்படலாம்.

புலம் பெயர்நாடுகளில் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகங்கள் இந்த முயற்சியில் முன்நிற்கின்றன. அவர்களின் இந்த முயற்சிகளை பின்பற்றுவதோடு அவர்களோடும் இந்த பணியில் இணைப்பை ஏற்படுத்தலாம்.

இவற்றையெல்லம் செய்து மாணவர்களையும் மறை ஆசிரியர்களையும் உரியவிதமாக நெறிப்படுத்தினால் சமூக ஊடகங்கள் வழி மறைக்கல்வியை போதிப்பது சாத்தியப்படும்.

காணி விற்பனைக்கு பனை நகரத்தில்

A9 வீதியிலிருந்து 100மீற்றரில்




தொடர்புகளுக்கு :
0771094086 (குகா)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேதநாயகி சதாசிவம்

*(பாப்பா அக்கா - அளவெட்டி வடக்கு, அணிஞ்சிலடி)*



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகி சதாசிவம் நேற்று (01.09.2018) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னலட்சுமி தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சதாசிவத்தின் அன்பு மனைவியும் சேரனின் (கனடா) அன்புத் தாயாரும் சியாமாவின் (கனடா) அன்பு மாமியாரும் இனியா, கவின் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பாஸ்கரதேவனின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோரையடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

தகவல்: கணவர் - 077 783 4988.
மகன் +160 476 15040 (கனடா).
+177 870 98469 (கனடா).

### சச்சிதானந்தம் நாகேஸ்வரன் (ஈசன், சின்ராசு)



யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிட மாகவும், பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட சச்சிதானந்தம் நாகேஸ்வரன் கடந்த (31.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம் பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் பிறேமலதாவின் (வாணி) அன்புக்கணவரும் தர்சிகா (பிரான்ஸ்), சிந்துஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாராதாஸின் (பிரான்ஸ்) அன்பு மாமனும் நோராஜ் (பிரான்ஸ்), நிருஜன் ( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப்பேரனும் நாகேஸ்வரி, கௌரீஸ்வரி, புவனேஸ்வரி, ஸ்ரீகாந்தா, புலேந்திரன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சித்திராதேவி மற்றும் பாலச்சந்திரன் (பட்டறை சந்திரன்), விவேகானந்தன் (கட்டார்), புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் ஜெனோ (பிரான்ஸ்), நவராசா (கனடா), வரதாம்பிகை, ஜெயா, ஜெயக்குமார், காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் கணேசு, சுலோசனா, தையல்நாயகி, சத்தியவண்ணன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2018) [illegible] மணியளவில் அவரது இல்லத்தில் [illegible] தகனக்கிரியைக்காக கோண்டாவில் [illegible] எடுத்துச்செல்லப்படும். இந்த [illegible] நண்பர்கள் அனைவரும் [illegible]

[illegible] பாற்பண்ணை வீதி,
[illegible]
077 [illegible], 077 578 2684

தகவல் :
குடும்பத்தினர்.

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா ?
நாம் மீட்டுத் தருகின்றோம்.

**நிறஞ்சன் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

**நிறஞ்சன் நகை மாடம்** சந்தை வீதி, உடுப்பிட்டி.
076 383 6129

**புளோரன்ஸ் நைற்றிங் கேல் தாதியர் பயிற்சிப்பாடசாலை**

A/L பரீட்சை முடித்துவிட்டீர்களா ?
வைத்தியசாலையில் பகுதி நேரமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தொழில் செய்ய ஆசைப்படுகின்றீர்களா? ஒரு வருட தாதியர் பயிற்சிப்பாட நெறியினை பூர்த்தி செய்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

தகைமைகள் : O/L ஆறு பாடம் சித்தி
வயது - 18 - 35 வரை (பெண்கள் மட்டும்)

குஞ்சர்கடையடி
கரணவாய் மத்தி,
நெல்லியடி.

கே.கே.எஸ் றோட்,
மருதனார்மடம்.

T.P : 077 718 6438, 021 4928 916, 077 2984 849

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

வெற்றி வாரம்: 3077 | திகதி: 2018.09.01 | சனிக்கிழமை | பச்சை

SATURDAY FORTUNE

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 13 20 32 63 R
போனஸ் இலக்கம்: 64
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்: 39,827,825/-

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 360
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.09.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 65,521,655/-

வெற்றி இலக்கங்கள்: 06 21 41 64
ஆங்கில எழுத்து: U

**ராசி அதிர்ஷ்டம்**

திகதி: 31.08.2018 | வெற்றி வாரம்: 2357 | வர்ணம்: சிவப்பு

விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 13 23 38 60
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 81, 57, 360/=

2018.09.02ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

Web: www.dlb.lk

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 174
சீட்டிழுப்பு திகதி ▶ 01.09.2018 | சிவப்பு

ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கங்கள்: 07 23 44
விதி எண்: 09

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.11, 437, 176/=

**ஸ்வர்ண திலின**

| | |
|---|---|
| அம்பாளை | 5573265 |
| ஹம்பாந்தோட்டை | 7075847 |
| பதுளை | 3511064 |
| வவுனியா | 6947228 |
| கொழும்பு | 8864875 |

2018.09.06ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## விசாரணைகளுக்கு...

வழங்க வேண்டாம் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

மாணவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முதன்மைச் சந்தேகநபரைக் காப்பாற்றிய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரி ரவி விஜயகுணவர்தன முன்னிலையே, அரச தலைவர் மைத்திரிபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கொழும்பில் உள்ள அரச தலைவரின் இல்லத்தில் அண்மையில் நடந்த கலந்துரையாடலில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரட்ன, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலர், முப்படைத் தளபதிகள், அரச புலனாய்வுச் சேவைகளின் பிரதானி, இராணுவப் புலனாய்வுப் பிரிவு பிரதானி, பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு பிரதானி, நிதி மோசடி விசாரணைப் பிரிவின் பிரதானி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் லசந்த விக்ரமதுங்க கொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயார், உபாலி தென்னகோன் ஆகியோர் தாக்கப்பட்டமை மற்றும் 11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற சம்பவங்களுடன் படையினருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸாருக்கு, விசாரணைகளை முன்னெடுத்துச் செல்ல இராணுவத்தின் உள்ளக தகவல்கள் தேவைப்படுகிறது. இது குறித்து நீதிமன்றங்களுக்குத் தெரியப்படுத்திய பின்னர், நீதிமன்றங்கள் விவரங்களை வழங்குமாறு படைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டிருந்தது. பல்வேறு காரணங்களைக் கூறி, தகவல்களை படைத் தளபதிகள் வழங்கவில்லை. இந்தத் தகவல்களை வழங்குமாறு கோரி, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இராணுவத் தளபதிக்கு கடிதத்தையும் அனுப்பியிருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்னர், பொலிஸார், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கபில வைத்தியரத்னவிடமும் இது தொடர்பில் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தத் தகவல்களை வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனக் கூறப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் அரச தலைவர் தனது அதிருப்தியை பொலிஸ்மா அதிபரிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த அதிகாரிகள் சாட்சியங்கள் இன்றி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலரிடம் வாக்குமூலங்கள் கூட பெறப்படவில்லை எனவும் அரச தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலளித்துள்ள பொலிஸ்மா அதிபர், நீதிமன்றங்களின் உத்தரவுக்கு அமையவே இராணுவத்தினரிடம் தகவல்கள் கோரப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்ட அனைவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் சிலரிடம் பல முறை வாக்குமூலங்கள் பெறப்பட்டதாகவும் கூறியுள்ளார். எவரும் வெறுமனே கைது செய்யப்படவில்லை எனவும் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று திருப்தியடையக் கூடிய தகவல்கள் கிடைத்துள்ளமை காரணமாகவே கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸ்மா அதிபர், அரச தலைவரிடம் கூறியுள்ளார். (ந.5)

## தேர்த்திருவிழா...

டாந்தத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. அதிகாலை 5 மணிக்கு 108 கலச பூசை, தம்ப பூசை, முற்பகல்10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று மதியம் 12 மணியளவில் பெருமான் தேரில் ஆரோகணிப்பார். மதியம் 1.30 மணிக்கு உறியடி உற்சவமும், பச்சை சாத்துதலும் இடம்பெற்று பி.ப 2 மணியளவில் பெருமான் தேரிலிருந்து அவரோகணிப்பார். (5)

## விலை...

ஒரு கிலோ கோதுமை மாவின் சில்லறை விலை 95 ரூபாவில் இருந்து 5 ரூபா அதிகரிக்கப்பட்டு 100 ரூபாவாகியுள்ளது.

கோதுமை மாவு இறக்குமதிக்கு அரசால் விதிக்கப்படும் வரி அதிகரித்தமை மற்றும் டொலரின் பெறுமதி அதிகரிப்பு என்பன விலை அதிகரிப்புக்கு காரணம் என்று அந்த நிறுவனம் விளக்கமளித்துள்ளது. (ற)

## பேக்கரிப்...

களின் விலையை அதிகரிக்கவுள்ளனர். அதேபோன்று கொத்து ரொட்டியின் விலையும் 5 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (5)

## நித்தியகலா...

கிளிநொச்சி பொலிஸ் நிலையக் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி நேற்றுச் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தினார்.
நீதிமன்றில் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை உண்மை எனச் சந்தேகநபர் ஏற்றுக் கொண்டார்.
அவற்றை ஆராய்ந்த நீதிமன்று சந்தேகநபரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.
கிளிநொச்சியில் கடந்த 28ஆம் திகதி பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. அவர் முருகண்டியைச் சேர்ந்த கருப்பையா நித்தியகலா (வயது-32) என்று அடையாளம் காணப்பட்டிருந்தார். சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார். கொலையை தானே செய்ததாக அவர் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியிருந்தார். (ந.5,35)

## நிலநடுக்கம்...

கொழும்பு, காலி துறைமுகங்களில் இருந்து, 3 ஆயிரத்து 700 கி.மீ தொலைவில் உள்ள கடல் பகுதியிலேயே இந்த நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவில் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும், காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ந.5)

## நாடாளுமன்ற...

அவர் மேலும் தெரிவித்ததாவது.
நாடாளுமன்றத்தில் நிதி விவகாரங்களைக் கையாள்வதற்கு இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற பொது நிதிக் குழு மற்றையது கோப்குழு.
நாடாளுமன்ற பொது நிதிக் குழு, இந்த ஆண்டு சமர்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தை ஆராயவுள்ளது. இந்தக் குழு முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு வெளியே கூடுகின்றது. கண்டியில் இன்றைய தினமும், யாழ்ப்பாணத்தில் நாளையும் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. மூன்றாவது கூட்டம் மாத்தறையில் நடைபெறும் - என்றார். (5.173,26)

## நியமனத்தை...

கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் மேலதிக செயலர் அசங்க தயாரத்ன தெரிவித்தார்.
வேலையற்ற பட்டதாரிகள் 4 ஆயிரத்து 100 பேருக்கு அரச சேவையில் இணைவதற்கு பயிற்சிகள் கடந்த 20ஆம் திகதி வழங்கப்பட்டது. மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே பயிற்சிகள் வழங்கப்பட்டன.
இல்லாமல் செய்யப்பட்ட நியமனங்களுக்குத் தகுதியானவர்களை நியமிக்க மீள நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலர் அசங்க தெரிவித்தார்.
பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளின் இரண்டாம் கட்டம் அடுத்த மாதம் முன்னெடுக்கப்படவுள்ளது. 15 ஆயிரம் பேர் இதன்போது இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (5)

## வெடிபொருள்...

ரணைகளின் போது மீனவர்களால் கூறப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.
இது தொடர்பில் மீனவர்களால் தெரிவிக்கப்பட்டதாவது.
மன்னார் பள்ளிமுனை கிராமத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் படகில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றுள்ளனர். பள்ளிமுனை - நாச்சிக்குடா கடற்பகுதியில் மிதந்து வந்த வெடிபொருளை மீனவர்கள் அவதானித்துள்ளனர்.
ஜேசு ரஞ்சித் (வயது-39) என்ற மீனவர் அதனை எடுத்து படகினுள் வைத்துச் சோதனைக்கு உட்படுத்தியுள்ளார். வெடிபொருள் வெடித்ததில் அவர் உயிரிழந்தார். உடலின் பல பகுதிகள் சிதறியுள்ளது.
படகிலிருந்த ஏ.ஏ.சித்தி பிகிராடோ (வயது-35), எம்.அகஸ்ரின் பிகிராடோ(வயது-26) ஆகிய இரு மீனவர்களும் படுகாயமடைந்தனர். அந்தோனி பிகிராடோ (வயது-39) என்பவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினார்.
சடலம் உடனடியாக மன்னார் பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. காயமடைந்தவர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5.56,105)

## விடுதலைப்....

வேண்டும் என்று மாகாணசபை அமர்வில் ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அனுப்பிய கேள்வி - பதில் அறிக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூட்டாட்சி வேண்டாம் என்று கூறிய கருத்து அவரின் சுய கருத்தா அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தா என்பதை கூட்டமைப்புத் தெளிபடுத்த வேண்டும். அவரின் கருத்து கூட்டமைப்பின் ஏகோபித்த கருத்தில்லை என்றால் ஒட்டுமொத்தம் அவர் போன்றவர்களை சம்பந்தனும் மற்றைய கட்சித் தலைவர்களும் சேர்ந்து அஸ்மின் கூறிய பாணியில் விரட்டி அடிக்கவேண்டும்!
ஐம்பதுக்கு ஐம்பது கோரி, கூட்டாட்சி கோரி, தனிநாடு கோரி வந்த தமிழருக்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை மட்டும் தந்தால்ப் போதும் என்று அவர்கள் சார்பில் கூறுவதற்கு எந்தளவு நெஞ்சமுத்தம் வேண்டும் அவருக்கு. என்று தெரிவித்துள்ளார் முதலமைச்சர். (5)

## சுமந்திரன்....

விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.
அவரது கேள்வி- பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.
**கேள்வி** - முதலமைச்சரைப் பதவியில் இருந்து நீக்கப் புலிகள் பாணியில் செயற்படவேண்டும் என்று அஸ்மின் கூறியுள்ளாரே?
**பதில்** - வடமாகாண சபையில் தான் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து ஒரு நூல் வெளியிடவிருப்பதாகக் கூறி நான் அவரின் நூலுக்கு முகவுரை எழுதவேண்டும் என்றோ அல்லது வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்றோ அழைப்பு விடுத்திருந்தார் நண்பர் அஸ்மின்.
தன்னுடைய கட்சியில் தனக்கு நேர்ந்தது எனக்கும் ஏற்படவேண்டும் என்ற நட்பெண்ணத்தில் அவர் இதைக் கூறியிருக்கலாம் அல்லது தனது இன மக்களுக்கு புலிகள் கையால் கிடைத்த பரிகாரத்தை நானும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் அவர் அவ்வாறு கூறியிருக்கலாம்.
புலிகளின் தலைமைத்துவம் புத்திசாலித்தனமான தலைமைத்துவம் என்று கூறிய முதல் முஸ்லீமாக அவர் இருக்கக்கூடும்;. அவரின் இந்தக் கூற்றால் முஸ்லீம்களுக்குத் தமிழ் மக்கள் செய்த தவறுக்காக தமது வருத்தத்தைத் தெரியப்படுத்தவேண்டும் என்ற அவரின் ஆப்த கொழும்பு நண்பர்களின் கோரிக்கைகள் விடுபட்டுப் போயுள்ளன என்றே கூற வேண்டும்.
**கேள்வி** - கூட்டாட்சித் தீர்வு எமக்கு வேண்டாம் என்று காலியில் சுமந்திரன் கூறியுள்ளாரே. அது பற்றி?
**பதில்** - ஒருவேளை 2015ஆம் ஆண்டு அவர் தேர்தலில் நின்றபோது கூட்டாட்சி வேண்டாம் தூசி தட்டிய 13ஆவது திருத்தச் சட்டம் மட்டும் போதும் என்று எமது மக்களிடம் கூறிவாக்குப் பெற்றாரோ தெரியவில்லை. அல்லது சிங்கள மக்களின் மனங்களைக் கொள்ளை கொள்ளவேண்டும் என்ற நினைப்பில் அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை. அல்லது காலியில் சிறப்பு அதிரடிப்படையினரின் பலமான பாதுகாப்பின் பின்னருந் தனக்கு ஆஸ்திரேலியாவில் கிடைத்ததுபோல் பாதிப்பான வரவேற்பு கிடைக்குமோ என்று பயந்து அவ்வாறு கூறினாரோ தெரியவில்லை.
நான் ஒன்பது மாகாணங்களுக்கும் கூட்டாட்சியே உகந்தது என்று சிங்கள மனங்களை மாற்றி வருகின்றேன். எனதினிய மாணாக்கர் தமிழ் மக்களுக்குத் தான் கொடுத்த வாக்குகளை மறந்து, வடகிழக்கில் கூட கூட்டாட்சி வேண்டாம் என்று கூறுகின்றார் என்றால் அதுவும் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள மேலாதிக்கத்தை நிலை நிறுத்தியிருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கோருகின்றார் என்றால் விரைவில் ஏதாவது பதவியொன்றை அவர் எதிர்பார்க்கின்றார் என்று அர்த்தம். அல்லது சிங்களவர்கள் மேலுள்ள பயமே காரணம் என்றும் நினைக்கலாம் - என்றுள்ளது. (5)

## ஊடகங்களைப்...

துள்ளார். சந்திப்புக்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. சந்திப்பு 7ஆம் திகதி நடைபெறவுள்ளதாக நான் ஊடகங்களைப் பார்த்துத்தான் அறிந்தேன். அவர் விரும்பும் நேரத்தில் சந்தித்துக் கொள்வேன்' என்றார் சம்பந்தன். (5)

## உரிய...

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் பேரவையின் பணிமனைத் திறப்பு விழாவில் உரையாற்றும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் தோல்வியடைந்து விட்டதாகத் தெரிவித்திருந்தார். அரசியலில் தனக்கு முன்பாக 4 தெரிவுகள் இருப்பதாகவும் கூறியிருந்தார். இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பதைக் கேட்டபோதே சம்பந்தன் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது. விக்னேஸ்வரனை வடக்கு முதலமைச்சராகக் களமிறக்கியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கி அவரை முதலமைச்சராக்கியது வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரம்தான் பங்களிப்புச் செய்தது என்பதை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும்.
இந்த நிலையில் கூட்டமைப்பின் தலைமையை விமர்சித்து அவர் தனது பக்க நியாயங்களை மாத்திரம் முன்வைத்துள்ளார். மறுபக்க நியாயங்களை நாம் முன்வைக்கவேண்டும். அதனை நாம் அவசரப்பட்டு முன்வைக்க முடியாது. ஆற அமர்ந்து அவர் முன்வைத்து கருத்துக்களை அலசி ஆராய்ந்து தக்க நேரத்தில் உரிய பதிலை வழங்குவேன் - என்றார். (5)

## ஆட்சி...

பருத்தித்துறையிலுள்ள அவரது பணிமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
1980ஆம் ஆண்டுகளிலேயே மணலாறு பறிபோய் விட்டது. அப்போது நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் இது தொடர்பில் குரல் எழுப்பவில்லை. இப்போது அதைப் பற்றிப் பேசுவது விசித்திரமாக இருக்கின்றது. மகாவலி எல் வலயத்தில் சிங்களவர்கள் கோத்தபாயவின் காலத்திலேயே குடியேற்றப்பட்டார்கள். அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவித்த கருத்துச் சரியானது. அவர்களுக்கு இப்போது காணி உரிமப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.
பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களில் காணிகள் தொடர்பில் நல்ல சட்ட ஏற்பாடுகள் இருந்தன. புதிய அரசமைப்பிலும் அதனை உள்வாங்கியுள்ளோம். புதிய அரசமைப்பு வரும் வரையிலான காலம் வரையில் காணிகள் பறிபோவதைத் தடுக்கவேண்டும்.

**கூட்டாட்சி**
டட்லி - செல்வா, பண்டா - செல்வா ஒப்பந்துங்களில் கூட கூட்டாட்சி என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி என்றோ கூட்டாட்சி என்றோ வார்த்தைகள் இல்லை. ஆனால் இடைக்கால அறிக்கை கூட்டாட்சியின் பண்புகளைக் கொண்டிருக்கின்றது - என்றார். (5,173)

## மனக்...

மாகாண சபைத் தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற முதலமைச்சர் கடந்த பொதுத் தேர்தலில் வீட்டுக்கு வெளியே வந்து வாக்களியுங்கள் என்று கூறினார். இப்படி நடந்து கொள்பவர்கள் கட்சிக்கு எப்படித் தகுதியானவர்கள்?
முதலமைச்சர் முன்பாக 3 தெரிவுகள் இருந்தன. தற்போது 4 தெரிவுகளை முன்வைத்துள்ளார். நாளை 5 தெரிவுகளை முன்வைப்பார். இன்னும் சில நாள்களில் 10 தெரிவுகளை முன்வைப்பார். அவர் தனது மனக் குழப்பத்தைச் சீர் செய்த பின்னர் தெரிவுகளை முன்வைக்க வேண்டும் - என்றார். (5,173)

ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் & பயிற்சியகம்

- புதிய சான்றிதழ். டிப்ளோமா பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
- பயிற்சி நெறி முடிவில் சர்வதேச தரம்மிக்க சான்றிதழ் வழங்கப்பட்டு தொழில் வழிகாட்டலும் மேற்கொள்ளப்படும்.
- மணப்பெண் அலங்காரம். பூப்புனித நீராட்டுவிழா அலங்காரம் என்பன தங்களின் விருப்பத்திற்கேற்ப சிறந்த முறையில் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு : 077 627 7332
தலைமையகம் : இல. 94, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளைகள் : 32, 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (TOPPAZ, ராச் கலெக்சன் அருகில்)
: பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம். (Northway மேல்மாடி எரிபொருள் நிரப்பு நிலையம் எதிரில்)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது சிறைச்சாலை உத்தியோகத்தர்
பத்மநாதன் டக்ஷன் சுதர்சன்

அவர்கள் 30.08.2018 வியாழக் கிழமை அன்று கௌரவ மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிறேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழத்துவோர் : சிறைச்சாலை அத்தியட்சகர், பிரதான ஜெயிலர் மற்றும் சக உத்தியோகத்தர்.

மரண அறிவித்தல்
வஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் மேரி ஜோசவ்
(இரத்தினம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் மேரி ஜோசவ் (இரத்தினம்) நேற்று (01.09.2018) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - மரியம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான அல்பிரட் மரியநாயகம் - மேரி பெர்ணாதேத் தம்பதிகளின் மருமகனும் லின்ராவின் அன்புக் கணவரும் லக்சிக்கா, ஜென்சிக்கா (மத்திய கலாச்சார நிலையம் யாழ்ப்பாணம்), கௌசிக்கா (இறுதிவருட மாணவி முகாமைத்துவ பீடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (03.09.2018) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
நல்லாயன் வீதி, சில்லாலை.
தகவல்: குடும்பத்தினர். 0775373046

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 2

**சங்கானை சுப்பர் லீக்**

சங்கானை பிரதேச கழகங்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்டுவரும் சங்கானை சுப்பர் லீக் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் துணைவி சென்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் துணைவி ரெஜின்ஸ்ரொம் அணியை எதிர்த்து அராலி யுனைட்ரெட் அணி மோதவுள் ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத் தில் அராலி வோரியர் அணியை எதிர்த்து மூளாய் ஸ்நோவே அணி மோதவுள்ளது.

**ஏபி வி.கழக துடுப்பாட்டம்**

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று இடம்பெறவுள்ளன. இதன்படி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றைட்ரோன் விளை யாட்டுக் கழக அணி மோதவுள் ளது. நண்பகல் 11.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்டோறிஸ் விளை யாட்டுக் கழக அணி மோதவுள் ளது.

**ஜொலி ஸ்ராரின் துடுப்பாட்டத் தொடர்**

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலி ஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் சென்ற லைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்க ளுக்கு இடையில் நடத்திவரும் தாச்சித் தொடரின் இறுதியாட்டம் பண்டத்தரிப்பு சாந்தை விநாய கர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாய கர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இறுதிநாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தி னராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-23)



# ஸ்கந்தா சம்பியனானது

யாழ்ப்பாணம், செப் 2

யாழ்ப்பாணம் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான ரி20 துடுப்பாட்டத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை இந்த ஆட்டம் இடம்பெற்றது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 20 பந்துப் பரி மாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 137 ஓட்டங்களைப் பெற் றது. அதிகபட்சமாக மோனிக் நிதுசன் 39 ஓட்டங்களையும், டனிசியஸ் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியின் சார்பில் சோபிகன், அஜிந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 18.5 பந்துப் பரிமாற்றங்களில் 7இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது. டன்சன் 51 ஓட்டங்களையும், அஜிந்தன் 29 ஓட்டங்களையும், சோபிகன் ஆட்டம் இழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பில் டனிசியஸ் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

(ம-23)

### ஆசியக் கிண்ணத்துக்கான இந்திய அணி அறிவிப்பு

# கோக்லிக்கு கட்டாய ஓய்வு தலைவராக ரோகித் சர்மா



ஆசியக் கிண்ணத்துக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. அணித் தலைவர் கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது. பொறுப்புத் தலைவராக ரோகித் சர்மா நியமிக்கப்பட்டார்.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஆசியக் கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட் டது. அணித் தலைவர் கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப் பட்டது. எனினும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இந்த முடிவு எவ்வித ஆச்சரியத்தையும் அளிக்கவில்லை. எதிர்பார்க்கப்பட்ட முடிவுதான் இது. ஏனெனில், தற்போது நடைபெற்றுவரும் இங்கிலாந் துக்கு எதிரான தொடர் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திக தியே முடிவுக்கு வருகிறது. இந்தத் தொடர் முடிந்த பின்னர் வெறும் 4 நாள்கள் இடைவெளியில் ஆசியக் கிண்ணம் ஆரம்பிக்கிறது. ஆசியக் கிண்ணம் முடிவ டைந்து ஒரு வாரத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதி ரான டெஸ்ட் தொடரை ஆரம்பிக்கிறது இந்தியா. இத னால் இறுக்கமான அட்டவணைகளைக் கருத்தில் கொண்டு கோக்லிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டது.

இந்திய அணி விவரம் - ரோகித் சர்மா (தலைவர்), சிகர் தவான், கே.எல்.ராகுல், ராயுடு, பாண்டே, கேதார் ஜாதவ், டோனி, டினேஷ் கார்த்திக், புவனேஷ்வர் குமார், குல்தீப் யாதவ், சாகல், அக்சர் பட்டேல், சர்துல் தாக்குர், கலீல் அகமட், ஹர்திக் பாண்டியா, பும்ரா.

(ம)

# பாடும்மீன் வென்றது

யாழ்ப்பாணம், செப். 2

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வென்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் மனோ கரா விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# திருத்தி வாசிக்கவும்

உதயன் பத்திரிகையின் 26 ஆம் பக்கத்தில் நேற்று வெளியாகியிருந்த "தேசிய கால்பந்து அணியில் மூன்று தமிழர்கள்" என்ற செய்தியில் பள்ளிமுனை சென்.ஜோசப் கழகத்தைச் சேர்ந்த டக்சன் பியூஸ்லஸ் என்பதற்குப் பதிலாக பனங்கட்டுக் கொட்டு சென்.ஜோசப் கழகத்தைச் சேர்ந்த டக்சன் பியூஸ்லஸ் என்று திருத்தி வாசிக்கவும்.

# வீனஸை வீழ்த்தினார் செரீனா வில்லியம்ஸ்

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதிபெற்றார் அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ். நியூயோர்க் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவதுசுற்று ஆட்டத்தில்செரீனாவில்லியம்ஸை எதிர்த்துஅவரின்சகோதரிவீனஸ்வில்லியம்ஸ்மோதினார். சகோதரிகள் மோதிய ஆட்டமென்பதால் இந்த ஆட்டம் பெரியளவில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆட்டத்தின் முதலாவது செற்றை 6:1என்றபுள்ளிகளின் அடிப்படையில்கைப்பற்றினார்செரீனாவில்லியம்ஸ். இதனால் அடுத்த இரண்டு செற்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே வீனஸால் நான்காவது சுற்றுக்குத் தகுதிபெறமுடியும்என்கிறநிலை இருந்தது. இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் செரீனா வில்லியம்ஸ். இருவருக்கும் இடையில் நீண்டநேரம் இந்த ஆட்டம் இடம்பெறும், இருவரும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்துவார்கள் என்று கருதப்பட்டபோதிலும் வெறும் 47 நிமிடங்களில் செரீனா வில்லியம்ஸ் வெற்றிபெற்றார்.

காலிறுதிக்குத் தகுதிபெறும் வீராங்கனையைத் தீர்மானிக்கும் ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸ் கெனாபியை நாளை எதிர்கொள்கிறார். (ம)



# மூன்றாம் சுற்றில் 'ரஷ்யப் புயல்'

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் பெண்க்ள் ஒற்றையர்பிரிவில்'ரஷ்யப்புயல்'என்றுவர்ணிக்கப்படும் வீராங்கனையான மரிய செரபோவா மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மரியசெரபோவாவைஎதிர்த்துருமேனியவீராங்கனை கிறிஸ்ரிமோதினார். மூன்றுசெற்களைக்கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின்அடிப்படையில்இலகுவில்கைப்பற்றினார் செரபோவா. இதனால் அடுத்த செற்றில் செரபோவா வெற்றிபெற்றால் நேர்செற் வெற்றி என்கிற நிலை. ஆனால் அந்த செற்றில் கிறிஸ்ரி விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தினார். நீண்டு சென்ற அந்த செற்றை 7:5 என்ற அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் செரபோவா.

காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெறும் வீராங்கனையைத்தீர்மானிக்கும்ஆட்டத்தில்செரபோவாவும் ஒஸ்டபென்கோவும் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளனர். இந்த ஆட்டத்திலும் செரபோவாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கருதப்படுகிறது. (ம)





# இங்கிலாந்து போராட்டம்



இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸில் வலுவான நிலையைப் பெறுவதற்காக இங்கிலாந்து அணி நேற்றுக் கடுமையாகப் போராடியது. நேற்றைய மூன்றாம் நாளின் முதலாவது செசன் நிறைவில் இங்கிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருப்பதால் தொடரில் சமநிலையைப் பேணுவதற்கு இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை இந்தியாவுக்கும் தொடரைக் கைப்பற்ற இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலை இங்கிலாந்துக்கும் உள்ளதால் ஆட்டம் பெரியளவில் எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை இருக்கிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. கரன் அதிகபட்சமாக 78 ஓட்டங்களையும், மொயின் அலி 40 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி, அஸ்வின் மூவரும் தலா 2 இலக்குகளையும், பாண்டியா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக புஜாரா ஆட்டமிழக்காமல் 132 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் கோக்லி 46 ஓட்டங்களையும், தவான் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 5 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், கரன், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆம்பித்த இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 6 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. குக் 2 ஓட்டங்களுடனும், ஜெனிங்ஸ் 4 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அணி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 12 ஓட்டங்களுடன் குக் ஆட்டமிழந்தார். மூன்றாம் நிலை வீரராகக் களமிறக்கப்பட்ட மொயின் அலியால் முடிந்தது 9 ஓட்டங்கள். ஜெனிங்ஸ் 36 ஓட்டங்களுடன் சமியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். உணவு இடைவேளையின் போது இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (ம)

# நடப்புச் சம்பியன் மிரட்டல்

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் அமெரிக்க வீராங்கனையும்நடப்புச்சம்பியனுமான ஸ்ரீபன்ஸ்.

நியூயோர்க் நகரில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பெண்கள் பிரிவில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய ஸ்ரீபன்ஸ் நேற்றுமுன்தினம்நடைபெற்ற நான்காவது சுற்று ஆட்டத்தில் பெலாரஸ் வீராங்கனை அசரென்காவை எதிர்த்து மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஸ்ரீபன்ஸ் அடுத்த் செற்றை 6:4 என்ற புள்ளிகளின்அடிப்படையில்கைப்பற்றி 2:0என்றநேர்செற்கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார். காலிறுதிக்கு முன்னைய சுற்றில் ஸ்ரீபன்ஸை எதிர்த்து பெல்ஜியத்தைச் சேர்ந்த மேர்டென்ஸ் மோதுகிறார். இந்த ஆட்டம் இன்று இடம்பெறுகிறது. (ம)



# நான்காவது சுற்றில் ரபேல் நடால்

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

பன்னாட்டுஅந்தஸ்துபெற்றபகிரங்கத்தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பனனாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான ரபேல் நடாலை எதிர்த்து ரஷய வீரர் கரன் கஜோனா மோதினார்.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் நடால். இதனால் அடுத்த நான்கு செற்களில் மூன்று செற்களைக் கைப்பற்றினால் மட்டுமே அவருக்கு வெற்றி என்கிற நிலை ஏற்பட்டது. ஆனால் அடுத்த மூன்று செற்களையும் முறையே 7:5, 7:6, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1என்றசெற்கணக்கில் வெற்றிபெற்றார் நடால். (ம)



# அணியில் மலிங்க

ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணி நேற்று அறிவிக்கப்பட்டது. நீண்ட நாள்களாகப் புறக்கணிக்கப்பட்டு வரும் மலிங்கவுக்கு இடம் கொடுக்கப்பட்டது.

பன்னாட்டு அரங்கில் இருந்து மலிங்க ஓய்வுபெற வேண்டும் என்ற எந்த அவசியமும் இல்லை. அவர் மிக்வும் திறமையான வீரர். அவரால் தேசிய அணிக்கு இன்னுமின்னும் பங்காற்ற முடியும் என்று இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் ஹத்துருசிங்க அறிவித்திருந்தார். இதனால் மலிங்க மீண்டும் அணிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட வாய்ப்புக்கள் இருப்பதாகக் கருதப்பட்டது. இந்தப் பின்னணியில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் ஆசியக் கிண்ணத் தொடருக்கான அணியில் மலிங்க சேர்க்கப்பட்டார்.

இலங்கை அணி விவரம் - மத்தியூஸ் (தலைவர்), குசல ஜெனித் பெரேரா, குசல் மெண்டிஸ், தரங்க, சந்திமல், தனுஸ்க குணதிலக, திசர பெரேரா, சானக, தனஞ்சய டி சில்வா, அகில தனஞ்சய, டில்ருவான் பெரேரா, அபான்சோ, கசுன் ராஜித, லக்மல், சமீர, மலிங்க. (ம)








## வேலையாள் தேவை

01) கணினி அனுபவம் உடைய கணக்காளர் தேவை.
Quick Books அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம்.
( Account with Computer Knowledge)
02) விற்பனைப் பிரதிநிதிகள் தேவை ( Sales man)
(சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம் )
03) Driver - சாரதி

(AKN/323)(11)

**076 472 1116, 077 828 8976**
Email:- sp366456@gmail.com

## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

பிரபல தளபாடங்கள் மற்றும் மின் உபகரணங்கள் விற்பனை நிறுவனத்தில் தற்போது கீழ்க்காணப்படும் வெற்றிடங்கள் உள்ளன.

- விற்பனை நிர்வாகிகள் ( Sales Executives)
- விற்பனைப் பிரதிநிதிகள் ( Sales Representatives )

நேர்முகப் பரீட்சை :- 03.09.2018 திங்கட்கிழமை
நேரம் :- காலை 10.00 - 12.00 வரை
இடம் :- இல.83, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.
உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

(CS/19454)(11,17)

**077 388 3879, 021 221 7626**

## கணக்காய்வாளர் தேவை

**கணக்காய்வுத் துறையில். 3 வருட அனுபவமும் துறை சார் கல்வித் தகைமையும் உள்ள கணக்காய்வாளர்கள்** யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நிறுவனத்துக்கு வேண்டப்படுகின்றனர். தகைமையுள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொண்டு **03.09.2018** இல் நடைபெறும் நேர்முகத் தேர்வில் பங்குபற்றவும். (C/7657)(11,17)

**071 422 0005**
**105, Raja veethy, கோப்பாய்.**

## AC, NON AC அறைகள் வாடகைக்குண்டு

நல்லூர் ஆலயச் சுற்று வட்டாரத்தினுள் அமைதியான சூழ்நிலையில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்குண்டு.

(CS/19473)(11,17)

**077 485 8236, 021 222 4814**

## SPOKEN ENGLISH

குறுகிய காலத்தில் சரளமாக ஆங்கிலம் பேசவிரும்புபவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

- 100% பேச்சுப்பயிற்சிகள்
- 3 மாத காலப் பயிற்சி
- ஒரு பிரிவில் 5பேர் மட்டுமே
- தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் சிறந்த பயிற்சிகள்
- நீங்கள் விரும்பும் நேரத் தெரிவு

இம்முறை A/L பரீட்சை எடுத்தவர்களுக்கு 50 % கட்டணக் கழிவு

பயிற்சி முடிவில் உங்களால் ஆங்கிலம் பேச முடியாதிருந்தால் நீங்கள் செலுத்திய முழுப்பணமும் மீளளிக்கப்படும்.

(C/7663)(11,17)

**WINSTAR CONSULTANTS (pvt) Ltd**
**45, Vembadi Street, Jaffna.**
**021 300 4641 / 076 213 6979**

## 2019 A/L DAYCLASS PHYSICS

By: T.K.Kajan B.Sc 05.09.2018
முத்தட்டுமட லேன், கோண்டாவில். 5.00PM
The Science Corner, Clock Tower Lane, Jaffna. 4.00 PM
- 077 653 1177

## கார் வாடகைக்கு

திருமண வைபவங்களுக்கான அதி சொகுசு வெள்ளைநிற கார் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.

**077 678 7363**

## கார் விற்பனைக்கு

**HONDA FIT**
**WP KX**

**076 447 5962**

## காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, பரலோகமாதா கோயிலடிக்கு அருகில் சுமார் 3 பரப்புக்காணி. பாவனையிலுள்ள வீடு மற்றும் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 9710 525, 077 928 0421

## விநியோகஸ்தர்கள் தேவை

பிரபல தளபாட நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு இடங்களில் Dealers / Distributers தேவை.
**தொடர்பு - 011 715 5588**

## கட்டடத் தொழிலாளர் தேவை

நடைபெற்று கொண்டிருக்கும் Building Construction ஒன்றுக்கு கட்டட தொழில் (Masson) Contract எடுத்து செய்ய கூடியவர்கள் தேவை. தொடர்பு:-
**071 8475531 / 076 175 5934**

## தளபாடங்கள் விற்பனைக்கு

Sofa, அலுமாரிகள், கட்டில், மேசை, கண்ணாடி மேசை போன்ற தளபாடங்கள் விற்பனைக்குண்டு
**தொடர்பு - 077 200 4000**
**மானிப்பாய்**

உயர்தரப் பரீட்சையின் பின்னர்...

**Diploma in Spoken English** Full / Part time

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General **IELTS**
Full time / Part time

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவரகளுக்கு

**IELTS A1 LIFE SKILLS**

கடந்த 3 வருடத்தில் 640 மாணவ, மாணவிகளை சித்தியடையவைத்த ஒரே ஒரு நிறுவனம்

**COMPUTER COURSES**: MS - Office | Web Designing | Computer Studies | Multi Media | Hardware | Graphic Designing

**BRITISH COLLEGE of Education**
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Station Rd, Mannar. Tel : 021-4927497


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.